தோலை ஆயில் ஆப் ஜூனிபரில் பிரிஜ்பார்க் கரைத்து அப்புறம் அதை எடுத்து தோலின்மேல் தடவ தோலானது அசல் ரேஷமைப்போலாகிவிடும்.

லெமனெட் பவுடர்.

மார்க்கெட்டில் இப்பேருடைய பல்வேறு விதமான பொட்டலங்கள் விற்பனையாகின்றன. அதிலுள்ள தூளை ஜலத்தில் கரைத்தால் அதிருசிகரமான லெமனெட் அல்லது சோடாவாட்டர் தயாராய் விடுகிறது ஜனங்கள் இதிலிருந்து அதிகப்பணம் சம்பாதிக்கிறார்கள். இதைச் செய்யும் முறை பின்வருமாறு:—

அரைத்த லவுங்கப்பட்டை	½ பவுண்டு
கார்பனேட் ஆப்சோடா	1 அவுன்ஸ்
எலுமிச்சம் எண்ணை	3 துளிகள்

எல்லாவற்றையும் சேர்த்து 16 பங்காக்கிக் கொள்ளவும். அதாவது 16 பொட்டலங்கள் மடித்துக் கொள்ளவும். அவற்றை ஆலிவ்பேபரில் மடித்துவிடவும். பின்னர் 1 அவுன்ஸ் டார்டரிக் ஆசிட் வாங்கி அதையும் 16பங்குகளாக்கி நீலவர்ணமுள்ள கடுதாசிகளில் பொட்டலங்கள் மடித்துக் கொள்ளவும். உபயோகிக்கும் சமயம் ஒரு டம்ளரில் ஜலம் எடுத்து முதலில் ஒரு பொட்லத்தூளையும் அப்புறம் இன்னொரு பொட்டலத்தூளையும் கொட்டிவிடவும். பிறகு உடனே அதை எடுத்துப் பருகவும்.

நெருப்பு உடனே பற்ற.

நெருப்பை முதன் முதலில் பற்றவைப்பது கடினமான காரியம். பலர் பலவிதமாக முயற்சிக்கிறார்கள். சிலர் சிறு சிறு அடுப்புக்கரி துண்டுகளை கீழே பரப்புகிறார்கள். சிலர் கடுதாசிகளையும் அட்டைத் துண்டுகளையும் கொளுத்தி நெருப்பு பற்றவைக்கப் பாடுபடுகிறார்கள். அடியிற்கண்டபாகம் நெருப்பை க்ஷணமே பிடிப்பதற்கு சான்றாகும்.

ஒரு குவார்ட் பஹரோஸா அல்லது டார்க்கோல் வாங்கி அதை நெருப்பின்மேல் வைத்து மிருதுவாக்கிக்கொள்ளவும். அப்புறம் அதில் வெள்ளைக்குங்கிலியம் ½ பவுண்டு சேர்க்கவும். பின்னர் அதில் மரச்சக்கையும் கரித்தூளும், அவசியத்திற்கேற்ற அளவில் சேர்த்துக்கொள்ளவும். கூட்டுடனேயே அதை ஒரு மரப் பலகையின்மேல் ஊற்றிப்பரப்பிவிடவும். காய்ந்து கெட்டியானதும் அதை சிறு சிறு துண்டுகளாகக்கொள்ளவும். ஓர் வருஷம்வரையில் நெருப்பு பற்றவைப்பதற்கு இதுபோதுமானது. ஒரு தீக்குச்சி மற்றுமே தேவையாகும். இத்துண்டுபற்றி அடுப்பிலுள்ள விறகுக் கட்டைகள் யாவும் தீப்பற்றும் வரையில் நீடித்து எரியும்.

முகலக்ஷணத்திற்கு.

முகத்தை லக்ஷணப்படுத்த இது மிக்க அரியமுறை. சபைகளுக்குப் போகுமுன்னர் இதை சற்று முகத்தில் பூசிக்கொள்ளுங்கள். முகம் எவ்வளவு அழகான தோற்றத்தைக் கொடுக்கும் என்பதை தெரிந்துக் கொள்வீர்கள். வேடிக்கைமேடைகளில் நடிகர்கள் இதனை முகத்தின்மேல் அழகிற்காக பூசிக்கொள்கிறார்கள்.

அல்கோஹல்	½ பாயின்ட்
மஞ்சிட்டி	1 அவுன்ஸ்

இரண்டையும் சேர்த்து 10 நாள் வரையில் விட்டு வைக்கவும். அப்புறம் அதை வடிகட்டி உபயோகிக்கவும். முகத்தில் பூசிக்கொள்ள சிறந்த மேனியதை தரத்தக்கதாகும்.

பரிமள தாம்பூல மாத்திரைகள்

தற்கால இந்த மாத்திரைகள் பல்வேறு பெயர்களைக்கொண்டு விற்பனையாகின்றன. இவை வாய் நாற்றத்தைப்போக்கி வாயில் மணத்தை யுண்டாக்குவது மற்றுமன்றி சில கோளாறுகளையும் கண்டிக்க கூடியவைகளாகும். அதாவது இருமல் தொண்டையின் கரகரப்பு, அஜீரணம் முதலியவை நிவர்த்தியாகும்.

அதிமதுர சத்து	13 அவுன்ஸ்
கிராம்புத்தைலம்	1½ டிராம்
லவங்கப்பட்டைத் தைலம்	15 துளிகள்

இவைகளை எல்லாம் சேர்த்து மிளகு பரிமாணத்திற்கு மாத்திரைகள் தயாரித்துக் கொள்ளவும். அவற்றின்மேல் வெள்ளி ரேக்கை தடவி விடவும்.

வாசனை பெப்பர்மிட்டாய்

முதல் நம்பர் வெள்ளை சர்க்கரை	7 பவுண்டு
சுத்தமான கிஷ்டாஸ்தா மாவு	1 ,,

கேய், பொதினா, ருசிக்கேற்ற அளவில் சேர்த்து, கோந்து (பிசின்) சகாயத்தால் சிறுசிறு பில்லைகளாகவோ அல்லது மாத்திரைகள் வடிவத்திலோ தயாரித்துக் கொள்ளவும். ஒன்று வாயிலிட்டு உரிஞ்ச அதிக ருசிகரமாயிருக்கும்.

கடுதாசிஒட்டும் பசை

தற்காலை கச்சேரிகளிலும், வியாபாரஸ்தலங்களிலும் கோந்துக்குபதிலாக பசையே அதிகம் உபயோகப்பட்டு வருகிறது. இந்த பசை சீமை வியாபாரிகளிடமிருந்து தயாரிக்கப்பட்டதாயும் விற்பனைக்கு வந்து கொண்டிருக்கிறது.

கோந்துக்கு பதில் பசை உபயோகம் மேலாகும். கடுதாசி உறைகள், கடுதாசிகள் முதலியன சீக்கிரமாயும் சுலபிதத்திலும் ஒட்டப்பட்டுப் போகின்றன. கரைக்கப்பட்ட கோந்து பாத்திரம் தப்பித்தவறி சாய்ந்துபோனால் பண்டங்கள் வீணாகிவிடும். இதுவோ அத்தகைய வியாகூலத்திற்கு இடமளிப்பதில்லை. இப்பசை செய்வதன் முறை யாதெனில்:—

ஒருபைண்ட் ஜலத்தில் ½ அவுன்ஸ் படிகாரத்தை கரைத்து காய்ச்சவும். கிராம்பு தைலத்தின் சிலதுளிகளையும் அதில் போடவும். பிறகு கிரமமான அளவில் மைதாமாவை போட்டு வேகவைக்கவும், பசை ரூபத்திற்கு வருமளவும் கிளறிக்கொண்டே போகவும். தயாரானவுடன் பாத்திரத்திலெடுத்து புட்டிகளில் அடைத்துக் கொள்ளவும்

உரோம சங்காரி வாசனைத் தைலம்

பேரியம் சல்பைட்	25 தோலா
கொதிக்கும் வெக்கீர்	100 தோலா

வாசனை பிரியத்திற்கேற்ப பேரியம் சல்பைட்டை யாதொன்றுடன் பாத்திரத்திலோ அல்லது மண் பாத்திரத்திலோ

போட்டு கொதிக்கும் வெந்நீரை அதில் ஊற்றவும் ஒரே ஒருதடவை கலந்து விட்டுவிடவும். சிலமணிநேரம் அப்படியே கிடந்து சூடு ஆறட்டும், குளிர்ந்ததும் அதன் மீது ஒருவிதமான மஞ்சள் தைலம் மிதந்துவரும். அதைஎடுத்துபொட்டிக்களில் அடைத்துக் கொள்ளவும். ஆனால் பாத்திரத்தை சாய்த்து மஞ்சள்தைலத்தை இறுத்திக் கொள்ளும் சமயம் போட்டமருந்தும் அத்துடன் இறங்காவண்ணம் கவனித்துக் கொள்ளவேண்டும். இல்லையேல் இத்தைலம் சருமத்தின் மேல் பட்டால் எரிச்சலை உண்டாக்கும்.

தேவையான சமயம் கொஞ்சம் பஞ்சில் நனைத்து மயிர் நீக்க வேண்டிய இடத்தில் பூச 3 நிமிஷத்திற்குள் மயிர்கள் நீங்கிவிடும். சருமமும் மிருதுவாய்விடும்.

வஸ்திர சலவைப் பவுடர்

வஸ்திரத்தை துவைத்து சுத்திசெய்யும் துறையில் எவ்வளவு தூரம் கஷ்டக்குறைவு ஏற்படுமோ அதை மக்கள் பெரிதும் ஏற்கத் தயார்.

அடியிற்கண்ட பவுடர் வஸ்திர சுத்திக்காக மிகவும் இன்றியமையாதது. இதன் மூலம் அதிக லாபம் சம்பாதிக்கலாம். பொது ஜனங்கள் இதை ஏராளமாய் விலைகொடுத்து வாங்குவர்.

சோடா ஆஷ், சஜ்ஜீகாரம் சாதாரண கொக்கிங் சோடா அதற்கு சமஎடை பிசின் தண்ணீரில்கலக்க கெட்டிப்படும். கோடை காலத்தில் ஒரு பலகையின்மேல் பரப்பி காயவைக்கவும். காய்ந்த உடன் இஷ்டத்திற்கேற்றபடியான அளவில் துண்டுதுண்டுகளாகச் செய்து கொள்ளவும்.

மலிவான வார்னிஷ்

இந்தபாகத்தைத் தயாரித்து மிக்கமலிவான விலைக்கு விற்கலாம்.

குருட் சல்பேட்ஸின்க்	4 பவுண்டு
வடிகட்டிய ஜலம்	1 காலன்

இந்த இரண்டையும் சேர்த்து கொஞ்சநேரம் கலக்கிக்கொண்டிருக்க வார்னிஷ்தயாராய்விடும். இதை இளகலாக்கவேண்டுமானால் சற்று டர்பன்டைனையும் கலந்து கொள்ளவும்.

உருகினவஜ்ஜிரம் பிரஷால்தடவி அது உலர்ந்தபின், அதன் மீது இதை பிரஷால் தடவி விடவும்.

ஜலரூப வஜ்ஜிரம்

நெருப்பின்மேலும், ஜலத்திலும் வைக்கப்படாமல் உபயோகிக்கக்கூடிய வீட்டுசாமான்களை ஒட்டும் வேலைக்கு அடியிற்கண்ட முறை மிக்க அனுகூலமானது. இதை தயாரித்து விற்க அதிக லாபம் கிடைக்கும்.

உயர்ந்த வச்சிரம்	8 அவுன்ஸ்
சுத்த ஜலம்	½ பாயின்ட்

வச்சிரத்தை ஜலத்தில் போடவும். இதற்காக அகன்ற பாத்திரம் அவசியம். மற்றொரு இதை விடவாயகன்ற பாத்திரத்தில் ஜலத்தை நிறைய ஊற்றி அதற்குள் முதல் பாத்திரத்தையும் வைத்து கீழே நெருப்பு எரிக்கவும். வச்சிரம் நல்லபடியாக கரைந்து விட்டதும், உயர்தரமான நைட்ரிக் ஆசிட் கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றி கலந்து கொண்டு போகவும் இந்த கலப்பை பாட்டில்களில் போட்டு கார்க்குகளைக்கொண்டு அடைத்து விட்டால் துர்நாற்றம் ஏற்படாது, கெட்டும் போகாது; மேற்கூறியபடி ஜலத்திலும் நெருப்பின் மீதும் உபயோகிக்கப் படாத சாமான்களை ஒட்டுவதற்கு இது பிரயோசனப்படும்.

செருப்புகளுக்கு கருப்பு வார்னிஷ்

செருப்புக்கு கருப்பு சாயம் பூசவேண்டிய அவசியம் பெரும் பாலோருக்கும் அடிக்கடி ஏற்படுகிறது. ஆகையால் இத்தொழிலும் நல்ல வருமானத்திற்குக் காரணமாகும். அடியிற்கண்ட முறை அதற்கேற்றது. இதை தயாரித்து விற்பனை செய்ய, ஏராளமான பணம் சம்பாதிக்கலாம்.

ஷெல்லாக்	1½ பவுண்டு
ஸல்பரிக் ஆசிட்	1 அவுன்ஸ்
அல்கஹால்	1 காலன்

எல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து 48 மணிநேரம் விட்டு விடவும். அப்பால் அதில் யானைத்தக்தம், மரக்கரித்தூள் கலக்க, இது வாட்டர்புருப்ஃமயாகிவிடும். இக்கலப்பை உடனே உபயோ

கிக்ஸமெல் 24 மணி நேரத்திற்குப்பின் உபயோகிக்கவும். இந்த அவகாசத்திற்கு முன்னர் இதை உபயோகிக்க வேண்டாம்.

தோலை வாட்டர்புரூப் செய்யல்

(அதன் நிறம் தண்ணீரில் கரையா வண்ணம் செய்தல்)

அடியிற்கண்ட கலப்பு தோலை வாட்டர்புரூப் செய்யவல்லது. இதைபசை போல் உபயோகிக்கலாம்.

இதை அடியிற் கண்ட முறைப்படி தயாரித்து விற்பனை செய்யவும்.

பாரபின் வாக்ஸ்	3 அவுன்ஸ்
பாரபின் ஆயில்	1 குவார்ட்

இந்த இரண்டையும் சேர்த்து ஒருவாரம் அப்படியே விட்டு வைத்து அப்பால் ஒன்றாக கலந்து கொண்டு உபயோகத்தில் கொண்டு வரவும்.

புழுப்பூச்சிகளைக் கொல்லும் பவுடர்

சீமை சாமந்திப்பூ சிவப்பைக் கொண்டு வந்து அதை பொடியாக்கி அத்துடன் கருங்காலித்தூளைக் கலந்து கொள்ளவும். இதுவே பாகம் இதை எடுத்து வீட்டிலுள்ள மூலை முடுக்குகளிலெல்லாம் தூவி விட புழுப் பூச்சிகள் யாவும் மாண்டுவிடும். மேற்கொண்டு எப்பூச்சியும் வீட்டினுள் நுழையாது.

ரப்பர் சீல் தயாரித்தல்

இது மிக்க லாபகரமான தொழில். தற்காலை வியாபாரிகளுக்கும் இதரதொழிலாளர்களுக்கும் இது அத்தியாவசியமானது. கீர்த்திப் பெற்ற ஒவ்வொரு கனவானும் தன் பெயர் விலாசம், தேதி, கிழமை இவைகளுக்காக ரப்பர் சீலை உபயோகப் படுத்துகிறார்கள் சிலர் பாக்கெட் போஸ்ட், புக்போஸ்ட், வி. பி. பார்சல் முதலிய இங்லீஷ் எழுத்துக்களுக்காகவும் ரப்பர் சீலை உபயோகப்படுத்து கிறார்கள். இவ்வளவு அத்தியா வசியமான பொருளை நீங்களே தயாரித்துக் கொள்வீர்களானால் சொந்தத்திற்கும், விற்பனைக்கும் பிரயோசனமாகும். நாம் அதைப்பற்றிய சுலபமான முறையை இங்கு விவரிக்கிறோம். எந்த விலாசத்துக்கு சீல் தயாரிக்க வேண்டுமோ அதற்குரிய டைப் எழுத்துக்களை

கம்போஸ் செய்து கொள்ளுங்கள். அந்த எழுத்துக்களை எண்ணெயைக் கொண்டு பிசுபிசுப்பாக்கிக் கொண்டு அதைச் சுற்றிலும் ஒரு சட்டம் அல்லது வட்டமொன்று அமைக்கவும். இந்த அமைப்பும் கம்போஸ் எழுத்துக்களுக்குமேல் அரை அங்குலத்திற்கு இருக்க வேண்டும்.

இப்பொழுது பிளாஸ்டர் ஆப் பாரிஸ் தண்ணீர் விட்டுப் பிசைந்து அதிகத் தடிப்பும், இழகலுமில்லாத விதத்தில் குழம்பாக்கிக் கொள்ளவும்.

சிறிது நேரத்தில் அப்பிளாஸ்டர் சேர்ந்துவிடும்.

அப்பொழுது கம்போஸ் செய்யப் பட்டுள்ள டைப் எழுத்துக்களை பிளாஸ்டரில் பதிய வையுங்கள். இப்பொழுது பிளாஸ்டர். அச்சு தயாராகி விட்டது. இனி கச்சார்டர், அல்வெல்கராயிஸ்ட் ரப்பர் வாங்கி அச்சின் அளவிற்கு துண்டாக அறுத்து அதன் மேல் வைத்து பிரஸ் மூலமாக சற்று அழுத்திவிடுங்கள். இப்பொழுது ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி எரியுங்கள். ஆவியின் வேகத்தால் ரப்பர் உருகி அச்சுக்களில் அமைந்துவிடும். அப்பொழுது எரிக்க வேண்டாம். ஆரவிட்டு விடவும். ஆரியதும் கத்தியின் முனையால் ரப்பர் சிலை வெளிப்படுத்தி விடவும்.

கத்தரிக் கோலினால் வெட்டி செதுக்கி மைப்பிடிமீது சிறு சிறு லேல்களுடன் இணைத்து விடுங்கள். சிலர் அணிகளுக்குப் பதிலாக வஜ்ஜிரத்தின் சகாயத்தால் ஒட்டி விடுகிறார்கள்.

கஜூர் கொட்டையினால் பொத்தான்கள் செய்தல்

ஆராய்ச்சியின் குறைவின் காரணமாக நாம் ரூபாய் சம்பாதிப்பதற்குரிய எண்ணிறந்த சந்தர்ப்பங்களை கைவிட்டு விடுகிறோம். நம் நாட்டில் அநேகபச்சை சரக்குகள் இருந்து வருகின்றன.

அவைகளைக் கொண்டு நாம் அநேகசாமான்களை தயாரிக்க சாத்தியப்படும். பிரத்தியேகமானயாதொருநிபுணரின் அவசியம் வேண்டியதில்லை. இக்கிலேமையில் கடுத்தரக்கல்வியைக் சற்று வேலையில்லாத் திண்டாட்டத்தின் கஷ்டத்தை அனுபவித்து வரும் வாலிபர்களைப் பற்றி வருந்தாதிருக்க முடியவில்லை.

கஜூர் ஓர் இன்பகரமான பழம். இது இந்தியாவிலும் கிடைக்கின்றது. நாம் அதைத் தின்றவுடன் அதன் கொட்டையை எரிந்து

விடுகின்றோம். இக்கோட்டை மிகவும் கெட்டியானது. பிரயோஜன முள்ள வஸ்து எனச் சொல்லலாம். இது எதற்கென நாம் சிந்திக் காது எரித்து விடுகிறோம்.

அதிலிருந்து பொத்தான்களை தயாரிக்கலாம். பொத்தானை தயாரிக்கு முன் கொட்டையை சுத்திசெய்து கொள்ளவேண்டும் பின்னர் அது அவ்வேலைக்குத் தகுதியாய்விடும். ஈரமான துணி யொன்றைக் கொண்டு அதைத் தேய்க்க சுத்தமாகி விடும் ஆனால் வித்து அமையப்பெற்ற அதன் மேல் தோலை அப்புறப்படுத்துவது சற்று கடினமானது. ஒருவித சிவப்பு நிறமுள்ள அத்தோலே வேறு படுத்துமுன் கத்தியால் சீவி சரிபடுத்திக் கொள்ளுங்கள். இனி அதற்குள் தென்படுவது வெள்ளை நிறமுள்ள கொட்டை. இதை எளிதில் அப்புறப்படுத்தும் முறை யாதெனில்:—

கொட்டையை இரண்டொரு நாள் எண்ணெயில் ஊறவைக் கவும். பிறகு அதையெடுத்து சோப்புடன் கலந்துள்ள ஆற்று ஈரமணலில் கலந்து கொள்ளவும். அப்பால் அதை மணலுடன் உருண்டையாக எடுத்து மட்பாத்திரமொன்றில் வைக்கவும்.

இனி அக்கொட்டைகளை யெடுத்து அழுத்தமானதோர் வஸ் திரத்தால் அழுத்தித் தேய்க்க சற்று நேரத்திற்குள் மேல் தோல் நீங்கிவிடும். உள்ளில் உள்ள வெள்ளைப்பாகம் பிரகாசத்துடனும் கூடி தென்படும்.

அடுத்தபடியாக அவற்றுள் எப்படி துளை செய்வதென்ற கேள்வி உண்டு.

ஒருவன் ஒருமணி நேரத்தில் 80 கொட்டைகளில் சுலபமாய் துவாரம் செய்யக்கூடும். இதற்காக தமரூசி உபயோகித்தல் வேண்டும். அப்பால் அவற்றை எந்தவடிவத்தில் வேண்டுமோ மாற்றிக்கொள்ளலாம் மெல்லியதோர் பித்தளைக் கம்பியைக்கொண்டு 2 பொத்தான்களையும் அமைத்துக் கொள்ளவும் இயலும்.

பெயரும் விலாசமும் எழுதப்பட வேண்டுமானால் பொத்தான் களை இடலமானதோர் பலகையின் மீது அமைத்து வரைந்து விடவும்.

மேலும் இக்காரியத்திற்காக கொட்டைகளை சேகரித்தல் கஷ்ட மான காரியமல்ல. விற்பனையாளர்களுக்கும் விலைகொடுத்து வாங்கு

வோருக்கும் கோட்டைகள் வேண்டுமென்று முன்னறிக்கை செய்து விட்டால் அவர்கள் சந்தோஷமாக சேகரித்துக் கொடுத்து விடுவார்கள் இத்தொழிலை நடத்துவதற்கு ரூ 25 முதல் 100 வரையில் போதுமானது.

இதற்கவசியமான கருவிகளாவன:—

ரப்பர்சீல்—1, பித்தளைக் கம்பி தேவைக்சேற்றவாறு. இன்னும் சில தேவையுள்ள கருவிகள். ஒருவர் மாதம் 1-க்கு ரூ. 40 இதன் மூலம் சம்பாதிக்கக்கூடும். போதத்தான் விற்பனை அபிவிருத்தி யடைய யடைய தயாரிப்பும் அதிகரித்து அதிக நயம் கிடைக்கக் கூடும். வேலை மேன்மேலும் அதிகரிக்க, வேண்டியசிப்பந்திகளை நியமித்துக் கொள்ளலாம்.

ரோல்டு கோல்ட்

ஈயம்	1 பங்கு
பித்தளை	12 ,,
செம்பு	24 ,,

முதலில் செம்பை உருக்கவேண்டிய பாத்திரத்தில் போடவும். செம்பு நெருப்பின்மேல் நல்லவிதமாக உருகிப்போனவுடன் ஈயத் துண்டும் போட்டுவிடவும். அதற்கப்பால் ஈயம் போடவும். இவை யாவும் ஒன்றாய் கலந்து கொண்டதும் பாத்திரத்தை எடுத்துக் கொள்ளவும். இதுவே ரோல்ட்கோல்ட் எனப்படும்.

வாசனையுள்ள அகர் ஊதுபத்தி

தாளிஸ பத்திரி, கோரைக் கிழங்கு, பூலாங் கிழங்கு, வெட்டி வேர், பால் சாம்பிராணி, ஒவ்வொன்றும் வகைக்கு 1 தோலா, வெள்ளை சந்தன சக்கை, சாம்பிராணி வகைக்கு 10 தோலா, ரூமி மஸ்தகி 2 தோலா, பருத்திவிறகின் சாம்பல் 20 தோலா. கொஞ்சம் தேனும் வடித்த கஞ்சியும் அத்துடன் சேர்த்தரைத்து பத்திகள் தயாரிக்கவும். இன்பகரமான வாசனையைத் தரும்.

மிருதுவான சோப்பை கெட்டிப்படுத்தல்

மிருதுவான ஸோப்	7 பவுண்டு
சால் சோடா	4 ,,

வெங்காரம்	2 அவுன்ஸ்
ஹார்டிஷ் ஹாரன்	1 ,,
வெள்ளைக் குங்கிலியம்	½ பவுண்டு

எல்லாவற்றையும் 22 குவார்ட் ஜலத்தில் 20 நிமிஷம் வரையில் வேக வைத்து கெட்டிப்படுத்தி விடவும். இது அதிக லாபகரமான வேலை. சில தொழிலாளர்கள் இதிலிருந்து ஏராளமாய் சம்பாதிக்கிறார்கள்.

கருங்காலி வர்ணம்

வஸ்திரத்தை இக்கிரத்தில் வர்ணங் கொடுக்க எண்ணினால் வர்ணஞ் செய்யும் முறை வருமாறு:—

ஆக்சலிட் ஆசிட்	7 அவுன்ஸ்
நிக்ரோஸைன்	1 பவுண்டு
ஜலம்	5 காலன்

மேற்கூறிய இரண்டு சரக்குகளையும் ஜலத்தில் கரைத்துக் கொள்ள, வர்ணம் தயாராய்விடும்.

மஹாகனி வர்ணம்

ஆக்சலிக் ஆசிட்	8 அவுன்ஸ்
பிஸ்மார்க்பிரோன்	15 ,,
சுத்த ஜலம்	5 காலன்

மேற்கூறிய 2 யும் தண்ணீரில் கரைத்துக் கொள்ளவும்.

பஹாத் வர்ணம்

ஆக்சலிக் ஆசிட்	6 அவுன்ஸ்
பாஸ்பைன்	15 ,,

15 காலன் ஜலத்தில் கலந்து கொள்ளவும்.

ரோஸ் வர்ணம்

ஆக்சலிக் ஆசிட்	6 அவுன்ஸ்
சல்பர்னைன்	½ பவுண்டு

4 காலன் ஜலத்தில் கலந்து கொள்ளவும்.

சாக்கின் பேரில் எழுதும கருப்பு இன்க்

லிக்கோட் அமோனியா	10 பங்கு
நைட்ரேட் ஆப்ஸில்வர்	4 பங்கு

கருவேலன் பிசின்	5 பங்கு

இவைகளை யாவும் ஒன்ருய்க் கலந்து கொள்ளுங்கள்.

கார்போனேட் ஆப்சோடா	6 பங்கு
சாப்கிரீன்	2 பங்கு
சுத்த ஜலம்	8 பங்கு

இவைகளை தனியே கலக்து கொள்ளுங்கள். மேற் கூறிய 2 கலப்புகளையும் ஒன்ருய்க் கலந்து கொள்ள கருநிறமுள்ள மையாகி விடும்.

காப்பியிங் இன்க்

இது அதிகம் செலவாகக் கூடியது; நல்ல லாபமும் அடையப் பெறலாம்.

கட்கால்	24 அவுன்ஸ்
காடி	16 அவுன்ஸ்
லாகோட்	8 அவுன்ஸ்
கருவேலன் பிசின்	2 அவுன்ஸ்
கிளேசரீன்	1 அவுன்ஸ்

இந்த கலப்பை 4 மணி நேரம் காய்ச்சவும். ஆறினவுடன் உபயோகிக்கவும்.

ரப்பர் ஸ்டாம்பு இன்க்

என்லைன் கலர் இஷ்டப்பட்ட நிறமுள்ளதை வாங்கி அதை வெள்ளை கிளேசரீனில் கலக்து கொள்ளுங்கள். இங்கி தயாராகி விட்டது. தேன் அல்லது ஷர்பத்தில் நிறங் கலந்து கொள்வீர்களாகில் அப்பொழுதும் இதே பலன் ஏற்படும். இந்த இங்கியை செய்பவர்கள் அதிகப் பணம் சம்பாதிக்கிருர்கள்.

சிவப்பு இன்க்

அரைத்த பிராசில் உட்	2 அவுன்ஸ்
படிகாரம்	2 அவுன்ஸ்
கருவம் பிசின்	1 அவுன்ஸ்
இடித்த கிரியதாரை	1 டிராம்
ஸ்டேல் பேர்	1 பயின்ட்

இந்த கலப்பை கோதிக்க வைத்தோ, அல்லது 14 நாட்கள் அழுக வைத்தப் பின்னரோ வடிகட்டி உபயோகித்துக் கொள்ளவும்.

கருப்பு இங்க்

இந்த சரக்கு பிடித்தமாக ஏற்பட்டு விட்டால் நல்ல லாபம் தரத்தக்கதாகும். இதனடியில் ஓர் அருமையான பாகம் வரையப் படுகிறது.

ஹெமோடாக் சாயினம் விறகை சுட்டு 20 நிமிஷம் வரையிலும் சம அளவு எடை உள்ள ஜலத்தில் கோதிக்க வைத்த பின் அடியிற் கண்ட சரக்குகளை சேர்க்கவும்.

பய்க்ரோமேடாப் பொடாஷ் தூள்	2½ பவுண்டு
ஜலம்	2 காலன்
கருவம் பிசின்	2¼ அவுன்ஸ்

எல்லாவற்றையும் சேர்த்துக் காய்ச்சி வடி கட்டிக் கொள்ளவும்.

அக்ரோட் நிறம்

நிக்ரோஸைன்	4 அவுன்ஸ்
ஆக்சலிக் ஆசிட்	5 அவுன்ஸ்
பிஸ்மார்க்புரோன்	3 அவுன்ஸ்

ஜலம் 4 காலனில் கலந்து கொள்ளவும்.

ஆரஞ்சு கலர்

ஆக்சலிக் ஆசிட்	5 அவுன்ஸ்
ஆரேன்சு கலர்	3 அவுன்ஸ்
ஜலம்	5 காலன்

இவையாவும் ஒன்றாய்க் கலந்து கொள்ளவும்

மலிவான புளு பிளாக் இன்க்

எக்ஸ்டிராக்ட்லாக்வுட்	½ அவுன்ஸ்
பாயிகுரோமேட் ஆப்பொடாஷ்	10 கிரைன்

மேற்கூறிய இரண்டையும் ஒரு குவார்ட் வெந்நீரில் கலந்து கொள்ளவும். தண்ணீர் ஆறிப்போனதும் பாட்டலில் ஊற்றி வைத்துவிட்டு 3 வாரம் வைத்து விடவும். இதைக் கொண்டு எழுதப்

பட்ட எழுத்துகள் முதலில் நீல நிறமாகத் தோன்றி பின்னர் கருத்து விடும். இதை தயாரித்து விற்றால் தக்க லாபம் கிடைக்கும்.

ரப்பர் ஸ்டாம்ப இங்க்

கிளிசரீன்	6 அவுன்ஸ்
வைலட் அனலின்	20 அவுன்ஸ்
பாகு	3 அவுன்ஸ்
கொதிக்கும் ஜலம்	5 பாயின்ட்

வைலட் இங்க்

லாகுட்	8 பங்கு
தெளிவான ஜலம்	65 பங்கு

இரண்டையும், கொதிக்க வைக்கவும். அரைவாசிக்கு சுண்டி வந்ததும் அதை வடிகட்டி அதில் 1 பங்கு கிளோரைட் ஆப்னின் கலந்து கொள்ளவும். மை தயார்.

மேற்படி நெம். 2

ரேன்லாட்டின் பெயர் கொண்ட பல்வேறு வர்ணங்கள் இங்லிஷ் மருந்து ஷாப்புகளில் கிடைக்கின்றன. இஷ்டப்பட்ட நிறத்தை வாங்கி அதில் 8 பங்கு கிளிசரீனும் 8 பங்கு ஸ்பிரிட் ஒயினும் கலந்து கொள்ளவும்.

விசித்திர இங்க்

கத்தகாம்பு ஜலத்தில் காய்ச்சவும். கொதிப்பு வந்தவுடன் அதில் சோடா உப்பு கொஞ்சம் போல் போடவும். அப்பால் இரண்டையும் கலந்து வடி கட்டி பாட்டலில் அடைத்துக் கொள்ளவும் பிரகாசமான மை ஆய்விடும்.

இங்லீஷ்மை செய்தல்

செல்லிவற்றல், தான்றிக்காய், கடுக்காய்	15 தோலா
தாருசு	7 தோலா
இரும்புத்தூள்	5 தோலா
ஜலம்	2 சேர்

இவைகளை யாவும் ஓர் இருப்புப் பாத்திரத்தில் போட்டு 8 நாள் வரையில் அப்படியே விட்டு விடவும். பிறகு அதை எடுத்து அடுப்பில் ஏற்றி காய்ச்சவும், அதிலுள்ள ஜலம் 1¼

அல்லது 1½ சேர் அளவிற்கு சுண்டி வந்தவுடன் பாத்திரத்தை இறக்கி வடிகட்டி உபயோகிக்க வேண்டும்.

வெள்ளியப் பெயிண்ட்

இது மிக்க லாபகரமானதோர் கைத்தொழில் ஒழுங்கு முறைப் படி தயாரிக்கப்படுமாயின் அதிக பலிவாக அடங்கும்.

ஒரு காலன் தெளிவான சுத்த ஜலத்தை சொதிக்கவைக்கவும் ஜலம் கொதித்ததும் சல்பைட் அப்சின்க் 4 பவுண்டு போட்டு விடவும். கொஞ்சநேரத்திற்குப் பிறகு அதனடியிற் ஒரு விதநூள் போல் சேர்ந்து விடும். அப்பொழுது பேலிலிருந்து தெளிவான நீரை இறுக்கி பாட்டிலொன்றில் அடைத்துக் கொள்ளவும். 1 காலன் பெயின்டில் அதைக்கலந்து கொள்ளவும். எல்லாம் தைல மாய் விடும். இந்த முறையால் தைலம் தடிப்பாய் விடும் பக்ஷத்தில் அதில் டர்பன்டைனைக் கலந்து இளகலாக்கிக் கொள்ளவும்.

விநோத இன்க்; உஷ்ணம் பட்டாலன்றி எழுத்துக்கள் புலப்படா.

மேற்படி இன்க் செய்யும் முறை:—

சல்பரிக் ஆசிட்	ஒரு பங்கு
ஜலம்	20 பங்கு

இரண்டையும் ஒன்றாய்க் கலந்து கொள்ளவும்.

இருளில் புலப்படும் எழுத்துக்களுக்குரிய மை

சின்னமென், பாஸ்பரஸ் அதாவது:—

முதல் சரக்கு	½ அவுன்ஸ்
இரண்டாவது சரக்கு	½ டிராம்

இரண்டையும் சேர்த்து இளநெருப்பின் பேரில் காய்ச்சவும். 2-ம் ஒன்றோடொன்று கலந்து கொண்டதும் அதைப் பொட்டியில் அடைத்துக் கொள்ளவும்.

உரோம சங்காரி சோப்

காஸ்டைல் ஸோப் உடைய அழுத்த

இதழ்கள்	1 பவுண்டு
வென்னீபார்ஸோப்	2 பவுண்டு

சஜ்ஜீகாரம்	½ பயின்ட்
மழைத்தண்ணீர்	1 குவார்ட்

ஸோப்கரைந்து போனதும் எல்லாசரக்குகளையும் 5 நிமிஷம் வரையில் கொதிக்க வைத்து சுத்தப்படுத்திக் கொள்ளவும். வாசனையும் நிறமும் இஷ்டம் போல் சேர்த்துக் கொள்ளலாம். விருப்பத்திற் கேற்ப துண்டுகளையும் அறுத்துக் கொள்ளவும்.

ஷை நெம்பர் (2)

சோடா காஸ்டிக் (நெம்பர் 70 அல்லது 72) 16 தோலா வாங்கி 40 தோலா ஜலத்தில் கரைத்துக் கொள்ளவும். அப்பால் கல் லெண்ணெ அல்லது கடு கெண்ணெ அல்லது தேங்கா எண்ணெ 1 சேர் அதாவது 80 தோலா எடைவாங்கி ஒரு கண்ணுடிப் பாத்திரத்தில் போட்டு ஜலத்துடன் கலந்து யாதொரு நிறம் வாசனை யுடன் கலந்து விட்டு விடவும். சிறிது நேரத்திற்திற்குள் சோப் கெட்டியாய் விடும். அப்பால் வேண்டிய அளவிற்கு தயாரித்துக் கொள்ளவும்.

ஷை நெம்பர் (3)

தேங்காஎண்ணெ	10 சேர்
(80 தோலா கொண்டது 1 ,,)	
சோடா காஸ்டிக்	1½ ,,
தண்ணீர்	3 ,,

முதலில் சோடாவை ஜலத்தில் போட்டு கோலினுல் கலக்கிக் கொள்ளவும். அப்பால் யாதொரு பாத்திரத்தில் எண்ணெயை ஊற்றி கலந்துள்ள ஜலத்தைச் சேர்த்து செவ்வனே கலக்கி விட்டு விடவும். 2—வது நாள் அதிலிருந்து 1 சேர் சோப்பை எடுத்து அத்துடன் எட்டு தோலா பேரியம் சல்பைட் மருந்தைக் கலந்து பில்லைகளாக அமைத்துக் கொள்ளவும். பிறகு சற்று நேரங் கழித்து ஜலம் விட்டுகழுவி விடவேண்டும்.

நகை சுத்தம் செய்யும் ஸோப்

நகைகளை சுத்தம் செய்யும் சோப் பெரும் பாலும் கிடைப்ப தரிது. அதற்கென தயாரிக்கப் பட்டால் மிக்க மதிப்புடன் விலைப் பெறும். இதை தயாரிக்கும் முறை:—

23 தரமுள்ள சோடா	40 பங்கு
தேங்கா எண்ணை	25 ,,
டிரி போலி	5 ,,
வெள்ளீயம்	2½ ,,
கிரீம் ஆப்டார்டார்	2½ ,,
படிகாரம்	2½ ,,

இவைகளை எல்லாம் ஒன்ருகச் சேர்த்துகாய்ச்ச சோப்பாகிறது வந்து விடும். அப்புறம் அச்சுகளில் போட்டு வார்த்துக் கொள்ளவும். இஷ்டமான அட்டைப் பெட்டிகளில் போட்டு விற்கலாம்.

கிளிசரீன் சோப்

தேங்காய் எண்ணை	70,000 பங்கு
கொழுப்பு	40,000 ,,
காஸ்டராயில்	30,000 ,,
காஸ்டிக்சோடாலாயி (38 B.)	79,000 ,,
ஜீனி	54,000 ,,
ஜலம்	60,000 ,,
அல்கோஹல்	40,000 ,,
ஜிரீனியம் ஆயில்	250 ,,
லிமன் ஆயில்	200 ,,
பாம் ரோஸ் ஆயில்	1,200 ,,
பர்கமோட் ஆயில்	80 ,,

கொழுப்பு, தேங்கா எண்ணை காஸ்டராயில் இம்மூன்றையும் தனியே கலக்கிக் கொள்ளவும். காஸ்டிக்சோடா, ஜீனி. தண்ணீர், அல்கோஹல் இம்மூன்றையும் தனியாகக் கலந்து கொள்ளவும்.

எல்லாம் கலந்து கொண்டதும், கொழுப்பும் எண்ணையும் சேர்ந்த தாரயை அதில் விட்டுகிளரிக்கொண்டிருக்கவும். பாகு தடிப்பானவுடன் அதைக் கீழே இறக்கி ஜிரேனியம் ஆயில், லிமன் ஆயில், பாம்ரோஸ் ஆயில் பர்கோ மோட் ஆயில் கலந்து கொள்ளவும். இனி அச்சுகளில் வார்த்துக் கொள்ளவும்.

டாய்லட் சோப்

இங்லீஷ் சோப் துவைக்கவும், குளிக்கவும் உபயோகப் படுதல் வெளிப்படை. அதன் தாய்ச்சரக்குகள் இரண்டுதான். அதாவது

எண்ணெ, காஸ்டிக்சோடா. இதுவே அவற்றின் பிரதான இரகசியம். இங்லீஷ் சோப் செய்யும் இலகுவான முறை யொன்று இதனடியில் வரையப்படுகிறது. இதிலிருந்து அனுபவ மற்ற ஒருவர்கூட இலகுவாய் தயாரித்துக் கொள்ளலாம்.

(1) தேங்கா எண்ணெ	30	பங்கு
(2) காஸ்டராயில்	3	,,
(3) காஸ்டிக்சோடாலாய் (30 B)	17½	,,

ஜலத்தின் சொற்பளவில் காஸ்டிக் சோடாவை அடுப்பில் யேற்றி கலந்து கொள்ளவும். கலந்து கொண்டதும் தேங்காய் எண்ணெ தாரை தாரையாய் அதில் ஊற்றவும். அதற்குப்பின்னர் காஸ்டர் ஆயிலும் சேர்த்து தொடர்ந்தாற்போல் கிளறிக் கொண்டிருக்கவும். பாகுபதத்திற்கு வந்ததும் கீழே இறக்கி அச்சுகளில் ஊற்றவும். இதன் நிறம் வெள்ளையா யிருக்கும். நிறங்கொடுக்க வேண்டுமானல் எந்த நிறமும் கொடுக்கலாம்.

மிதக்கும் சோப்

இதைப்பற்றிய விளம்பரத்தை நேயர்கள் பத்திரிகைகளில் படித்திருக்கலாம். இதை எளிதில் செய்யும் முறை அடியில் வருமாறு:—

½ குவார்ட் சோப்பை ½ காலன் தண்ணீரில் எண்ணெயுடன் சேர்த்து கறைத்து விடவும். மேலும் சோப்பைஆவியின் சூட்டைக் கொண்டே கறைக்க வேண்டும். அது கறைக்கப்படும் வரையில் இரும்பு அகப்பையைக் கொண்டு கிளறிக் கொண்டே இருத்தல் அவசியம். கலப்பு சரிவர ஏற்பட்டவுடன் அதை யெடுத்தெடுத்து அச்சுகளில் வார்த்துக் கொள்ளவும். இந்த சோப் ஏராளமாய் செலவழியும் தக்க லாபமும் கிடைக்கும்.

முகவசீகர சோப்

உலகின் கண் எல்லா சமூகங்களில் உள்ள ஸ்திரீகளும் தங்கள் முகத்தை லக்ஷணத்திற்குட் படுத்தி தேகத்தையும் மினுமினுப் புள்ளதாய் செய்து கொள்ளவே விரும்புகிறார்கள். எனவே அந்த கைய காரியத்திற்காக அடியிற்கண்ட சோப்பு பரிபூரண திருப்தியைத் தரத்தக்கதாகும். இதன் உபயோகத்தால் சருமம் மிருதுவாகி மினுமினுப்பு ஏற்படும், முகவசீகரமும் உண்டாகும்.

ஈயப்பாத்திர மொன்றில் அல்கஹல், சோப் இரண்டையும் வைக்கவும். அதாவது 1 பவுண்டு நிறையுள்ள சோப்பிற்கு 8 குவார்ட் அல்கஹல் என்ற கணக்கில் போடவும். அப்பாத்திரத்தை தண்ணீர் நிறைந்த மற்ருெரு பாத்திரத்தில் வைத்து கீழே நெருப்பு எரிக்கவும். சோப்பு கறைந்து போகும் வரையில் எரித்து வர வேண்டும். சோப்பு கறைந்தவுடன் பாத்திரத்தை எடுத்து அதற்கு மேல் மூடிவிட்டு சூடான தோர்விடத்தில் அது தெளிவாகும் வரையில் வைத்துவிடவும். சோப்நுறை மேலேவரும். அதை அப்புறப்படுத்தி அடியிலுள்ள கலப்பை சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இனி பாத்திரத்திலுள்ளதை மெதுமெதுவாக இறுத்திய பின் அதை மற்ருெரு பாத்திரத்தில் போட்டு முன்போல் சுத்தம் செய்யப்பட்டுள்ள கலப்பை காய்ச்சவும். மேலே வரும் நுறையை நீக்கிக் கொண்டே போகவும். இறுதியாக அந்த கலப்பை காற்றில் உலர்த்தவே உயர்தரமான சோப் தயாராகிவிடும். இதை பிரியம்போன்ற வடிவத்தில் துண்டுகளாக அமைத்து உபயோகத்தில் கொண்டு வரவும்.

தலைக்குத் தடவ வாசனை கிளைஸரீன்

அடியிற்கண்ட கிளைஸரீனை எண்ணெய்க்குப் பதிலாக தலைக்குத்தடவிக் கொள்ளலாம். இதைசெய்யும் முறை:—

பாதாம் எண்ணெய்	2 அவுன்ஸ்
எலுமிச்சம் எண்ணெய்	2 டிராம்
கிளைஸரீன்	1 அவுன்ஸ்
சுண்ணும்பு நீர்	8 ,,
பொட்டாசியம் கார்பனேட்	2 டிராம்

இவையாவும் கலந்து கொள்ள வாசனையுள்ள லைம்ஜூஸ் கிளைஸரீன் தயாராய்விடும்.

வச்சிரம் செய்தல்

எருமை, காளை, ஆடுமுதலிய பிராணிகளின் கொம்பு, குளம்பு நரம்பு முதலியன எறியப்பட்டுப் போகின்றன. இவைகளையாவும் சேகரித்து பெரியதோர் பீப்பாவில் போட்டு அதில் 16 சேர் தண்ணீர் ஊற்றவும். அப்பால் அதை தக்க நெருப்பின் மீதேற்றி

எரிக்கவும். கொதிப்புக் கண்டபின்னர் நெருப்பின் வேகத்தை குறைத்துக் கொள்ள வேண்டும்.

சுமார் 5, 6, மணிநேரம் வரையில் அதே விதமான இள நெருப்பின் மேல் வைத்து எரித்த பின்னர் பீப்பாவை நெருப்பின் மேலிருந்து இறக்கி கொதிப்படைந்த ஜலத்தை தடித்ததோர் வஸ்திரத்தில் வடிகட்டிய பிறகு அதை மறுபடியும் நெருப்பி லேற்றி எரிக்கவும். முன் வைத்திருந்த நேரம் வரையில் வைத்து மீண்டும் வடிகட்டிக் கொள்ளவும்.

வடிகட்டிய ஜலத்தை மட்பாத்திரத்தில் போட்டு வைக்க சுமார் 10 அல்லது 12 மணி நேரத்தில் கெட்டிப்பட ஆரம்பிக்கும். அவ்வாறு கெட்டிப்பட்டுப் போனவுடன் கத்தியைக் கொண்டு அதை நீளத்துண்டுகளாக அறுத்துக் கொள்ளவும். அத்துண்டு கள் பாய்களின் மீதோ அல்லது கட்டில்கள்பேரிலோ பரப்பி உலர்த்திக் கொள்ளவும். இது முதல் தரமான வச்சிரமாய் விடும். இது எளிதில் விற்பனையாகும், நல்ல லாபமும் கிடைக்கும்.

தகர வார்னிஷ்

தகரசாமான்கள் தற்கால ஏராளமாய் மூலாம் பூசப்படுவது வெளிப்படை. ஆனால் தொழில் ரகசியம் தெரிந்தவர்களே இதனால் நன்மை யடைகிறார்கள். பொதுமக்கள் அனைவருமே அதனால் நன்மை யடையும் பொருட்டு அடியிற் கண்டமுறை வரையப்படு கிறது.

அல்கஹால்	$\frac{1}{2}$ பாயின்ட்
கம்ஷேலாக்	1 அவுன்ஸ்
ரெட்செண்டர்	$\frac{1}{4}$,,

கண்ணாடி பாத்திரமொன்றில் இந்த சரக்குகளை யெல்லாம் கலந்து உஷ்ணமானவிடத்தில் ஓர் இரவு அல்லது ஒரு பகல் வைத்திருக்கவும். ஆனால் கொஞ்ச நேரத்திற் கொருமுறை அதை கலக்கிவிட்டு வரவும். மேற்சொன்ன நேரம் பூர்த்தியாகி விட்டதும். அதை வடிகட்டிபாட்டிலில் அடைத்து கெட்டியான கார்க்கிடவும்,

இனி நிறங்களைப்பற்றி கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனில்:

நீல நிறம் தயாரிக்க வேண்டுமானால், மேற் சொல்லப்பட்ட சரக்குகளுடன் பிரேஷன் புளு $\frac{1}{2}$ அவுன்ஸ் சேர்க்கவும்.

பொன் வார்னிஷ் தயாரிப்பதானின் $\frac{1}{2}$ அவுன்ஸ் டரம்பர் கலக்கவும். இந்த வார்னிஷ் தகரடப்பா, தகரபாத்திரம் முதலியனவற்றிற்கு உபயோகிக்கத் தகுந்ததாகும்.

விலையுயர்ந்த ஆயில் கலர் சித்திரங்களை புதுபித்தல்.

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் சில நிபுணர்களின் சித்திரப் படங்கள் அஜாக்கிரதையின் காரணமாக கிடங்குகளில் கவனிக்கப்படாமல் கிடந்து போகின்றன. அவைகள் சிற்சில சமயங்களில் குவியல் குவியலாக ஏலத்திற்கு வந்து விடுகின்றன.

அவைகளை வாங்கி சுத்தம் செய்து விற்பனை செய்தால் எவ்வளவோ பொருள் சம்பாதிக்கலாம். அத்தகைய படங்களை சுத்தம் செய்வதற்கான முறை கீழ்வருமாறு:—

பெரியதோர் உருளைக்கிழங்கை வாங்கி அதை இரண்டாக அறுங்கள். ஒரு துண்டை எடுத்து அறுபட்ட பக்கமாய் சித்திரத்தின் பேரில் நன்ருய் தேயுங்கள். முதலில் படத்தின் தலைப்பில் தேய்த்து பிறகு படத்தின் கீழ்வரையிலும் உங்கள் தேய்ப்பை இறக்கிக்கொண்டு வாருங்கள். ஆனல் நீங்கள் தேய்க்கும் துண்டு செங்குத்தாக படத்தின் மேல் செல்லக்கூடாது, வட்டவடிவில் தேய்க்கவேண்டும். இதனல் நல்ல பலனேற்படும். படத்திலுள்ள நிறத்திற்கு சற்றும் தீங்குகள் ஏற்படாது.

மாந்தரீக பாலிஷ் பவுடர்

ஆடவர்களுக்கும் பெண்டீர்களுக்கும் பிரயோசனப் படக்கூடிய இப்பவுடர் இருபாலரையும் திருப்தி அளிக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. இரண்டு அவுன்ஸ் அளவு கொள்ளத்தக்க அழகிய அட்டை டப்பிகளில் இதை யடைத்து விற்பனை செய்ய நல்ல லாப மடையலாம். இதன் பாகம் வருமாறு:—

சாக்பிரிசிப்	4 பவுண்டு
கிரீம் ஆப்டார்டார்	$\frac{1}{4}$ அவுன்ஸ்
கெலெண்டு மக்னேஷியா	3 அவுன்ஸ்

இவைகள் யாவும் ஒன்ருய்க் கலக்கிக் கொண்டால் நல்ல பாலிஷ் பவுடராய் விடும்.

வாயல்விளம்பர போர்டுகள்

கடைக்காரர்களும், பிரபலவர்த்தகர்களும் தங்கள் வியாபார ஸ்தலங்களின் வாயல்மீது கண்ணாடி அல்லது பித்தளை போர்ட்டுகளின்பேரில் தங்கள் விலாசம் வியாபாரம் சம்மந்தமான அறிவிப்பை கொட்டை எழுத்துக்களில் எழுதவைத்து அவைகளை அமைத்து வைக்கிறார்கள். இத்தகைய அறிவிப்புக்குரிய போர்டுகள் இல்லாத வியாபார ஸ்தலங்கள் மிக்க அரியதாகும். உங்களுக்கு அந்த வேலை தெரிந்திருந்து நீங்கள் அவர்களிடம் குறைந்த சார்ஜுக்கு நேர்த்தியானமுறையில் அதை வரைந்து கொடுப்பதாகச் சொன்னால் அவர்கள் அநேகமாய் உங்களுக்கு வேலை கொடுப்பார்களென்ற நம்பிக்கையுண்டு.

விளம்பரத்துக்குரிய அமைப்பு எழுத்துக்கள் உங்களுக்கு கிரமமான விலையில் பஸாரிலிருந்து கிடைக்கவும் கூடும். அல்லது டைரக்டரி புத்தகத்தை பார்ப்பீர்களாயினும் அந்த எழுத்துக்களை தயாரிப்பவர்களின் விலாசங்கள் உங்களுக்கு தெரிந்து போம். அவ்வெழுத்துக்களை தயாரிப்பதற்குரிய சிமென்ட் நீங்கள் செய்யவிரும்பினால் அதற்குரிய பாகம் அடியில் வருமாறு:-

லத்தாரஜ்	2 பங்கு
வெள்ளீயம்	1 பங்கு
காய்ச்சின அலசி எண்ணை	3 பங்கு

உபயோகிக்கப்போகும் சமயத்திலேயே இவைகளை எல்லாம் ஒன்றாய்க் கலந்து உபயோகிக்கவேண்டும்.

உடைந்து நொருங்கிய கண்ணாடிகளின் மூலம் சம்பாதித்தல்

உடைந்து நொருங்கிப்போன கண்ணாடிகளை மக்கள் அப்பால் கொண்டுபோய் வீசி எறிந்து விடுகின்றனர். ஆனால் நீங்கள் அவற்றின் மூலமாயும் சம்பாதிக்க வழியுண்டு. அதாவது நீங்கள் அவைகளைக் கொண்டுவந்து நுட்பமாய் அறைத்துக் கொள்ளுங்கள். மிக்க தடிப்பான கடுதாசிகளின்மேல் உருக்கின வச்சிரத்தைப்பூசி அதன்மீது அறைத்ததூளை நிறைவி தூவிவிடவும் இதுவே உப்புத்தாள் எனவழங்கப்படுவது. தூளை பெரும் பொடியாக அறைத்து

தூவினால் அது மோட்டாவேலைக்கும் நுட்பமாக அரைத்துத் தூவினால் அது கைஸ்வேலைக்கும் உதவும்.

வீசி எறியப்பட்ட பழைய செருப்புகள்

பழைய செருப்புகளை பாத்திர மொன்றில் போட்டு அவைகள் மூழ்கிப் போகத்தக்க அளவிற்கு கசப்பெண்ணை ஊற்றவும். 14 நாட்களுக்குப் பிறகு அவைகளை இளஞ் சூடான நெருப்பின்மே லேற்றி 3 மணி நேரம் விட்டு வைத்து பின்னர் வாலையின் மூலம் தைலம் இறக்கிக் கொள்ளவும். இத்தைலத்தை ஒரு முறை இயந்திரங்களுக்குப் பூச நீண்ட காலம் வரை மீண்டும் அவைகளுக்கு எண்ணையிட அவசியமில்லை.

கில்ட் வேலை சம்பந்தமானவை

கில்ட் இருவகைப்படும். அவற்றுள் ஒன்று பாட்டரி மூலம் ஏற்றப்படுவது இரண்டாவது பாட்டரி இல்லாமல் தனியே பூசப்படுவது.

இரண்டாவது கில்ட், அவ்வளவு சிறந்ததல்ல சொற்ப நாள் தான் இருக்கக்கூடும்.

முதல் கெம்பர்கில்ட் நீடித்திருக்கும். நேர்த்தியாகவும் தோற்றப்படும். பாட்டரிகளைப் பற்றிய சுருக்கமான விளக்கம் அடியில் வருமாறு :—

பாட்டரி அமைப்பு

ஒரு ஜாடி எடுத்துக் கொள்ளவும். அதாவது அதில் 6-7 சேர் தண்ணீர் கொள்ள வேண்டும்.

ஆனால் ஜாடியில் செப்பு உறை யொன்றும் அமைந்திருக்க வேண்டும்.

இரண்டாவது மண்ணின் சுட்ட குழாய் ஒன்று இதன் நீளம் 13-14 அங்குலம், சுற்றளவு 3 அல்லது 4 அங்குலம் ஒரு புறம் வாய் மூடப்பட்டதும் 2-வது புறம் வாய் திறந்தாயும் இருத்தல் வேண்டும்.

3-வது, துத்தநாகத்தின் நீளக்கிண்ணம் 1. இதன் நீளம் 11-12 அங்குலம் - தடிப்பு 2 அல்லது 3 அங்குலம்-அதன் மேல் புறம் சபீ பட்டையாயும் அடிபுறம் தடிப்பாயும் இருக்க வேண்டும்.

இக்கிண்ணத்தின் மத்திய தலைப்பில் பித்தளை குண்டா வொன்றை அமைத்து விடவும்.

இனி வேலை செய்பவர் முதலில் அந்த கிண்ணத்தின் மேல் புளிப்பை தேய்க்க வேண்டும். பின்னர் ரசத்தை தேய்க்கவே புளிப்பின் காரணமாக ரசம் சீக்கிரம் ஏறிவிடும். அதனால் முலாம் வேலையில் எவ்வித தீங்கும் நேரிடாது.

இனி அந்த ஜாடியில் துருசு $\frac{1}{4}$ சேர், ஜலம் $\frac{1}{2}$ சேர், மண் குழாயில் $\frac{1}{2}$ சேர் உப்பு போட்டு குழாயின் 4-வது பாகம் காலியாக இருக்கும் அளவில் ஜலம் ஊற்றவும்.

இவ்வாறு மூன்று பாத்திரங்களின் இணைப்பு ஏற்பட்டு விட்டதும் இரண்டு செப்புக் கம்பிகளை ஜாடிகளின் ஒரு புறத்தில் கட்டி விடவும்.

அதில் ஒரு கம்பி மெல்லியதாயும், அரைகஜம் நீளமுள்ளதாயும் இருத்தல் அவசியம்.

2-வது கம்பியோ தடிப்பாக இருக்க வேண்டும். இந்தக் கம்பிகளில் வளைந்த முறுக்குகள் அமையப் பெற்றிருப்பின் மிகவும் நல்லதாகும்.

அவ்வாறு இருந்துவரின் அவசியமான சமயங்களில் அவைகளை சிறிதும் பெரிதுமாக்கிக் கொள்ளலாம்.

இது சம்பந்தமாக இன்னும் சில விஷயங்களை தெரிந்து கொள்ளல் அவசியமாகும். அதாவது :—

வெள்ளி கில்ட் கொடுக்க வேண்டுமானால் அதற்கு ஒரு பாட்டரீ போதுமானது.

தங்க கில்ட் கொடுக்க வேண்டுமானல் 1, 2, பாட்டரிகளின் அவசியம் ஏற்படும். 3, 4 பாட்டரிகளை ஒரு மிக்க சேர்த்து விடுங்கால் அவற்றின் சக்தியில் அபிவிருத்தி ஏற்பட்டு விடுகிறது. இவைகளைப் பொருத்த வேண்டியவிதம் யாதெனில், ஒரு பாட்டரியின் கிண்ணத்தின் கம்பியை 2-வது பாட்டரியின் துத்தநாகக் கிண்ணத்துடன் இணைக்க வேண்டும்.

குறிப்பு :—உப்பு தண்ணீர் இவ்விரண்டிற்கும் பதிலாக குழாய்க்கு மத்தியில் 'சல்பரிக் ஆசிட்' உடன் கொஞ்சம் ஜலத்தைக் கலந்து போடுவதனாலும் சக்தி அதிகரிக்கும்.

இன்னும் சில குறிப்புகள் :—

1. எந்த ஜலத்தில் உலோக உப்பு சம்பந்தப்படுகிறதோ, அதற்கு சலூஷன் என்று பெயர்.

2. எந்த இயந்திரத்தின் மூலமாய் சலூஷன் ஏற்றப்படு கிறதோ அதற்குப் பெயர் பாட்டரி.

3. சலூஷன் வைக்கப்படும் பாத்திரத்திற்குப் பெயர் 'பாத்' என்பது. இது பளங்கான் அல்லது கண்ணாடி அல்லது கல்லினால் செய்யப்பட்டுள்ளது.

4. எந்த சாமானுக்கு கில்ட் கொடுக்கப்படுகிறதோ அதற்குப் பெயர் சப்ஜெக்ட்.

5. எந்த செம்புக் கம்பி துத்த நாகக் கிண்ணத்திலிருந்து வெளியாகிறதோ அதற்கு 'செகேடிவ் எலெக்ட்ராட்' என்று சொல் லுகிறார்கள். செப்புப் பாத்திரத்திலிருந்து எடுக்கப்படுகிற கம்பிக் குப்பெயர் பாஸிடிவ் வல்கர்ட். எனவே சலூஷனை ஏற்றும்பொருள் 'கன்னேட்' என்றும் செப்புத்துண்டைக் கரைத்து ஸலூஷனை சேர்ப்படுத்துவது 'அன்னேட்' என்றும் வழங்கப் படுகின்றன.

பாட்டரியைப்பற்றி சில

குறிப்புகள் :—பாட்டரி சக்திக் குன்றிப்போயிருந்தால் சலூ ஷனும் குறைவாகவே ஏறும். அப்போது அதில் அபிவிருத்தி ஏற் படுத்த உப்புடன் துருசைச் சேர்த்துப் போடுங்கள்.

பாட்டரி சக்தி, அளவுக்குமேல் அதிகரித்து சலூஷனும் அதிகம் செலவாகிறது எனத்தெரிந்தால் அப்போது அதைக் குறைக்க முயலுங்கள். அதாவது இரண்டு கம்பிகளின் தலைப்புகளை யும், சிறிது சேதத்துக்கு விட்டுவிடுங்கள். அல்லது இரண்டு கண் ணாடி டம்ளர்களில் ஜலம்ஊற்றி இக்கம்பிகளின் கடுப்பாகங்களை டம்ளர்களில் போட்டுவிடுங்கள். சக்தி குறைவதற்கு ஜலத்தில் கொதிப்புண்டாகும்.

பாட்டரியில் போதிய சக்தி இல்லாததால் தக்க சலூஷன் ஏற் படவில்லை என்று தெரிந்தால் அவ்வமயம் கொஞ்சம் பொடாஷ் போடுங்கள்.

பொடாஷ் அளவுகடந்து போனால் நிறம் கருப்பாய்விடும். அவ்வேளையில் பில்டர் செய்த சுத்த ஜலம் மேற்கொண்டு ஊற்றிவிடுங்கள்.

கம்பிகள் எவ்வளவுக் கெவ்வளவு தடிப்பாயிருக்குமோ அவ்வளவுக்கவ்வளவு சலூஷன் சீக்கிரம் ஏறிவிடும். கில்ட் செய்வதற்கு முன் சாமானை செவ்வனே சுத்தம் செய்துக் கொள்ளுங்கள். எங்கேனும் தைலப்பசை இருந்துவிட்டால் அங்கு கில்ட் பிடிக்காது. அலத சாக்பீஸைக்கொண்டோ அல்லது மணலினாலோ தேய்த்துப் போக்கவேண்டும். புளிப்பு, அல்லது ஆசிடைக்கொண்டும் போக்கி விடலாம்.

ஆரம்பத் தொழிலாளர் இந்த விஷயங்களை யாவும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். மின்னல் மினுக்கிக் கொண்டிருக்கும் சமயத்தில் பாட்டரிகளை இணைத்தால் தீங்கு ஏற்படலாம். கில்டும் ஏறமாட்டாது.

கில்ட் மசாலா (பவுடர்)

எந்ததோர் உலோகத்தின் கில்ட் கொடுக்க வேண்டுமோ முதலில் அதன் பஸ்பத்தை தயாரித்துக் கொள்ளவும். அப்பால் தயாரித்த பஸ்பத்தையும், பொடாஷ் ஜலத்தையும் ஊற்றி (குறித்த அளவுக்கு போட்டதும்) ஒன்ருய்க் கலந்துகொள்ளவும். இந்தகலப்பு ஜலமே சலூஷன் எனப்படும்.

பல்வேறு உலோகங்களின் உப்பை தயாரிப்பதற்கு பல்வேறு திராவகங்களின் அவசியம் ஏற்படுகிறது. எனவே அவற்றின் முறை அடியில் வருமாறு :—

தங்கப் பவுடர்

தங்கத்திலிருந்து பவுடர் தயாரிக்க வேண்டுமாயின் முதலில் தங்கத்தூளைக் கொண்டு வெடி உப்பும் திராவகமும் யாதொரு சீசாவில் போட்டு நெருப்பின்மேல் வைக்கவும். இக்காரியத்திற்காக நெருப்பைத் தாங்கும் கண்ணாடி பாட்டிலை உபயோகப்படுத்த வேண்டும். முதலில் சிரான அணலைக் காட்டவும். அதிலிருந்து அத்தூள் இந்ததிராவகத்தில் கலந்துக் கொள்ளும். அப்பால் சிறுகச்சிறுக அணலை அதிகரித்துக் கொண்டே போகவும். ஏனெனில் அந்த சீசாவிலுள்ள திராவகம ஆவியாய்ப் போய்விட வேண்டும். பிறகு தங்

பஸ்பத்தை தண்ணீரில் கரைத்து, சானியாடி போடாஷ் ஜலத்தில் கலந்து சிலதுளிகள் அதில் போடவும்.

திராவகம் ஆவியாய் பறந்துபோன பின்னர் அடியில் தங்கி விட்ட பஸ்பம் அடியில்போய்ச் சேர்ந்துவிடும்.

அப்பால் அதன்மேலிருந்து ஜலத்தை எவ்வாறு இறுத்திக் கொள்ள வேண்டுமென்றால் தங்கிவிட்ட தங்கப்பவுடர் ஜலத்துடன் வெளியில் வராதிருக்க வேண்டும். இதே முறையில் மேற்கொண்டு 2, 3 தடவை சுத்த ஜலத்தை ஊற்றி, ஊற்றி தண்ணீரை இறுத்திக் கொள்வதனால் தங்க பஸ்பமாய் விடும்.

வெள்ளிப் பவுடர்

இதுவும் மேற்கண்ட முறையில் உள்ளதே. வித்தியாசம் இரண்டிற்கும்மிடை யாதெனில் வெள்ளித்தூளை வெடிஉப்பு திராவகத்தில் மேற்கண்டவாறே உருக்கி கழுவும் சமயம்பொடாஷ் போடலாகாது. ஆனால் அதற்கு பதிலாக சாம்பார் உப்பை ஜலத்தில் கரைத்து அதில் வெள்ளிப் பவுடரை போடவும். இப்பவுடர் சுத்தமானதும் அடியில்போய் தங்கிவிடும். அப்போது அதை எடுத்து 3, 4 தடவை சுத்த ஜலத்தைக் கொண்டு கழுவி விடவும். வெள்ளி பவுடர் தயாராகி விட்டது.

செம்பு பஸ்பம்

செம்பும் வெள்ளியைப் போலவே வெடிஉப்பு திராவகத்தைக் கொண்டு மடிந்து போகிறது. ஆனால் இது அதற்கு மாறாக பொட்டாஷ் ஜலத்தைக் கொண்டு கழுவப்படுகிறது.

ஈய பஸ்பம்

இதுவும் வெள்ளி பஸ்பம் முறையை அனுசரித்துள்ளது ஆனால் இது வெடிஉப்பு திராவகத்தால் தயாரிக்கப் படுகிறது.

ரஸ பஸ்பம்

ரஸத்தை வெடிஉப்பு திராவகத்தில் போட இது உறுகிப் போகும். மீதியாவும் ஈய முறையை அனுசரித்ததே.

நிக்கல் சில்வர் பஸ்பம்

நிக்கல் சில்வரை பஸ்பமாக்க வேண்டுமானால் நிக்கல் சில்வர் துண்டுகளை நெருப்பில் போட்டு பழுக்கக் காய்ச்சி ஜலத்தில் போட்டு எடுத்தவுடன் அதை சீக்கிரமாக தகடு ரூபத்துக்கு தட்டிக் கொள்ள

வும். அப்பால் யாதொரு பாத்திரத்தில் வெடிஉப்பு திராவகத்தை போட்டு அதில் மூன்றுபங்கு உப்பு திராவகமும், ஒருபங்கு கந்தக திராவகமும், போட்டபின் இடித்துள்ள நிக்கல் சில்வரை அதில் போடவேண்டும். இந்த நான்கு பாகங்களையும் ஒன்றாய்ப் போட்டு நெருப்பின் மேலேற்றி உறுக்கவும். திராவகம் ஆவியாய்ப் போய் சிகப்பு நிறங்கொண்ட ஆவி அடங்கினதும், நிக்கல் முற்றிலும் உறுகிப்போயிருக்கும். இதுவே உப்பு.

வெடியுப்பு செய்யும் முறை

முதலில் வெடியுப்பை நன்றாய் அரைத்துக் கொள்ளவும். பிறகு அதை இருப்புத்தாச்சி யொன்றில் போட்டு அடுப்பிலேற்றி எரிக்கவும். இது ஜலரூபத்திற்கு வந்து விடும். அதாவது செவ்வனே கரைந்து போனவுடன், அதில் சரியான நெருப்புக் கட்டிகளை எடுத்துப் போடவும். அப்போது அது உலர்ந்து உப்பாகி விடும். அப்பால் அதை குளிர்ந்த ஜலத்தால் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அது ஒன்றாய் சேர்ந்து உப்பாகிவிடும்.

சலூஷன் செய்தல்

பொன் திராவகம்	
பொன் பஸ்பம்	1/12 தோலா

½ சேர் சுத்த ஜலத்தில் போடவும். 2/3 தோலா சாய்னைட்ஆப் பொட்டாஷ் தண்ணீரில் கலக்கிக் கொள்ளவும்.

இப்போது சலூஷனை வஸ்திரத்தில் வடிகட்டி பாட்டிலி லடைத்து மேல் வாயை கார்க்கைக் கொண்டு கெட்டியாய் அடைத்து விடவும்.

வெள்ளி நீர் செம்பு பஸ்பம் ஒரு தோலா, பொட்டாஷ் 4 தோலா, ½ சேர் தண்ணீரில் போட்டு விடவும். இது சாத்தியப்பட வில்லையாயின் மற்றொரு முறை:—

துருசு	1 தோலா
சல்பரிக் ஆசிட்	½ தோலா
சுத்த ஜலம்	½ சேர்
ஆர்சனிக் ஆசிட்	1/12 தோலா

முதலில் வெந்நீரில் துருசை கலக்கிக் கொள்ளவும். பிறகு ஆறினதும், ஆசிட் சேர்க்கவும். பிறகு ஆர்சனிக் ஆஸிட் சேர்க்க

வும். ஆர்சனிக் ஆசிட் கிடைக்காவிடில் துருசை மட்டுமே தண்ணீரில் கலக்கிக் கொள்ளவும். இதுவும் அதே வேலையைத்தரும். இந்த ச்லூஷன் தயாரானதும், போதலில் போட்டு பத்திரப்படுத்தி வைக்கவும்.

துத்தநாக சலூஷன்

சல்பைட் ஆப்ஜின்க், (சல்பரிக் ஆசிடால் சுத்தி செய்தது) தண்ணீரில் கலக்கிக் கொள்ளவும். இந்த சலூஷன் இரும்பிற்கு மாத்திரமே உபயோகப்படும். வேறெந்த பொருளுக்கும் ஏறாது.

ரஸ சலூஷன்

ரஸபஸ்பத்தை முதலில் சாதா ஜலத்தில் கலக்கிக் கொள்ளவும். அல்லது ரஸஉப்பு ¾ தோலா, சானேட் ஆப் பொடாஷ் 1½ தோலா ஜலத்தில் கரைத்துக் கொள்ளவும் இந்த பொடாஷ் தனியே ஏறுவதில்லை. வெள்ளி கில்டிற்கு மிகவும் பயனளிக்கிறது. கில்ட் செய்ய வேண்டிய சாமானை இதில் தோய்த் தெடுத்தால் வெள்ளி சலூஷன் அதிகம் ஏறும். அது சேர்த்தியாயும், சுத்தமாயும் இருக்குமென்பதுடன் காள்படவும் இருக்கும்.

கலப்பு உலோகங்களின் சலூஷன்

மேலே சொல்லப்பட்ட உலோகங்களைத் தவிர ஜர்மன் சில்வர் உலோகத்தை உருக்கி பஸ்பம் செய்து சலூஷன் ஏற்றுவதில் பயன்படுத்திக் கொள்ள முடியும். அதாவது ஜர்மன் சில்வரை முதன் முதல் நைட்ரிக் ஆசிடில் உருக்கிக் கொண்டு பிறகு விரலைக் கொண்டோ அல்லது குச்சியின் மூலமோ அதை உள்ளில் அமுக்கி விடவும். பிறகு சாயினேட் சேர்த்துக் கலந்து சலூஷன் செய்து கொள்ளவும்.

பொன் வெள்ளி கலப்பு சலூஷன்

இந்த 2-உலோகங்களைச் சேர்ப்பதனாலும் ஓர்வித கலப்பு சலூஷன் ஆய் விடுகிறது. இது செய்யும் முறை:—

எவ்வளவு பொன் சலூஷன் இருக்குமோ அதற்கு அரை பங்கு வெள்ளி சலூஷன் அதில் கலக்கவும். இந்த சலூஷனை சூடேற்றி உபயோகிக்கவும். இலேசான பவர் பாட்டரியைக் கொண்டு இதை ஏற்றவும். இவ்வாறே தங்கம் செம்பு சலூஷன் தயாரிக்கப்

படுகிறது. இன்னும் இதே விதமாக அநேக கலப்பு சலூஷன்களும் செய்யப்படுகின்றன. உதாரணமாக :—

வெள்ளி, ஜர்மன் சில்வர் சலூஷன், துத்தநாக சலூஷன் முதலியன.

கில்ட் கொடுக்கும் முறை

நீங்கள் எந்த சலூஷனை பூச விரும்புகிறீர்களோ அதை யாதொரு பீங்கான் அல்லது கண்ணாடி அல்லது கருங்கல் பாத்திரத்தில் போடுங்கள். இன்னும் எந்த சாமானுக்கு கில்ட் கொடுக்க வேண்டுமோ, அதை துத்தநாக கம்பியினால் கட்டித்தொங்கவிடவும். பிறகு செம்பு வாளியால் இணைக்கப்பட்ட மற்றொரு கம்பியுடன் அந்த உலோகத்தின் சதுர துண்டை கட்டி விடுங்கள். ஏனெனில் ஜலத்திலுள்ள குளிர்ச்சியின் மூலம் சலூஷன் சக்தி எவ்வளவு கெவ்வளவு கிரகிக்கப்படுமோ, அவ்வளவுக்கவ்வளவு சூடானது அத்துண்டை, உருக்கி, உருக்கி தண்ணீரில் சேர்த்து விடும், இவ்வாறு செய்யா விட்டால் ஒரே தடவையின் உபயோகத்தால். சலூஷன சாரம் அற்றுவிடும். தனியே ஜலம் தங்கிவிடும். அப்பொழுது உங்களுக்கு ஒவ்வொரு தடவை புதிய சலூஷன் தயாரிக்க நேரிடும். அக்காரணத்தால் அடிக்கடி கஷ்டம் நேரிடும். எந்த கம்பி துத்தநாக பாத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறதோ, அது குளிர்ச்சியை கிரகித்துக் கொள்ளும்.

செம்பு பாத்திரத்துடன் இணைக்கப்பட்ட கம்பி உஷ்ணத்தை இழுத்துக் கொள்ளும். எப்பொழுதேனும் வேகமுள்ள பாட்டரியின் கம்பிகள் சலூஷனில் படுமாகில் சலூஷன் கெட்டுவிடும்.

எனவே வெள்ளிக் கம்பியால் சாமானைக் கட்டி குளிர்ச்சியான பாத்திரத்துடன் கட்டி விடுங்கள். இப்படியே உலோகத் துண்டையும், வெள்ளிக் கம்பியால் கட்டி சூடு இழுக்கும் பாத்திரத்துடன் இணைத்து விடுங்கள்.

சலூஷன் கெடாதிருக்க

சலூஷன் எவ்வாறு கெட்டுப் போகிறதெனில், அதில் தவறுதலாக ஏதேனும் தைலப் பசைபட்டு விடுமானால் சலூஷன் கெட்டுப் போகும். அப்பொழுது சாக்பீஸ் அல்லது ராமகட்டியின் சில

துண்டுகள் அதில் போட்டு விட்டால், அந்த தைலப்பசையை இழுத்துக் கொள்ளும்.

இதற்காக வேண்டியே நிபுணர்கள் அதை உபயோகிக்கிறார்கள். சாக்பீஸினால் சுத்தமாகாவிட்டால் சல்பரிக் ஆசிட் சில துளிகளை அதில் போடவும். ஏனெனில் அது அழுக்கை அப்புறப் படுத்தும். இன்னும் ஜலத்தை மேலிலிருந்து தெளிவுபடுத்தி உப்பை அடியிற் கொண்டு போய்ச் சேர்க்கும். அப்பால் ஜலத்தை மேலிருந்து இறக்கிக் கொண்டு உப்பை மறுமுறை கலந்து கொள்ள வேண்டும்.

சாநேட் பொடாஷ் அதிகம் போடப் பட்டிருந்தால், உலோக உப்பும் ஜலமும் மேல திகமாய் போடவும். தண்ணீர் அதிகமாயிருந்தாலும் உப்பும் பொடாஷும் மேலதிகம் போடவும்.

செப்பு சலூஷன்

இந்த வித்தை சம்பந்தமாக வித்வான்கள் பல்வேறு முறைகளை கண்டுபிடித்து இருக்கிறார்கள். அவற்றுள் சுலபமான முறை வருமாறு:—

மின்சாரப் பொருளை கிரகித்துக் கொள்ள லாயக் கற்றிருக்கும் பொருளின் மீது பேங்கோ பிளசர் ஏற்றி கண்டெக்டர் (பிரதமசாரணியாக) செய்து கொள்ளுகிறார்கள்.

எந்த சாமானின் பேரில் மூலாம் பூசவேண்டியிருக்குமோ அதை நெகெடிவ் எலெக்டரோடுடன் கட்டிவிட வேண்டும். அதாவது.

உருண்டையான நோர் கல்பாத்திரத்தில் துருசு தண்ணீரில் கலக்கி போடப்பட்டிருக்கிறது. அதனுள் துத்த நாகத்தின் மொத்தக்கம்பி யொன்றில் நிறுத்தப் பட்டிருக்கிறது. அத்துடன் செப்புக்கம்பி ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. அக்கம்பியுடன் சற்று கனமும் தொங்கவிடப் பட்டிருக்கிறதும், என்பதாக சிந்தித்துக் கொள்ளுங்கள்.

இயந்திர சலூஷன்

சாநேட் ஆப்பொடாஷ் சேர் 1-ஜலத்தில் கொதிக்கவைத்து 2-கண்ணாடிப் பாத்திரங்களில் போடவும். தண்ணீர்ப் போடும்

போது போடப்படும் பாத்திரமோ அல்லது டம்ளரோ அதன் மேல் புறத்தில் சற்று காலியாயிருத்தல் வேண்டும்.

இரண்டு பாத்திரங்களின் தண்ணீரும் சமஎடையில் இருக்கிறதாவென்று கவனியுங்கள். அப்பொழுது அதன் நான்கு பொருத்தங்களையும் கூட்டி துத்தநாகக் கம்பியைக் கொண்டு இரும்புத்துண்டைக் கட்டி அவைகளினின்றும் ஒருடம்ளரில் போட்டு விடவும். 2–வது கம்பியால் எந்த உலோகசலூஷன் செய்ய வேண்டுமோ, அதனுடைய மெல்லிய தோர் துண்டைக் கட்டி மற்றொரு பாத்திரத்தில் போட்டு விடவும். சிறிது நேரத்திற்குப் பின் கருவியை நகர்த்தி விட்டு டம்ளரில் இரும்புத் துண்டு போடப் பட்டிருப்பதையும் அப்புறப்படுத்தி விடவும்.

இனி இரண்டாவது டம்ளரை கவனித்துக் கொள்ளவும். ஏனெனில் சலூஷன் இதுவே.

ரஸாயன வித்தை

உலோகங்களுடைய மதிப்பும், அவற்றின் செல்வாக்கும் பிரயோசனங்கள் முதலியவைகளையும் அறிந்து பிரயோஜன மடைய வேண்டும். சிலமதியீனர்கள் பொன் வெள்ளி முதலியவைகளை தயாரிக்கும் பேராசையால் தங்கள் வாழ்நாளைப்பாழ்படுத்திக் கொள்ளுகிறார்கள். அநேகர்தங்கள் வீடு வாசல்களையுங் கூட இழந்து விட்டு தரித்திரவான்களாகி விடுகிறார்கள். அநேகர் பாஷாணம் முதலியவற்றை எரித்து அவற்றின் புகையால் பார்வை சக்தியையும் இழந்து விடுகிறார்கள். எனவே, அத்தகைய பேராசையை மேற் கொள்ளாதிருத்தல் மேலாகும்.

இங்கு சில போலிபாகங்கள் வரையப்படுகின்றன. இவை அத்தகையோரை ஓரளவில் திருப்தி செய்யக் கூடியவை யாகும்.

போலிதங்கம் செய்தல்

துத்த நாகம்	$3\frac{3}{4}$ தோலா
செம்பு	$7\frac{1}{2}$ தோலா

அந்த இரண்டு உலோகங்களையும் உருக்கிக் கொள்வதால் போலிதங்க மாய்விடுகிறது.

போலிமாணிக்கம் செய்தல்

அக்சாயிட் ஆப் மாக்நேஸ்	1/36 பாகம்
ஸ்டேராஸ்	1/1440 பாகம்

இரண்டையும் சேர்த்து கல் சக்கிரத்தில் ராவிக்கொள்ளவும்.

ரஸமணி அல்லது ரஸக்கிண்ணம் செய்யும் முறை

எவ்வாறு ரஸமணியை பாலில் வைத்து உபயோகப்படுத்துவதனால் இரப்பைக்கு வலிமை ஏற்படுகிறதோ, அதேபோல் ரஸடம்ளர் அல்லது ரஸக்கிண்ணத்திலும் பால் வைத்துப் பருகுவதால் அதிக பிரயோசன முண்டு. இதைச் செய்யும் முறை அடியில் வருமாறு:—

ஈயம் தோலா $1\frac{1}{2}$ நெருப்பின் மேல் வைத்து உருக்கிக் கொள்ளவும். அது ஜலரூபத்தை அடைந்ததும் அதில் 2 தோலா ரசத்தைப் போட்டுக் கலந்து மண் அச்சுக்களில் போட்டு வார்த்துக் கொள்ளவும். ஆறினவுடன் அச்சுக்களை தண்ணீரில் வைக்க மண் கரைந்து விடும். ரஸசாமணி எடுத்துக் கொள்ளலாம். துளை செய்ய வேண்டுமாயின் அச்சுக்களில் உள்ள சாமான் சூடு ஆறுவதற்கு முன்னமேயே துவாரம் செய்து கொள்ளவும்.

கந்தக டம்ளர் செய்யும் முறை

கந்தக டம்ளரில் ஜலம் முதலியன ஊற்றி குடித்துவர காலரா. இரப்பை பலஹீனம் அஜீரணம் ஆகியவற்றிற்கு மிகவும் பிரயோசனமானது.

இரத்த சுத்தி, பித்த சம்மந்தப்பட்ட கோளாறுகளை கண்டிக்க, இலக்தை ஷர்பத் ஷஹதுராஷர்பத் முதலிய ஷர்பத்துகளை இதில் ஊற்றி குடிக்க வேண்டும். ஒரு அணு பெறுமான மூள்ள கந்தகிளாசை ஜனங்கள் அணு 4 கொடுத்து மிக்க சந்தோஷமாக வாங்கிச் செல்வார்கள்.

செய்யும் முறை

கந்தகத்தை நெருப்பில் உறுக்கி பசும் பாலில் போடவும். 2, 4 தடவைகளில் இவ்வாறு செய்து வர கந்தகம் சுத்தமாய்விடும். அதற்குப் பிறகு அதை நெருப்பின் மேல் ஏற்றி உருக்கி மண் அச்சுக்களில் ஊற்றி விடவும். ஆறினவுடன் ஜலத்தில் போட்டு விடவும், மண்கறைந்து டம்ளர் தங்கிவிடும்.

மண் அச்சுகளின் உட்புறத்தில் (வார்க்குமுன்) நெய்யைத் தடவி வார்த்தவுடன் டம்ளரை தலைகிழாய் கவிழ்க்க, டம்ளர் இலகுவாய் வெளிவந்து விடும். கவிழ்க்கு முன்னர் அச்சை சற்று குலுக்கிக்கொள்ளவும். இப்படிச் செய்வதனால் அதன் கீழ் இருந்து விடக் கூடிய மீதிமிச்சமான கந்தகமும் கிடைத்து விடும்.

கந்தகத் துண்டுகளை உருக்கும் சமயம் அவற்றில் நெய் தடவி விடுவது மேலாகும். இல்லையேல் அதற்கு தீப்பற்றி விடக்கூடிய சந்தேகமுண்டு.

படிகார சலாய் (கோல்) செய்தல்

ஒரு தம்பிடி பெறுமானமுள்ள படிகாரத்திலிருந்து அரையணு பெறுமதி யுள்ள சலாய் மிக்க கேர்த்தியாக தயாராகும். ஜனங்கள் சந்தோஷமாக வாங்கிக் கொண்டுபோவர்.

தயாரிக்கும் முறை

முதலில் வெடி உப்பை செவ்வனே தூள் செய்து அரைத்து நெருப்பின் மேலுள்ள பாத்திரத்தில் வைக்கவும். அது கரைந்து விட்டதும் பொடி செய்த படிகாரமும் அத்துடன் சூடத்தையும் கொஞ்சம் அரைத்துப்போடவும். இவை யாவும் ஒன்றாய்க் கலந்து கொண்டதும், அவைகளை அச்சில் வார்த்துக் கொள்ளவும். ஆறினதும் சலாயை எடுத்துக்கொள்ளவும்.

இதன் அச்சுகள் பித்தளை, பீங்கான் ஆகியவற்றால் தயாரிக்கப் படுகின்றன. அச்சுகளில் வார்க்கும் சமயம் அவற்றினுள் நெய் அல்லது எண்ணெய் பசை தடவிக்கொள்ளவும். அப்படிச் செய்வதால் சலாய் அதில் ஒட்டிக்கொள்ளாமல் இலகுவாய் வெளிவந்து விடும்.

அச்சிலிருந்து சலாய் எடுத்த பின்னர், அதில் ஏதேனும் அற்ப சொற்ப பழுது ஏற்பட்டிருந்தால் அதை செங்கல் முதலியவற்றைக் கொண்டு இலேசாய்த் தேய்த்து சரிபடுத்திக் கொள்ளவும்.

உப்பு டம்ளர் தயாரித்தல்

ஒரு பங்கு சாம்பார் உப்பு, ஒரு பங்கு காஜர், என்னும் சொல்லக்கூடிய சீமை முள்ளாங்கி விதை இந்த 2 சரக்குகளையும் அரைத்து மண் அச்சில் போட்டு வெய்யிலில் காயவைத்துக் கொள்

ளவும். காய்ந்ததும் ஜலத்தில் வைக்க மண் கறைந்து விடும். டம்ளரை எடுத்துக் கொள்ளவும்.

கற்பூர கிளாஸ்

சூடம், தேங்காய் இந்த இரண்டையும் நன்ருய் அரைத்து செப்புப் பாத்திர மொன்றில் போட்டு விடவும். அப்பாத்திரத்தின் வாயின் மீது மட்டம்ள ரொன்றை கவிழ்த்து அதன் கீழ் தடிப் பான திரியொன்றை விளக்கில் வைத்து எரிக்கவும்.

அந்த விளக்கின் உஷ்ணத்தால் சூடம் யாவும் மேலில் உள்ள டம்பளரில் போய் ஒட்டிக் கொள்ளும். குளிர்ந்ததும் அந்த கிளாசை ஜலத்தில் போட அதன் மண் கறைந்து கற்பூர கிளாஸ் தங்கிவிடும்.

வெடி உப்பு விளையாட்டுச் சாமான்கள்

வெடி உப்பை இருப்புப் பாத்திர மொன்றில் போட்டு அடுப் புக்கரி அணலின்மேல் உருக்கிக்கொள்ளவும். அது உருகிப்போன வுடன் அதில் பிடித்தமான நிறத்தைக்கலந்து அவற்றிற்குரிய அச்சு களில் வார்த்துக் கொள்ளவும். ஆறினவுடன் ஜலத்தில் கறைத்து எடுத்துக் கொள்ளவும்.

சர்க்கரையில் விளையாட்டுச் சாமான்கள்

சர்க்கரை	1 சேர்
கருவம் பிசின்	1 தோலா

இந்த இரண்டையும். பன்னீர் அல்லது தாழம்பூ எண்ணே யில் சேர்த்து பாகுபடுத்திக் கொள்ளவும். அப்பால் அதை மர அச்சுகளில் வார்க்கவும். ஆறினவுடன் எடுத்துக் கொள்ளவும். ஆனல், வார்க்குமுன் அச்சுகளே ஜலத்தில் வைத்து நனைத்துக் கொள்ளவும். இப்படிச் செய்வதனல் அச்சுகள் சூடான பாகுவின் காரணத்தால் கெட்டுப்போக மாட்டா.

எழுதுவதற்கான சாக்பீஸ்

சீமையிலிருந்து உயரிய சாக்பீஸ் கோல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவை மரப்பெட்டிகளில் அமைக்கப்பட்டு பஸார், களில் நூற்றுக் கணக்கான ரூபாய் கணக்கில் விற்பனையாகின்றன. இதை செய்யும் முறை:—அரிசிக் கஞ்சியில் சுத்தஞ் செய்யப்பட்ட

சாக்பீஸ் தூளை குழைத்து அச்சுகளில் போட்டு காயவைத்துக் கொள்ளவும். ஏதேனும் நிறத்தைச் சேர்க்கவேண்டுமாயின் அதிக அளவில் சேர்க்கவேண்டும். இல்லை யேல் அது காய்ந்தபின்னர் இலேசாய் விடும். செந்தூரம், காவி, நீலம், மஞ்சள் ஆகியவை களைக் கொண்டு நிறங் கொடுக்கலாம்.

மெழுகினால் காய்கள், புஷ்பத் திரிகள் முதலியவை செய்தல்

தேன் கூட்டிலிருந்து அடையப் பெறும் மெழுகிலிருந்து சாமான்களை செய்யுமுன் அதை சுத்தமும், கெட்டியுமாக செய்து கொள்ள வேண்டும்.

அதன் முறை வருமாறு

தேன் மெழுகை நெருப்பில் உருக்கி சுண்ணும்பு நீரில் அணைக்கவும். பல தடவைகளில் இவ்வாறு செய்து வந்தால் மெழுகு திரிகளை செய்வதற்கு லாயக்காகிவிடும். இப்போது இந்த மெழுகில் இஷ்டப்பட்ட நிறத்தைக்கலந்து அச்சுகளில் நிறப்பிக் கொள்ளவும். இந்த அச்சுகளை ஒன்றுக் கொன்று சமீபமாக வைத்து அவைகளுக்கு மத்தியில் மொத்தக் கயிறு கட்டி இறுத்தி விடுங்கள். அச்சுகளில் போடப்பட்ட மெழுகு ஆறினவுடன் அதை எடுத்து ஜலத்தில் வைக்க அதுகெட்டிப்பட்டு விடும். அச்சுகளையும் வார்க்கு முன் ஜலத்தில் நனைத்துக் கொண்டால் அவற்றுள் மெழுகு ஒட்டாது.

பென்சில் தயாரித்தல்

பிளம்பிகோ ஓர் உலோகத்தின் பெயராகும். அதை நெருப்பின் சகாயத்தால் உறுக்கி சூடிருக்கையிலேயே நுட்பான குழாய்களின் அச்சுகளில் ஊற்றி ஆறவிடுகிறார்கள். சாப்டின் மரத்தால் தயாரிக்கப்பட்ட உருண்டையும் நீளமுமான பென்ஸல் அளவுக்குரிய குச்சுகள் அதற்கு முன்னமேயே சீவி தயார் படுத்தி வைக்கிறார்கள். அவற்றினுள் பென்ஸலுக்குரிய துவாரம் கொண்டிருக்கும். அவற்றுள் வார்க்கப்பட்ட இந்த ஸலாய்களை நுழைத்துவிடுகிறார்கள். சில தொழிற்சாலைகளில் பிளம்பிகோ உறுக்கினதும் உடனடியாகவே பென்ஸில துவாரங்களில் போட்டு ஜலத்தில் தோய்த்து விடுகிறார்கள்.

சிலர், சுர்மாத்தூளில் கோக்கையும், விளக்குக் கரியையும் கலக்கின பின்னர் பென்ஸல் துவாரங்களில் போட்டு அடைத்து விடுகிறார்கள். மேற்சொன்ன வழிகளுக்கிடை எந்த வழியின் தயாரிப்பு சுலபமானதெனத் தெரிகிறதோ, அதன்படி தயாரித்துக் கொள்ளலாம்.

அகர் ஊதுபத்திகள் தயாரித்தல்

தாளிசபத்திரி	⅓	தோலா
பூலாங்கிழங்கு	⅓	,,
விலாமிச்சம் வேர்	⅓	,,
கோரைக் கிழங்கு	⅓	,,
கொழுப்பு	⅓	,,
பால்சாம்பராணி	⅓	,,
மஸ்தகி	1	,,
கஸ்தூரி	2	மாஷா
வெள்ளை சந்தனத்தூள்	4	தோலா
பச்சைக்கற்பூரம்	½	,,
சந்தனம	1	,,
கற்கண்டு	1	,,

இவைகளை யாவும் நுட்பமாய் அறைத்து மூங்கில் சிலாம்புகளின் மேல் கோர்த்து ஜலத்தின் சகாயத்தைக்கொண்டு பூசவும். இந்த வத்திகளின் விலையில் சகாயம் ஏற்பட வேண்டுமாயின் கஸ்தூரியை நீக்கிவிடலாம். மேற்கண்ட சாமான்களின் சமஎடையில் அடுப்புக் கரித்தூளை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

ஆயுதக்கருவிகளைத் தீட்டும் பவுடர்

கத்தி, அம்பட்டக்கத்தி, அரிவாள் ஆகிய ஆயுதங்களைத் தீட்டுவதற்கு இன்றியமையாதது. இது பஜாரில் அதிக விலைக்கு விற்பனையாகிறது.

செய்யும் முறை:—

சிமின்ட், கண்ணாடித் துண்டுகள், கருங்கல் துண்டுகள், ஜலம் அவசியத்திற் கேற்றவாறு இவையாவும் ஒன்றாய் அறைத்து, அச்சுகளில் வார்த்துக்கொள்ள வேண்டும். காய்ந்து போனதும், அதை எடுத்து யாதொரு கல்லின்மேல் தேய்த்து சரிபடுத்திக் கொள்ளவும்.

உயரிய கோந்து பசை

சீமையிலிருந்து பாட்டில்களி லடைத்து விற்பனைக்கு வரும் கோந்து தெளிவாயும், அதிகம் பிசுபிசுப்பாயு மிருத்தல் வெளிப் படை.

அதைச் செய்யும் முறை:—

$\frac{1}{4}$ சேர் கோந்தை ஒரு குவார்டர் ஜலத்தில் கரைத்து சல் லடை மூலம் வடிகட்டிக் கொள்ளவும். பிறகு அதில் ஒரு அவுன்ஸ் ஆஸ்டிக் ஆசிட், கார்பானிக் ஆசிட்டின் சில துளிகள் இந்த இரண்டையும் கலந்து பாட்டில்களில் போட்டு அடைத்துக் கொள்ளவும். இந்த கோந்தின் சிரேஷ்டம் தயாரிக்கத் தெரிய வரும்.

விபரீத எழுத்துக் கோல்

சுத்தமான மெழுகு	7 தோலா
கடுகு எண்ணெய்	$\frac{1}{2}$ சேர்

இந்த இரண்டையும் காய்ச்சி அதில் கொஞ்சம் சுத்தமான சுண்ணாம்பையும் சேர்த்து விடவும். காய்ச்சப்பட்ட பாகு காய்ந்த வுடன் கெட்டியாய்ப் போகத்தக்க அளவு எட்டும் வரையில் காய்ச்ச வேண்டும். பிறகு தாச்சியை கீழே இறக்கி காய்ச்சின பாகை இருப்புத் தகடொன்றின்மேல் ஊற்றி பரப்பி விடவும். சரிவர காய்ந்து போனதும் அதை யாதொரு கூர்மையான கத்தி யைக் கொண்டு பென்ஸில் வடிவமுள்ள நீளக்கோல்களாக அறுத் துக் கொள்ளவும்.

இக்கோல்களைக் கொண்டு எழுதினால் அதிலுள்ள எழுத் துக்கள் கிஞ்சித்தும் புலப்பட மாட்டா. ஆனால் கடுதாசியை ஜலத் தில் போட்டு எடுத்துப்பார்த்தாலோ செவ்வனே புலப்பட்டுப்போம். இதோர் வேடிக்கையா யிருக்கும்.

லெமனட் வாட்டர் தயாரித்தல்

டார்டரிக் ஆஸிட்	5 கிரைன்
பாயிகாரப் ஆப்சோடா	1 கிரைன்

ஜீனி அவசியத்திற்கேற்ற அளவில், எஸென் ஆப்லிமன் ஓரள விற்கு எல்லாவற்றையும் தண்ணீரில் கரைத்து உடனே பாட்டிலில் போட்டு விடவும்.

பாட்டிலே கவிழ்க்க அதிலுள்ள ரவை, ரப்பர் வளையத்தில் வந்து சிக்கிக்கொள்ளும். இப்போது அவசியம் நேரிடுகையில் உபயோகித்துக் கொள்ளலாம்.

2-வது முறை மிஷினில் நின்றும் தயாரிக்கப்படுவது. அதைப் பற்றி இங்கு எழுத அவசியமில்லை. ஏனெனில் மிஷின் வேலைத் தெரிந்தவர்கள் அத்துடன் இருப்பர்.

பெப்பர் மெண்டு தயாரித்தல்

பெப்பர்மென்ட் ஆயில் 5 தோலாவில், ஒரு கிளாஸ் ரெக்டி பாயிட்ஸ்பிரிட் சேர்த்து சில நாட்கள் வரை வெயிலில் வைத்து விடவும்.

பிளேட் பவுடர் தயாரித்தல்

இந்த பவுடர் பாத்திரங்களின் பளபளப்புக்காக வேண்டி உபயோகிக்கப் படுகிறது. இதன் அவசியம் இடந்தோறுமுண்டு, இதைத் தயாரித்து ஒருவர் விற்பனை செய்தால் தக்க லாபம் அடையலாம்.

இதன் முறை வருமாறு:—

சப்காபுனேட் ஆப் ஆயர்ன், அத்துடன் சுத்தி செய்த சாக் பீஸ்தூள் இரண்டையும் சேர்த்து பிளேட்டுகளின் மேல் பூச பளபளப்பு ஏற்பட்டுவிடும்.

காடி தயாரித்தல்

ஒரு மடங்கு ஜலத்தில் மூன்று சேர் திராக்ஷை, 6 தோலா தாளிசபத்திரித்தோல் இரண்டையும் சேர்த்து காய்ச்சவும். ஜலம் சுண்டி 12 சேருக்கு வந்தவுடன் அதை கீழே இறக்கி செவ்வனே பிழிந்து கொள்ளுங்கள். பிறகு அதில் சல்பரிக் ஆசிட் தோலா 6 கலந்து வடிகட்டிக்கொள்ளுங்கள். மிகவும் நல்ல காடியாய் விடும்.

காடியை வெள்ளை நிற மாக்க

சாதாரண மரக்கட்டைக்கரியை நன்றாக பொடியாய் அரைத்து கெட்டுப்போன காடியில் கலந்து நெருப்பின் மேல் வைத்துக் காய்ச்சவும். 4, 5, கொதிப்புக்கு வந்ததும் அதை இறக்கி வடி கட்டிக் கொள்ளவும். காடி நேர்த்தியான நிறமடையும்.

பைண்டு வேலைக்கு மார்பிள் பேபர்

வெந்தையம் விதை 5 தோலா

இதை இடித்து மோட்டாரெட்டுப்பையில்போட்டு சற்றேறக்குறைய ½ சேர் வெந்நீரில் அந்தபையைப் போட்டு நன்றாய்ப் பிசையுங்கள். பிசைப்பிலிருந்து வெளியாகும் பசையை எடுத்துப் பத்திரப்படுத்துங்கள். அதற்கு பிறகு வாய் அகன்றதோர் பாத்திரத்தை வாங்கி அதில் சேர்½ ஜலம் ஊற்றி கொஞ்சம் பசையைப்போடுங்கள். அப்புறம் 2½ தோலா பூந்திக்கொட்டையை நசுக்கி அதில் அரை சேர் வெந்நீர் ஊற்றுங்கள். வெந்நீரில் பூந்திக்கொட்டைகள் ஊறி உப்பிப்போனவுடன் அந்த தண்ணீரை மேலாக இறுத்திக்கொண்டு தனிப்படுத்தி வைக்கவும்.

பிறகு வர்ணங் கொடுக்கவேண்டிய கடுதாசியை தனிப்பட்ட பூந்திக்கொட்டை ஜலத்தில் போடவும். பிறகு எந்த வர்ணத்தை முதலில் கொடுக்கவேண்டுமோ அந்த நிறத்தில் பிரஷை நனைத்து வெந்தயப்புசையில் நனைத்த கடுதாசியின்பேரில் இழுத்துப்பூசவும்.

பிறகு சீப்பை அதே நிறத்திலுள்ள 5 தோலா தண்ணீரைக் கொண்டு கழுவி விடவும். கடுதாசியின் நிறம் உலர்ந்துவிட்டதும், அதே சீப்பை எடுத்து இரண்டாவது வர்ணத்தில் தோய்த்து முன்போல் செய்துகொள்ளவும்.

இந்த முறையிலிருந்து அதாவது எந்த நிறம் ஏற்றவேண்டுமோ கடுதாசியின்மேல் ஏற்றிக்கொண்டுபோங்கள். உயரிய மார்பிள் பேப்பர் ஆகிவிடும்.

வெங்காரம் செய்தல்

மலைகளிலிருந்து ஒருவிதமான காரமுள்ள வஸ்து கொண்டு வரப்படுகிறது. அதைக்காய்ச்சி வெங்காரம் செய்து கொள்ளுகிறார்கள். அதன் முறை வருமாறு:—

பச்சைவெங்காயத்தை தண்ணீரில் கலந்து 24 மணிநேரத்திற்குப் பிறகு அதன்மேலிலுள்ள ஜலத்தை இறுத்திக்கொள்ளவும்.

இறுத்திக் கொண்டதை மறுமுறை நெருப்பின்மேலேற்றிக் காய்ச்சவும். அப்போது அது தேன்ரூபமாக தடிப்பாய்விடும்.

பெரிய பாத்திரங்களில் கூஜா கற்கண்டுமுறையைப்போல் மொத்த கயிறுகளை யமைத்து அவற்றின்மேல் அதை ஊற்றிவிடவும். அது குச்சி ரூபத்தை அடைந்துவிடும்.

கரியபோளம் செய்தல்

சோற்றுக் கற்றாழை	8	சேர்
உயரிய இந்துப்பு	$\frac{1}{4}$	,,
வெல்லம்	$\frac{1}{4}$	,,
ஜலம்	8	,,

எல்லா சரக்குகளையும் தண்ணீரில் போட்டுவிடவும். 24 மணி நேரத்திற்குப் பிறகு இறுத்தி நெருப்பில்வைத்துக் காய்ச்சிகெட்டிப் படுத்திக் கொள்ளவும். இது குணத்தில் அசலுக்கு சமமாக இருக்கும்.

வாசனைத் திரவிய டப்பிகள்

இந்த டப்பிகள் பெரும்பாலும் அத்தர் கடையில் இரண்டணு விலைமுதல் எட்டணுவரையில் விற்கப்பட்டு வருகின்றன.

அவைகளைச்செய்யும் சுலபமான முறையாதெனில்:-

தேன் மெழுகு $\frac{1}{4}$ சேரில் ஒரு தோலா நல்லெண்ணை சேர்த்து எரித்தப்பின்னர் மெழுகு உருகிப்போனதும் அடுப்பிலிருந்து கீழ் இறக்கி அதில் 1 தோலா அத்தர் சேர்த்து செவ்வனே கலந்து கொள்ளவும். அந்த டப்பிகள் வடிவத்தில் சிறு சிறு டப்பிகளாகவும் நேர்த்தியாயும் இருத்தல்வேண்டும். அடைத்த பின்னர், அவற்றை குளிர்ந்த இடத்தில் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும்.

நாட்டு அத்தர்களைத் தவிர இங்லீஷ் சென்டு வாசனை அதில் அதில் சேர்க்கவேண்டுமாயின் எஸ்ஸென்ஸ் ஆப்லிமன் அல்லது எஸ்ஸென்ஸ் ஆப் ஆரஞ்சு சேர்த்துக்கொள்ளவும். வாசனை அதில் சுவர்ந்து போனதும் டப்பிகளை நிழலில் உலர்த்தி உபயோகப்படுத்திக்கொள்ளவும்.

கீழ்க்கண்டவாசனை சாமான்கள் அதில் சேர்க்கப்படுவதற்கு தகுதியானவை:-

தாளிசபத்திரி	2	தோலா
குங்கமப்பு	1	,,
சின்ன ஏலக்கா	1	,,

ஏலரிசி	2 ,,
தாழம்பூ எண்ணை	5 ,,

எல்லாம் ஒன்ருக அரைத்து சேர்த்துக்கொள்ளலாம்.

நமச்சாரம் செய்தல்

காளவாயிலிருந்து பிரித்து எடுக்கப்படும் செங்கல்களின் மேலுள்ள சிலவற்றில் தடிப்பான நமச்சாரம் அடர்ந்திருப்பது உண்டு. அச்சமயம் அது அரையுங் குறையுமாகவும் அவலக்ஷண மாகவும் இருக்கும். அதை எந்த முறையில் சுத்தம் செய்யவேண்டு மானல், வாயகன்ற பாத்திரங்களில் ஜலத்தை நிறப்பி அவற்றுள் போட்டுவிடவும். நமச்சாரம் கரைந்து அடியிற்போய் தங்கிவிட்ட தும் அதன் தெளிவான ஜலத்தை எடுத்து இறுத்தி வேறுபடுத்திக் கொள்ளவும். அப்பால் நமச்சாரத்தைக் காய்ச்சி கெட்டிப்படுத்திக் கொள்ளவேண்டும். பாத்திரங்களில் எண்ணையைத் தடவி விட்டி ருந்தால் சரக்கு காய்ந்தவுடன் இலகுவாய் பாத்திரங்களிலிருந்து எடுத்து டப்பிகளில் அடைத்துக் கொள்வதில் சிரமமிராது.

காசுகட்டி செய்தல்

இது மரத்திலிருந்து எடுக்கப்படுகிறது. அதன் அடிமரத்தி லுள்ள கட்டையை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி பெரியதோர் தாச்சியில் போட்டு, அதில் ஜலத்தை யூற்றி, நெருப்பில் ஏற்றி காய்ச்சுகிறுர்கள். அத்துண்டுகளின் நிறம் வெளிப்பட்டு ஜலத்தில் கலந்துஜலத்தை இரத்தத்தைப்போல் சிகப்பாக்கிவிடுகிறது. அப் போது அந்த துண்டுகளை எடுத்து வேறுபடுத்தி அந்த சிகப்பு நிறமுள்ள ஜலத்தை மறுபடியும் காய்ச்சவும். அது ஷர்பத்துபாகிற்கு வந்தவுடன் அதை எடுத்து வாயகன்றபாத்திரங்களில் போட்டு காய வைக்கவும். காய்ந்ததும் அது காசுக்கட்டியாய் விடும்.

வாசனை நறுக்குப் புகையிலை செய்தல்

வெள்ளை சந்தனத்தூள்	5தோலா
ரோஜா மொட்டு	1 ,,
ஏலக்காய்	1 ,,
ஏலரிசி	1 ,,
ஜடாமாசி	2 ,,

கோரைக்கிழங்கு	3 தோலா
பூலாங்கிழங்கு	2 ,,
அகர்	1 ,,
கிராம்பு	1 ,,
பன்னீர்	10 ,,

மேற்கண்ட சரக்குகளை யாவும் பன்னீரில் ஓர்நாள் முழுவதும் ஊரப் போடவும். அப்பால், ஐந்து சேர் உயர்ந்த புகையிலையை அதில் சேர்த்து 5 நாள் வரையில் பூமிக்குள் புதைத்து வைக்கவும். 6-வது நாள் உபயோகிக்கலாம்.

ஆனால் எந்த ஈயப்பாத்திரத்தில் புகையிலை வைக்கப்படுமோ அதன் வாய் சரிவர மூடப் பட்டிருக்க வேண்டும்.

தாம்பூல் பஹார் செய்யும் முறை

வெற்றிலை	25 உருப்படி
ரூமிமஸ்தகி	1 தோலா
ஏலக்காய்	$\frac{1}{2}$,,
குங்கமப்பு	$\frac{1}{4}$,,
களிபாக்கு	$\frac{1}{2}$,,
கத்தகாம்பு	$\frac{1}{2}$,,
சுண்ணாம்பு	$\frac{1}{4}$,,
ஜாதிக்காய்	$\frac{1}{4}$,,
தாழம்பூதைலம்	$\frac{1}{2}$,,

இந்த சரக்குகளை எல்லாம் மெல்லியதாக அரைத்து அதில் அவசியத்திற் கேற்ப நெய்யைக் கலந்து உருண்டையாக்கி பிசைந்த பின்னர் சிறுசிறு அழகியடப்பிகளில் அடைத்துக் கொள்ளவும். தாம்பூலம் அருந்தும் சமயம் கொஞ்சம் போல் எடுத்து வெற்றிலையில் தடவிக் கொள்ளவும்.

மீன்முள்ளை வேகவைத்தல்

மீனை நன்ருய் கழுவி விட்டதற்குப் பின்னர், அதை சரிநடுவில் இரண்டு துண்டுகளாக கீறிக் கொண்டு முட்களின் மேல் கொஞ்சம் போல் கந்தகமும் நமச்சாரத்தையும் தடவி கழுவி விட்டபின், சமைக்க முட்கள் வெந்து விடும், நமச்சாரமும் கந்தகமும் வகைக்கு ஒரு மாஷா அளவு போதுமானது.

உரோம சங்காரி தைலம்

'பேரீயம் சல்பைட்' இதை நன்றாய் அறைத்து ஜலத்தில் கலந்து கொள்ளவும். அப்பால் கொஞ்ச நேரம் வரையில் அதை பத்திரமாய் ஓரிடத்தில் வைத்திருக்கவும். மருந்து அடியில் போய் தங்கி விடும்.

அவ்வமயம் அதன் மேல் உள்ள ஜலத்தை இறுத்திக் கொண்டு அதை நீல நிற முள்ள சிறு பாட்டில் களில் அடைத்துக் கொள்க, இத்தைலமே பெரும் பாலும் பஜாரில் விற்கப்பட்டு வருகிறது.

நறைமயிர் கருக்குந்தைலம்

1வது முறை

பிஞ்சுகடுக்காய்	4 தோலா
கையாந்துரைச்சாறு	3 ,,
மாதுளை விதை	3 ,,
தாமரை விதை	1 ,,
கரும்புச்சாறு	5 ,,

இந்த எல்லா சரக்குகளையும் யாதொரு இருப்புப்பாத்திரத்தில் போட்டு கடையவேண்டும். கடைவதற்கு இரும்பு உலக்கையே நல்லது. குழம்பு ரூபத்தை யடைந்தவுடன் அதை யெடுத்து பாத்திரமொன்றில் போட்டு, அதன் வாயை மூடி குளம், குட்டைமுதலிய ஜலக் கரையில் பூமியைத் தோண்டி, அதில் அப்பாத்திரத்தை புதைத்து விடவும். ஒரு மாதகாலம் சென்றபின் அதை யெடுத்து உபயோகிக்கலாம். ஆனால் அதை உரோமங்களுக்கு பூசு முன்னர், வாயில் அரிசியை நிறைய அடக்கிக் கொள்ளவும். ஏனெனில் மருந்தின் வேகத்தால் சில சமயங்களில்பற்கள் கறுத்துப் போனாலும் போகும் அல்லது பரீக்ஷார்த்தமாக முதலில் அதை வெள்ளை நாய், பூனை இவற்றின் உரோமங்களுக்குப் பூசிப்பார்த்தாலும் பார்க்கலாம்.

2வது முறை

தேங்காய் கொப்பரை	(காய்ந்தது)
புளிப்புமாதுளை	(காய்ந்தது)
சோம்பு, தாமரை விதை	(காய்ந்தது)

இவைகளை யாவும் இடித்து வஸ்திரகாயஞ் செய்தபின், கல்

லெண்ணெயில் ஊறவைக்கவேண்டும். அதாவது ஒரு இருப்புப் பாத்திரத்தில் போட்டு அதன் வாயை அடைத்து ஆற்ரோரத்தில் புதைத்து விடவும். அல்லது சதாஜலத்தால் ஈரமாயிருக்கும்படி யான நிலமாயினும் சரியே பத்து நாட்கள் சென்றபின்பு பாத்தி ரத்தை பிரித்தெடுத்து உபயோகத்தில் கொண்டு வரலாம்.

முன் கூறப்பட்டதற் கிணங்கவே இதை உபயோகிக்கும் சமயத்திலும் அரிசியை வாயிலடக்கிக் கொள்ளவும். அரிசி கிறங் கொண்டிருந்தால் உரோமங்களை நெல்லிக்காய் ஊறவைத்த தண் ணீரைக் கொண்டு முதலில் கழுவி விட்டு பிறகு சரிவர பூசவும்.

3வது முறை

கொத்தமல்லி (காய்ந்தது)	3 தோலா
பெரியகடுக்காய்	½ சேர்
தான்றிக்காய்	2½ தோலா
லோச்சூன்	3 தோலா

இந்த சரக்குகளையாவும் அறைத்து இரும்புப்பாத்திர மொன் றில் வைத்து உபயோகிக்கவும்.

இந்த பூச்சுமூளைக்கும் வலிமையைத் தரத்தக்கதாகும். மயிர்களையும் உதிர விடாது.

4வது முறை

கடுக்காய், தான்றிக்காய், நெலிக்காய் வகைக்கு	3 தோலா
லோச்சூன்	3 தோலா
தாமரை விதை	⅛ சேர்
அரசம் வித்து காய்ந்தது	3 தோலா

இந்த சரக்குகளை யெல்லாம் பட்டு போல் அறைத்துக் கொண்டு, கரும் ஊமத்தைச் சாற்றில் ஊறவைத்து பிறகு யாதொரு இருப்புப் பாத்திரத்தில் போட்டு வாயை யடைத்து ஜலக்கரையில் ஒருமாதம் வரையில் புதைத்திருந்து எடுக்கவும். வடிகட்டி உபயோகிக்க வேண்டும்.

5வது முறை

முர்தார் சிங்கு	3 தோலா
வேகவைத்த சுண்ணாம்பு	1 தோலா

இந்த இரண்டையும் ஜலம் விட்டு நன்றாய் அறைத்துக் கொள்ளவும். அப்பால் யாதொரு பிரஷைக்கொண்டு உரோமங் களுக்குத்தடவி அதன் மேல் முட்டைகோஸ் தழையைக் கொண்டு கட்டிவிடவும். இரண்டு மணி சாவகாசத்திற்குப்பின் தழைகளை அவிழ்த்து நெல்லிக்காய் ஊறவைத்த ஜலத்தைக் கொண்டு கழுவி விடவும்.

6வது முறை

படிகாரம்	1 தோலா
மாசிக்காய்	5 தோலா
லோச்சூன்	2 தோலா
நமச்சாரம்	2 தோலா

முதலில் தாச்சியில் போட்டு ஏறக்குறைய அது கருகிப்போகும் வரையில் சுடவும். பிறகு ஓர் இரவு முழுதும் நெல்லிக்காய் ஊற வைத்த ஜலத்தில் சரக்குகளை சேர்த்து யாதொரு இருப்புப் பாத்தி ரத்தில் போட்டு நன்றாய் அறைக்கவும். தடிப்பானதும் சற்று நேரம் அதை உரோமங்களின் மேல் கட்டி வைத்திருந்து பிறகு நெல்லிக்காய்த் தண்ணீரினால் கழுவி விடவும்.

7வது முறை

இலக்தை இலை பச்சை	3 தோலா
லோச்சூன்	½ தோலா
அறைத்த நெல்லிக்காய்	1 தோலா
பச்சை மருதோன்றி இலை	½ தோலா
மாதுளைத் தோல்	1 தோலா
தான்றிக்காய்	1 தோலா
படிகாரம்	½ தோலா
நமச்சாரம்	½ தோலா

இச்சரக்குகளை யாவும் 3 நாள் இரவும் பகலும் திராக்ஷைக் காடியில் ஊற வைக்கவும். 4-வது நாள் நல்லெண்ணெயில் கலந்து ஜலம் முற்றிலும் சுண்டிப் போகும் வரையில் எரிக்கவும். அப்பால் யாதொரு சுத்தமான பாத்திரத்தில் வடிகட்டிக் கொண்டு உபயோ கிக்கவும்.

8வது முறை

அவுரி இலை	5 தோலா
கருப்பு கையாந்துறை	5 தோலா
இலந்தை வேர்	5 தோலா
எலுமிச்சம் வேர்	5 தோலா
கச்சால் வேர்	5 தோலா
மாதுளை வேர்	5 தோலா
செல்லிக்காய்	5 தோலா
துருசு	2 தோலா

இவைகளை யாவும் 1 சேர் ஜலத்தில்3 நாள் ஊறவைத்து 4-வது நாள் நல்லெண்ணெயில் எரித்து யாதொரு போத்தலில் அடைத்துக் கொள்ளவும். இரவு தூங்கும் போது ரோமங்களில் தடவி காலையில் செல்லிக்காய் தண்ணீரைக் கொண்டு கழுவவும்.

சருமத்தின் மேலிருந்து நறையமிர் தைலக்கறையை நீக்குதல்

ஆடாதோடை தழைகளை வேக வைத்து வேகவைத்த ஜலத்தைக் கொண்டு கறைபட்ட விடத்தை கழுவ, கறை நீங்கி சருமம் அசல் நிறத்தை அடையும். அல்லது புதிய பேரீச்சம் பழத்தை கறையுள்ள விடத்தில் தேய்க்கவும். எலுமிச்சம் சாறு புளிப்பு ஆகியவற்றிற்கும் கறை நீங்கி விடும்.

சில நிமிஷங்களுக்குள் உரோமங்களை கருப்பாக்கும் முறை

காலிக் ஆசிட்	1 பங்கு
லிக்கர் ஆப் அமோனியா	8 பங்கு
பாயிரோகாலிக் ஆசிட்	1 பங்கு
இருமுறை இறக்கிய ரோஜா பன்னீர்	12 பங்கு

இச்சரக்குகள் யாவும் ஒரு பாத்திரத்தில் போட்டு கலந்து கொண்டு அதனை 1 பாட்டிலில் போட்டு அதற்கு மேல் நெம். 1 என்று எழுதி துண்டு ஒட்டிவிடவும்.

அதே விதமாக மற்றொரு பட்டிலில்

நைட்டர் சில்வர்	1 பாங்கு
ரோஜா பன்னீர்	20 பங்கு

போட்டு அதன் மேல் நெம். 2 என்ற துண்டை ஒட்டி விடவும்.

உபயோகிக்கும் விதம்

முதலில் உரோமங்களை சோப் தண்ணீரைக் கொண்டு கழுவி விடவும் தைலப்பசை சற்றும் இருக்கலாகாது. அப்பால் பாட்டில் நெம். 1 லிருந்து தைலத்தை எடுத்து யாதொரு பாத்திரத்தில் ஊற்றி பிரஷைக் கொண்டு உரோமங்களுக்குத் தடவவும். அப்புறம் வேறொரு பாத்திரத்தில் நெம். 2 பாட்டிலிலுள்ள தைலத்தை ஊற்றி சுமார் ½ மணி நேரத்திற்குப் பிறகு பூச மயிர்கள் கருத்து விடும்.

ஆனால் இந்த 2 மருந்துகளுக்காகவும் தனித்தனியான இரண்டு பிரஷுகளும் பாத்திரங்களும் அவசியம்.

டின் பாத்திரத்தை ஒட்டுதல்

ஒரு பாத்திரத்தில் ஈயத்தை சூடேற்றி வைத்துக் கொள்ளவும் தடித்ததோர் இரும்புக் கோலையும் பழுக்கக் காய்ச்சிக் கொள்ளவும். ஒட்ட வேண்டிய இடத்தின் மேல் நவச்சாரத்தைப் போட்டு காய்ச்சின கோலினால் ஈயத்தைத் தொட்டு அதன் மேலே தடவி விடவும்.

மரம் ஒட்டுபசை

அடியிற்கண்ட பசையை தயாரித்து ஒட்டினால் ஒட்டு அசையாது.

ஸ்டார்ச் ஆசிடில் ஐசின் கிளாஸ் சேர்த்து தேன் போல் செய்து கொண்டு ஒட்டி விடவும்.

தங்கப்பற்று

மிருதுவான தங்கம்	1 தோலா
வெள்ளி	1/6 தோலா
செம்பு	1/3 தோலா

தங்கத்தை உருக்கி அதில் வெள்ளியையும் செம்பையும் கலந்து காய்ச்சி பற்று வைக்கவு.ம்

ஈயப்பற்று

எந்த விடத்தில் பற்று வைக்க வேண்டுமோ அந்த விடத்தில் நவச்சார திராவகத்தைத் தடவி பற்றுக்கோலைக் காய்ச்சிக் கொண்டு ஈயத்தைத் தொட்டு ஒட்டிப் போடவும்.

வெள்ளிப் பற்று

வெள்ளி	1 தோலா
செம்பு	¼ தோலா

இரண்டையும் உருக்கி பற்று வைக்க மிகவும் கெட்டியாய் விடும்.

செம்புப் பற்று

செம்பு	1 தோலா
துத்தநாகம்	1 தோலா

இவ்விரண்டு உலோகங்களையும் காய்ச்சி பற்று வைக்க வேண்டும்.

பேற்படி நெம். 2

பித்தளை	2 தோலா
ஈயம்	½ தோலா

இரண்டையும் உருக்கி பற்று வைக்கவும்.

கெட்டியான பித்தளைப் பற்று

பித்தளை	2 தோலா
துத்தநாகம்	¼ தோலா

மூசலில் பித்தளையை உருக்கி அதில் துத்தநாகத்தை கலந்து 10 நிமிஷம் வைத்து, 10 நிமிஷத்திற்கு பிறகு அதை பொடியாக்கி உபயோகத்தில் கொண்டுவரவும்.

கனிவர்க்கம் முதலியவைகளை எப்பொழுதும் கெடாமல் வைக்க

பெரும்பாலும் ஐரோப்பாவிலுள்ள மக்கள், கனி வர்க்கங்களை மிக்க ஜாக்கிரதையாக வைத்து வருகிறார்கள். வைத்திய சாஸ்திரப் படி கனிவர்க்கங்களை புசிப்பதால் தேகத்திற்கு வலிமையும் தேகா ரோக்கியமும் அடையப் பெருகின்றன இதன் பொருட்டு அவை களை பத்திரப்படுத்தும் முயற்சி வீண் போவதில்லை. எனவே, மக்கள் சில கனிவர்க்கங்களை அவற்றிற்குரிய பருவமற்ற காலங்களிலும் புசித்து பிரயோசன மடையுமாறு சில பாதுகாப்பு முறைகளை இங்கே வரைந்துள்ளோம்.

பழங்களை வைத்தல்

(1) வாயகன்றதோர் பாத்திரத்தின் அடியில் சுத்தமான மணலை பரப்பி விடவும் பிறகு அதன்மேல் பழங்களை பரப்பி வைக்கவும். மீண்டும் அதன்மேல் மணலை தூவி பழங்களை வைக்கவும். இதே முறையில் மணலை பரப்பியும் அதன் பேரில் பழங்களை அடுக்கிக் கொண்டும் போனபின்னர், அப்பாத்திரத்தை குளிர்ந்ததோர் விடத்தில் வைத்து விடவேண்டும். பழங்கள் வெகுநாள் வரையிலும் கெட்டுப்போக மாட்டா.

(2) பழங்களை பறித்தவுடன் அவற்றின் காம்புகளை முறையே திக்குச்சியினால் பொசுக்கி வைத்துவிடவும். ஆனால் அவைகள் வைக்கப்படும் இடம் குளிர்ச்சியும் உஷ்ணமும் சமமாய் வியாபித்திருக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். இம்முறையில் வைக்கப்படும் பழங்கள் ருசியிலோ, நிறத்திலோ சற்றும் வித்தியாச மடைவதில்லை. இப்போதே செடியிலிருந்து பறித்துக் கொண்டு வரப்பட்டவைகளைப் போலாகும்.

மாம்பழம் கெடாதிருக்க

யாதொரு பாத்திரத்தில் தேனை ஊற்றி, அதில் மாம்பழங்களை அமுக்கி விடவும். அதாவது மாம்பழத்தின் எப்புறமும் தேன் ஒட்டி இருத்தல் வேண்டும். பழம் பாத்திரத்தை ஒட்டி யிருத்தலாகாது. பழங்கள் நாள்பட கெட்டுப் போகாமல் இருக்கும்.

எலுமிச்சம் பழங்கள் கெடாதிருக்க

பறிப்பதற்கு லாயக்கான விதத்தில் முற்றிப்போன பழங்களை அவற்றின் கொப்புக் காம்புகளுடன் பறித்துக் கொண்டு வந்து அவைகளில் நூல் கயிற்றைக்கட்டி வீட்டுக்கூரை அல்லது யாதொரு மூலையுடன் கட்டித் தொங்கவிடவும்.

தொங்கும் பழங்கள் சுவற்றின் மீதோ அல்லது வேறு யாதொரு வஸ்துவின் பேரிலோ படாதிருக்குமாறு கவனித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஜாக்கிரதையாய் தொங்கிக் கொண்டிருந்தால் அவைகள் நாள்பட கெடாமலிருக்கும்.

இச்சலிப் பழங்கள் கெடாதிருக்க

ஒரு பாத்திரத்தில் மெழுகை உருக்கிப் போடவும். அதில் இச்சலிப்பழங்களை அவைகள் மூழ்கிப் போகக்கூடிய அளவிற்கு அமுக்கி விடவும். பாத்திரத்தின் வாயை அடைத்து பத்திரமாய் வைத்திருந்தால் பழங்கள் நீண்டநாள்வரை கெட்டுப் போக மாட்டா.

உருளைக் கிழங்கு கெடாதிருக்க

முதலில் படிகாரத்தை ஜலத்தில் கரைத்து அதில் சுண்ணும்பை வேகவைக்கவும். குளிர்ந்ததும் எந்த விடத்தில் உருளைக் கிழங்குகளை வைக்கவேண்டுமோ, அங்கு அந்த சுண்ணும்பை ½ அங்குல தடிப்பில் பரப்பி அதன் மேல் கிழங்குகளைப் போட்டு விடவும். பிறகு கிழங்குகளின்மேல் மீதியான சுண்ணும்பை, பரப்பி விடவும். கிழங்குகள் நீண்டநாள் கெடாமலிருக்கும்.

எலுமிச்சம் சாறு கெடாதிருக்க

முதலில் எலுமிச்சம் சாற்றை இலேசாய் கொதிக்கவைத்து பாட்டலில் அடைத்துக் கொள்ளவும். அது எந்த பாட்டலில் அடைக்கப் படுகிறதோ அதில்உள்ள இடம் ஓர் அங்குலத்திற்கு காலியாக வைத்து அதில் சம்பங்கி எண்ணெயை நிறப்பிவிடவும். பலமான கார்க்கிட்டு பத்திரமாய் வைக்கவும்.

பூச்செண்டு கெடாதிருக்க

அடுப்புக்கரியை கல்வத்தில் மெல்லிதாக அரைத்து அதன் 2 பங்களவிற்கு ஓர் பங்கு சுத்த ஜலத்தை கலந்து கொள்ளவும். அப்பால் அதில் பூச்செண்டை இருத்தி வைத்து அனுதினமும், காலை மாலை புதிய தண்ணீர் விட்டு வரவும். இம்முறையில் புஷ்பங்கள் பலநாட்கள் வரையிலும் பசுமையா யிருக்கும்.

புஷ்பங்கள் கெடாதிருக்க

புஷ்பங்களை காட்பட அவற்றின் உருவம் கெடாது வைத்திருக்க வேண்டுமாயின் கோந்து கரைத்த ஜலத்தில் அவற்றை நனைத்து உலர்த்திக் கொள்ளவும். நிறம் மாறாமல் ஒரே மாதிரியாக அவேச் [illegible] நீடித்திருக்கும்.

புளிப்புப் பதார்த்தங்கள் கெடாதிருக்க

புளிப்புப் பதார்த்தங்களை நாட்பட கெடாமல் வைக்க வேண்டுமாயின் அவற்றை யாதொரு சுத்தமாகப் பாத்திரத்தில் வைத்து விடவும்.

பால் கெடாமலிருக்க

பாலை பாட்டில்களில் போட்டு, பலமாய் கார்க் போட்டுவிடவும். உள்ளில் காற்று பிரவேசிக்கா திருக்க வேண்டும். பின்னர் கொதிக்கும் ஜலத்தில் அப்பாட்டிலை வைத்து சுமார் 5 நிமிஷம் விட்டுவிடவும். பிறகு அடுப்பி லுள்ள நெருப்புக் கட்டிகளை எடுத்து விட்டு பாட்டிலை அத்தண்ணீரிலேயே ஆரவிடவும் ஆறினதும் பாட்டில்களின் வாய்மீது அரக்குவைத்து முத்திரை யிடவும். அதிலுள்ள பால் நீண்டநாள் கெடாது. இப்பொழுது பாலை உபயோகிக்கும் சமயம் அதன் கார்க்கை பிரித்து 12 மணி நேரத்துக்குப்பின் பாலை உபயோகிக்க வேண்டும்.

மீன் இறைச்சி நாள்பட கெடாதிருக்க

மீனைக்கிறி அதிலுள்ள அசடுமுதலியவைகளை சுத்தப்படுத்திய பின்னர் உப்பைத் தடவி உலர்த்திக் கொள்ளவும், அல்லது அதை நெய்யில் வறுத்து வைத்தால் வெகு நாள் கெட்டுப்போகா திருக்கும்.

ஊறுகாய் நாள்பட கெடாதிருக்க

முதலாவதாக ஊறுகாயை யாதொரு மரக்கரண்டி, அல்லது மூங்கில் பிளாச்சியைக்கொண்டு எடுக்கவேண்டும். உலோகக் கரண்டிகளினால் எடுத்தால் ஊறுகாய் சீக்கிரம் கெட்டுப்போகும். எண்ணெயில் ஊறுகாய் போடுவதா யிருந்தால் ஊறுகாய் பதார்த்தங்கள் யாவும் எண்ணெயில் அழுந்தத்தக்க அளவிற்கு எண்ணெ ஊற்ற வேண்டும். ஒரு சேர் ஊற்றுவதாக இருந்தால் அதில் ¼ சேர் உப்பு போடவேண்டும்.

பட்டு வஸ்திரத்திலிருந்து கறை நீக்குதல்

எந்தவோர் வஸ்திரத்தின் பேரில் இருப்புக்கறை பட்டுவிடுமோ அந்த விடத்தின் மேல் எலுமிச்சம் சாறு பிழியவேண்டும். அது உலர்ந்ததும், மறுபடியும் சாறு பிழியவேண்டும். இதிலிருந்து கறை விட்டுப்போகும்.

அப்பால் வஸ்திரத்தை உடனே சோப்பைக்கொண்டு கழுவி விடவேண்டும். இல்லையேல் சாற்றினால் வஸ்திரம் மடிந்துபோக வியாகூல முண்டு.

பழக்கறைகளை அப்புறப்படுத்தல்

லிச்சலி, மாம்பழம், கற்பூசனி முதலியவைகளின் பேரில் ஏதேனும் கறைப்பட்டுப்போனால், தீக்குச்சியொன்றை எரித்து அந்த விடத்தை சூடாக்கிக்கொள்ளவும். ஆனால் நீங்கள் ஏற்றும் சூட்டினால் முன்னைக் காட்டிலும் அதிகமான கறை ஏற்பட்டுப் போகும்படியான அளவிற்கு தீக்குச்சியை எரித்துவிட லாகாது. அப்பால் அந்த விடத்தை ஜலத்தைக்கொண்டு மெதுவாய்க் கழுவி சுத்தமான வஸ்திரத்தால் ஜாக்கிரதையாய் துடைத்து விடவும். துடைக்கும் வஸ்திரம் அதிகம் காய்ந்ததாயும், அல்லது ஜலம் சொட்டக் கூடிய அளவிற்கு ஈரமாயும் இருத்தல் கூடாது.

உல்லன் வஸ்திரத்திலிருந்து தாம்பூலக்கறை நீக்குதல்

எந்த வஸ்திரத்தின்மேல் வெற்றிலை கறைபட்டுவிடுமோ அதன் மீது கோழி, அல்லது புறு எச்சத்தை தடவி விடவும். எச்சம் புதிதாக இருத்தல் வேண்டும். அது காய்ந்தவுடன் பிரஷ் அடித்து விடவும். அவசியமாயின் மீண்டும அதையே தடவி வைத்து கடைசியாக சோப்பினால் கழுவி விடவேண்டும்.

லேவஸ், கலாபூத், கறை நீக்குவது

ஸ்பிரிட் ஆப் ஒயின், ஜலத்தில் கரைத்த பூந்திக்கொட்டை பின்னுறை இந்த இரண்டையும் கலக்கி கறைகளின் மேல் தடவி, கழுவிவிட வேண்டும்.

பட்டு வஸ்திரத்திலிருந்து சிக்கை எடுத்தல்

பிரான்லேவிசாக் (மக்னேஷியா) கறைமேல் தடவி நெருப்பு அனல் காட்டவும். சூடு பட்டவுடன் சிக்குக் கறை முற்றிலும் நிவர்த்தியாகி விடும். பின்னர் பிரஷ் அடித்து விடவும். கறை மீதியாயிருந்தால் அவ்வாறே மறு முறையும் செய்யவும். கழுவவேண்டிய அவசியமாயிருந்தால் சோடாவும் சோப்பும சேர்த்து கழுவி விடவும்.

பாட்டிலிலுள்ள காடிக்கறை நீக்க

எந்ததோர் பாட்டலிலிருந்து காடிக்கறை போகாதிருக்குமேல அதில் கோழிமுட்டையின் தோல்களையும், சோடா சச்சிகாரம் இவைகளையும் போட்டு, வெந்நீரிட்டு நன்ருய்க் குலுக்கி கழுவி விடவேண்டும்.

இங்லீஷ் மைக்கறையை நீக்குதல்

கறைப்பட்ட விடத்தில் "ஸதனட் ஆப் டாய்ஷம்" ஒட்டை உரோமங்களின் பிரஷைக்கொண்டு கொஞ்சம் எடுத்து தேய்த்து விடவும். சற்று நேரத்திற்குப் பின்னர் கறையை குளிர்ந்த ஜலத்தால் கழுவி விடவும்.

கில்ட் சாமானைவிட்டும் கறை அப்புறப்படுத்தல்

படிகாரத்தை வேகவைத்து அந்த வேகவைத்த ஜலத்தை கறைமேல் பூசி யாதொரு சுத்தமான வஸ்திரத்தால் துடைத்து விடவும்.

வஸ்திரத்திலிருந்து சிக்ருக்கறை அப்புறப்படுத்துதல்

சுண்ணாம்பு, எலுமிச்சம்சாறு, காடி இந்த மூன்றையும் கலந்து கறைமீது பூசி கழுவி விடவும்.

சலவைக்கல்கறை அப்புறப்படுத்தல்

மணலையும், சாக்பீசையும் ஒன்ருய் அரைத்து கொண்டு கறைகளின் மேல் பூசி சிறிது நேரத்திற்கப்பால் சோப்பைத் தேய்த்துக் கழுவி விடவும்.

யானைத் தந்தக் கறையை நீக்குதல்

யானைத் தந்தத்தை சுண்ணாம்புத் தண்ணீரில் சிறிது நேரம் ஊறவைத்து கறையுள்ளவிடத்தை யாதொரு செங்கல் முதலிய பொருளின் மேல் தேய்க்க கறை நீங்கி விடும்.

இரும்புக் கறையை அப்புறப்படுத்தல்

யாதொரு இரும்புப் பாத்திரத்தின் பேரிலோ, அல்லது ஆயுதத்தின் மீதோ துருப்பிடித்திருந்தால், அதன்மீது நல்லெண்ணை தேய்த்துவிட்டு 3 மணிநேரத்திற்குப்பிறகு சாக்பீஸ் தடவி யாதொரு

வஸ்திரத்தைக் கொண்டு தேய்க்கவும். காள்பட்ட துருவாக இருந்தால் சாக்கட்டிக்குப் பதிலாக சுண்ணும்பை உபயோகிக்கவும்.

பட்டு வஸ்திரத்திலிருந்து டைக்கறை அப்புறப்படுத்தல்

கறைகாய்வதற்குமுன் கழுவி விடவேண்டும். அப்பொழுது அதற்கு எத்தகைய மருந்தும் பூசவேண்டிய அவசியமிராது. உலர்ந்து போயிருந்தால் அரச மரத்தின் சிறகை எரித்தசாம்பலுடன் காடியைச் சேர்த்து கறைமீது பூசி சோப்பினுல் கழுவி விடவேண்டும்.

கடுதாசிக்கறை நீக்குதல்

யாதொரு கடுதாசியின் மீதுகறைப்பட்டிருந்தால், "மெவரேட் ஆப்டன்" 1 பங்கு வெந்நீர் 2 பங்கு சேர்த்து கறைமேல் பிரஷைக் கொண்டு பூசி விடவும். பிறகு அந்த கடுதாசியை ஜலத்தில் தோய்த்தெடுத்து மறுபடியும் பூசி, மீண்டும் ஜலத்தில் தோய்த்தெடுத்து ஒட்டுத்தாளை மேல் வைத்து அமுக்கி விடவும்.

அச்சாபீஸ் மைக்கறை எடுத்தல்

எந்த வஸ்திரத்தின் பேரில் கறைபட்டிருக்குமோ அதன் மீது சச்சிகாரத்தை பிரஷைக் கொண்டு பூசி கொஞ்ச நேரத்திற்குப்பின் கழுவி விடவும்.

உல்லன் வஸ்திரத்திலிருந்து மைக்கறை அகற்றல்

கோழி முட்டையின் மஞ்சக்கருவில் சில துளி சல்பரிக் ஆசிட் ஊற்றிக் கலக்கி அவை இரண்டையும் செவ்வனே கலக்கச் செய்தபின், அதை கறைமேல் பூசி நன்றாய் கசக்கி விடவும். பிறகு வெந்நீர் விட்டு கழுவி விடவேண்டும்.

பாட்டில் சிக்கை அப்புறப்படுத்தல்

பாட்டிலே காப்பனேட் ஆப் பொடாஷ் கொண்டு கழுவி யாதொரு விஸ்திரத்தை அதனுள் விட்டு செவ்வனே துடைத்து விடவும்.

வெடியுப்பு செய்யும் முறை

வெடியுப்பு செய்யத் தெரிந்தோர் தம் ஜீவனோபாயத்தைபோதியளவிற்கு அடைந்து கொள்ளுகிறார்கள். ஏனெனில் இச்சரக்கு

மருந்துகளுக்கு மட்டுமன்றி வர்ணம் முதலிய வற்றிற்கும் ஏராள மாய் உபயோகப்படுகிறது. இதை எப்படிச் செய்கிறார்கள் எனில்:—

காரமண் இருக்கப்பட்ட பூமியில் உள்ள மண்கட்டிகளையாவும் திரட்டி ஓரிடத்தில் ஒன்ருய்க் குவித்து விடுகிறார்கள். இக்காரமண் உவர்மண் எனவும் சொல்லப்படுகிறது.

பூமிக்குள் ஓர் அடுப்பு வெட்டப் படுகிறது. அதன் வாய் மேலுக்கு குறுகலாயும் அடிப்பாகமும் நடுப்பாகமும் இடலமாயும் அமையப் பெறுகின்றன. அடுப்பின் ஓரமான ஒருபக்கத்தில் வாயமைக்கப் படுகிறது. அந்த வாயின் மீது பெரியதோர் தாச்சியை ஏற்றி அதில் உவர்மண்ணைப் போடுகிறார்கள். $2\frac{1}{2}$ முதல் 3 பங்கு வரையிலுமுள்ள ஜலம் அதில் ஊற்றி அடுப்பில் நெருப்பு கொளுத்தி எரிக்கிறார்கள். ஜலம் கொதிக்க, கொதிக்க மண்ணின் பழுப்பு நிறம் மாறிப்போய் வெண்ணிறத்தைக் காட்டும். வெண் ணிறங் கண்டதும் அதை அகப்பையால் மொண்டெடுத்து அதற் கெனவெட்டித்தயாரிக் கப்பட்டுள்ள பாத்திகளில் ஊற்றி விடுகிறார் கள். சிறிது காலத்திற்குள் பாத்திகளில் உள்ள ஜலம் சுண்டிப் போய் பொட்டிலுப்பானது மேல் மட்டத்தில் அடையாக சேர்ந்து விடும். அப்போது அதை வேறு படுத்திக் கொள்ளுகிறார்கள்.

இந்த பொட்டிலுப்புடன் உப்பும் கலந்து வரும். அதையும் தனிப்படுத்திக் கொள்ள வேண்டும் வர்ணத் தொழிலுக்கு உப யோகப்படும்படியான வெடியுப்பு இந்த நிலைமையிலுள்ளதே.

இனி அதை குச்சியுப்பாகச் செய்ய வேண்டுமானால், அதை மறுபடியும் தாச்சியில் போட்டு ஜலம் ஊற்றி அடுப்பிலேற்றவும். ஆனால் இத்தடவையிலுள்ள அளவு குறைவாக இருத்தல் வேண்டும். பாகுதடிப்பானதும், அதை எடுத்து மீண்டும் பாத்தி களில் போட்டு உலரவைக்கவும். இத்தடவை அது கெட்டியாய் விடும். பின்னர் வேண்டிய அளவு உலரவைத்து, மண் தூசியை விட்டும் சுத்தப்படுத்தி பெட்டிகளில் அடைத்துக் கொள்ளவும்.

குறிப்பு:— அதற்குரிய பாத்திகள்சதுரமுள்ளதாகின்றன. ஓரங்கள் உயர்ந்திருக்கும்.

அச்சாபீஸ் வேலைக்கற்கள் பிளவு பட்டால்

அக்கற்களை பெரும்பாலும் கோந்து அறக்கு முதலியவை களைக் கொண்டு ஒட்டுகிறார்கள். ஆனால் அதில் செலவு அதிக மாகிறது இங்கு சுலபமானதோர் முறை வரையப்பட்டிருக்கிறது.

புளியங்கொட்டை பருப்பை சந்தனம் போல் அரைத்து பசை போல் தயாரித்துக் கொள்ளவும். அதை இரண்டு கற்களுக்கும் இடையிலுள்ள வெடுப்பில் செவ்வனே தடவி விடவும். உடனடியாக பல மானதோர் கயிற்றைக் கொண்டு சுற்றிக்கட்டி விடவும். காய்ந்தவுடன் கட்டை அவிழ்த்து விட கெட்டியாய்ச் சேர்ந்து விடும்.

ஐஸ்கிரீம் செய்தல்

பித்தளை அல்லது தகரத்தால் செய்யப்பட்ட கூடுகளில் தித்திப்பான பால், தாழம்பு அத்தர் இவ்விரண்டையும் போட்டு, பிசைந்த மாவைக் கொண்டு வாயை மூடி விடவும். அப்பால், அவைகளை அல்மாரியில் எடுத்து நிறுத்தி விடவும். அதாவது அலமாரியில் உள்ள தட்டுகளில் துவாரங்கள் இருத்தல் வேண்டும். அத்துவாரங்களில் லெம்னேட்புட்டிகளை நிறுத்துவது போலாக இவைகளை நிறுத்த வேண்டும்.

ஒரு மணி நேரத்திற்குப்பின் ஒட்டின மாவு காய்ந்து போய் அதிலுள்ளபால் வெளிவரா தெனத் தெரிந்த பின்பு அவைகளை யெல்லாம் ஒரு பெரிய குடத்தில் போட்டு இயற்கை அல்லது செயற்கை 'ஐஸ்' உடன் வெடியுப்பு, பொட்டிலுப்பு, உப்பு இவைகளையும் அதில் போட்டு விடவும். பிறகு குடத்தின் வாயை மூடி குடம் முழுவதையும் சூடானவஸ்திரத்தைக் கொண்டு சுற்றி விடவும். ஒரு மணி நேரம் வரையில் அப்படியே இருக்க விட்டால் மிக்க குளிர்ந்த ஐஸ்கிரீம் தயாராகி விடும்.

யாத்திரை டீ பானம்

ஒருசேர் சுத்தமான பாலில் 20 தோலா ஜலத்தையும் 4 தோலா உயரிய தேயிலையையும் போட்டு நன்றாய் கொதிக்க வைக்கவும். போட்ட தேயிலைத்தூள் யாவும் செவ்வனே கரைந்து போகும் வரையில் எரித்து விட்டு அதை வடிகட்டிக் கொள்ளவும். பிறகு வடிகட்டிய ஜலத்தை பாகு பதத்திற்கு காய்ச்சி அதை சிறு சிறு பில்லை

களாக்கிக் கொள்ள வேண்டும். அவசிய மானபோது இப்பில்லைகளை கொதிக்கும் வெந்நீரில் போட குடிக்கும் 'டீ' ஆகிவிடும்.

டூத்பவுடர் செய்தல்

இந்த பவுடரை பற்களுக்கு தேய்த்து வந்தால் பற்கள் சுத்த மாய்விடும். வாய் துர்நாற்றம் நீங்கிவிடும்.

செய்யும் முறை :—

படிகாரம்	3 தோலா
சுத்தி செய்த வெள்ளைப் போளம்	1 தோலா
பயமஸ் ஸிட்டோன்	5 தோலா

இவைகளை யெல்லாம் நன்றாய் அரைத்து சுத்தமாக்கிக் கொண்டு டப்பிகளில் அடைத்துக் கொள்ளவும்.

பற்பொடி நெ. 2

மிளகு	1 தோலா
பூங்காவி	5 தோலா
பச்சைக் கற்பூரம்	½ தோலா
இராம கட்டி	1 தோலா

இந்த நான்கு சரக்குகளையும் செவ்வனே அரைத்துக் கொள்ளவும்.

பற்பொடி நெ. 3

சுட்ட பாதம் ஓடு	4 தோலா
சுட்ட புகையிலை	2 ,,
இந்துப்பு	2 ,,
ஏலரிசி	1 ,,
பொரித்த படிகாரம்	1 ,,

இவைகளை யெல்லாம் நன்றாய் அரைத்து உபயோகிக்க பல்வலியையும் போக்கி விடும்.

தாச்சினிப் பொடி

பொரித்த துருசு	1 தோலா
ஏலக்காய்	1 ,,
கத்த காம்பு	2 ,,

மாசிக்காய்	5	தோலா
இரும்புத் தூள்	10	,,

இந்த சரக்குகளையும் அரைத்து வஸ்திரகாயஞ் செய்து உபயோகிக் கத்த ரோகங்களை நிவர்த்திக்கும். இதை இரவு படுக்கைக்குச் செல்லும் போது உபயோகிக்க வேண்டும்.

வெள்ளை தாச்சினுப் பொடி

கத்தகாம்பு	½	தோலா
இந்துப்பு	½	,,
மல்லி	1	,,
சுக்கு	¼	,,
பொரித்த துருசு	¼	,,
மிளகு	2	,,
மஸ்தகி	¼	,,
பூலாங் கிழங்கு	¼	,,
வால் மிளகு	¼	,,
சீரகம்	¼	,,
கோஷ்டம் தித்திப்பு	¼	,,

இவைகளை யாவும் பொடியாய் அரைத்து உபயோகிக்கவும். சிறு டப்பிகளிலடைத்து விற்பனை செய்யலாம்.

தாச்சினுப் பொடி

மகிழம்பட்டை	1	தோலா
மஸ்தகி	1	,,
பிஞ்சு கடுக்காய்	1	,,
மாசிக்காய்	1	,,
துருசு (சுத்தி செய்தது)	1	,,
வண்ணிக்காய்	1	,,

இந்த எல்லா சரக்குகளையும் எவ்வளவுக் கெவ்வளவு பொடியாக அரைப்போமோ பொடியும் நன்றாயிருக்கும்.

வாசனை தாச்சினுப் பொடி

மாசிக்காய்	2	தோலா
இரும்புத் தூள்	1	,,
மஸ்தகி	½	,,

ஏலக்காய்	½ தோலா
கிராம்பு	¼ ,,
லவங்கப் பட்டை	½ ,,
ஜாதிப் பத்திரி	¼ ,,

இச்சரக்குகள் யாவும் நன்ருய் அறைத்து ஒரு பாத்திரத்தில் போட்டு வாயை மூடி விடவும். இந்த பொடியை உபயோகித்தப்பின் தாம்பூல மருந்து, அதிக ருசிகரமா யிருக்கும்.

கருப்பு தாச்சிணுப் பொடி

பிஞ்சுக் கடுக்காய்	1 தோலா
கலைமான் கொம்பு (சுட்டது)	½ ,,
அக்கிரஹாரம்	1/6 ,,
பொரித்த படிகாரம்	¼ ,,
சூரத்து நிலாவரை	½ ,,
ராமகட்டி	5 ,,
மஞ்சிட்டி	½ ,,
குங்கமப்பூ	1/6 ,,
தாழம்பூ அத்தர்	3 துளி
மிஸ்ஸி அத்தர்	3 துளி

இவைகளை எல்லாம் பட்டுபோலரைத்து, ஒரு பாத்திரத்தில் போட்டு, அதன் வாயையடைத்து 2 நாள் பூமிக்குள் புதைத்து வைக்கவும். அப்பால் உபயோகத்தில் கொண்டு வரலாம்.

சிகப்பு தாச்சிணுப் பொடி செய்ய

சாதிலிங்கம்	1/3 தோலா
நமச்சாரம்	1/3 தோலா
ஏலக்காய்	1/3 தோலா
மஞ்சிட்டி	½ தோலா
மூர்தார்சிங்	¼ தோலா
சாம்பார் உப்பு	¼ தோலா

இவைகளை அறைத்து பல் தேய்க்கவும். ஆனல் உமிழ்நீரை தொண்டைக்குள் இறங்க விடலாகாது.

பிளவு, வெடிப்பு ஆகியவைகளை அடைக்கும் மக்கைத் தயாரித்தல்

சுட்ட செங்கல்லை யாதொரு கருங்கல்லின் மேல் தேய்த்தோ அல்லது கல்வத்தில் போட்டரைத்தோ பொடியாக்கிக் கொள்ளவும். அப்பால் அதில் உருக்கின வஜ்ஜிரத்தைக் கலந்து களிம்பாக்கிக் கொள்ளவும். இதுவே போடேன் (மக்கு) எனப்படுவது. பலகை முதலியவற்றின் வெடிப்புகளில் இதை அடைத்து அதைத் தேய்த்துக் கொள்ளவேண்டும்.

கண்ணாடிகளை அமைக்கும் மக்கு

சாக்பீஸை தூளாக்கிக் கொண்டு அதில் அவசியத்திற் கேற்றவாறு நல்லெண்ணெயைச் சேர்த்துக் கலக்கிக் கொள்ளவும். மக்கு தயாராகிவிட்டது. அலமாரிக் கண்ணாடிகளை இதன் சகாயத்தால் ஒட்டலாம்.

பிரிண்டிங் பிரஷ்

பெயின்டிங் அதாவது வர்ணங் கொடுத்தல், சித்திரம் வரைதல், பூக்கொடி வேலைகளுக்கு நிறங் கொடுத்தல் ஆகிய காரியங்களில் ஓர்வித பிரஷ் உபயோகப் படுகிறது. அதைச் செய்யும் விதம் அடியில் வருமாறு:—

அணில் வாலின் மயிர்களை எடுத்து உறுதியானதோர் மெல்லிய கயிற்றால் கட்டிவிடவும்.

பருந்து, இராசாளி, கொக்கு இவற்றின் இறகுகளினின்றும் இறகுகளை பிய்த்தெடுத்து விட்டு அதன் காம்பை எடுத்து வஜ்ஜிரப் பசையில் தோய்த்தபின் மேற்சொல்லப்பட்ட உரோமங்களுக்கு பிடியாக அமர்த்திக் கொள்ளவும். பிரஷ் தயாராகிவிட்டது. பெரும்பாலும் இவ்விதமான பிரஷ்கள் சீமையில் தயார் செய்யப் பட்டவைகள். பஜாரில் 1 அணு முதல், 2 ரூபாய் வரையில் விற்கப்படுகின்றன.

தால் கோல் செய்தல்

கொழுப்பு	1 சேர்
வெள்ளைக் குங்குலியம்	1 சேர்
அறைத்த மரக்கறித்தூள்	1 சேர்

விளக்குப் புகையின் கறி
(காஜல்) ¼ சேர்

வெள்ளைக் குங்கிலியத்தை பாத்திரத்தில் போட்டு இளம் நெருப்பின் மீது சூடேற்றவும். அது மெழுகு ரூபத்தை யடைந்து கரைந்து போனதும் அதில் உருக்கின கொழுப்பைச் சேர்த்துக் கொள்ளவும். இந்த இரண்டு சரக்குகளும் ஒன்றோடொன்று கலந்து கொண்டவுடன் அதில் கரித்தூளையும், காஜலும் சேர்த்து கீழே இறக்கிக் கொள்ளவும். குளிர்ந்தவுடன் அதை திரிகள் ரூபத்திலோ, அல்லது பில்லையாகவோ தட்டி பத்திரப்படுத்திக் கொள்ளவும். உபயோகிக்கும் சமயம் இரும்புப் பாத்திரத்தை சூடு ஏற்றிக்கொண்டு அதன் மேல் இதை தடவினால் உயரிய கருப்பு நிறமுள்ள பெயின்ட் ஏறிவிடும்.

நமச்சாரப் பெயின்ட்

2, 2½ சேர் ஜலம் கொள்ளத்தக்க ஒரு மட்பாண்டத்தை வாங்கி அதனடிப்பாகத்தை ஈரமண்ணினால் தீட்டி உலர்ந்தப் பின் அடுப்பிலேற்றவும். அதில் ஒரு சேர் நமச்சாரம் போட்டு எரிக்கவும். அது கரைந்து கொதிப்படையும் சமயம் பாண்டத்தைக் கீழே இறக்கி சூடாக்கிக்கொள்ளவும். ஆனால் அது அளவுக்கதிகமாகவும் குளிர்ந்துப் போகக்கூடாது. அப்பால் அந்த பாண்டத்தில் முதல் தரமான மண்ணெண்ணையை போட்டு விடுங்கள்.

பின்னர், அது செவ்வனே கலந்து போகுமாறு முயற்சியுங்கள் அடுப்பின் மீதேற்றுங்கள், இளநெருப்பாக இருத்தல் வேண்டும் இல்லையேல் எண்ணையில் தீப்பிடித்துக் கொள்ளும். 3, 4 கொதிப்பு வரும் வரையில் கலக்கிக்கொண்டே போங்கள். கடைசியாக கீழே இறக்கிக்கொண்டு சற்று ஆறினவுடன் வடிகட்டி உபயோகியுங்கள். சீமை பெயின்ட் போலாக இருக்கும்.

குங்குலியப் பெயின்ட

ஏற்கனவே சொல்லப்பட்ட அளவிற்கு மண்பாண்டத்தை வாங்கி அடிபாகத்தை மண்ணினால் மெழுகி, அதில் ஒரு சேர் குங்கிலியத்தைப் போட்டு அடுப்பிலேற்றி எரிக்க அது உருகி விடும். அப்போது அதை கீழே இறக்கி கடுகெண்ணை 1¼ பாட்டில் அளவில் கலந்து கொள்ளவும். இனி அதை எதைக்கொண்

டாவது நன்றாய்க் கலந்து கொள்ளவும். எண்ணெயும் குங்குலியமும் கலந்து கொண்டதும் மறுமுறையும் அதை அடுப்பிலேற்றி விடுங்கள். அடியில் இள நெருப்பாக யிருக்க வேண்டும். ஜாக்கிர தையாக எரிக்கா விட்டால் எண்ணெ எரிந்து வேலை கெட்டுவிடும்.

அதற்கு இரண்டொரு கொதிப்பு வந்ததும் கீழே இறக்கிக் கொள்ளவும், ஆறினவுடன் உபயோகப்படுத்தலாம்.

செந்தூரப் பெயின்ட்

இதையும் மேற்சொல்லிய வண்ணம் மட்பாண்டத்தில் வைத்து எரிக்கவும். அதிலுள்ள சாமான் கரைந்து போனவுடன் பாண் டத்தை கீழே இறக்கிக்கொள்ளவும். 10 நிமிஷங் கழித்து அதில் டர்பன்டைன் எண்ணெயை ஊற்றி நன்றாய்க் கலக்கவும். அப்பால் அடுப்பிலேற்றவும். இளநெருப்பாக எரித்தல் வேண்டும், இல்லா விடில் தீப்பிடித்துக் கொள்ளும்.

2. 3, கொதிப்பு வந்தவுடன் முன்போல் கீழே இறக்கி சற்று ஆறினவுடன் வடிகட்டி உபயோகத்தில் கொண்டுவரவும்.

வார்னிஷ் தயாரித்தல்

சுத்தமான அலசி (கடுகு) எண்ணெ 3 சேர்

யாதொரு வாய் மூடப்படாத பாத்திரத்தில் போட்டு அடுப்பிலேற்றி எரிக்கவும். எண்ணெக் கொதிப்படைந்து பாத்திரத்துக்கு வெளி யில் வடியாவண்ணம் இளநெருப்பிலேயே எரிக்கவேண்டும். கொதிப் பின் மூலமாய் அதற்கு மேல் எழும்பும் நுரை அழுக்கு முதலிய வற்றை கரண்டியினால் வழித்து அப்புறப்படுத்திக் கொண்டு போகவும்.

எண்ணெ சுத்தமாய் விட்டதும் அதில் ரூமிமஸ்தகி தோலா 20 போடவும். அது கலந்து கொண்டதும் வஸ்திரத்தில் வடிகட்டி நிறத்தைச் சேர்க்கவும். இந்நிறம் கெட்டியாயும் நாள்பட நீடிக்கக் கூடியதாயு மிருக்கும்.

வெள்ளை நிறம் தயாரித்தல்

முத்து வெள்ளை தோலா 20 எடுத்து அம்மியின் மீது வைத்து மெது மெதுவாக ஜலம் தெளித்து அரைத்துக் கொண்டே போகவும். அரைக்கரைக்க அதிலிருந்து ஓர்வித பிசுபிசுப்பு உண்

டாகும். அச்சமயத்தில் மூன்று எண்ணெயிலிருந்து ஏதேனும் ஒன்றில் அதைப் போட்டுக் கலக்கிக் கொள்ளவும். எண்ணெய் ஊற்றினவுடன் அதிலுள்ள ஜலம் மேலே வந்து விடும். இனி அதை உருட்டி உருண்டையாக செய்துக் கொள்ளவும். அவசியமான போது கொஞ்சம் டர்பன்டைன் எண்ணெயில் உருண்டையைப் போட்டு, அறைத்துக் கொண்டு உபயோகிக்கவும்.

பச்சைக்காவி நிறம் தயாரித்தல்

பேவடி (ஓர்வித மஞ்சள் நிறமுள்ளமண்) மேற்சொல்லிய பிரகாரம் கொஞ்சங் கொஞ்சமாக தண்ணீர் விட்டு அறைத்துக் கொள்ளவும்.

மிருதுவானதும், டப்பாக்களில் அடைத்து வரும் சீமை நீலத்தை அதில் போட்டு 2டையும் நன்ருய் அறைக்கவும். நீலத்தைப் போட்டப் பிறகும், அதன் கருப்பு நிறத்தில் குறைவு இருக்கத் தென்பட்டால் கொஞ்சம் போல் காஜல் கருப்பையும் அதில் கலந்து அறைத்துக் கொள்ளவும்.

இப்பொழுது 3 எண்ணெகளி னின்றும் ஏதேனும் ஒரு எண்ணெயைச் சேர்த்து ஏற்கெனவே யுள்ள முறைகளின் படி உருண்டை தயாரித்துக் கொள்ளவும். அவசியமான போது டர்பன்டைனில் கரைத்து உபயோகித்துக் கொள்ளவும்.

குறிப்பு :—இதில் நிறை குறிக்கப்படவில்லை. ஆயினும் அது செய்வர்களின் பிரியத்திற்குரியது.

பச்சை நிறம் தயாரித்தல்

ரேக்கு அரிதாரம் 20 தோலா இடித்துக் கொள்ளவும. அது மெல்லியதானவுடன் அம்மியின் மேல் வைத்து கொஞ்சங் கொஞ்சமாக தண்ணீர் தெளித்து அறைத்துக் கொண்டே போகவும். தடிப்பான நிலைமைக்கு எட்டியதும் அதில் சீமை நீலநிறம் $\frac{1}{2}$ தோலா சேர்த்து அறைக்க வேண்டும். இந்த 2-ம் அறைப்பின் சகாயத்தால் நன்ருகி விட்டதும் எண்ணெயைக் கலந்து சிறு சிறு உருண்டைகளாக்கிக் கொள்ளவும். பிறகு முன்போலவே செய்யவும்.

நீல நிறம் தயாரித்தல்

முத்து வெள்ளை ½ சேர். இதை மேலே கூறப்பட்ட முறைப்படி அரைக்கவும். கலந்துக் கொண்டதும் அதில் 1½ தோலா சீமை எண்ணெயை கலக்கவும். நிறத்தை இளநிறமாக்க வேண்டுமாயின் அதில் குறைந்தளவிற்கு எண்ணெய் ஊற்றவும். தடித்த நிறமாக்க வேண்டுமானல் சற்று அதிக அளவிற்கு ஊற்ற வேண்டும். மீதியாவும் ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளபடியே.

பழுப்பு நிறம் தயாரித்தல்

மாதுளம் பூ நிறம் 20 தோலா முன் போல் செவ்வனே அரைத்துக் கொண்டு, அதில் 2, 3, தோலா காஜல் சேர்த்து அரைத்துக் கொள்ள பழுப்பு நிறம் தயாராகி விடும். தயாரானதும் அதையும் மேலே சொல்லப்பட்டபடி உருண்டையாக உருட்டிக் கொள்ளவும்.

அவசியமான சமயங்களில் அந்த உருண்டையை டர்பன்டைனைக் கொண்டு மிருதுவாக்கி உபயோகப்படுத்தவும்.

சாதிலிங்கம் வர்ணம் தயாரித்தல்

உயர்ந்த ரூமி மஸ்தகி	½ சேர்
செந்தூரம்	½ ,,

இந்த இரண்டு வஸ்துக்களையும் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். இந்த இரண்டும் செவ்வனே அரைப்பட்டவுடன் முன்போல் மாத்திரைகள் தயாரித்துக் கொண்டு அவசியமான சமயம் டர்பன்டைன் சகாயத்தால் மிருதுவாக்கி உபயோகிக்கவும்.

சிலேட் வர்ணம் தயாரித்தல்

முத்து வெள்ளை, காஜல் இந்த இரண்டையும், நன்ருய் அரைத்துக்கொள்ளவும். சிலேட் நிறத்துக்குவந்து விடும். அப்பால் அதில் டர்பன்டைன் கலந்து உபயோகிக்கவும்.

மஞ்சள் வர்ணம் தயாரித்தல்

மஞ்சள் வர்ணத்தைத் தயாரிக்க அரிதாரத்தை வாங்கி நன்ருய் அரைத்துக் கொள்ள வேண்டும். பட்டுப்போலானதும், அதில் கமச்சார எண்ணெயை கலந்து கொள்ளவும். 2-ம் ஒன்ருேடொன்று நன்ருய்க் கலந்து கொண்டபின் உபயோகிக்கவும்.

காசினி வர்ணம் தயாரித்தல்

முத்தை வெள்ளையை மேலே சொல்லப்பட்ட பிரகாரம் நன்றாய் அறைத்துக் கொள்ளவும். பின்னர் அதில சீமை ஊதா வர்ணத்தையும் பின்னர் ஏதேனும் ஒரு எண்ணெயையும் கலந்து அறைத்துக் கொள்ளவும்.

செந்தூர வர்ணம் தயாரித்தல்

செந்தூர வர்ணத்தை மெச்சார எண்ணெயில் கலந்து கொண்டு முன் போலவே உருண்டைகளை செய்து உருட்டிக் கொண்டு உபயோகிக்கும் சமயம் டர்பன்டைனைக் கொண்டு மிருதுவாக்கி உபயோகிக்கவும்.

பொன் நிறம் தயாரித்தல்

மேல் கூறப்பட்ட மூன்றுவித எண்ணெகளுக்கிடை ஏதேனும் ஒன்றிலிருந்து தயாரித்துக் கொள்ளவும். இந்த எண்ணெ சற்று உலர்ந்ததும் அதைக் கொண்டு எழுத்து எழுதி அந்த எழுத்துக்களின்பேரில் தங்கப்பவுடரை பஞ்சால் ஒற்றுவிட்டால் அவையாவும் பொன் எழுத்துக்களாய் விடும்.

மேக வர்ணம் தயாரித்தல்

முதலில் நீலத்தை நன்றாய் அறைத்துக் கொள்ளுங்கள். அப்பால் அதில் கொஞ்சம் முத்து வெள்ளையை சேருங்கள். நீலம் ½ சேர் அளவுக்கிருந்தால் அதில் வெள்ளை 25 தோலா சேருங்கள்: மீதியாவும் முன் போலவே.

ஷர்பத் வர்ணம் தயாரித்தல்

சீமை மஞ்சள் வர்ணம், வச்சிரம் இந்த 2-யும் காய்ச்சுங்கள். எந்த சாமானுக்காவது வர்ணங் கொடுக்க எண்ணினால் ஜலத்தைக் கலந்து அதன் மேல் பூசி விடுங்கள். பின்னர் டர்பன்டைன் இலேசாக பூசிவிட வேண்டும்.

சங்கால் பச்சை வர்ணம் தயாரித்தல்

சங்கால் பச்சையை 20 தோலா எடை கொண்டு நன்றாய அறைத்துக் கொள்ளவும். அப்பால் அதில் செந்தூர தைலத்தைப் போட்டறைத்து, மேல் சொல்லப்பட்ட முறையில் உருண்டை

தயாரித்துக் கொள்ளவும். அவசியமான போது மண்ணெண்ணை யின் சகாயத்தால் மிருதுவாக்கிக் கொள்க.

பணிப்புரு நிறம் தயாரித்தல்

முத்து வெள்ளை காஜல் இந்த இரண்டையும் அரைத்துக் கொள்ளுங்கள். மாத்திரைகள் தயாரிக்கும் விதம் மேலே சொல்லப் பட்ட பிரகாரமே. அவசியமான போது டர்பன்டைன் சகாயத்தால் மிருதுவாக்கிக் கொண்டு உபயோகிக்கவும்.

சிமி வர்ணம் தயாரித்தல்

இந்த வர்ணம் மார்க்கெட்டில், உதரியாக கிடைப்பதில்லை. பொட்டலங்களில் மடித்து விற்கப்படுகிறது. இதையும் மேற் சொல்லப் பட்ட முறையில் அரைத்து டர்பன்டைன் சம்பந்தப் படுத்திக் கொள்ளவும்.

வயப் பயறு வர்ணம் தயாரித்தல்

படேவரியை நன்றாய் அரைத்து அதில் சீமை நீலத்தை கலக்கவும். அது வயப்பயறு நிறத்தை அடைந்து போகத் தக்க அளவில் சேர்க்கவும். அப்பால் இதையும் டர்பன்டைன் சகாயத் தால் உபயோகப்படுத்திக் கொள்ளவும்.

சாயத் தொழில் பற்றிய முக்கியக்குறிப்புகள்

இந்த வேலைக்கவசியமான தளவாடங்களைப்பற்றி முதன் முத லாக கவலை யெடுத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் எந்தப்பாத் திரத்தில் சாயம் கரைக்கப் போகிறீர்களோ அந்த பாத்திரம் நீங்கள் கரைக்கப் போகும் வஸ்திரத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். அதாவது சாயத்தண்ணீர் மட்டு மல்லாது அந்தவஸ் திரமும் தாராளமாய் அதில் போட்டு கரைத் தெடுக்க வசதியுள்ள தாக இருத்தல் முக்கியம.

பாத்திரம் சிறியதாக இருந்தால் வஸ்திரத்தில் சாயக் கரை பட்டு விடக் கூடும். எனவே சாயம் போடப்பட்டுள்ள பாத்திரம் அதன் மேல் பாகத்தில் கொஞ்சம் காலியாகவே இருக்கும்படி தேர்ந் தெடுத்தல் அவசியம். ஏனெனில் சாயத் தொழிலாளர்களுக்கு இவை அத்தியாவசியமானவை. நீண்டதும் உருண்டையானது மான பாத்திர மொன்றை பூமியில் புதைத்துக் கொள்ளவும். இது

மட்பாத்திரமாக இருத்தல் வேண்டும். அடுத்தபடியாக உருண்டையும் இடலழமான மற்றோர் பாத்திரம் அவசியம். இதற்கு தொட்டி என்றும் சொல்லலாம். இதை மட்பாத் திரமாகவோ, அல்லது செப்பு பாத்திரமாகவோ உபயோகித்துக் கொள்ளலாம். இது உங்கள் பிரியம்.

செப்புப் பாத்திரமாக யிருந்தால் அடிக்கடி உடையாமலிருக்கும். இவைகளைத்தவிர நிறங்காய்ச்சுவதற்கான அநேக செப்புச் செட்டிக்களும் வைத்தல் வேண்டும்.

சில மொத்தக்கயிறுகள் (இவை நனைத்த வஸ்திரங்களை தொங்க விடுவதற்கு உபயோகப்படும்) அம்மியும் குழவியும் (இவை வர்ணத்தை அறைப்பதற்கு) பெரியதோர் கல்வம் (இது தடிப்பான வர்ணத்தை தூள்படுத்திக் கொள்வதற்கு) மூங்கில் ஒன்று (நனைத் ததுணிகளை உடனடியாக போடுபோடுவதற்காக.)

பாகு விவரம் வருமாறு:-

இதை அரிசி கஞ்சியை பழைய இரும்பின் சகாயத்தால் காவ் படவைத்து தயாரிக்கிறார்கள். வர்ணத்தை கெட்டிப் படுத்துவதற்கு உதவுகிறது.

சிலர் படிகாரம், வண்ணிக்காய், சச்சீகாரம், சுண்ணாம்பு நீர் இதை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். எந்த வஸ்திரத்தின் நிறத்திற்கு இந்த ஊட்டம் தரப்படுகிறதோ, அது வர்ணத்தின் சக்தியை தன்னில் கிரகித்துக் கொள்ளக் கூடியதாகிறது. அதுவும் தவிர நிறமும் கெட்டிப் பட்டுப் போகிறது.

நீங்கள் அத்தகைய ஊட்டம் கொடுக்க வேண்டுமாயின் வஸ்திரத்தை 5, 6 மணி நேரம் எதிலேனும் ஒன்றில் ஊறவைத்து விடுங்கள். மேற் சொன்ன நேரத்திற்கு மேற் பட்டு வஸ்திரத்தை விட்டுவைத்தாலும் பாதகமில்லை. ஏனெனில் இக் நேரத்திற்கிடை அந்த வஸ்திரத்தில் வர்ணம் சுவர்ந்து போகக்கூடிய சக்தி உண்டாய் விடுகிறது.

நிறத்தில் பிரகாசம் உண்டாக்க

சச்சிகாரம்	2 தோலா
குசும்பா பூ	1 சேர்

இந்த 2-ம் பாத்திரத்தில் போட்டு தண்ணீர் தெளித்து பிசைந்து கொண்டே போகவும். நன்றாய் பிசைய வேண்டும். பிசைத்தபின்பு அதை ஒரு ரெட்டு வஸ்திரத்தில் வைத்து மேலே கட்டித் தொங்க விடவும். முதலில் அதிலிருந்து மஞ்சள் நிறமான தண்ணீர் வெளிவரும். அதை எடுத்து தனியே வைத்து விடவும். கடைசியாக சிகப்பு நிறமான தண்ணீர் வெளிவரும். இந்த சிகப்பு நிறமே பெரும் பாலும் பயன்படும்.

சாயத்தொழிலாளர் பல்வேறு நிறங்களின் மூலம் சாயத்தை எவ்வாறு ஏற்றி வருகிறார்கள் என்ற விவரம் பின்னால் வரையப் பட்டுள்ளது.

வசந்தி நிறம்

ஹார் சிங்கார் புஷ்பம் ½ அல்லது ¾ சேர் ஜலத்தில் நன்றாய்க் கலந்து கொள்ளவும். அதாவது பிசைந்துக் கொள்ள வேண்டும். அவை சரிவர கலந்து கொண்டதும், வஸ்திரத்தை அதில்போட்டு கசக்கிக் கொள்ளவும். நிறம் ஏறிவிடும். பிறகு இரண்டு தோலா மஞ்சள் தூளை ஜலத்தில் போட்டுகலக்கிக் கொள்ளவும். கலப்புயாவும் ஒன்றாய் விட்டதும் வஸ்திரத்தை அதில் போட்டு பிசைந்து கொள்ளவும். மஞ்சள் நிறம் வஸ்திரத்தில் ஏறிவிடும். பிறகு 1¼ சேர் அளவுள்ள ஜலத்தில் 5 தோலா படிகாரத்தைப் போட்டு கரைத்துக் கொள்ளவும். இன்னொரு பாத்திரத்தில் பாலூத்துப் போட்டு கலந்து கொள்ளவும். அந்த இரண்டையும் சேர்த்து அடுப்பின் மீது வைத்தெரிக்க அதில் கொதிப்பு வரும். அப் பொழுது வஸ்திரத்தை அதில் 2, 3 தடவைகளில் மூழ்த்தி எடுத் துக்கொள்ளவும். பிறகு சத்தைக் கொடுத்து வஸ்திரத்தை பிழிந் துக் கொள்ளவும்.

ஆரெஞ்சு சாயங் கொடுத்தல்

பழைய அல்லது புதிய வஸ்திரமாயினும் சரியே, முதலில் படிகாரத் தண்ணீரில் நனைத்துக் கொள்ளவும். அப்பால் நீங்கள் ஏற்கெனவே தயாரித்துள்ள பாகில் போட்டு அதில் அரைச்சேர் ஜலம் ஊற்றி வஸ்திரத்தை நனைத்துக்கொள்ள வும். பிறகு ஹார்சிங்கார் நிறத்தில் 2, 3 தடவைகளில் அமுக்கி பிழிந்துக்கொள்ளவும். கடைசியாக படிகாரத் தண்ணீரிலும் நனைத்து பாகுகொடுத்து உலர்த்திக்கொள்ளவும்.

பச்சைசாயங் கொடுத்தல்

எல்லா நிறமும் ஒரேவிதமாக நிறங்கொடுக்கப்படவில்லை. ஆயினும் சில நிறங்களின் முறை சற்றேரக்குறைய ஒன்றுகிறது. விபரம் வருமாறு:-

ஏற்கனவே நிறப்பிரகாசத்திற்காக சொல்லப்பட்ட முறையை அனுசரித்து அதாவது பாகுவில் 2 சேர் ஜலத்தைக் கலக்கவும். அது கலந்ததும் அதில் வஸ்திரத்தை நனைக்கவும். மேற்சொன்ன நிறப்பிரகாசம் அந்த பாகிற்கு ½ பாகம் ஹார்சிங்கார் புஷ்பத்தின் நிறத்தைக் கலந்து, வஸ்திரத்தை நனைத்து பிழிந்து கொள்ளுங்கள்

அடுத்தப்படியாக படிகார ஜலத்தில் பாகைச் சேர்த்து வஸ்திரத்தில் அதைத் தோய்த்தெடுத்து. பிழிந்துவிட்டு உலர்த்திக் கொள்ளுங்கள்.

சந்தனசாயங் கொடுத்தல்

புதிய பழைய வெளுக்கப்பட்ட. ஆகிய யாவற்றிற்கும் அவசியம் பாகுபடுத்திக் கொள்வதே நல்லது. கடுக்காய்ப்பாகும் கொடுப்பது உண்டு. எனவே மலாகிரிசாயத்திற்கு கடுக்காய் பாகுமேற்கண்ட விதமாகக் கொடுத்து பிறகு படிகார பாகும் 2, 3 தடவை கொடுக்கவும். அவ்வாறு செய்துவிட்டபின்னர் அடியிற்கண்ட சரக்குகளை கொதிக்க வைத்த ஜலத்தில் வஸ்திரத்தை நனைத்து பிழிந்துக் கொள்ளவும். அச்சரக்குகளாவன:-

வெள்ளைச் சந்தனம்	1 சேர்
வெட்டிவேர்	1½ தோலா
கோரைக்கிழங்கு	1 தோலா
பூலாங்கிழங்கு	1 தோலா

இவைகளை யாவும் ஜலத்தில் கொதிக்க வைத்து வஸ்திரத்தை அதில் நனைத்துக் கொள்ளவேண்டும்.

மங்கல பஞ்சள் சாயம்

சிமைச்சாயங்கள் பலமாதிரியாக பஜாரில் விற்கப்பட்டுவருதல் வெளிப்படை. ஆயினும் சாயவேலைக்காரர்கள் பெரும்பாலும் தாங்கள் தயாரிக்கும் நிறத்தையே கொடுக்க இஷ்டப்படுகிறார்கள்.

ஹார்சிங்கார் பூக்களிலின்றும் சாயத்தை எடுத்து அதில் கொஞ்சம் ஜலத்தை சேர்க்கவும். நீங்கள் சேர்க்கும் நிறத்திற்காக எவ்வளவு ஜலம் சேர்க்கவேண்டுமோ அவ்வளவுக்கு சேர்க்கவும். பிறகு துணை நிறத்தையும் அதில் கலந்து கொண்டு வஸ்திரத்தை நன்றாய் தோய்த்தெடுக்கவும். அப்பால் நிறம் கலந்த தண்ணீர் வெளிர் நிறம் கொடுக்கும்வரையில் அதில் அமுக்கி எடுங்கள். பிறகு பிழிந்து உலர்த்திக்கொள்ளவும்.

கற்பூர நிறங் கொடுத்தல்

குழைச் சுண்ணாம்பில் கொஞ்சம் மஞ்சள் நிறத்தை கலந்து கொள்ளவேண்டும். அதாவது ½ தோலா குங்குமப்பூவை நன்றாய் அரைத்து அதில் கலந்துகொள்ளவேண்டும். அதில் வஸ்திரத்தை நனைத்தெடுத்து துணை நிறத்திலும் போட்டெடுக்கவும். உலர்ந்த வுடன் பிழிந்து உலர்த்திக் கொள்ளவும்.

பாதாம் நிறம் கொடுத்தல்

முதலில் ராமகட்டி கறைத்த ஜலத்தில் வஸ்திரத்தை நனைத் தெடுக்க லேசானதோர் இளநிறம் காணும். அடுத்தபடியாக ஹார்சிங்கார்புஷ்பங்களின் நிறம் உங்களிடத்தில் தயாராயிருந்தால் கொடுங்கள், இல்லாவிட்டால் அதேசமயம்பூக்களைப் பிழிந்தெடுத்து நிறங்கொடுங்கள்.

இன்னொரு விதமாவது:—முதலில் வஸ்திரத்திற்கு ரோஸ்நிறம் கொடுத்து அதற்கு பிறகு ராமகட்டி மண் கலந்த ஜலத்தில் கலந்து விடவும்.

மூன்றாவது விதமாவது:-ஹார்சிங்கார் புஷ்பங்களின் நிறம் ராம்கட்டி கறைத்த ஜலம் இரண்டையும் கலக்கிக் கொண்டு அதில் வஸ்திரத்தை நனைத்து அப்பால் துணை நிறத்திலும் அமுக்கி எடுத்து பிழிந்து உலர்த்திக்கொள்ளவும்.

பருத்தி நிறம்

இந்த நிறம் கொடுக்குமுன் 2 தோலா படிகாரத்தை நன்றாய் அரைத்து இளஞ்சூடான தண்ணீரில் கறைத்துக் கொள்ளவும். பிறகு வஸ்திரத்தை அதில் நனைத்து வஸ்திரத்தில் ஈரம் சற்று மீதியாக இருக்கும்பொழுதே ஹார்சிங்கார் புஷ்பத்தின் சாறு

½ தோலா எடுத்து அதில் அந்த வஸ்திரத்திற்கு நிறங்கொடுக்கவும்.

பருத்திப்புஷ்பம் மஞ்சள் நிறம் எனவே நிறமும் அப்படியே இருத்தல் அவசியம். அதற்காக அதில் இலேசான மஞ்சள் நிறத்தை கலந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் அந்த வர்ணத்திற்கு வரும்.

பருத்தி நிறம் நெம்பர் 2

முதலில் கொஞ்சம் ஜலத்தில் 1தோலா துருசு அரைத்துக் கலந்து விடவும். சற்று நேரத்திற்குப் பிறகு அந்த ஜலத்தை ஏதேனும் ஒரு பொருளைக் கொண்டு கலக்கிவிடவும். கலப்பு சரிவர உண்டாகிவிட்டதும் துணியை நன்றாய் அதில் ஆழ்த்திவிடுங்கள். வஸ்திரம் நன்றாய் நனைந்து போனவுடன் அதைபிழிந்து உலர்த்திக் கொள்ளவும். அப்பால் மாம் பட்டையை ஜலத்தில் கஷாயமாக வேகவைத்து செவ்வனே வேகங்கொண்டபின்னர் வஸ்திரத்தை அதில்போட்டு விடவும். பிறகு படிகாரத் தண்ணீருடன் மேற்கூறிய பிரகாரம் துணைச் சரக்கை உபயோகித்து உலர்த்திக்கொள்ளவும்.

ஷர்பத் நிறங் கொடுத்தல்

முதலில் வஸ்திரத்தை ஹார்சிங்கார் புஷ்ப நிறத்தில் நனைத்துவிடுங்கள். அப்பால் ஹார்சிங்கார் பூக்கள் நிறத்தில் தோய்த்தெடுங்கள். பிறகு படிகார ஜலத்தை உபயோகித்து துணைப் பரிகாரம் செய்து கொள்ளுங்கள்.

சவுக்கு நிறங் கொடுத்தல்

முதலில் வஸ்திரத்தை நீலத்தில் நனைத்துக்கொள்ளவும். பிறகு நஸ்பால் வர்ணத்தில் நனைத்துக் கொள்ளவும். பிறகு படிகார ஜலத்தில் இறுதியாக துணைப்பரிகாரம் செய்துகொள்ளவும்.

காவி நிறங் கொடுத்தல்

ஆரம்பத்தில் வஸ்திரத்தை செந்தூரம் காவி நிறத்தில் நனைத்தெடுக்கவும். நனைத்தானதும், படிகார ஜலத்தில் தோய்த்தெடுக்கவும். வஸ்திரத்தின் நிறைக்கே வர்ணமும் இருத்தல் வேண்டு

மென்பதை மறக்கலாகாது. சிற்சில சமயங்களில் வர்ணக் குறைவின் காரணமாக வஸ்திர நிறம் பாழடைந்து விடுகிறது.

சங்கால் பச்சை நிறம்

இந்த நிறத்தை கொடுக்கு முன் நீங்கள் யாதொரு மருந்துக் கடையி லிருந்து சங்கால் பச்சை விலைக்கு வாங்கிக் கொள்ளவும். அதை நன்றாய் அரைக்க வேண்டும். அரைத்த தூளை தண்ணீரில் கலக்கி வஸ்திரத்தை செவ்வனே நனைத்துக் கொள்ளுங்கள். அதன் ஒவ்வொரு பக்கத்திலும் நிறம் ஏறி விட்டதா வென்று கவனிக்கவும். பிறகு சுண்ணாம்பை தண்ணீரில் கலந்து வடிகட்டி அதில் வஸ்திரத்தை நனையுங்கள். 2, 3 தடவை நனைக்க வேண்டும். அதற்குப் பிறகு பிழிந்து உலர்த்திக் கொள்ளவும். அருமையான நிறமாகி விடும்.

அக்கினி ரோஸ் நிறம்

வெளுத்த வஸ்திரம் புதிய வஸ்திரம் அல்லது வெள்ளை வஸ்திரம் இவைகள் இந்த வர்ணத்திற் கேற்றவை.

நீங்கள் மேலே சொல்லி வந்த சிவப்பு நிறம் எட்டு தோலாவில் வஸ்திரத்தை நனைத்துக் கொண்ட பிறகு புளிப்புக் கரைத்த ஜலத்தில் தோய்த்தெடுங்கள். வர்ணம் முழுவதும் கறைந்து போகும் வரையில் நனைத்துக் கொண்டே போங்கள். அப்பால் இணைப் பரிகாரத்துடன் உலர்த்திக் கொள்ளுங்கள்.

பச்சை நிறங் கொடுத்தல்

ஹார்சிங்கார் அல்லது மஞ்சளைக் கொண்டு வஸ்திரத்திற்கு இலேசான நிறங் கொடுங்கள். பிறகு கொஞ்சம் நீல நிறத்தைக் கொடுத்து அதை பச்சைப் படுத்திக் கொள்ளுங்கள். இந்த இரண்டு நிறங்களின் அளவிலும் கூடக் குறைவு நேர்ந்துப் போனால் நிறம் நானாவிதமாகி விடும்.

நீலத்தைக் குறைத்து மஞ்சள் நிறத்தை அதிகப் படுத்தினால் மஞ்சள் கலந்த பச்சையாய் விடும். நீலத்தை அதிகப் படுத்தி மஞ்சளைக் குறைத்தால் பச்சை நிறத்தில் நீலத்தைக் காட்டும்.

இரண்டும் ஒரே அளவில் இருந்தால் தான் சரியான பச்சையாகத் தோற்றும். பச்சையின் பல்வேறு நிறங்களின் வகைகளும் முறையே தனித்தனி பெயர் கொண்டவை.

இள வர்ண பச்சை

முதலில் இள நீலநிறமுள்ளதாக ஓர் வஸ்திரத்தை நிறங் கொடுத்து பின்னர், மஞ்சள் அல்லது ஹார்சிங்கார் பூக்கள் 3 தோலாவி லிருந்து சாறெடுத்து, வஸ்திரத்தை அதில் நனைத்தப் பிறகு படிகார தண்ணீரில் தோய்த்து விடவும்.

காஷ்னி நிறங் கொடுத்தல்

முதலில் வஸ்திரத்திற்கு இளநீல நிறத்தைக் கொடுங்கள். பிறகு குசும்பா நிறத்தைக் கொடுங்கள். 2, 3, தடவை குசும்பாவில் நனைத் தெடுங்கள். பிறகு எலுமிச்சைசாறு அல்லது படிகாரத் தண்ணீரில் நனைத்துப் பிழிந்து உலர்த்திக் கொள்ளுங்கள்.

சந்தன நிறங் கொடுத்தல்

சந்தனத்தூள்	5 தோலா
மருதோன்றித் தழை	$\frac{1}{2}$ சேர்

இரண்டையும் சேர்த்து 2 சேர் ஜலத்தில் நன்றாய்க் காய்ச்சவும். 2, 3, கொதிப்புகள் கண்டதும் இது நிறத்திற்கு வந்து விடும்.

அப்போது அதை கீழே இறக்கி ஆறினதும் அதில் வஸ்திரத்தை நனைத்துக் கொள்ளவும். பிறகு துணைப் பரிகாரத்துடன் உலர்த்திக் கொள்ளவும்.

கேசரி வர்ணம்

இது பெரும்பாலும் குசும்பாவினால் சாயங் கொடுக்கப்படுகிறது. ஆனால் முறை யாதெனில் :—

ஷஹாப் ஹார்சிங்கார் புஷ்பங்கள் இருவகைகளையும் காய்ச்சி நிறம் அடைந்து கொள்ளவும். இருவகைப் புஷ்பங்களும் சமஎடையாக இருத்தல் வேண்டும். நிறம் தயாரானதும், வஸ்திரத்தை அதில் நனைத்து பரிகாரத்துடன் உலர்த்திக் கொள்ளவும்.

நிறத்தின் அளவு கூடக் குறைச்சலாக செய்து கொள்வது தொழிலாளர் வசத்திலாகும். இத்தொழில் எவ்வளவுக் கெவ்வளவு

கைபடியுமோ அவ்வளவுக் கவ்வளவு அனுபவமும் அதிகரித்துக் கொண்டே போகும்.

கத்தரிக்காய் நிறங் கொடுத்தல்

தடித்த நீல நிறத்தில் வஸ்திரத்தை நனைக்கவும். பிறகு இலேசான சிவப்பு நிறத்தில் கொஞ்சம் துருசைக் கலந்து நனைத்துக் கொள்ள வேண்டும். பிறகு படிகார ஜலம்-அப்பால் துணைச் சரக்கு உபயோகிக்கவும். காய்ந்ததும் கத்தரிக்காய் நிறத்திற்கு வந்து விடும்.

பேரோஸா நிறம்

முதலில் வஸ்திரத்தில் இலேசான மஞ்சள் நிறம் கொடுக்கவும். பிறகு நீல நிறத்தில் தோய்க்கவும். இவ்விரண்டு வேலைகளும் முடிந்தவுடன் சுண்ணும்புத் தண்ணீரை வடிகட்டி அதில் சில நிமிஷங்கள் வஸ்திரத்தை ஊற வைத்து பிழிந்த பின், அதை நீல நிறத்தில் நனைத்து விடவும்.

இவ்வாறு 2, அல்லது 4 தடவைகள் சற்று உலர்த்தி யுலர்த்தி நீலத்தில் போடவும், தண்ணீரில் சுண்ணும்பு சம்மந்தமும் அவசியம். இருத்தல் வேண்டும். கடைசியாக சுத்த ஜலத்தில் கழுவி துணைச்சரக்குடன் உலர்த்திக் கொள்ளவும்.

மணிப்புரு நிறம்

முதலில் மாசிக்காயை நன்ருய் இடித்து அறைத்துக் கொள்ளவும். அப்பால் அது வஸ்திரம் முழுவதும், நனைந்து போகக்கூடிய அளவிற்கு தண்ணீர் ஊற்றி எரிக்கவும், 3, 4 கொதிப்புகள் கண்டதும், அடுப்பி லிருந்து கீழே இறக்கி சற்று ஆறவைத்த பின் வஸ்திரத்தை நனைத்து விடவும். பின்னர், இலேசான துருசு நிறத்தைக்கொடுத்து துணைச் சரக்கினல் பூர்த்திக்துக் கொள்ளவும்.

கருப்பு சாய்ந்த சிகப்பு நிறம்

முதலில் வெள்ளை வஸ்திரத்திற்கு பச்சை நிறத்தில் தோய்த்துக் கொள்ளுங்கள். வஸ்திரத்தில் நிறம் ஏறின பிறகு அதை பிழிந்து கொள்ளுங்கள். அப்புறம் துருசு நிறம் ஏற்றுங்கள். இந்த இரண்டு நிறங்களையும் ஏற்றியான பிறகு படிகாரத் தண்ணீரில் நனைத்துப் பிழிந்து உலர்த்திக் கொள்ளுங்கள்.

சுர்மா நிறங் கொடுத்தல்

சீமையிலிருந்து வரும் வஸ்திரங்களை நீங்கள் பார்த்திருக்கலாம். அவற்றின் தொழிலாளர்கள் தனிச் சுர்மாவிலிருந்தே நிறங் கொடுப்பதாகத் தெறிகிறது. அவற்றின் முறை யாதெனில்: முதலில் சுர்மாவை பொடியாயரைத்து ஒரு முடிச்சாக கட்டிக்கொள்கிறார்கள். அந்த முடிச்சை ஜலத்தில் போட்டு கொதிக்க வைத்து அத்தண்ணீரை வடிகட்டிக் கொள்ளுகிறார்கள். வடிகட்டிய தண்ணீர் ஒரே நிறத் தண்ணீர் ஆகிவிடுகிறது.

அடுத்தபடியாக பிசினைப்போலொத்த பிசுபிசுப்பான வஸ்துவிலோ, அல்லது கற்கண்டு ஷர்பத்திலோ வஸ்திரத்தை நனைத்து சற்று உலர்த்திக் கொள்ளுகிறார்கள்.

வஸ்திரத்தின் ஈரம் மீதியாக இருக்கையிலேயே அவர்கள் அதை நிறத்திலிட்டு வஸ்திரத்தை உலர்த்திக் கொள்ளுகிறார்கள். ஆனால் நம் இந்தியத் தொழிலாளர்கள் எவ்வாறு சாயம் ஏற்றுகிறார்கள் எனில் முதலில் ஷஹாப் (சிகப்பு) நிறத்தைக்கொடுத்து சிகப்பாக்கிக் கொண்டபின், நீல நிறத்தைக்கொடுக்கிறார்கள். வஸ்திரம் உலர்ந்த பின்னரும் நீல நிறம் கொடுக்கிறார்கள். நீல நிறம் காய்ந்ததும் இலேசான ஷஹாப் வர்ணத்தைக் கொடுத்து அப்புறமும் நீலத்தில் துவைக்கிறார்கள். இதெல்லாம் முடிந்தபின் படிகாரத் தண்ணீரிலும் துணைச் சரக்கிலும் போட்டு காயவைத்து கொள்ளுகிறார்கள்.

தொழிலாளர் மேற்கண்ட இரண்டு முறைகளுள் ஏதேனும் ஒன்றை மேற்கொள்ளலாம். ஆனால் ஏற்கனவே சொல்லப்பட்ட பிரகாரம் கைப்படியபடிய தொழிலில் அனுபவமும் அடையப் பெறும்.

சோப்புத் தொழில் சம்பந்தமானவை

நம்தேச மக்கள் அந்நிய நாட்டு சாமானைப் பார்த்து அவற்றின் நேர்த்தியைப் பற்றி சிலாகித்துப் பேசுகிறார்கள். நம் நாட்டில் தயாரிக்கப்படும் சோப்பைக் குறித்தே பேசுவோம்.

இதில் அழுக்கைப் போக்கக் கூடிய சக்தி இல்லையா? அழுக்கு போகும்படியான சக்தி இதிலும் நிறைய உண்டு. வித்தியாசமேவெனில் அவைகளுக்கு வாசனை அதிகம்; அமைப்பும் நேர்த்

ARCHIVE
101647

தியும் அபரிமிதமாகிறது. எனவே அதிக வாசனைக் கொடுத்து சோப்பை நேர்த்தியாகச் செய்ய நம்மாலும் முடியும்.

அடியில் அவற்றிற்கான விவரம் சுருக்கமாய் வரையப் படுகிறது.

சோப்பு தயாரிப்பதற்கான சாமான்கள்

துடுப்பு—இது மரத்தால் தயாரிக்கப்படுகிறது. சோப்பை கிளறுவதற்கு உபயோகமாகிறது—இது ஏறக்குறைய 2 கெஜம் நீளமானது—ஒரு பக்கம் அகப்பை வடிவமுள்ளது. மிட்டாய்க் கடைக்காரர்கள் ஹல்வா கிளறுவதற்கு வைத்திருப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம்.

தாச்சி—இது எல்லோருக்கும் தெரியும். இதை அடுப்பின் மேலேற்றி எரிக்கிறார்கள்.

குரடு—நெருப்பெடுக்கவும், தள்ளவும்.

கட்டிங் இயந்திரம்—இந்த இயந்திரத்தில் சோப்பை வைத்து துண்டித்துக் கொள்ளுகிறார்கள். இது அதிக விலை உள்ளது. எனவே நம் தேசிய தொழிலாளர் அதற்குப் பதிலாக இரும்புக் கம்பி யொன்றை உபயோகிக்கிறார்கள். அதன் இரு தலைப்புகளிலும், தொப்பி ரூபத்தைப் போலாயிருக்கும்; இதனால் சோப்பு துண்டிக்கப் படுகிறது.

பெயர் பதிப்புக்கும் ஸ்டாம்பு

இவை ஒரு விதமான பெட்டிகள். அவைகளில் சோப் மீது அமைக்கவேண்டிய எழுத்துக்கள் செய்நேர்த்திக்குரிய சித்திர வேலைப்பாடு இருந்து வரும்.

சோப்பை துண்டித்து அவைகளில் வைத்து அழுத்த, அச்சு பதிந்து விடும். அப்பெட்டிகள் பெரும்பாலும் பித்தளை, அல்லது செம்பினால் தயாரிக்கப்படுகின்றன.

சுத்தியல்—பெட்டிகளில் சோப் துண்டுகளை வைத்து மூடிப் பின் அவற்றின் மேல் அடித்துத் தட்டுவதற்கு இந்த சுத்தியல் உபயோகப் படுகிறது.

குழாய்கள்:— இங்லீஷ் சோப் தயாரிக்கப்படுகையில் அதை ஒரு விதமான குழாய்களில் போடப்படுகிறது. அது உருண்டை

யான ரூல் கழி வடிவத்தை அடைகிறது. அப்போது அதை உருண்டையான சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக்கொள்ளுகிறார்கள். இவை அநேகமாய் தகரத்தால் செய்யப்படுகின்றன.

தடித்துண்டு—இது மரத்தால் செய்யப்பட்ட உருண்டையான வஸ்து. குழாய்களில் சோப் உலர்ந்த பின் அதைத் தள்ளி எடுப்பதற்கு பயன் படுகிறது.

தட்டு— இதோர் மரப்பலகை, சதுர வடிவமானது—இதன் மேல் சோப்புத் துண்டுகளை வைத்து அச்சிடுகிறார்கள்.

அலமாரி:— சோப்பை பத்திரமாய் வைக்க பிரயோஜனமாகிறது.

பெட்டி:— இதோர் மரத்தால் செய்யப்பட்ட சாமான். அதன் நான்கு புறங்களிலும் நான்கு பலகைகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. நான்கு பலகைகளின் வாயும் திறந்திருக்கும்.

அவற்றின் அடிப்பாகம் பூமி மேல் படிந்திருக்கும். அவற்றுள் சோப் ஊற்றினதும் அந்த நான்கு பலகைகளையும் எடுத்து நிறுத்தி கொக்கி மாட்டிவிடுகிறார்கள். அப்போது அது பெட்டி வடிவத்தை போலாகும். சோப் காய்ந்து செங்கல்லைப் போல் கெட்டியானதும் அக்கொக்கிகளை எடுத்து விடுகிறார்கள். அப்போது பலகைகள் பூமிமேல் படிந்துவிடும். இவை சோப்பை உலர்த்துவதற்கு இன்றியமையாத பெட்டிகள்.

தொட்டி:— சோப்தயாரிக்க தொட்டி ஒன்று தேவை. இது 2 தட்டுகளைக் கொண்டுள்ளது, ஒன்று சற்று உயரமானது மற்றொன்று தாழ்வானது. ஒவ்வொரு தட்டின் அளவு $2\frac{1}{2}$ கெஜம் நீளம், $1\frac{1}{2}$ கெஜம் அகலம், $\frac{1}{2}$ கெஜம் உயரம். மேல் தட்டிலிருந்து கீழ்தட்டிற்கு ஜலம் இறங்க சிறு குழாய்கள் அமைக்கப்படுகின்றன. மேல் தட்டில் அதாவது, தொட்டியில் சச்சீகாரம், சுண்ணாம்பு நீர், ஜலம் போடப்படுகிறது. மூன்று நாளைக்குப் பிறகு தண்ணீர் தெளிந்து அழுக்கெல்லாம் கீழே தங்கிவிடுகிறது. அப்பொழுது இரண்டு தட்டுகளுக்கும் மத்தியிலுள்ள குழாய் அடைப்பை திறந்து விடுகிறார்கள்.

அதிலிருந்து முதல் தொட்டியிலுள்ளத் தண்ணீர்யாவும், குழாய் வழியே 2-வது தொட்டிக்கு பாய்ந்து விடுகிறது. அடித்தேக்கம், மேல் தொட்டியிலேயே நின்று விடுகிறது.

அப்பால் முதல் தொட்டியில் மீண்டும் புதிய ஜலம்விட்டுகிளறு கிருர்கள். மூன்று நாள் கிளறிக் கொண்டு இருத்தல் வேண்டும்.

2-வது தொட்டியிலுள்ள காரஜலம் ஏற்கெனவே எடுக்கப்பட்டதை பத்திரமாக தனிப்படுத்திவைக்கவேண்டும். மூன்று நாள் ஆனதும், குழாய் அடைப்பை திறந்து விட அதிலுள்ள கார ஜலம் முன்போல் கீழ்தட்டிற்கு வந்து விடும் அதையும் இன்னெரு பாத்திரத்தில் எடுத்து வைக்க வேண்டும் இவ்வாறே மூன்று முறை புதிய தண்ணீரிட்டு நீத்தகாரஜலத்தை முறையே மூன்று வித பாத்திரங்களில் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும்.

மேல் தட்டி உள்ள மண்டித்தூள் எடுத்துவிட்டு காரஜலத்தை உபயோகப்படுத்தப் படுகிறது. இதுவே சோப்பு, இதுவேகாரம் எனப்படுவது.

நாட்டுச் சோப்பு செய்யும் முறை

சோடாகாஸ்டிக்	$\frac{1}{2}$ சேர்
சுண்ணும்பு	$\frac{1}{4}$,,
நல்லெண்ணெய்	$\frac{1}{2}$,,
கொழுப்பு	$\frac{1}{4}$,,

முதலில் சுண்ணும்பை 2 சேர் ஜலத்திலும் சோடாவை 1 சேர் ஜலத்திலும் தனித்தனியே 2 பாத்திரங்களில் போட்டு கலக்கி விடவும். ஓர் இரவும் ஓர் பகலும் அவை அப்படியே கிடந்து போக வேண்டும். அப்பால் அவற்றின் நீற்ற ஜலத்தை இறுத்தி கொழுப்பு, எண்ணெய் உள்பட தாச்சியில் போடவும்.

தாச்சியின் கீழ் கிரமமான அளவிற்கு நெருப்பை யெரித்து அதில் உள்ள சரக்குகளை துடுப்பால் கிளறிக் கொண்டிருக்கவும். பாகு சரியான நிலைமைக்கு வந்தவுடன், கீழே இறக்கி, பாகை கற்களின் மேல் பரப்பி உலர்த்திக் கொள்ளவேண்டும், அல்லது அதற்கான பெட்டியில் போட்டு காய்ந்தவுடன் எடுத்துக் கொள்ளலாம்.

அப்பால் சிறு சிறு துண்டுகளாக அறுத்து உபயோகிக்கவும். சிறியதோர் அளவில் தயாரிக்க வேண்டுமாயின் காரத்தை தொட்டி மூலம் தயாரித்து, எண்ணெய் கொழுப்பு முதலியவைகளைச் சேர்த்து பாகு படுத்திக் கொள்ளலாம். ஆனல் அதிகமான அளவில் தயாரிப்பதாக விருந்தால் ஓர் விஷயத்தை ஞாபகத்தில்

வைக்க வேண்டும். அதாவது எந்த காரமான ஜலம் தொட்டியிலிருந்து முதலாவதாக எடுத்து வைக்கப் பட்டிருக்கிறதோ அதையே முதன் முதலாக சிறுகச் சிறுக கலந்து கொண்டு போகவேண்டும்.

இரண்டாவதாக எடுக்கப்பட்டதை இரண்டாவது தடவையிலும் மூன்ருவதாக எடுத்ததை மூன்ருவது தடவையிலுமாக உபயோகிக்க வேண்டும்

பாகு தடிப்பாக்க போதிய அனலில் எரிக்க வேண்டும். பாகு பதத்திற்கு வந்தவுடன் அதை அச்சுப் பெட்டிகளில் ஊற்றி கெட்டிப்படுத்திக் கொள்ளவும். சிலர் சோப் செய்யும் போது அதில் உளுத்தம் மாவு முதலிய பல்வேறு சரக்குகளை பாகில் கலந்து கொள்ளுகிருர்கள். சோப்பு கனம் அதிகப் படவேண்டுமென்பதே அவர்கள் அவ்வாறு செய்வதற்குக் காரணம். ஆனல் இது சரியன்று. மோசம் நாசமேயாகும்.

இங்கிலீஷ் சோப்பு செய்யும் முறை

ஒரு பாத்திரத்தில் சோடாகாஸ்டிக் கால் சேர், தண்ணீர் 30 தோலா இரண்டையும் போட்டு கலக்கிக் கொள்ளவும். காஸ்டிக் கட்டி மீதி மிச்சமாக இருக்க விடலாகாது. மற்றொரு பாத்திரத்தில் தேங்கா எண்ணெ 2½ சேர், வாசனையும் நிறமும் அவசியத்திற்கேற்ப போட்டு அதையும் கலந்து கொள்ளவும். இந்த 3 சரக்குகளும் ஒன்ருய்க்கலந்து கொண்டதும் அதை அடுப்பில் ஏற்றி எரிக்கவும்.

முதல் பாத்திரத்திலுள்ள சோடா கலந்த தண்ணீரை அதில் கொஞ்சங் கொஞ்சமாக கலந்து கொண்டு துடுப்பால் கிளறிக் கொண்டுபோகவும்.

பாகு தடிப்புக்கு வந்ததும் அதை கீழே இறக்கி அதற்குரிய அச்சுகளில் போட்டு கெட்டிப்படுத்தி விடவும்.

24 மணி நேரத்திற்குப்பின் சோப்பு உலர்ந்த வுடன் அதை துண்டு துண்டாக அறுத்து ஸ்டாம்பிற்குட் படுத்திக் கொள்ளலாம்.

குறிப்பு:— சோப் செய்வதற்கு தேங்கா எண்ணெயே உபயோகிக்கவேண்டுமென்ற அவசிய மில்லை. அதற்கு பதிலாக கடலெண்ணெ நல்லெண்ணெ முதலியவைகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

அதைப்போலவே பிரியப்பட்ட வாசனையையும் நிறத்தையும் உபயோகிக்கலாம். நிறத்தை சாராயத்தில் கலந்து சோப்தடிப் பிரகும் தருணத்தில் கலந்து கொள்ளவும்.

நிறத்துடன் சோடாசிலிகேட் கலந்து விட்டால் நிறத்தை வெடிக்க விடாது. நிறம் தரிபட்டு விடும்.

உரோம சங்காரி

இங்லீஷ் சோப்	4 பங்கு
பேரியம் சல்பைட்	1 ,,
சுத்த ஜலம்	1 ,,

நிறமும் வாசனையும் அவசியத்திற்கேற்ற வாறு.

முதலில் சோப்பை சிறுசிறு துண்டாக அறுத்து ஜலம் விட்டு அடுப்பின் மீதேற்றவும். சோப்கரைந்து குழம்பாகி விட்டதும் அதை கீழே இறக்கி பேரியம் சல்பைட், நிறம், வாசனை, கலந்து கொள்ளவும். அப்பால் நன்கு பொருளையும், துடுப்புக் கொண்டு கிளறி அச்சுகளில் வார்த்துக் கொள்ளவும்.

வார்த்த கட்டி களுக்கு மேல் சில்வர்தாளைச் சுற்றி புட்டிகளில் பத்திரப்படுத்தி வைக்கவும்.

அவசியமான போது, அதில் சற்று அறுத்தெடுத்து, ஜலத்தில் கலக்கி, மயிர் நீக்க வேண்டிய இடத்தில் பூசி விடவும், 3, 4, நிமிஷத்திற்குப்பின் பஞ்சு முதலியவைகளைக் கொண்டு துடைத்து ஜலத்தால் கழுவி விடவும். எத்தகைய தீங்கும் நேராது.

ஜலரூப சோப் வாட்டர்

அடுப்புச் சாம்பலைத் தண்ணீரில் கரைத்து அப்பாத்திரத்தை கொஞ்ச நேரம் வரையில் யாதொரு பத்திரமான விடத்தில் விட்டு வைக்கவும். அதனுடைய வண்டல் அடியில் தங்கி விட்டதும் அதன் ஜலத்தை இறுத்தி அதில் ரோகனே பேதாஞ்சீர் போட்டு செவ்வனே குலுக்கி விடவும். இது சோப் வாட்டர் என வழங்கப்படுகிறது.

சோப் கிடைக்காத சந்தர்ப்பத்தில் இதை உபயோகிக்கலாம். எல்லாவிதமான அழுக்கு வஸ்திரங்களை இதனால் கழுவிக் கொள்ளலாம். ஏழை மக்களுக்கு இது மிக்க பிரயோஜன மாகும்.

திராவகம் எடுத்தல்

எப்பொருளின் திராவகம் எடுக்கவேண்டுமோ அதை நீர் இரவு முழுவதும் ஜலத்தில் ஊற வைக்கவேண்டும். மறுநாள காலையில் வாலையின் மூலம் திராவகம் இறக்கிக் கொள்ளலாம்.

கால் சேர் சரக்கிற்காக 5 சேர் தண்ணீர் போடவேண்டும்.

ஷர்பத் தயாரிக்க பொதுப்படையான வழி

ஷர்பத்தை எப்பொருளினின்றும் காய்ச்ச வேண்டுமானாலும் சரியே, முதலில் இடிப்பதற்கு தகுதியுள்ள சரக்குகளை இடித்துக் கொண்டு, 24 மணி நேரம் ஜலத்தில் ஊற வைக்க வேண்டும். அப்பால் அதை கஷாயமாகக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவேண்டும். சரக்குகளின் அளவிற்கு 3 பங்கு சர்க்கரையைச் சேர்த்துக் காய்ச்ச வேண்டும். பாகு வந்தவுடன் அதனை இரண்டு விரல்களைக் கொண்டு தொட்டு அதில் இழையைப் போன்ற பிசுபிசுப்பு எடுக்க வருகிறதா ? வென்று ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

இழை எடுக்க வருமாயின் பாகு, ஷர்பத் பதத்திற்கு வந்து விட்டதென் றெண்ணி, ஷர்பத்தை அடுப்பிலிருந்து இறக்கிக் கொள்ள வேண்டும்.

பழசத்து எடுத்தல்

ஷர்பத் சிறிது காலமிருந்தால் கெட்டுப்போய் விடுகிறது. அதற்குரிய குண மும் மாறிவிடுகிறது ஏனென்றால் சகல பழவர்க்கங்களுக்கும் முறையே ஓர் குறித்த காலம் உண்டு. ஆகையால் அத்தகைய வியாகூலங்களை நிவர்த்திக்க ஆராய்ச்சி நிபுணர்கள் ஷர்பத்து பாகுகளையே சற்று அதிகம சுண்டவைத்து தடிபபாக்கிக் கொள்ளுகிறார்கள். இதற்கு பெயர் பழசத்து, அல்லது ஹல்வா என்று சொல்லப் பொருந்தும்.

ஷர்பததின் அவசியம் ஏற்படும் பொழுது அந்த ஹல்வாவையே அடுப்பின் மேலேற்றி ஜலம் விட்டு, எரிக்க இளகலாய் விடுகிறது.

திராக்ஷை, கிச்சலி, மாதுளை முதலிய கனிகளின் ஷர்பத் சீக்கிரம் கெட்டுப்போ மாதலால், அதை இம்முறையிலாக்கிக் கொள்ளுகிறார்கள்.

சகல புஷ்பங்களின் குல்கந்து ஒரே விதத்தில் தயாரிக்கும் முறை

குல்கந்து என்பது பூக்களினின்றும் தயாரிக்கப்படுவதாகும். புதிய புஷ்பங்களைக் கொண்டு வந்து அவற்றை காம்பு, தழை முதலியவைகளை விட்டும் சுத்தப்படுத்தி ஒரு பங்கு புஷ்பம் அள விற்கு இரண்டு பங்கு ஜீனி சர்க்கரையைச் சேர்த்து நன்றாய்ப் பிசைந்துக் கொள்ளவேண்டும். குல்கந்தை ஜாடிகளில் போட்டு வைப்பதே நல்லது. சிலர் சர்க்கரைக்குப் பதிலாக தேனையும் சேர்க்கிறார்கள்.

குல்கந்து நாளாக ஆக உருசியிலும் சுவையிலும் அதிகரித்து போகும்.

முகலக்ஷண பவுடர்

மொச்சை, பட்டாணிக்கடலை, அரிசி, சந்தனம், வெள்ளரி விதை, பாதாம்—தித்திப்பும் கசப்புமான பருப்பு இவைகளை எல்லாம் ஒவ்வொரு தோலா அளவிலெடுத்து நன்றாய் அறைத்துக் கொண்ட பின்னர், குங்குமப்பு அரை தோலா, வச்சிரம் கால் தோலா இவை இரண்டையும் அறைத்து அவற்றுடன் சேர்த்துக் கொள்ளவும். அவசியமானபோது கொஞ்சம் தூளை எடுத்து ஜலத்தில் கலந்து முகத்தில் பூசிக்கொள்ளவும். பூசிய பின்பு உங்கள் கையால் அழுக்கெல்லாம் அழுத்தித் தேய்த்து விட்டு கடைசியாக யாதொரு வாசனை சோப்பைக் கொண்டு முகத்தைக் கழுவி விடவும்.

மேற்படி நம்பர் 2

பூங்காவி	½	தோலா
பாதாம் பருப்பு	1	,,
கடலைப் பருப்பு	2	,,

இந்த மூன்று சரக்கையும் நன்றாய்ப் பட்டுப் போலறைத்து பாதாம் எண்ணெயில் கலக்கிக்கொள்ளவும். இரவில் படுக்கைக்குச் செல்லு முன் இதில் கொஞ்சமெடுத்து முகத்தில் பூசி படுத்துக்கொள்ளவும். காலையில் படுக்கையை விட்டு எழுந்திருந்தவுடன் யாதொரு வாசனை சோப்பினால் முகத்தைக் கழுவி விடவேண்டும். சில நாள் இவ் வாறு உபயோகித்துவர முக லக்ஷணம் அதிகரிக்கும்.

ஜிக்னுத் தொழில்

கட்டில் வடிவத்தில் நாற்கால்கள் கொண்டுள்ளதோர் பலகைச் சட்டத்தைத் தயாரித்து அதன் மேல் அநிலடங்கத்தக்களவில் உள்ள வஸ்திரமொன்றை 4 புறங்களில் இறுக்கத் தைத்து விடவும். ஆரம்பத்தில் இத்தொழிலை கற்க விரும்புவோர், பட்டைக் கொண்டே கற்கவேண்டுமென்ற அவசியமில்லை. சாதாரண பருத்தி நூலே போதுமானது அதில் உங்கள்கை தேர்ச்சியடைந்த பின்னர் பட்டு முதலியவற்றைக் கொண்டுவேலை செய்யலாம்.

முதலில் 4 கோடுள்ள சதுர வடிவங்களை ஒன்றேடொன்று இணைத்தோ, அல்லது தனித்தனியாகவோ, அமைத்துக்கொள்ளவும். அதற்குரிய குத்து ஊசியை இவ்வேலையில் கொண்டு வரவும்.

நீங்கள் இதில் போதிய பழக்கத்தை அடைந்தவுடன் அதற்கடுத்தபடியாக மகிழம்பூ வடிவம் போடவும். அப்புறம் கிறிஸ்துவ சிலுவையைப் போல் அமைத்து அதற்கு சரிமத்தியில் பெருக்கல் அடையாளத்தை போலொத்த கோடுகளை போடவும்.

இதிலும் போதிய தேர்ச்சியை அடைந்துவிட்ட பின்னர் முதலில் அமைத்துள்ள மகிழம்பூ இதழ்களுக்கு நடுவே பின்னல் போடவும். இப்பின்னலானது சற்று அடர்த்தியாகவே இருக்கட்டும். இத்தொழிலின் ஆசிரியர்கள் இதற்கு சூரியகாந்திப்பூ என்றும் சொல்லுகிறார்கள்.

உங்களுக்கு இதில் போதிய அப்பியாசம் ஏற்பட்டுப் போன பிறகு நீங்கள் எக்தவிதமான வடிவத்திலாயினும் ஜிக்னு பின்னல் வேலை ஆரம்பிக்கலாம். ஆரம்ப மாணவர்களுக்குரிய போதனா முறையே இதுவாகும். உங்களுக்கு கைபடிந்த பிறகு பட்டை உபயோகித்தல் அவசியமாகும். சில ஆசிரியர்கள் ஆரம்பத்திலேயே பட்டைக்கொண்டு வேலையை கற்பிக்கிறார்கள். அது அவ்வளவு உசிதமன்று.

வெள்ளை நூலினால் சீக்கிரம் பின்னலாம். உரோம வஸ்திரத் துண்டில் ஊசியை குத்தி எடுத்தல் சுலபமாதலால் அதையே உபயோகித்தல் மேலாகும்.

சித்திர தையல் வேலை

ஓர் உருமால் அளவிற்குள்ள வஸ்திரத்தை எடுத்துக் கொள்ளவும். அந்த வஸ்திரம் நூல் வஸ்திரமாயினும்சரி அல்லது பட்டு வஸ்திரமாயினும் சரியே. அந்த வஸ்திரத்திற்கு மாறுன நிறமுள்ள நூலை ஊசியில் கோற்று வஸ்திரத்தை முழங்கால்களின் மேல் வைத்து ஊசியைகீழிலிருந்து மேலுக்கு குத்தி எடுக்கவும்.

ஊசியை வலதுகையில் பற்றி நூலை இடது கையின் கட்டை விரலுக்குக் கீழ் (நூல் வஸ்திரத்துக்கு மேலாக வந்திருக்கையில்) அமுக்கிக் கொள்ளவும.

ஆனல் நூலை அதன் மத்திய பாகத்தில் அமுக்க வேண்டும். பிறகு அமுக்கப்பட்ட நூலுக்கு சமமான புறத்திலிருந்து ஊசியை குத்தி எடுக்கவும். அடுத்தபடியாக இரண்டாவது முறை ஊசியை பிரயோகிக்கவும்.

இவ்வாறு உபயோகித்து கொண்டு போக ஒரு சங்கிலியைப் போலாகிவிடும். இவ்வேலையில் தேற்ச்சிப்பெற வேண்டுமாயின் அப்பியாசத்தை அதிகரித்துக் கொண்டே போகவேண்டும் சொற்ப காலத்தில் போதிய அனுபவ மடைந்துவிடலாம்.

புஷ்பத்திலிருந்து மணம் எடுத்தல்

ஒரு பாட்டிலில் சந்தன அத்தர் அரை வாசி ஊற்றவும். அதாவது அரை பாட்டில் காலியாக இருக்கவேண்டும். பிறகு எந்த புஷ்பங்களினின்றும் மணத்தை எடுக்க வேண்டுமோ அவற்றின் காம்புகளை கிள்ளிவிட்டு கார்க்கிட்டபின் பாட்டிலை வெயிலில் வைத்துவிடவும். புஷ்பங்களின் நிறம் மஞ்சளாக மாறினதும் மறுநாள் அவற்றை எடுத்துவிட்டு அவற்றிற்குப் பதிலாக வேறு புதிய புஷ்பங்களைப் போட்டு வெய்யிலில் வைக்க வேண்டும்.

இதே விதமாக பழைய புஷ்பங்களை எடுத்துவிட்டு புதிய புஷ்பங்களைப் போட்டுவந்தால் மணம் அதிகரிக்கும்.

மப்ளர் தயாரித்தல்

இதுவும் ஓர் சிறந்த கைத்தொழில். இயந்திரப் பின்னல் மப்ளர்கள் சீமையிலிருந்து ஏராளமாக வந்து கொண்டிருப்பினும் அவைகள் கைப்பின்னல் சாமானுக்கு நிகரில் அவ்வளவு உறுதியானவை

யன்று. நாமே தயாரித்துக் கொள்ளும் மப்ளர்கள் நீண்ட நாள் உழைக்கும். குறைந்த பக்ஷம் ஓரடி நீளமுள்ள மரச்சட்டமொன்றை தயாரித்துக் கொள்ளுங்கள். மப்ளர் எவ்வளவு இடலமாக இருக்க வேண்டுமோ அதே இடலத்திற்குத் தான் சட்டமும் இருக்க வேண்டும்.

சட்டத்திற்கு மத்தியில் நீர்க்க சதுரமுள்ள துவாரங்கள் போட்டு அவைகளில் முளையடித்து விடுங்கள். இரண்டு முளைகளுக்கு மத்தியில் ஒரு அங்குல தூரம் இருக்கவேண்டும். பிறகு அதன் இருபக்கங்களிலும், இரண்டிரண்டு முளைகளை அமர்த்தி விடுங்கள். இப்பொழுது உல்லன் (இது பஜாரில் கிடைக்கிறது. பல வர்ணங்களிலு முண்டு. உங்களுக்கு பிடித்தமானதை வாங்கிக் கொள்ளலாம்.) உல்லன் நூலை முதலில் முளையின் தலைப்பில் கட்டி 2-வது முளையின் உச்சியில் கொண்டு போய் பிறகு முதல் முளையின் 2-வது புறமாக சுற்றிக் கொண்டுவந்து 3-வது முளைக்குச் செல்ல வேண்டும். இவ்வாறு ஒரு முளையை விட்டு விட்டு உல்லனை மடக்கி சுழற்றிக் கொண்டே போங்கள். உல்லன் எல்லா முளைகளிலும் சுற்றிக் கொண்ட பிறகு மீண்டும் மடக்கிக் கொண்டு வரவும்.

அதாவது முதலாவதாக எங்கிருந்து ஆரம்பித்திருக்கிறீர்களோ அங்குள்ள வெற்று முளைகளில் உல்லனை சுற்றிக் கொண்டு போங்கள். எல்லாவற்றிற்கும் கடைசியாக வரும் உல்லன் தலைப்பானது முதல் முளையின் தலைப்பிற்குச் செல்ல வேண்டும். நீங்கள் பின்னப்பின்ன அது கீழே இறங்கிக் கொண்டே போகும் இதுவே அதன் பின்னலுக்குரிய முறை. ஆரம்பத்தில் சற்று சிரமமாகத் தோன்றிய போதிலும் படிப்படியாக அது இவ்வளவு தானாவென்று நீங்கள் நினைக்கும்படி ஆய்விடும்.

பேன்ஸி வாஸ்கேட் தயாரித்தல்

உங்கள் அளவுக்கு வேண்டிய துணியை டைலரிடத்தில் கேட்டு விலைக்கு வாங்கிக் கொள்ளவும். இதற்கென வலையைப் போன்ற வஸ்திரம் சீமையிலிருந்துவந்து விற்பனையாகிறது. அத்துணியில் நீங்கள் பல வர்ணமுள்ள உல்லன் நூலைக்கொண்டு கதா அல்லது ஜிகனு வேலையைப்போல் ஊசியால் உல்லன் நூல் ஊசியை துவாரங்களின் வழியே பிரயோகித்துக் கொண்டே போகலாம்.

ஒழுங்கான முறைப்படி எந்தெந்த துவாரங்களில் ஊசியை பிரயோகிக்க வேண்டுமோ அவ்வாறு பிரயோகித்துக் கொண்டு போகவும். இல்லையேல் பிரிக்கும்படியான கஷ்டங்கள் நேரிடும்.

பான்ஸிடாய் தயாரித்தல்

வாஸ்கெட் தயாரிப்பதில் எந்த முறை கையாளப் பட்டதோ இன்னும் எந்த ஊசி அதற்காக உபயோகிக்கப் பட்டதோ அதே முறையும் ஊசியும்தான் இதிலும் உபயோகப் படுத்தப் படுகின்றன.

முதலில் ஒருபுறம் ஒருகண் அமைத்து சங்கிலியைப் போல் பின்னிக் கொள்ளவும். அதன் கீழ் கோழிமுட்டையைப் போன்ற வடிவத்தில் பின்னிக் கொள்ளவும். இதுவும் சங்கிலித் தொடர்ப் போலவே. இதற்கு உபயோகப்படும் பட்டுக்குப் பெயர், பேன்ஸி பட்டு அவை பந்து வடிவமாக உருண்டையாய் இருக்கும். அதில் எல்லா நிறங்களும் உண்டு. முதலில் நீங்கள் ஒரே நிறமுள்ள நூலை எடுத்து அதன் தலைப்பிலிருந்து குத்தி செருப்பு தைக்கிற வர்கள் எவ்வாறு தையல் போடுகிறார்களோ அதைப்போலவே நூலை மடக்கி இழுக்கவும். ஆனால் அதை பலமாய் இழுத்துத் தைக்கவேண்டாம். அதாவது:—அது உங்கள் இஷ்டப்படியான இடலத்துக்கு வரும் வரைசில் நீங்கள் 2-வது நிறத்தையும் கலக்க விரும்பினால் இன்னொரு நிறத்தின் நூலை எடுத்துக்கொள்ளவும்.

இவ்வாறே மூன்றுவித நூல்களை உபயோகித்துக்கொள்ளவும். மேற்கூறியபடி இதில் எவ்வளவுக் கெவ்வளவு நேர்ச்சி யடையப் பெறுமோ அவ்வளவுக்கவ்வளவு ராஜுக்காய் பின்ன சாத்திய மாகும்.

பரிமளப் பகுதி

மணம் என்பதை ஒரு பொது வார்த்தை என்றே சொல்லத் தகும். இது நல்லவாசனை அல்லது கெட்டவாசனை இரண்டிற்கும் வழங்கப்பட்டுவருகிறது. ஏனெனில் ஒரு நல்ல வாசனையுள்ள வஸ்துவைப் பார்த்து நற்மணமுள்ளது என்றும் அதற்கு மாறு. ஸதை துர்மணமுள்ளது என்றும் சொல்லக் கேட்கிறோம். இதற்கு பாரசீகம் அரபி பாஷைகளில் அநேக பல்வேறு பதங்கள் உபயோகப்படுகின்றன.

ஹிந்துஸ்தானி பேசுவோர் அத்தர், ரைஹான், தையிப், குல்ரோகன், புலேல் என்னும் பல வித்தியாசமுள்ள பதங்களையும் உபயோகப்படுத்துவது போலவே இங்லீஷ் பாஷையிலும் பர்பியூம் சென்ட், ஓடோ, எஸென்ஸ், எக்ஸ்டிராக்ட் வகையரு பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன.

வகைகள்

பல்வேறு வகைகளின் மணம் பல்வேறு மூலமாயும் அடையப் பெருகிறது. சில பிராணிகளைக் கொண்டும் சில தாவரவர்க்கங்களின் மூலமாயும் சிலதாது வர்க்கத்தின்மூலமாயும் அடையப்பெறுகிறதும் இன்னும் சில வாசனையோ சில மிருங்களின் சரீரத்திலிருந்து, அல்லது அவயங்களினின்றும் வாயப்பெருகிறது

கஸ்தூரி காபா மானி லிருந்தும் புனுகு பூனை மூலமாயும், எடுக்கப்படுகின்றன. அம்பர் மச்சம் சமுத்திரத்திலுள்ள திமிங்க லத்திலிருந்து. இவ்வாறே இன்னும் எத்தனையோ விதவிதமான வாசனைகள் பல்வேறு தாவரவர்க்கங்களி லிருந்தும் எடுக்கிறார்கள்.

சந்தனம் குங்கமப்பூ, சப்ஜா, தாழம்பூ, ரோஜா, சம்பங்கி, மகிழம்பூ, மருதோன்றிப்பூ, வெட்டிவேர், ஜைதூன், ஆரஞ்சு, ஆகியவற்றுள் சில பூசிக்கொள்ளவும், உதவுகிறது; சிலவற்றின் காயும் சில வற்றின் வேரும் வாசனைக்காக உபயோகப்படுகிறது.

கஹ்ருபா, சலாஜீத் வகையருக்களின் வாசனை தாதுவர்க்கத் தைச் சேர்ந்தது.

அத்தரும் வாசனையும் தயாரிக்கும் முறை

இவற்றை அடையப்பெருவதற்குரிய முறைகள் அடியில் வருமாறு:.

1. வாலைமூலம் இறக்கிக்கொள்ளல்

2. எண்ணையில் கலந்து சில நாட்கள் வெய்யிலில் வைக்க அந்த வாசனை எண்ணையில் கலந்துக்கொண்டதும் அதை எடுத்து வடிகட்டிக் கொள்ளல்.

3. நெருப்பின் உஷ்ணத்தை ஏற்றி தைலத்தை வடிய வைத்தல்.

4. இயந்திரத்தின் மூலம் அமுக்கி எடுத்தல்.

5. சரக்குகளை இடித்து தண்ணீரில் ஊறவைத்து பிறகு அதை கஷாயமாக எரித்து அதன் வாசனைஜலத்தை தண்ணீரில் கலந்து அடுப்பின் மீதேற்றி சுண்டவைத்துக் கொள்வது

6. சாராயத்தில் போட்டு சில நாட்கள் வைப்பது.

சாராயத்தில் சரக்குகளை கலந்து டின்க்சர் செய்தல்

இந்த வேலைக்காக ஸ்பிரிட் ஆப்வைன் அதாவது:-பிராண்டி அல்லது அல்கோஹல் அவசியமாகிறது. சாராயத்தின் குணமாவது இதில் எந்த வஸ்துவைப் போட்டு வெய்யிலில் வைத்தபோதிலும் அதன் குணம் சாராயத்தில் வந்துவிடும்.

புஷ்பங்கள் பட்டைகள் அல்லது வேறுயாதொரு கெட்டியான சரக்காயினும் சரியே, அதைத் தடிப்பாக நசுக்கிக் கொள்ள வேண்டும்.

சத்தெடுத்தல்

இதுவும் மணத்திலும் நிறத்திலும் சிறந்ததாகிறது. உட் கொள்ளவும் உபயோகப்படுகிறது. அதிகசத்தியை தரத்தக்கதாகும். இதை எடுக்கு முறையாதெனில்:- இரண்டு கிளாஸ் டம்ளர்களை எடுத்துக் கொள்ளவேண்டும் அவைகளின் மேல் வாய்களை ஒன்றோடொன்று ஒட்டிப்பார்த்தால் ஒரே அளவில் இருத்தல் வேண்டும். ஒன்றில் அவசியமான சரக்குகளை இடித்து போட வேண்டும். மற்றொன்றின்வாயை அதில்சேர்த்து சரிவர ஒட்டிக் கொள்ளும்படியான விதத்தில் மாவு வஸ்திரம் இவற்றின் மூலம் பலமாய் சேர்த்துவிடவும்.

உள்ஆவி கொஞ்சங்கூட வெளியில் வராதவாறு ஒட்டவேண் டும். கீழ் டம்ளரை சூடான நெருப்பின்மேல் வைத்து எரிக்கவும். மேல் டம்ளரை இடைவிடாது ஜலத்தால் நனைத்துக்கொண்டிருக்க வும். அல்லது பஞ்சை நனைத்து அதன்மேல் வைக்கவும்.

கீழ் டம்ளரின் அடியில் நெருப்பை எரிக்கவும். உஷ்ணத்தால் சத்து வெளியாகி மேல் டம்ளரில்போய் அடையும்.

அடி டம்ளரின்மீது (அது கண்ணாடி டம்ளராக இருந்தால்) சுற்றியும் மண் பூசவேண்டும். மண் இனுமல் ஆகியவைகளினால் செய்யப்பட்ட பாத்திரமாக இருந்தால் இன்னும் விசேஷம்; ஏனெனில் உடைந்துபோக வியர்கூலமிராது.

சரக்குகளை எடுத்து தண்ணீர் மூலம் சத்தெடுத்தல்

எந்தசரக்கின் சத்தெடுக்க வேண்டுமோ அதை பெரும்படியாக நசுக்கிக் கொண்டு தண்ணீரில் ஊறவைத்து நெருப்பின் மேல் வைத்து எரிக்கவும் நீங்கள் அதில் ஊற்றிய தண்ணீரின் அளவு மூன்றில் ஒரு பாகத்திற்கு சுண்டிவந்தவுடன் அதை கீழே இறக்கி வடிகட்டிக் கொள்ளவும். வடிகட்டிய ஜலத்தை மீண்டும் எரித்து முற்றிலும் சுண்டவைக்க அடியில் தங்கிவிடும் படியான பஸ்பமே அதன் சத்து எனப்படும்.

ஜலத்தின் மேலிருந்து அத்தர் எடுத்தல்

ஆவியின் மூலம் எடுக்கப்பட்ட திராவகத்தை வாயகன்றதோர் பாத்திரத்தில் போட்டு இரவு முழுவதும் ஒரே விடத்தில் வைத்து விடுங்கள். வாய் மூடப்பட்டிருக்க வேண்டும். காலையில் அதன் மீது ஒரு தைலம் மிதந்திருக்கும். அதை கையால் வழித்தெடுத்து யாதொருபாத்திரத்தில் தடவிக் கொண்டுபோய் கடைசியாக ஒரு புட்டியில் அடைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த வேலைக்காக அப்பியாசம் அவசியம்.

கையால் அத்தர் எடுப்பதற்குப் பதிலாக சீமையில் இயந்திரத்தின் மூலமாக இந்த வேலை வாங்கப்படுகிறது.

எண்ணெசிக்கலை எடுத்தல், அதை சுத்தப்படுத்தி இளகலாக்குதல்

1-எண்ணெயை பாட்டிலில் அடைத்து வெய்யிலில் வைக்க வேண்டும். வண்டல் அடியில் சென்று விடும். அப்போது அந்த இளகலான எண்ணெயை வேறு படுத்திக் கொள்ளவும்.

2-ஐநூறு பங்கு எண்ணெயில் ஐம்பது பங்கு வெள்ளைமண் ஐம்பது பங்கு ஜலம் இவற்றை ஒன்றாக கலக்கிக் கொண்டு சில நாள் சரியான வெய்யிலில் வைத்தெடுக்கவும்.

3-இரண்டு பங்கு பிரமன் கேன்ட்ஆப் பொட்டாஷில் 100பங்கு ஜலத்தை கலந்து எல்லாம்எண்ணெயில் சேர்த்து வெய்யிலில் வைக்கவும். எண்ணெ மேலே மிதந்து வரும். அப்போது அதை இறுத்திக் கொள்ளவும்.

4-எண்ணெயில் நூற்றுக்கு 2 பங்கு வீதம் சல்பரிக் ஆசிட் சேர்க்கவும். அதன் குணத்தால் எண்ணெ பச்சை நிறத்திற்கு வரும். அதை 2 வாரம் வரையில் வெய்யிலில் வைத் தெடுக்க, மஞ்சள் நிறமாக மாறும். அப்போது அதை வடிகட்டிக் கொள்ளவும்.

5-எலும்பை சுட்டு கரியாக்கிக் கொள்ளவும். அந்த கரியை எண்ணெயில் போட்டு சில நாள் வெய்யிலில் வைக்க அதன் துர் நாற்றம் போய் விடும். அப்போது அதை வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

6-கனேஷியாவை நெருப்பின் மேல் வறுத்துக் கொள்ளவும். தண்ணீரில் கலந்து அத்துடன் எண்ணெயும் சேர்த்து குலுக்கிக் கொள்ளவும். பிறகு சில நாள் அதன் பாட்டிலை வெய்யிலில் வைத்திருந்த பின்னர் வடிகட்டிக் கொள்ளவும்.

சாம்பிராணித் தைலம்

ருமிமஸ்தகியைப் போலவே இதன் எண்ணெயும் எடுக்கப் படுகிறது. பாதாம் எண்ணெயில் போட்டு எரித்தும் எடுக்கிறார்கள்.

வாலையின் மூலம் திராவகம் எடுக்கும் முறை.

முதலில் அடுப்பின் மேல் செப்புச் சட்டி ஏற்றவும். அதன் வாயை மண்ணைக் கொண்டு மூடவும். அதன் மீது வட்டமான தோர் துவாரம் இருக்க வேண்டும். அத்துவாரத்தினுள் மூங்கில் குழாயொன்றை அமைக்கவும். அதன் நீளத்தின் மேலுள்ள தலைப்பு இன்னொரு மூங்கில் குழாயுடன் பொருந்தி இருக்க வேண்டும். இக்குழாய் குத்து வசத்திலும் இரண்டாவது படுக்க வசமாயும் கொண்டுவந்து அத்துடன் பொருத்த வேண்டும். இரண்டு பொருத்தங்களையும் சீலை மண் செய்து காற்று வெளிவராத வாறு கவனித்துக் கொள்ள வேண்டும்.

படுக்க வசமுள்ள குழாயின் மற்றொரு தலைப்பின் பொருத்தம் தண்ணீர் கொண்டுள்ளதோர் பாத்திரத்தில் இருக்க வேண்டும்.

அடுப்பின் மேல் உள்ள செப்பு செட்டியில் புஷ்பங்களை நசிக் கிப்போட்டு அதன்பின் அதன் வாயை துவார முள்ள மூடியைக் கொண்டு மூடி சுற்றிலும் ஆவிவெளிவராத வாறு பிசைந்த

மாவை ஒட்டிவிடவேண்டும். மூடியின் துவாரங்களின் மேல் இரண்டாவது குழாயை அமைத்து நீண்டதலேப்பை இரண்டாவது குழாயில் கொண்டுவந்து பொருத்தி விடவும். நீளக்குழாயின் பாத்திரத்தில் சந்தன எண்ணே அல்லது சந்தன அத்தர் ஊற்றி ஆவிக்குழாவை குளிர்ந்த தண்ணீரில் கொண்டு வந்து வைத்து விடவும். இனிசெப்பு செட்டியின் கீழ்நெருப்புப் போட்டு எரிக்கவும். புஷ்பங்களின் சத்து சந்தன அத்தரில் ஆவியாக வந்து கலந்து கொள்ளும். அத்தரின் மணம் புஷ்பங்களின் கூடக் குறைச்சலேச் சார்ந்திருக்கிறது. அதிக புஷ்பங்களினின்றும் அதிக சத்து வெளி வந்து அத்தரை உயர்தரமாகச் செய்து விடும். சில வேளைகளில் ஒரு தோலா அத்தருக்காக 20 அல்லது 25 சேர் புஷ்பங்களின் அவசியம் ஏற்படுகிறது.

கருவியின் சகாயத்தால் வாசனே எடுத்தல்

எள்ளை நன்ருய்க் கழுவி சுத்தம் செய்து விட்டு புஷ்பங்களேயும் அடுக்கடுக்காக விரித்து விடுகிருர்கள். அதாவது, வாயகன்ற யாதொரு பாத்திரத்திலோ அல்லது தரையிலோ எள்ளை பரப்பி விட்டு அதன் மீது புஷ்பங்களே பரப்பி விடுகிருர்கள். இதேவிதமாக பூவையும் எள்ளையும் மேலுங் கீழுமாக பரப்பி விட்டு அதன் மேல் யாதொரு மூடியைப் போட்டோ அல்லது வஸ்திரப் போர்வை யிட்டோ சிறிது காலம் வரை அப்படியே விட்டுவிடுகிருர்கள். அதாவது:—

1, 2 வாரங்களில் பூக்களின் மணத்தை எள்ளு கிரகித்துக் கொள்ளுகிறது. அப்பொழுது அந்த எள்ளை எடுத்து செக்கு அல்லது இயந்திரத்தின் மூலம் எண்ணெயை எடுத்துக்கொள்ளுகிருர்கள். வண்டலான பிண்ணுக்கைக் கொண்டு ஸ்திரிகள் தலே ரோமங்களே கழுவுகிருர்கள்.

எண்ணெயில் கலந்து அத்தர் எடுத்தல்

சந்தன எண்ணே, பாதாம் எண்ணே, ஆலிவ் எண்ணே, சுரக் காய் எண்ணே ஆகிய வற்றின் இளகலான எண்ணெயை பாட்டிலில் போட்டு அதில் எப்புஷ்பத்தின் வாசனே எடுக்க வேண்டுமோ, அப்புஷ்பத்தையும் அதில் போட்டு கார்க்கிட்டு வெயிலில் வைத்து வரவும். வெய்யிலின் சூட்டினுல் அப்புஷ்பம் நிறம்மாறி மஞ்ச

ளாகிவிடும். அப்போது அவை எடுத்துவிட்டு புதிய புஷ்பங்களைப் போடவேண்டும். அவை மஞ்சளாகி விட்டதும், அவைகளையும் எடுத்தெரிந்து புதிய புஷ்பங்களைப் போட்டுவிடவும். புஷ்பங்கள் போடபோட வாசனையும் அதிகரித்துக்கொண்டே போகும்.

நெருப்பு சூட்டினால் எண்ணெ, அல்லது அத்தர் எடுத்தல்

இதற்கும் பல்வேறு முறைகள் உண்டு. முதலாவதாக, அடுப்பின் மேல் பெரியதோர் தாச்சி வடிவமுள்ள ஓட்டை ஏற்றிவிடவும். அதற்கு மத்தியில் ஒரு துவாரம் இருத்தல் அவசியம்.

அணலைத் தாங்கும் பாட்டிலில் எந்த சரக்குகளைக் கொண்டு சத்து இறக்க வேண்டுமோ, அவைகளை இடித்து அடைத்து விடவும். அதன் வாயின்மீது மெல்லிய கம்பியை வலையைப்போல் சுற்றி பாட்டிலின் கழுத்தை ஓட்டின் துவாரத்தின் வழியே தலை கீழாக தொங்கவிடவும். அதாவது:— பாட்டிலின் அடிப் பாகம் மட்டில் ஓட்டில் இருக்கும். தலைக்கிழாய் வைக்கப்பட்டிருக்கும் பாட்டிலின் வாயை இன்னொரு பெரிய பாட்டிலின் வாயில் பொறுத்தி விடவும். இந்த பெரிய பாட்டில் தரைமீது, மேல் பாட்டிலுக்கு நேரேஇருக்க வேண்டும். அனல் தாங்கி பாட்டிலுக்குச் சுற்றி மணல் போட்டு அதன்மீது நெருப்புக் கட்டிகளை வைத்து விடவும், அல்லது மரக்கரி வைதது எரிக்கவும். பாட்டிலில் சூடு ஏறஏற அதிலுள்ள சரக்குகள் கசிவு கண்டு தைலமாக கீழே சொட்ட ஆரம்பிக்கும். அனல் தாங்கி பாட்டிலை ஈரமண்ணைக் கொண்டு சுற்றிலும் பூசி விடவும். பாட்டிலுள் போடப் படும் சரக்குகள் கெட்டியாய் இருந்தால் அவைகளை நசுக்கிப் போடவும். இம்முறைக்குப் பெயர் பத்தால் ஜந்தர்.

2-வது முறை:— மண், கல், இரும்பு இவற்றினால் தயாரிக்கப் பட்ட யாதொரு பாத்திரத்தின் அடியில் 4, 5 துவாரங்கள் செய்து விடவும். இனி அப்பாத்திரத்தில் இடிக்க வேண்டிய சரக்குகளை யாவும் இடித்துப்போட்டு அப்பாத்திரத்தின் வாயை செவ்வனே மூடிவிட வேண்டும்.

பூமியில் ஒரு பள்ளம் தோண்டி அதனுள் மற்றொரு பாத்திரத்தை வைத்து துவாரமுள்ள பாத்திரத்தை அதன் மேல் தங்கி இருக்கும்படியான அளவிற்கு செய்துவிடவும்.

இந்த பாத்திரத்தின் கீழ் ஜலம் இருந்து வரவேண்டும். பள்ளத்தில் வைக்கப்படும் பாத்திரம் அசையா வண்ணம் சுற்றிலும் மணல் நிறப்பிக் கொள்ளவும். பாத்திரத்திற்கு மேல் நெருப்பு தகதக வென்று எரிக்க வேண்டும். மேல் சட்டியிலுள்ள சரக்கு களின் தைலம் கீழ்ப் பாத்திரத்திற்கு வந்து விடும்.

3-வது முறை:— நெருப்பின் சூட்டினல் வாசனை இப்படியும் எடுக்கலாம் அதாவது:—

கிளாஸ் டம்ளர் மீது மெல்லியதோர் வஸ்திரத்தை அதன் வாயின்மீது கட்டிவிடவும். டம்ளர் வாயைச் சுற்றி ஓர் அங்குலம் உயரத்திற்கு ஈரமண்ணை அணைத்து விடவும்.

வஸ்திரத்தின் மேல் சரக்குகளை இடித்து பரப்பி விடவும், அணைத்த மண் வளைவுக்கு மேல் மெல்லியதோர் தாச்சிவைத்து அதன் மேல் நெருப்புக் கட்டிகளை வைத்துவரவும். நெருப்பு சூட்டி னல் தைலம் கீழ்ப் பாத்திரத்தில் கசிய ஆரம்பிக்கும்.

4-வது முறை:— டம்ளரில் சுத்த ஜலத்தை ஊற்றி அதன் மேல் சில தடித்த புஷ்பங்கள் (ரோஜா, சேவுத்தி, மோதியா) ஆகியவைகளை அவற்றின் மேல்பக்கம் யேலே தெரியும்படி போட்டு விடவும். பிறகு ஒவ்வொரு புஷ்பத்தின் பேரிலும் சரியானதோர் நெருப்புக் கட்டியை வைத்து விடவும். நெருப்புச் சூட்டினல் புஷ்பச்சத்து ஜலத்தில் கலந்து கொள்ளும்.

இதை பஞ்சின் சகாயத்தால் ஜலத்திற்கு மேலிருந்து எடுத்து பிழிந்து கொள்ளலாம். இது சரியான வாசனையுள்ள அத்தராக இருக்கும்.

இயந்திரத்தின் மூலம் அத்தர் எடுத்தல்

எந்த சரக்குகளைக் கொண்டு அத்தர் எடுக்க வேண்டுமோ, அவற்றை இடித்துக் கொண்டு வெந்நீரினல் பிசைந்து கொள்ளவும். பிறகு அவற்றை இயந்திரத்தில் கொடுத்து அறைக்க தைலம் வெளிவந்து விடும்.

தண்ணீரில் கொதிக்கவைத்து வாசனை எடுத்தல்

புஷ்பங்களையோ, அல்லது வேறெவ்வித சரக்கையோ இடித் துக்கொண்டு அதில் சரக்குகளின் அளவிற்கு நான்கு மடங்கு

ஜலத்தை சேர்த்து நெருப்பின் மேல் வைத்து எரிக்கவும். நீங்கள் போட்ட நான்கு பங்கு ஜலத்தில் 3 பங்கு ஜலம் சுண்டிப் போய் 1 பங்கு ஜலம் மீதியாயிருக்கையில் அதை இறக்கி வடிகட்டி அத்தண்ணீரை வேறு படுத்திக்கொண்டு அதில் யாதொரு வாசனை எண்ணையைக் கலந்து மீண்டும் எரிக்க வேண்டும். தண்ணீர் பூராவும் வற்றிப் போய் தனியே எண்ணை மட்டும் தங்கிவிடும் வரையில் அதை எரித்து விட்டு பிறகு அதை வடிகட்டிக் கொள்ளவும். இந்த எண்ணை மிக்கமண முள்ளதாயிருக்கும்.

கோரைக்கிழங்கு, கிளிமூரம் பட்டை, ஜடாமாசி, சீமை கிச்சிலிக்கிழங்கு, ஆகிய சரக்குகளின் வாசனையும் இதே விதமாக எண்ணையில் இறக்கிக் கொள்ளப்படுகிறது.

கலப்பற்ற அத்தரின் ஆராய்ச்சி விதம்

அத்தர் அபேக்ஷகர்கள் அத்தரை விரலால் தேய்த்ததும் இது சுத்தமான சரக்கு, அதுகலப்பானது என்று தெரிந்து சொல்லி விடுகிறார்கள்.

உயர்ந்த தினசு மட்டரகம் என்பதும் அவர்களுக்கு தெரிந்து விடுகிறது. ஆனால் பாமரமக்களுக்காக, இங்கு அத்தரை எவ்வாறு பரிட்சிக்க முடியு மென்ற முறை இதனடியில் வரையப்பட்டுள்ளது:—

ஒருதுளி அத்தரை கடுதாசியின் மேல்வைத்து நெருப்பண்டைக்கருகில் கொண்டு போகவும். அதன் பசபசப்பு ஆவியாகப் போய் அதன் வாசனையும் இல்லாமற் போய்விடுமானால் அது அசல் அல்ல வென்று எண்ணிக் கொள்ளுங்கள். ஏனென்றால் அசல் அத்தரின் வாசனை சீக்கிரம்நீங்கி விடாது. உயர்தரமான அத்தரை வஸ்திரத்தில் தடவியபின்னர், அதுசலவைக்கு போய் வந்த போதிலும் அல்லது வஸ்திரம் கிழிந்துப் போயினும் சரியே வாசனை மீதியாகவே இருக்கும்.

சந்தன அத்தர் எடுத்தல்

சந்தனத்தைலத்தை அத்தர்களின் மூலப் பொருள் என்று சொல்லப்பொருந்தும். சந்தனத்தைலம் மலிவானது.

இதை இரண்டு விதமாக எடுக்கிறார்கள். அதாவது ஏற்கனவே சொல்லப்பட்டுப் போன அனல் சீசாக்களின் மூலம் எடுப்பது ஒரு விதத்திலுள்ளது.

நெம்பர் 2:—நான்கு பங்கு சந்தனத்தூள் ஒரு பங்கு உப்பும் தண்ணீரில் சேர்த்து ஈரமாக்கி 3 நாள் 3 இரவு வைத்து விடுகிறார்கள். 4-வது நாள் அதை செப்பு செட்டியில் போட்டு அதன் மேல் மட்டம் வரையில் ஜலம் ஊற்றுகிறார்கள். அப்பால் அதை எடுத்து வாலையின் மூலம் அத்தர் இறக்கிக் கொள்ளுகிறார்கள். அத்தர் வெளியாகும் வரையில் அனல் அதிகமாயும் அத்தர் வந்து விட்டப்பிறகு நெருப்பின் அனலைக் குறைத்துக் கொள்ளுகிறார்கள். (இங்கு அத்தர் என்பதற்கு வாசனை என்று அறிக) அப்பால் வாலையின் மூலம் எடுக்கப்பட்ட அத்தரை வாயகன்றதோர் பாத்திரத்தில் போட்டு வைத்து மேல் கூறியவாறு அதன் மீதுள்ள தைலத்தை கையால் வழித்து எடுத்துக் கொள்ளுகிறார்கள். இதுவே சந்தனத்தைலம். இதன் சகாயத்தைக் கொண்டே எல்லாவித அத்தர்களும் தயாரிக்கப்படுகின்றன.

அவற்றின் விபரம் அடியில் வருமாறு. சந்தனதைலத்தை ஒரு பாட்டிலில் போட்டு அதில் சில ரோஜா புஷ்பங்களையும் போட்டு வாய்க்கு கார்க்கிட்டு வெய்யிலில் வைத்து விடவும். போட்டபுஷ்பங்கள் வதங்கி மஞ்சள் நிறத்துக்கு வந்தவுடன் அவற்றை எடுத்து விட்டு மீண்டும் சில புஷ்பங்களைப் போடவும். இவ்வாறு சில தடவைகள் செய்துவர சரியான ரோஜா அத்தர் தயாராய்விடும்.

மற்றொருவிதம்:—ரோஜா புஷ்பங்களை கசக்கி அதில் சந்தனத் தைலத்தை சேர்க்கவும். சந்தனத்தைலம் எடுக்கும் பொழுது அடையப் பெற்ற கஷாயத்தையும் அதில் சேர்த்து அடுப்பின்மேல் ஏற்றவும்.

மீண்டும் வாலையின் மூலம் திராவகமெடுத்து அது ஆறினதும் ய்தொரு வாயகன்ற பாத்திரத்தில் போட்டு நெருப்பி லேற்றி விடவும். அவ்வமயம் மேல் வரும் பசையை கையால்வழித் தெடுக்க அருமையான அத்தராக இருக்கும்.

வெட்டிவேர் அத்தர்

ஆமணக் கெண்ணை	$\frac{1}{4}$ சேர்
குலேமுல்தானி	6 ,,

இவற்றை ஒன்றாக கலந்து கொண்டு 15 சேர் தண்ணீரில் நனைத்து வாலையின் மூலம் இறக்கிக் கொள்ளுங்கள்.

சுஹாக் அத்தர்

சந்தனத்தைலம்	½	சேர்
ஜடாமாசி	10	தோலா
கஸ்தூரி	1/6	,,
பச்சைக்கற்பூரம்	¼	,,
கோரைக்கிழங்கு	10	,,
பூலாங்கிழங்கு	10	,,
அமுக்குராங்கிழங்கு	10	,,
வெட்டி வேர்	10	,,
ஏலக்காய்	10	,,
ஏலரசி	10	,,

கஸ்தூரி, பச்சைக்கற்பூரம் நீங்கலாக மீதி எல்லா சரக்குகளையும் நன்றாய்க்கலந்து கொண்டு மேற்சொல்லப்பட்டபடி வாலையின் மூலம் அத்தர் எடுத்தபின் கஸ்தூரியையும் பச்சைக்கற்பூரத்தையும் சேர்த்துக் கொள்ளவும்.

மரு தோன்றி அத்தர் (கலப்பு)

சந்தனத்தைலம்	¼	சேர்
சம்மங்கி அத்தர்	5	தோலா
கஸ்தூரி	1/6	,,
அம்பர்	1/12	,,
பச்சைக் கற்பூரம்	½	,,
குங்குமப்பூ	½	,,
மருதோன்றிப்பூ	30	,,
சாம்பிராணி	30	,,
ஜடாமாசி	1	சேர்
சீமைகிச்சலிக்கிழங்கு	½	,,
கிராம்பு	2	தோலா

கஸ்தூரி, அம்பர், பச்சைக்கற்பூரம் இம்மூன்றையும் நீக்கி வாலையின் மூலம் தைலம் இறக்கிக்கொண்ட பின்னர் கஸ்தூரி, அம்பச் கற்பூரத்தைக் கலந்து கொள்ளவும்.

பித்ரு அத்தர் (களிம்பு ரூபத்தில்)

சந்தன சக்கை	2 சேர்
அமுக்கிராக் கிழங்கு	¼ ,,
ஜடாமாசி	¼ ,,
சீமை கிச்சலிக் கிழங்கு	2 ,,
பனப்ஷா விதை	¼ ,,
தாளிசபத்திரி	¼ ,,
ரோஜா புஷ்பம்	¼ ,,
பெரிய ஏலக்காய்	¼ ,,
கிராம்பு	5 ,,
தாழம்பூ	1 ,,
சம்பங்கி	1 ,,
மகிழம்பூ	1 ,,
வெட்டிவேர்	½ ,,
பச்சைக்கற்பூரம்	¼ தோலா
அக்கிரஹாரம்	10 ,,
ஏலக்காய்	15 ,,

எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து வாலையின் மூலம் அத்தர் இறக்கிக் கொள்ளவும். இனி தேன் மெழுகை உருக்கிக்கொண்டு அதில் மேற்கண்ட சரக்குகளின் அத்தரை சேர்த்துக் கொள்ளவும்.

மற்றொரு மட்ட பித்ரு

மருதோன்றி அத்தர் வாசனை சரக்குகளின் அடியில் தங்கி விட்ட வண்டலை எடுத்து அதில் உருக்கின மெழுகையும், இன்னும் மூன்றுவிதமான அத்தர்களையும் சேர்த்துக் கொள்ளவும்.

உருவஸ் அத்தர்

ஜடாமாசி	5 தோலா
சீமைகிச்சலிக்கிழங்கு	5 ,,
கோரைக்கிழங்கு	5 ,,
வெட்டிவேர்	¼ சேர்
கிராம்பு	5 தோலா
அம்பர்	¼ ,,
குங்குமப்பூ	2 ,,

சாம்பராணி	2 தோலா
ஏலக்காய்	25 ,,
சம்பங்கி	1 ,,
தாழம்பு	1 சேர்
ரோஜா பூ	1 ,,
சந்தன அத்தர்	30 ,,
ஜாதிப்பத்திரி	½ தோலா
பஹமன்	15 ,,
கஸ்தூரி	1/3 ,,

கஸ்தூரி நீங்கலாக இதர எல்லா சரக்குகளினின்றும் முன் சொல்லிய வண்ணம் அத்தர் எடுத்துக்கொண்ட பிறகு அதில், கலந்துக் கொள்ளவும்.

கஸ்தூரி	1/3 தோலா
அகர் அத்தர்	5 ,,
குலாப் அத்தர்	1 ,,
மோதியா அத்தர்	3 ,,

அம்பர் அத்தர்

செப்பு டம்ளரில் அரைவாசி யளவிற்கு ஜலம் ஊற்றி அதை நெருப்பின் மேல் வைக்கவும். செப்பு டம்ளர் சற்று பெரியதாக இருக்கவேண்டும். ஏனெனெனில் அதில் மற்றொரு கிளாஸ் டம்ளரை வைத்து அதனுள்போட வேண்டும்.

சந்தன அத்தர்	10 தோலா

வெந்நீரினால் அத்தரில் சூடு ஏறி விட்டதும்,

அம்பர் அஷ்ஹப்	1 தோலா
அகர் அத்தர்	2 ,,
வெள்ளை மெழுகு	¼ ,,

எல்லாம் போட்டு நன்றாய்க் கிளறி விடவும். அவையாவும் ஒன்றாய்க் கலந்து கொண்ட வுடன்,

மகிழம்பு அத்தர்	1 தோலா
பச்சைக்கற்பூரம்	6 குன்றுமணி எடை

சேர்த்து 4 மணி நேரம் வரையில் நன்றாய்க் கலக்கிக் கொண்டு புட்டிகளில் அடைத்து விடவும்.

அகர் அத்தர்

அகர்கட்டை 1 சேர் வாங்கி அதை இடித்துக் கொள்ளவும். அப்பால் அதனை மூன்று நாள் வரையில் ரோஜா பன்னீரில் ஊற வைக்க வேண்டும். அப்பால் அதில் அம்பர் சில தோலாவும், அறைத்த கஸகஸா 6 தோலாவும் கலந்து கொள்ளவும். அத்துடன் பன்னீரில் தேனைக் கலக்கி அதையும் சேர்த்துக் கொண்டு முன் சொல்லப்பட்ட விதத்தில் வாசனைத் தயாரித்துக் கொள்ளவும்.

கஸ்தூரி பில்லைகள்

ரோஜா அத்தர், மோதியா அத்தர், ஹினு அத்தர், வெட்டி வேர் அத்தர், கஸ்தூரி, முறையே ஒவ்வொரு தோலா,

கஸ்தூரி நாபா	¾	தோலா
வெள்ளை ஏலக்காய்த்தூள்	5	,,
அகர்	5	,,
வெள்ளை மிளகு	10	,,

எல்லாவற்றையும் சேர்த்து மேலே சொல்லப்பட்ட அம்பர் அத்தர் முறைப்படி தயாரித்துக் கொள்ளவும். இவை ஒன்றோடொன்று கலந்துகொண்டபின் ஆற்றிக்கொள்ளவும். சேர்ந்து கெட்டியாய் விடும் அப்போது, அப்பில்லைகளை உங்கள் இஷ்டத்திற் கேற்ப அறுத்துக் கொள்ளவும். இத்துண்டுகள் பார்வைக்கு சோப்பைப் போல் பழுப்பு நிறமாயிருக்கும். ஆனால் தைலக்கறை பிடிக்காது. வஸ்திரம் வாசனையால் நிரம்பி விடும்.

வாசனை எண்ணெ

ரோஜா எண்ணெ, தாழம்பு எண்ணெ, ஏலக்காய் தைலம் முறையே	1 சேர்
தாளிச பத்திரி, வெற்றிலை	¼ ,,
மருதோன்றிப்பூ	¼ ,,
சாம்ராணி	2 தோலா
ஜாதிப்பத்திரி	¾ ,,
மோதியா புஷ்பம்	¼ சேர்
ஜடாமாசி	5 தோலா
கிளியூரம் பட்டை	5 ,,

சிமைகிச்சலிக் கிழங்கு	5 தோலா
சந்தனத் தூள்	5 ,,

இவைகள் யாவற்றிற்குமுள்ள நிறையில் 5 மடங்கு ஜலம் ஊற்றி 24 மணி நேரம் ஊறவைத்தப் பின்னர் திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

இந்த திராவகம் அதாவது எண்ணெ மிக்க வாசனையா யிருக்கும். ஜலத்தில் கலந்து பன்னீரைப் போல் ஓர் சபையில் தெளித்த போதிலும் நிறைந்த பரிமளம் வீச ஆரம்பிக்கும்.

சம்பங்கி, மோதியா வகையரு எண்ணெத் தயாரித்தல்

இவற்றுள் எந்த புஸ்பத்தின் எண்ணெ தயாரிக்க வேண்டுமானலும் அப்புஷ்பங்களை கழுவி எடுக்கப்பட்ட சுத்தமான எள்ளுடன் பறப்பி அடுக்கடுக்காக இதற்கு முன்னல் சொல்லி வந்த பிரகாரம் பறப்பி வைக்கவும்.

ஒரு நாளில் பன்முறை அவற்றை மேலும் கீழுமாக புரட்டி வைக்கவும். புஷ்பங்கள் வாடி வதங்கிப் போனவுடன் அவைகளை அப்புறப்படுத்தி விட்டு புதிய புஷ்பங்களை போடவும்.

இதே விதமாக 4 நாள் வைத்திருந்து ஆலையில் அரைத்துக் கொள்ளவும். வெள்ளைப் போர்வையில் புஷ்பங்களை விரித்து அவற்றின் மேல் எள்ளைத் தூவி போர்வையில் 4 மூலைகளையும் ஒரு மிக்க சேர்த்து மூடி வைத்தால் மிகவும் நல்லது. எள்ளின் அளவுக்கு இருமடங்கு புஷ்பங்கள் அதிகம் இருத்தல் வேண்டும்.

மசாலா எண்ணெ

வெள்ளை சந்தனம்	¼ சேர்
ஜடாமாசி	4 தோலா
கிளியூரம் பட்டை	4 ,,
கிராம்பு	4 ,,
அகர்	4 ,,
அம்பர்	1/12 ,,
கஸ்தூரி	1/12 ,,
சாம்ராணி	1 ,,
அமுக்குராக் கிழங்கு	6 ,,

கற்பூரம்	$\frac{1}{2}$ தோலா
மகிழம்பூ	$\frac{1}{4}$ சேர்
கோரைக் கிழங்கு	10 தோலா

எல்லாவற்றையும் சேர்த்து 2 சேர் சுத்தமான நல்லெண்ணெயில் போடவும். போடப்பட்ட பாட்டிலின் வாயை மூடி இள நெருப்பின் மீது வைத்தெரிக்கவும். சரக்குகளின் வாசனை எண்ணெயில் கலந்து கொள்ளும். அப்போது அதை வடிகட்டிக் கொள்ளவும். கஸ்தூரி அம்பர் இவ்விரண்டையும் யாவற்றிற்கும் கடைசியாக சேர்க்க வேண்டும். இவை இரண்டும் மிக்க விலையுள்ள சரக்குகளாதலால் தயாரிப்போர் இதை சேர்ப்பதில்லை. இதை நிறங் கொடுக்க வேண்டுமாயின் ஒரு துண்டு ஆல்கேனெட் ரூட் சற்று நேரம் போட்டு வைத்தால் சிவந்த நிறமாய் விடும்.

ஜாதிபத்திரி எண்ணெ

அரைச் சேர் ஜாதிப்பத்திரி பெரும்படியாக பாத்திர மொன்றில் தட்டிப் போட்டு ஏற்கனவே சொல்லப்பட்ட தைலம் போலவே இறக்கிக் கொள்ளவும்.

சம்பங்கி எண்ணெயின் மற்றொரு முறை

பாதாம் பருப்பை அதன் தோலினின்றும் உறித்துக் கொண்டு நசுக்கிக் கொள்ளவும். அப்பால் அதில் இரு பங்கு சம்பங்கிப் புஷ்பத்தைச் சேர்த்து ஒரு பாத்திரத்தில் போட்டு சில நாட்கள் வைத்திருக்கவும். புஷ்பத்தின் நிறம் மணம் அதில் சேர்ந்து கொள்ளும். அப்பால் மேலே சொல்லி வந்த முறைப்படி எண்ணெ எடுத்துக் கொள்ளவும்.

சம்பங்கி எண்ணெயின் மற்றொரு முறை

ஆலிவ் ஆயில் எண்ணெயில் சம்பங்கிப் புஷ்பத்தைப் போட்டு, போட்டுள்ள பாட்டிலை வெய்யிலிலோ அல்லது இளநெருப்பின் பேரிலோ சில நாட்கள் வைத்தெடுக்கவும். புஷ்பங்கள் வதங்கிப் போனவுடன் அவைகளை எடுத்து விட்டு மறு புஷ்பங்களைப் போடவும். இவ்வாறு பல தடவைகள் செய்து விட்ட பின்னர் அந்த எண்ணெயை வடிகட்டிக் கொள்ளவும்.

ரோஜாபூ எண்ணெ

நல்லெண்ணெயில் ரோஜா புஷ்பங்களைப் போட்டு மேற் கூறிய படி எண்ணெத் தயாரித்துக் கொள்ளவும்.

பாபுனு பனப்ஷா

இந்த இரண்டு எண்ணெகளைத் தயாரிக்கும் முறையும் மேற் கண்ட படியேயாகும்.

மருதோன்றி எண்ணெ

மருதோன்றி இலைகளை தண்ணீரில் போட்டு அடுப்பின் மேல் வைத்துக் காய்ச்சவும். அப்பால் அவற்றைப் பிசைந்து சக்கையை எறிந்து விட்டு அந்த ஜலத்தில் எண்ணெயைச் சேர்த்து எரிக்கவும். தண்ணீர் சுண்டிப்போய் எண்ணெ தனியே தங்கி விடுமளவும் எரிக்க வேண்டும்.

கொத்தமல்லி எண்ணெ

இது குணத்தில் குளிர்ச்சியானது. கோடை காலத்தில் இதை தலையிலும் தேகத்தின் பேரிலும் பூசி வந்தால் சொரி சிறங்கு வராது. இதை செக்கிலாட்டி எடுத்தல் வேண்டும். 10 சேர் மல்லிகையில் 3 சேர் எண்ணெ வெளியாகும்.

லவங்கப்பட்டை தைலம்

உப்பை தண்ணீரில் கரைத்துக் கொண்டு அத்தண்ணீரினால் லவங்கப்பட்டையை ஈரமாக்கிக் கொள்ளவும்.

அதாவது பட்டையை இடித்த பின் இந்த ஜலத்தை நிறைய அதன் மீது தெளிக்க வேண்டும். 24 மணி நேரத்திற்குப் பின் மேற் சொல்லப்பட்ட இரண்டு ரீசாக்களின் மூலம் தைலம் இறக்கிக் கொள்ளலாம். இது வாசனை யுள்ளது; சோப்பிலும் சேர்க்கப் படுகிறது.

ஆலிவ் ஆயில்

இது இதன் காய்களின் மூலம் இயந்திர சகாயத்தால் எடுக்கப் படுகிறது. வாசனை எண்ணெகளில் உபயோகமாகிறது. சோப் செய்வதிலும் சம்பந்தப்படுகிறது.

குங்குமப்பூ எண்ணை

இது பொன்நிற முடையது. நல்லவாசனையைத் தரக் கூடியது இரு சீசாக்களின் சகாயத்தால் எண்ணை எடுக்கலாம்.

சனோபர் எண்ணை

இதன் விதைகளை எடுத்து சீசாக்களின் சகாயத்தால் எண்ணை எடுக்கலாம். அல்லது விதைகளை தண்ணீரில் கடைந்து நெருப்பில் எரிக்க வேண்டும். தண்ணீருக்கு மேல் மிதந்து வரும் தைலத்தை கண்டதும் பாத்திரத்தை கீழ் இறக்கி ஆற்றிக் கொள்ளவும். ஆறினதும் அதன் மீது கொழுப்பைப் போலொத்த ஒருவிதப் பசை சேர்ந்திருக்கும்.

இந்த எண்ணை கொழுப்பைப் போல் வெண்மையும் கெட்டியுமானது. இதில் ஒருவித குளிர்ந்த வாசனை இருந்து வரும்.

அம்பர் தைலம்

அம்பர் அஷ்ஹபை தேனில் சேர்த்து உலர்த்திக்கொள்ளவும். அப்பால் அதை பத்தால் ஜந்தர் (இரு சீசாக்களின் மூலம் எடுக்கும் முறை) மூலமாய் எடுத்துக்கொள்ளவும். இது மிக்க மனோரம்மியமானது.

கஸ்தூரி எண்ணை

அம்பரைப்போலவே தேனில் கலந்து இறக்கிக்கொள்கிறார்கள். அல்லது சந்தன எண்ணையை, டம்ளரில் போட்டு நெருப்பின்மேலேற்றி காய்ச்சுகிறார்கள். பின்னர் இதில் கஸ்தூரி கலந்துகொள்ளுகிறார்கள்.

கிராம்பு தைலம்

கிராம்புகளை இடித்து பத்தால் ஜந்தர் மூலம் தைலம் இறக்கிக்கொள்ளலாம். கருப்புக் கலந்த ஷர்பத் நிறமுள்ளது. காரமுள்ள வாசனை.

ரூமிமஸ்தகிதைலம்

மஸ்தகியை செவ்வனே அரைத்து ஒரு செப்புப்பாத்திரத்தில் பரப்பி விடுங்கள். அதன்மேல் ஒரு சிறு டம்ளரை வைத்து அதன் மேல் ஒரு கண்ணாடி டம்ளரை வைத்துவிடுங்கள். இனி அப்பாத்

திரத்திற்குமேல் ஒரு மூடியிடுங்கள். அந்த மூடியின் ஓரங்கள் அப்பாத்திரத்திற்குள் சென்று விடும்படி கவனியுங்கள். மூடியின் ஓரங்களிலிருந்து காற்று வெளிவராதவாறு அடைத்து விடுங்கள். மூடியின் மீதுள்ள கிண்ணத்தில் தண்ணீர் ஊற்றி கிழே நெருப்புப் போடவும். 3, 4 மணிநேரத்திற்குள் தைலம் வெளிப்பட்டு டம்ளரில் வந்துவிடும். மூடி ஜலம் சுட்டுப் போகபோக புது தண்ணீர் ஊற்றிக் கொண்டிருங்கள். தைலம் அடியிலிருந்து கிளம்பி மேல் மூடிக்குப்போய் விடும். அங்கிருந்து கிழே இறங்கி டம்ளரில் வந்தடையும்.

மண் அத்தர்

மில்தானிமண்	15	சேர்
கஜினிமண்	15	,,
அறைத்த ஓடாஞ்சல்லி	15	,,
சந்தனத் தைலம்	¼	,,

எல்லாம் ஒரு மிக்கச் சேர்த்து, பின்னர் அதில் பன்னீர் கொஞ்சம் விட்டு திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

இங்லீஷ்முறையை அனுசரித்துள்ள அத்தர் செண்ட் முறைகள்

இந்திய அத்தர் வியாபாரிகள் வாசனையைத் தயாரிப்பதற்கு சந்தன எண்ணெயை தாய்ச்சரக்காக கொண்டுள்ளார்கள். ஏனெனில் இதன் வாசனை இன்பகரமானது. இளகலாயிருப்பதால் இதர வாசனைகளை தன்னுள் கிரகித்துக்கொள்ளும் சக்தியும் இதற்கு உண்டு.

ஆனால் ஐரோப்பிய வாசனைத்திரவிய வியாபாரிகள் சந்தனத் திற்குப் பதிலாக ஆலிவ் ஆயிலையும் பாதாம் எண்ணெயையும் இக் காரியத்திற்காக தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இதே காரணம் பற்றியே மேற்கூறிய இரண்டுவித எண்ணைகளும் ஐரோப்பாவில் அமிதமாகக் கிடைக்கின்றன. இவைகளும் நீச்சலாக இருப்பதால் வாசனைகளை அடக்கும் சக்தி இவைகளிலும் உண்டு. இனி நாம் அவைகளில் வாசனை சேர்க்கும் விபரத்தை சற்று எடுத் துரைக்கிறோம்:-

மேற்கூறிய இரண்டு சரக்குகளுள் ஏதேனும் ஒன்றைதேர்ந்தெடுத்து நீங்கள் விரும்பும் யாதொரு வாசனையையோ அல்லது சத்தையோ கலந்துகொள்ளுங்கள். சாதாரணமாக ஒரு பைன்ட் எண்ணையில் ஒன்று அல்லது 1½ டிராம் சத்து அல்லது 3, 4 டிராம் எஸ்ஸென்ஸை சேர்த்துக் கொள்ளவும். ரோஜாசத்து அதிகவிலையுள்ளது. இதனல் அதை அரை டிராம் சேர்த்தால் போதுமானது.

இரண்டாவது முறை:- கஸ்தூரி, அம்பர் முதலிய உலர்ந்த சரக்குகளை உபயோகிக்க நேரிட்டால் அதில் கொஞ்சம் ஆற்று மணலையும் அரைத்த கண்ணாடித்தூளையும் சேர்த்து கொஞ்சம் ஆலிவ் ஆயில் விட்டரைத்து பிறகு அதில் அதிக எண்ணை சேர்த்துக்கொள்ளுங்கள்.

அப்பாத்திரத்தை கொதிக்கும் ஜலத்தில் வைத்து நன்ருய்க் கலக்கி விடுங்கள். வண்டல் யாவும் அடியிற்சென்றுவிட்டதும் மேலிருந்து தெளிவான எண்ணையை இறுத்திக் கொள்ளுங்கள். வெந்நீருக்குப்பதிலாக அதை ஒன்று படுத்த வேண்டுமானல் வெய்யிலில் வைத்தெடுங்கள். 21 நாளில் சீர்ப்பட்டுவிடும்.

மிக்ஸ்சர் ஆயில்

பாதாம் எண்ணை	2½ சேர்
ரோஸ் மேட்ரி	1 டிராம்
ஜாதிக்காய் சத்து	15 துளி
ரோஜா சத்து	15 ,,
கஸ்தூரி சத்து	4 ,,

எல்லாவற்றையும் சேர்த்து கலக்கிக் கொள்ளுங்கள். நிறங்கொடுக்கவேண்டுமானல் ஆல்கனேட்ரூட் துண்டொன்றை போட்டு விடுங்கள்.

கஸ்தூரி தைலம்

கஸ்தூரி	1 டிராம்.
அம்பர்	½ ,,
லாவெண்டர்	20 ,,
ஆலிவ் ஆயில்	1 ,,

எல்லாவற்றையும் கலந்து 15 நாள் வெய்யிலில் வைத்து இறுத்திக் கொள்ளவும்.

அம்பர் கஸ்தூரி தைலம்

அம்பர்	2	டிராம்
கஸ்தூரி	½	,,
லாவெண்டர்	10	துளி
அக்ரோட்	10	,,
பாதாம் எண்ணை	1	பாயின்ட்

எல்லாவற்றையும் சேர்த்துசில நாட்கள்வெய்யிலில் வைக்கவும்.

சாம்ராணித் தைலம்

சாம்ராணி உப்பு	7	டிராம்
பாதாம் எண்ணை	1	பைன்ட்

இரண்டையும் கலந்து சில நாட்கள் வெய்யிலில் வைக்கவும். ஒன்றாய்க் கலந்து கொண்டதும் இறுத்திக் கொள்ளவும்.

தாவர வர்க்கங்களின் தனித்தனி வாசனை அளவு

ஆரஞ்சித் தோல் 10 பவுண்டுக்கு வெளிவரும் வாசனை 1 அவுன்ஸ்.

பொதினா பச்சை 100 பவுண்டுக்கு 3 முதல், 4 அவுன்ஸ்.

அல்சி 25 பவுண்டுக்கு வெளிவரும் வாசனை 9 முதல், 12 பவுண்டு.

சீரகம் 25 பவுண்டுக்கு 16 அவுன்ஸ்.

கிராம்பு 1 பவுண்டுக்கு வெளிவரும் வாசனை 2½ அவுன்ஸ்.

ஏலக்காய் 25 பவுண்டுக்கு வெளிவரும் வாசனை 3 அவுன்ஸ்.

ஜாதிப்பத்திரி 2 பவுண்டுக்கு 3 அவுன்ஸ்

ஜாதிக்காய் 2 பவுண்டுக்கு 3 முதல் 4 அவுன்ஸ்.

வாசனை மரக்கரிகள் 60 பவுண்டுக்கு 1 முதல், 1½ அவுன்ஸ்.

பாதாம் கசப்பு 14 பவுண்டுக்கு, 1 அவுன்ஸ்.

ஜிரேனியம் தழைகள் 112 பவுண்டுக்கு 2 அவுன்ஸ்

ஜைதூன் புஷ்பங்கள் 112 பவுண்டுக்கு 30 முதல், 32 அவுன்ஸ்.

மருதோன்றித் தழைகள் 112 பவுண்டுக்கு, 5 அவுன்ஸ்.

ரோஜா மொட்டுகள் 112 பவுண்டுக்கு 16 அவுன்ஸ்'

சந்தனக்கட்டை 112 பவுண்டுக்கு 30 அவுன்ஸ்.

பனப்ஷா 112 பவுண்டுக்கு ½ அவுன்ஸ்.

அம்பர் கிரேஸ் விபரம்:—

அம்பர் எனச் சொல்லப்படும் இந்த வாசனை உயர்தர வாசனையாகும். இது சமுத்திரத்தில் மிதந்து கொண்டிருக்கும் பொழுதும் அல்லது சிற்சில வேளைகளில் சமுத்திர அலைகளினால் வீசப்பட்டும் கரைக்கு வந்து விடுகிறது. இது வைல் என்னும் ஒரு வித சமுத்திர மச்சத்தின் குடலிலிருந்தும் உற்பத்தியாகிறது.

இதன் நிறங்கள் பலவிதமாகும். ஆனால் அவற்றுள் அம்பர் அஷ்ஹூப் எனப்படுவதே எல்லாவற்றிலும் சிறந்தது. அது கருடன் பறவையின் நிறத்தைப்போல் அதாவது, அதன் சிரகுகளின் மஞ்சள் கலந்த கருப்பு வர்ணத்தைப் போலாகிறது. இதனால் பல்வேறு விதமான பரிமள சாமான்கள் செய்யப் படுகின்றன.

டின்க்சர் ஆப் அம்பர் கிரீஸ்

அம்பர் கிரீஸ்	2	டிராம்
அறைத்த ஆர்ஸ்	2	,,
அல்கோஹல்	16	அவுன்ஸ்

அல்கோஹல் நீங்கலாக மேற்கண்ட 2 சரக்குகளையும் செவ்வனே அறைத்துக் கொள்ளவும், அப்பால் ஒரு பாட்டிலில் அல்கோஹல் போட்டு, இதர 2 சரக்குகளையும் அதில் போட்டு விடவும். அடுத்தபடியாக பாட்டிலின் வாயை யடைத்து அதை தொடர்ந்தாற் போல் 30 நாள் வரையில் வெய்யிலில் வைத்து வடிகட்டிக் கொள்ளவும்.

மற்றொரு விதம்

அம்பர் கிரீஸ்	30	கிரைன்
தம் மூல் அக்வீன்	1	டிராம்
அல்கோஹல்	18	அவுன்ஸ்

முதல் 2 சரக்குகளை பட்டுபோல் அறைத்து அல்கோஹலில் கலந்து பாட்டிலில் போட்டு விடவும், 30 நாள் வெய்யிலில் வைத்து வடிகட்டிக் கொள்ளவும்.

அம்பர் கிரீஸ் சத்து

ஸ்பிரிட் ஆப் ரோஸ்	13	அவுன்ஸ்
டின்க்சர் ஆப் அம்பர் கிரீஸ்	18	,,

டின்க்சர் ஆப் மஸ்க்	4 அவுன்ஸ்
டின்க்சர் வெனிலா	1 ,,

இச்சரக்குகளை யாவும் ஒன்றாய் கலந்து கொண்டு சில நாட்கள் வெய்யிலில் வைத்தெடுத்து வடிகட்டிக் கொள்ளவும்.

ஸ்பிரிட் ஆப் அம்பர் கிரீஸ்

அம்பர் கிரீஸ்	5 டிராம்
கஸ்தூரிபை	45 கிரைன்
ரெக்டிபைட்ஸ்பிரிட் (நம்பர் 56)	1 பைன்ட்
அமோனியா	½ பிளட் டிராம்

எல்லாவற்றையும் சேர்த்து வெய்யிலில் வைத்து வடிக்கட்டிக் கொள்ளவும்.

கிராம்பு தைலம்	15 துளி
பால்சம் ஆப் பைரோ	15 ,,
நரோலி	20 ,,

எல்லாம் சேர்த்து வடிகட்டிக் கொள்ளவும்.

பாதாம் ஸ்பிரிட்

சாதாரண அல்கோஹலை சேர்க்கலாகாது

டேவ்டோராயிஸ் அல்கோஹல்	16 அவுன்ஸ்

பாதாம் ஸ்பிரிட் வுடன் கலந்துகொள்ளவும்.

சாம்ராணி டின்க்சர்

அறைத்த சாம்ராணி	2 அவுன்ஸ்
டி-அல்கோஹல்	16 ,,

இரண்டையும் சேர்த்து 30 நாள் வெய்யிலில் வைத்து அறைத்துக் கொள்ளவும்.

பர்கா லோட்

இச்செடியின் காய்த்தோல்களை இயந்திர சகாயத்தால் வாசனை எடுக்கிறார்கள். இதை இருண்ட அறையில் பாட்டிலுக்கு செவ்வனே கார்க்கிட்டு வைக்கவேண்டும். திறந்திருந்தால் வாசனை போய்விடும். தைலத்தின் நிறம் மங்கி டர் பன்டைன் தைலத்தைப் போலாகி விடும்.

கலப்பு அத்தர்

ஸ்பிரிட் ஆப் ரோஸ்	4	அவுன்ஸ்
டின்க்சர் அம்பர் கிரீஸ்	1	,,
தம்முல் அக்வீன்	2	,,
பர்கமோன்ட் ஆயில்	¼	,,
எலுமிச்சை தைலம்	1⅛	,,

எல்லாம் ஒன்ராய்க் கலந்துகொள்ள வேண்டும்.

மற்றொரு விதம்

ஸ்பிரிட் ஆப் ரோஸ்	2	அவுன்ஸ்
அம்பர்கிரிஸ் டின்க்சர்	2	டிராம்
சாராயத்தில் கலந்த தம்முல்அக்வீன்	1	அவுன்ஸ்
பர்கமோட் வாசனை	1	டிராம்
லிமன் ஆயில்	15	துளி

எல்லாம் ஒன்ருக கலந்து கொள்ளவும்.

மற்றொரு விதம்

ஜிரேனியம் தழைகளின் தைலம்	1	அவுன்ஸ்
டர்கிஷ் ஜிரேனியம் ஆயில்	½	,,
ஓடோரோஸ் அதாவது :- ரோஜா அத்தர்	1	டிராம்
கஸ்தூரி சத்து	6	அவுன்ஸ்
எக்ஸ்டிராக்ட் டோன்கா	6	அவுன்ஸ்
ஆரென்ஞ் புஷ்பசத்து	5	,,
வெனிலா புஷ்ப சத்து	2	,,
சிவெட் சத்து	1	,,
அல்கோஹல்	1	காலன்
ஜலம்	4	அவுன்ஸ்

எல்லாவற்றையும் சேர்த்து சிலநாட்கள் வெய்யிலிலோ அல்லது சூடான இடத்திலோ வைக்க வேண்டும்.

மற்றொரு விதம்

கஸ்தூரி சத்து	2	அவுன்ஸ்
ஆடோரோஸ் சத்து	2	,,

ஓடோரோஸ்	1 டிராம்
பர்கமோனட்	½ ,,
உயரிய நரோலி	½ ,,
டர்பினுஹோடோ	8 துளி
ஓடோ -பி- மின்டோ	10 ,,
ஓடோபசோலி	3 ,,
ஓடோ சிவப்பு	½ டிராம்
ஓடோ லாவென்டர்	12 துளி

இச்சரக்குகளின் நிறை 4 பைன்டுக்கு வரும் அளவில் சுத்த மான ஸ்பிரிட்டைச் சேர்த்துக் கொள்ளவும்.

பாஸ்போஸ் கலப்பு அத்தர்

எக்ஸ்டிராட் அகாஷியா	1 பயின்ட்
எக்ஸ்டிராட் ஜாஸ்மன்	1½ ,,
எக்ஸ்டிராட் ரோஸ் T. P.	½ ,,
எக்ஸ்டிராட் பிளவர் தி ஆரென்ஸ்	½ ,,
எக்ஸ்டிராட் சிவட்	¼ ,,
ஓடோ ஆப் ஆல்மன்ட்	10 துளி

எல்லாம் ஒன்ருய்க் கலந்து கொள்ளவும்.

போகங்ஹம் பிளேஸ் பாகட்

எக்ஸ்டிராட் பிளவர் டி ஆரென்ஞ்	1 பயின்ட்
எக்ஸ்டிராட் காசி	1 ,,
எக்ஸ்டிராட் ஜாஸ்மன்	1 ,,
எக்ஸ்டிராட் ரோஸ்	1 ,,
எக்ஸ்டிராட் ஆப் அம்பர் கிரிஸ்	½ ,,
எக்ஸ்டிராட் ஆப் ஆரியன்	½ ,,
ஓடோ ஆப் நரோலி	½ டிராம்
ஓடோ ஆப்லவண்டர்	½ டிராம்
ஓடோ ஆப்ரோஸ்	1 டிராம்

எல்லாம் ஒன்ருய்க் கலந்து கொள்ளவும்.

விவாஹப் பரிமளம்

வெனிலா டின்க்சர்	2 டிராம்
கஸ்தூரி டின்க்சர்	1 ,,

சாம்பராணி டின்க்சர்	1 டிராம்
தம்மூல் அக்வீன் டின்க்சர்	1 ,,
காசி சத்து	4 அவுன்ஸ்
ஆட்டோ -பே- ரோஸ் சத்து	2 ,,
ஜாஸ்மென் சத்து	12 ,,
பர்காலூட் சத்து	16 துளி
ஆரென்ஞ் புஷ்ப சத்து	6 ,,

எல்லாம் ஒருமிக்க கலந்து கொள்ளவும்.

பெட்வரு கலப்பு அத்தர்

அட்வர் ரோஸ்	½ டிராம்
டர்கிஷ் ஜிரோனியம்	1 அவுன்ஸ்
பச்சோலி ஆயில்	¼ ,,
எக்ஸ்டிராட் டோன்கா	3 ,,
எக்ஸ்டிராட் கஸ்தூரி	2 ,,
ஆரென்ஞ் புஷ்பம்	3 ,,
எக்ஸ்டிராட் வெனிலா	½ ,,
எக்ஸடிராட் சிவட்	½ ,,
ஆல் கோஹல்	½ பைன்ட்

எல்லாம் ஒன்றாகக் கலந்துக் கொள்ளவும்.

புஷ்ப கலப்பு வாசனை

மஸ்க் டின்க்சர்	3 அவுன்ஸ்
ஓட்ஸ் டின்க்சர்	6 டிராம்
தோன்கா டின்க்சர்	6 ,,
வெனிலா டின்க்சர்	6 ,,
அம்பர்கிரீஸ் டின்க்சர்	1 அவுன்ஸ்
ரோஸ் ஸ்பிரிட்	4 ,,

இவை யாவையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும்.

மற்றொரு கலப்பு அத்தர்

ஸ்பிரிட் -தி- ரோஸ்	2 பைன்ட்
ஸ்பிரிட் -தி- சுரோலி	½ ,,
எக்ஸ்டிராட் வெனிலா	¼ ,,

எக்ஸ்டிராட் ஆர்ஸ்	½ பைன்ட்
எக்ஸ்டிராட் மஸ்க்	¼ ,,
கிராம்பு ஓட்டோ	½ டிராம்

எல்லாம் ஒன்ருய்ச் சேர்த்து கலந்து கொள்ளவும்.

கலப்பு வாசனை

எக்ஸ்டிராட் ஆப் ஆர்ஸ்	½ பைன்ட்
எக்ஸ்டிறாட் வடிவர்ட்	¼ ,,
எக்ஸ்டிராட் ஆப் சான்டல்	1 ,,
எக்ஸ்டிராட் ஆப் ரோஸ்	½ ,,

எல்லாம் சேர்த்து கலப்பாக்கிக் கொள்ளுங்கள்.

ஜாகி கிளப் பாகெட் (இங்லீஷ் முறை)

எக்ஸ்டிராட் தம்முல் அக்வீன் (ஆர்ஸ்)	2 பைன்ட்
எக்ஸ்டிராட் டிரோஸ் தி டிபோலி	1 ,,
எக்ஸ்டிராட் டிரோஸ் போமேட்	1 ,,
எக்ஸ்டிராட் தி கைசிபேரோட்	½ ,,
எக்ஸ்டிராட் தி அம்பர் கிரேஸ்	½ ,,
ஓட்டோ பர்கோமன்ட்	½ அவுன்ஸ்

எல்லாம் ஒன்ருய்க் கலந்துக் கொள்ளவும்.

பிரான்சு பரிமளமுறை

ஸ்பிரிட், டிரோஸ்டி போமேட்	1 பைன்ட்
ஸ்பிரிட் டிடோபே ரோஸ்	1 ,,
ஸ்பிரிட் டி கைசி	½ ,,
ஸ்பிரிட் டி ஜாஸ்மென்	¾ பவுண்டு
எக்டிராட் சிவெட்	3 அவுன்ஸ்

எல்லாம் ஒன்று கலந்து கொள்ளவும்.

மற்ருெரு விதம்

எக்ஸ்டிராட் ஆப் ரோஸ்	56 பங்கு
எக்ஸ்டிராட் ஆப் வயலட்	56 பங்கு
எக்ஸ்டிராட் ஆப் டேவுபே ரோஸ்	28 பங்கு

எக்ஸ்டிராட் ஆப் ஆரென்ஞ் பிளவர்	14 பங்கு
எஸ்ஸென்ஷியல் ஆயில் ஆப் பர்கமெண்ட்	7 ,,

இச்சரக்குகளை யாவும் பாட்டிலில் போட்டு சில நாள் வெய்யிலில் வைத்தப்பின் வடிகட்டிக் கொள்ளவும்.

போகோட்டி லாரேன் அதாவது வாசனை எண்ணைகளின் கலப்பு

பர்கமென்ட் சத்து	$2\frac{1}{2}$ டிராம்
ஆலிவ் ஆயில்	1 ,,
கிராம்பு தைலம்	$\frac{1}{2}$,,
சர்க அரோமாடிக்	$\frac{1}{2}$,,
கஸ்தூரி சத்து	$\frac{1}{2}$,,
அல்கோஹல்	3 அவுன்ஸ்

இவைகளைக் ஒன்றாய்க் கலந்து வெய்யிலில் வைத்து வர வேண்டும்.

ஒவ்வொரு நாளும் 2, 3, தடவை பாட்டிலைக் குலுக்கி விடவும்.

போகுவாட் ரெஸ்டோரி

ரோஜபூ எண்ணை	$\frac{1}{2}$ அவுன்ஸ்
சந்தன எண்ணை	$\frac{1}{2}$,,
டோன்கா சத்து	1 பையின்ட்
அல்கோஹல்	2 காலன்
சுத்த ஜலம்	4 பைன்ட்

யாவற்றையும் ஒன்றாய் கலந்து கொள்ளவும்.

பிரின்சி புகோவாட்

பர்கோமன்ட் ஓடோ	$\frac{1}{2}$ டிராம்
கிராம்பு அத்தர்	$\frac{1}{2}$,,
ஜைதூன் சத்து	1 டிராம்
கஸ்தூரி டின்சர்	2 ,,
வெனிலா டின்சர்	2 ,,
அம்பர் கிரிஸ் டின்சர்	2 ,,

ரோஸ் ஸ்பிரிட்	1 அவுன்ஸ் or 2 டிராம்
ஆல்கஹால்	2 அவுன்ஸ்

இவைகளை எல்லாம் ஒரு பாட்டிலில் போட்டு ஒன்ருய்க் கலந்து கொள்ளவும்.

ராயல்ஹின்ட்போகோயிட்

ஸ்பிரிட்டிரோஸ் திருபோலி	¼ பைன்ட்
கரோலி	¼ ,,
அகாஷியா	¼ ,,
பிளவர்-டி-ஆரெஞ்	¼ ,,
கஸ்தூரிதம்முல் அக்வின்	¼ ,,
ஸ்பிரிட்-டி-டோட்கின்	½ ,,
சகோதரா சத்து (கிடாரங்காய்)	2 டிராம்

எல்லாம் ஒன்ருய்க் கலக்கிக் கொள்ளவும்.

எவ்ஸெனவ்ஸ் ஆப்காசி

காசி போமெட்	16 அவுன்ஸ்
டேர்வுடோர் அல்கோஹால்	16 ,,

இரண்டு சரக்குகளையும் கற்பாத்திர மொரன்றில் போட்டு வெக்கீர் பாத்திரத்திற்குள் வைத்து கலக்கிக் கொண்டிருக்க வேண்டும்.

இரண்டும் சரிவர கலந்து கொண்ட பின்னர் அதை ஆற்றி ஒரு பாட்டிலில் போட்டு அடைத்துக் கொள்ளவும். இது உயர் தரமான பரிமளமாகி விடும்.

ஏழை மக்களும் உபயோகிக்கத் தக்கவாறு குறைந்த விலையில் அரிய வாசனையின் கிடைக்கக் கூடியதாகும். சோப்பு தயாரிப்ப வர்களும் இதன்பொருட்டு இதை சேர்ப்பு வாசனைக்காக உபயோகிக் கிருர்கள்.

சைதார் பரிமளம்

சைதார் கட்டை	1 அவுன்ஸ்
ரெக்டிபைட் ஸ்பிரிட்	1 பைன்ட்
ஸ்பிரிட் ரோஸ் டிர்பிலி	¼ ,,

எல்லாவற்றையும் சேர்த்து கலந்து கொள்ளவும்.

நஅறு பரிமளம்

இந்தியாவிலும், இலங்கையிலும் இச்செடி அமிதமாக பயிராகிறது. இதன் உருசி புளிப்பு. இதிலிருந்து இன்றியமையாததோர் வாசனை அடையப் பெறுகிறது.

இதை எடுக்க வேண்டிய முறையில் தைலம் எடுக்கிறார்கள். இதை உலர்த்தி எடுக்கப்படும் தைலமானது நிகரற்ற வாசனை உடையது.

சிவெட்

இப்பெயர் கொண்டதோர் பூனை உண்டு. இது ஆசியாவில் வசித்து வருவதாகும். இதன் வயிற்றிருந்து ஒருவித பிசி பிசிப்பு வெளிவரும். அது அதிக வாசனை உடையது.

வெளிவந்த பிறகு அது கெட்டிப்பட்டு விடும். இதற்கு கஸ்தூரி எனவும் சொல்லுகிறார்கள்.

சிவெட் டின்க்சர்

கஸ்தூரி	1 டிராம்
தீம்முல் அக்வீன்	1 ,,
டி அல்கோஹல்	16 அவுன்ஸ்

எல்லாம் சேர்த்து கலந்து கொள்ளுங்கள்

மற்றொரு முறை

கஸ்தூரி	30 கிரைன்
தம்முல் அக்வீன்	1 டிராம்
அல்கோஹல்	1 அவுன்ஸ்

மேற் சொல்லிய 2 சாமான்களையும் ஒன்றாய்ச் சேர்த்து இடித்துக் கொள்ளவும். இடித்தானதும் அல்கோஹல் சேர்த்துக் கொள்ளுங்கள். 2–வாரம் வரையில் சூடானதோர் விடத்தில் வைத்திருந்ததற்குப் பிறகு அதை இறுத்திக் கொள்ளுங்கள்.

கிராம்பு

இது மலாகா, சைனா முதலிய தீவுகளில் ஏராளமாய் பயிராகின்றது. இதன் வாசனையானது காரமும், சாரமுமானது.

கிராம்பு ஸ்பிரிட்

கிராம்பு தைலம்	4 டிராம்
டி-அல்கோஹல்	16 அவுன்ஸ்

இந்த இரண்டு சரக்குகளையும் சேர்த்து கலக்கிக் கொள்ளுங்கள்.

குறைந்த விலையுள்ள வாசனைத் திரவியம்

பர்கமோட் சத்து	1 அவுன்ஸ்
அல்கோஹல்	1 பைன்ட்

இரண்டையும் ஒன்றாய்க் கலந்து கொள்ளவும்.

மற்றொரு விதம்

ஆல்கோஹல்	1 பைன்ட்
பிரென்ச் லவென்டர்	½ அவுன்ஸ்
பர்கமோட்	½ ,,
கிராம்பு சத்து	1 டிராம்

யாவற்றையும் சேர்த்துக் கலக்கிக் கொள்ளவும்.

மற்றொரு விதம்

ஆல்கோஹல்	½ பைன்ட்
ஆலிவ் ஆயில்	1 டிராம்
கிராம்பு தைலம்	½ ,,

இவையாவும் ஒன்றாய்க் கலந்து கொள்ளவும்.

பிரென்ச் பானி

ஆலிவ் ஆயில்	½ அவுன்ஸ்
ஜரேனியம் தழைத்தைலம்	½ ,,
ரோஜா அத்தர்	1 டிராம்
கஸ்தூரி சத்து	6 அவுன்ஸ்
டோன்கா சத்து	6 அவுன்ஸ்
சந்தன சத்து	1 பைன்ட்
வெனிலா	2 அவுன்ஸ்
கஸ்தூரி சத்து	1 ,,
ஆல்கோஹல்	1 காலன்

ஜலம்	8	அவுன்ஸ்
ஆரஞ்சு புஷ்பச் சத்து	5	,,

எல்லாம் ஒன்ருக கலந்து கொள்ளவும்.

மற்ருெரு விதம்

டோபே ரோஸ் சத்து	1	அவுன்ஸ்
வேடி வர்ட் ஸ்பிரிட்	½	,,
சந்தன அத்தர்	15	துளி
ஆரென்ஞ் தோல் தைலம்	15	துளி
ரோஜா எண்ணெ	15	,,
ஆல்கோஹல்	½	அவுன்ஸ்
கஸ்தூரி டின்சர்	2	,,
தம்மூல் அக்வீன் டின்சர்	1	,,
ஆரென்ஞ் புஷ்பச் சத்து	1	,,

இவைகளை யெல்லாம் ஒன்ருய்க் கலந்து கொள்ளவும்.

மற்ருெருவிதம்

தம்மூல் அக்வீன் சத்து	4	அவுன்சு
டோபே ரோஸ் சத்து	2	,,
கஸ்தூரி சத்து	4	,,
வெனிலா சத்து	2	,,
ஜாஸ் மென் சத்து	1	,,
ஸிடிராக்ஸ் சத்து	1	,,
நரோலி ஷுகர் அத்தர்	1	டிராம்
வர்ஜன் ரோஸ் அத்தர்	½	,,
சந்தன அத்தர்	1	,,
சிவப்பு சைதார் கட்டை அத்தா	1	,,
மின்டோ எஸ்ஸென்ஸ்	½	,,
காஷியா எஸென்ஸ்	20	துளி
பர்கமோட் எஸ்ஸென்ஸ்	½	டிராம்
இஞ்சி எஸென்ஸ்	4	துளி
ஆலிவ் எஸென்ஸ்	6	துளி
சாம்ராணி சத்து	2	டிராம்

சுத்தஸ்பிரிட் இதை எல்லா சரக்குகளும் 4 பைன்ட் நிறைக்கு வரும் அளவில் எவ்வளவு போடவேண்டுமோ போட்டுக் கொள்ளவும்.

மற்றொருவிதம்

கஸ்தூரி டின்க்சர்	5	அவுன்ஸ்
டின்சர்தம்முல் அக்வீன்	3	,,
ஆரென்சு புஷ்பசத்து	2	,,
டர்பே ரோஸ்	3	,,
வடிவர்ட்ஸ்பிரிட்	1	,,
சந்தன எண்ணை	60	துளி
நரோலி எண்ணை	60	,,
ரோஜா எண்ணை	120	,,

எல்லா வற்றையும் ஒன்ருய்க் கலந்து கொள்ளவும்.

ஜிரேனியம்

பிரான்ஸ் ரோம் இந்நகரங்களில் பயிராகும் ஒரு விதரோஜா புஷ்பமே இது. இதன் தழைகளினின்றும் புஷ்பங்களிலிருந்தும் வாசனை எடுக்கிருர்கள். இது நிகரற்றவாசனையாகும்.

ஜிரேனியம் அத்தர்

ஜிரேனியம் தழைத் தைலம்	2	அவுன்ஸ்
துருகிபுஷ்ப எண்ணை	2	,,
பர்கமோட் ஆயில்	1	,,
ஆரஞ்சு புஷ்பச்சத்து	5	,,
கஸ்தூரி சத்து	1	,,
ஆல்கஹால்	1	காலன்
ஜலம்	8	அவுன்ஸ்

எல்லாம் சேர்த்து கலக்கிக் கொள்ளுங்கள்.

மற்றொருவிதம்

ஜிரேனியம் தழைத்தைலம்	1	அவுன்ஸ்
ரோம், ஜிரேனியம் ஆயில்	1	,,
பர்கமென்ட் ஆயில்	1	,,
சாம்ராணி சத்து	2	,,

வெனிலா சத்து	2 அவுன்ஸ்
ஆல்கோஹல்	2 காலன்
ஜலம்	3 பைன்ட்

எல்லாவற்றையும் ஒன்ருய் கலந்து கொள்ளவும்.

கூந்தல் பரிமளம்

அம்பர் கிரேஸ்	25 பங்கு
கஸ்தூரி	12 ,,
ரோஜாஎண்ணை	2 ,,
லவுங்கப்பட்டை	3 ,,
ஆரன்ஞ்புஷ்பத்தைலம்	2 ,,
கார்புனேட் ஆப்பொடாஷ்	6 ,,
ஆல் கோஹல் (90 டெம்பர்)	860 ,,

இவைகளை எல்லாம் ஒன்ருய்ச் சேர்த்து 15 நாள் வைத்திருந்த தற்குப்பின் இறுத்திக் கொள்ளவும்.

ஹைறலீவாட்ரோப்

இதோர் புஷ்ப இனத்தைச் சேர்ந்தது. இன்பகரமானவாசனை உடையது. இப்புஷ்பம் பிரான்ஸ் தேசத்தில் அதிகம் பயிரா கின்றது. அங்காட்டிலேயே இதன் வாசனையும் எடுக்கப்படுகிறது.

ஆரன்ஞ் புஷ்பச்சத்து	1 அவுன்ஸ்
வெள்ளை ரோஸ் புஷ்பச்சத்து	1 குவார்ட்
வெனிலா சத்து	1 பைன்ட்
சாம்ராணி சத்து	1 அவுன்ஸ்
கஸ்தூரி சத்து	1 அவுன்ஸ்
ஆல்கோஹல்	1 பைன்ட்
கசப்பு பாதாம் எண்ணை	3 துளி
ஜலம்	2 அவுன்ஸ்

எல்லாம் ஒன்ருய்ச் சேர்த்து கலக்கிக் கொள்ளவும்.

மற்ருெருவிதம்

பர்கமென்ட் ஆயில்	1 அவுன்ஸ்
வெனிலா சத்து	½ பைன்ட்
கஸ்தூரி சத்து	½ அவுன்ஸ்

சாம்ராணி சத்து	½ அவுன்ஸ்
ஆல்கோஹால்	1 காலன்
தர்மூல் அக்வீன் சத்து	1 பைன்ட்
கசப்பு பாதாம் எண்ணெ	5 துளி
ஜலம்	3 பைன்ட்

எல்லாம சேர்த்துக் கலக்கிக் கொள்ளவும்.

மற்ருருவிதம்

வெனிலா டின்சர்	8 அவுன்ஸ்
அம்பர்கிரேஸ்டின்சர்	1 ,,
கஸ்தூரி டின்சர்	1 ,,
ஸ்பிரிட் ஆப் ரோஸ்	3 ,,
எஸ்ஸென்ஸ் ஆப்ரோஸ்	3 ,,
கசப்பு பாதாம் எண்ணெ	5 துளி

எல்லாவற்றையும் கலக்கிக் கொள்ளவும்.

ஹனிசகிள் எக்ஸ்ட்ராட்

பசோலி சத்து	3 டிராம்
சாம்ராணி டின்சர்	½ அவுன்ஸ்
ரோஜா ஸ்பிரிட்	½ ,,
கிராம்பு ஸ்பிரிட்	½ ,,
கஸ்தூரி டின்சர்	1 ,,
ஆரஞ்சு புஷ்பஸ்பிரிட்	1 ,,
சம்பங்கி சத்து	4 ,,
வெனிலா டின்சர்	1 ,,

இவையாவற்றையும் ஒன்ருய்க்கலந்து கொள்ளவும்.

மற்ருருவிதம்

ரோஸ் ஸ்பிரிட்	4 அவுன்ஸ்
பனப்ஷாசத்து	4 ,,
டோபே ரோஸ் ஸ்பிரிட்	4 ,,
வெனல்டின்சர்	1 ,,
டின்சர் ஆப் டோலோ	1 ,,
டின்சர் ஆப்மஸ்க்	1 ,,
கிரோவி தைலம்	3 துளி

கசப்பு பாதம் எண்ணை	2 துளி
டி. ஆல்கோஹால்	1 அவுன்ஸ்

இவைகளை எல்லாம் கலந்து கொள்ளவும்.

ஜப்பான் அத்தர்

ரோஜாசத்து அல்லதுஸ்பிரிட்	½ பைன்ட்
வடிவர்ட்சத்து	½ ,,
பசோலிசத்து	½ ,,
லைதார் சத்து	½ ,,
சந்தன சத்து	½ ,,
தர்தேன் சத்து	¼ ,,

எல்லாம் ஒன்ருய்கலந்து கொள்ளவும்.

சம்பங்கி

பிரான்ஸ், இடாலி இந்தியா ஆகியநாடுகளில் ஏராளமாய் பயிராகிறது. வெள்ளை நிறமுள்ள இதன் புஷ்பத்திற்கு அதிக வாசனை உண்டு.

ஜாஸ்மென்போமேட்	16 அவுன்ஸ்
டி-ஆல்கோஹால்	16 அவுன்ஸ்

இந்த இரண்டையும் ஒன்ருய் சேர்த்துக் கொள்ளவும்.

சம்பங்கி ஸ்பிரிட்

ஜாஸ்மென் எஸ்ஸென்ஸ்	4 அவுன்ஸ்
வெனிலா டின்சர்	½ ,,
அம்பர் கிரேஸ் டின்சர்	2 டிராம்

இவைகளை ஒன்ருய்க் கலந்து கொள்ளவும்.

மற்ருருவிதம்

சம்பங்கி அத்தர்	8 பையின்ட்
லிமன் ஆயில்	½ அவுன்ஸ்
பர்கமோட் ஆயில்	½ ,,

இவைகளை ஒன்ருய்க் கலந்துகொள்ளவும்

ஜவ்கிளப் எக்ஸ்டிராக்ட்

டோபிரோஸ் அத்தர்	2 அவுன்ஸ்
ரோசஸ்பிரிட்	2 ,,

ரோஸ் எஸ்ஸென்ஸ்	2	அவுன்ஸ்
அம்பர்கிரேஸ் டின்சர்	1½	,,
சிவெட் டின்சர்	2	டிராம்
மஸ்க் டின்க்சர்	2	,,
பர்க்மோன்ட் ஓடோ	30	துளி
கிராம்பு ஓடோ	10	,,

எல்லாம் ஒன்றாய்க் கலந்து கொள்ளவும்.

ஜவ்கி கிளப்

எக்ஸ்டிராட் ஜாஸ்மென்	5	அவுன்ஸ்
கஸ்தூரி சத்து	7	,,
வெகிலா சத்து	½	,,
எக்டிராட்ஸ் ஆப் ஆர்ஸ்	20	,,
ஓடோரோஸ்	½	டிராம்
ஓடோசாண்டல்	1½	,,
ஓடோபர்கோமட்	2½	,,
ஓடோ நரோலி	40	துளி

சாம்ராணி சத்து இவையாவும் 4 பாயின்ட் எடைக்கு வருவதற்கு எவ்வளவு குறைவு ஏற்படுகிறதோ அதற்கு சுத்தமான ஸ்பிரிட்டைக்கொண்டு ஈடுபடுத்திக்கொள்ளவும்.

இந்த பாகத்திலும் இன்னும் பின்வரும் மூன்று பாகங்களிலும், சொற்பளவிற்கு ஸ்பிரிட் சேர்க்கவேண்டிய அவசியமேற்படுங்கால் முதலில் கொஞ்சம் ஜலத்தை சேர்த்துக்கொண்டு பிறகு ஸ்பிரிட்டைக் கலந்து இறுத்திக்கொள்ளவும்.

மற்றொருவிதம்

கஸ்தூரி சத்து	1½	பையின்ட்
சாம்ராணி சத்து	½	அவுன்ஸ்
ஆரென்ஞ் புஷ்பசத்து	4	,,
ஓடோ ரோஸ்சத்து	2	டிராம்
ஆல்கோஹல்	1	காலன்
ஜலம்	½	பயின்ட்

ஆலகோஹலினால் அவை கரைந்து ஜலரூபத்தை அடையும் வரையில் ஜலம் போடலாகாது.

மற்றொருவிதம்

பர்கமட் ஆயில்	2 அவுன்ஸ்
லவென்டர் ஆயில்	½ ,,
கஸ்தூரி சத்து	2 ,,
சாம்ராணி சத்து	2 ,,
ஆல்கோஹல்	2 காலன்
ஜலம்	3 பைன்ட்

இவற்றின் கலப்பை ஏற்படுத்திக் கொள்ளவும்.

மற்றொருவிதம்

ஸ்பிரிட் ஆப்ரோஸ்	4 அவுன்ஸ்
எஸென்ஸ் ஆப்டோபி ரோஸ்	4 ,,
எஸென்ஸ் ஆப்கேசி	2 ,,
எஸென்ஸ் ஆப்ஜாஸ்மென்	1 ,,
எஸென்ஸ் ஆப்ஆரென்ஞ்பிளவர்	1 ,,
டின்சர் ஆப்ஸீவட்	2 ,,
டின்சர் ஆப்மஸ்க்	1 ,,

இவையாவும் ஒன்றாய்க் கலந்து கொள்ளவும்.

ஆலிவ்பரிமளம்

திராக்ஷை சாராயம்	1 பைண்ட்
பிரான்சி ஓடோ ஆப்லவண்டர்	1 அவுன்ஸ்
எக்ஸ்டிராட் ஆப் அம்பர்கிரேஸ்	2 ,,

யாவற்றையும் சேர்த்துகலந்து கொள்ளவும்

எஸ்ஸென்ஸ் ஆப் லவண்டர்

ஆலிவ் ஆயில்	1 அவுன்ஸ்
ரெக்டிபைட்ஸ்பிரிட்	½ பாயின்ட்

இவை இரண்டும் ஒன்றாய்க் கலந்து கொள்ளும்வரை கலக்கிக் கொண்டிருக்கவும். இவைகளுடன் அம்பர்கிரேஸ் எஸென்ஸ் ஆப் மஸ்க் இவற்றின்சில துளிகளை விட்டுக் கலக்கிக்கொண்டால் வாசனை இன்னும் அதிகரித்துவிடும்.

லாவெண்டர் எக்ஸ்டராட்

ஆலிவ் ஆயில்	4	டிராம்
எஸென்ஸ் ஆப்ரோஸ்	2	அவுன்ஸ்
டிஅல்கோஹல்	14	,,

இவற்றின் கலப்பை தயாரித்துக் கொள்ளவும்.

எலுமிச்சை

இச்செடி இந்தியாவில் ஏராளமாய் பயிராகிறது. இதன் வாசனை மிக்க இன்பகரமானது. இதன்தோல் விதை இலைகளி னின்றும் எடுக்கும் எண்ணெயும் வாசனை சரக்குகளில் உபயோகப் படுகிறது.

எஸென்ஸ் ஆப்லிமன்

எஸென்ஸ் ஆப்லிமன்	4	டிராம்
கார்பனேட்மக்னேஷியா	4	,,
ஜீனி	4	,,
டி ஆல்கோஹல்	8	அவுன்ஸ்
ஜலம்	8	,,

மேற்கண்ட ஆயில்களை 2 அவுன்ஸ் அல்கோஹல்லுடன் கலந்து கொள்ளுங்கள். மக்னேஷியா சீனி இந்த இரண்டையும் தனியே ஒன்றுபடுத்திக் கொள்ளுங்கள். இறுதியாக ஜலத்தையும் ஆல்கோ ஹலையும் சிறுகச் சிறுக கலந்துகொண்டு போங்கள் இக்கலப்பு மருந்துகளிலும் சேர்க்கப்படுகிறது.

வெண்தாமரை புஷ்பம்

எஸென்ஸ் ஆப்டோபேரோஸ்	8	அவுன்ஸ்
எஸென்ஸ் ஆப்ஜாஸ்மென்	1	,,
எஸென்ஸ்ஆப் ஆரன்ஞ்பிளவர்	1	,,
எஸென்ஸ்ஆப் கான்சி	2	,,
எஸென்ஸ் ஆப்ரோஸ்	2	,,
டினசர் ஆப் வெனிலா	1	,,
கசப்பு பாதம் ஆயில்	2	துளி

எல்லாம் ஒன்றாய்க்கலந்து கொள்ளவும்.

மலைத்தாமரை அத்தர்

சம்பங்கி சத்து	100	பங்கு
எக்ஸ்டிராட் ஆப்எலின்	15	,,
வெள்ளை ஏலக்காய்	15	,,

ஆயில் ஆப் ஆர்ஸ் சிறத்துக்கு ஏற்றவாறு முதலில் ஏலரிசியை செவ்வனே அறைத்துக் கொள்ளுங்கள். பிறகு எல்லா சரக்குகளை யும் ஒன்ருய் கலந்து கொண்டு இறுத்தி பாட்டலில் அடைத்துக் கொள்ளவும்.

மேரீஸ்டுவார்ட் நெம்பர். 1

மஸ்க் எக்ஸ்டிராட்	4	அவுன்ஸ்
கஸ்தூரி எக்ஸ்டிராட்	4	,,
சாம்ராணி சத்து	4	,,
ஆரெஞ்சு புஷ்பச்சத்து	16	,,
ரோஸ் அத்தர் அல்லது ரோஜா தைலம்	60	துளி
பர்கமட் ஆயில்	60	,,
எக்ஸ்டிராட் டோன்கா	4	அவுன்ஸ்
ஆல்கோஹல்	1	காலன்
ஜலம்	1	பைன்ட்

மேற்படி மற்ருெரு விதம்

எக்ஸ்டிராட்டோன்கா 4 அவுன்ஸ். இது இரவில் உபயோ கிக்கப்படுகிறது.

மங்கோலியா நெம். 1

ஓடோரோஸ்	1	டிராம்
டர்கிஸ்ஜிரேனியம் ஆயில்	1	,,
எக்ஸ்டிராட்டோன்கா	4	அவுன்ஸ்
எக்ஸ்டிராட்டோசிவட்	1	,,
எக்ஸ்டிராட் ஆப்மஸ்க்	3	,,
எக்ஸ்டிராட் ஆரென்ஞ் பிளவர்	6	,,
வெனிலா சத்து	6	,,
ஆல்கோஹல்	½	காலன்
ஜலம்	4	அவுன்ஸ்

முதலில் சரக்குகளை ஆல்கோஹலில் கலந்து கொண்டு அப்பால் தண்ணீரைச் சேர்த்து தயாரித்துக் கொள்ளவும்.

மங்கோலியா நெம். 2

பர்கோமட் ஆயில்	2	அவுன்ஸ்
வெனிலா சத்து	8	,,
டோன்காசத்து	2	,,
கஸ்தூரி சத்து	1	,,
சாம்ராணி சத்து	1	,,
ஆல்கோஹல்	2	காலன்
ஜலம்	3	பைன்ட்

இவைகளை யாவும் ஒன்றாய்க் கலந்து கொள்ளவும்.

மங்கோலியா நெம். 3

எக்ஸ்டிராட் ஆப் ஓட்ஸ்	2	அவுன்ஸ்
எக்ஸ்டிராட் ஆப்டோபிரோஸ்	4	,,
வெனிலா சத்து	4	,,
கஸ்தூரி சத்து	2	,,
வர்ஜீனியா வோடோ ரோஸ்	1	டிராம்
ஓடோகரோலி	1¼	,,
ஓடோ-பீ-மன்டோ	12	துளி
சாம்பிராணி சத்து	1	டிராம்

எல்லா சரக்குகளும் 4 பைன்ட் எடைக்கு வரும் வரையில் சுத்தமான ஸ்பிரிட்டை கலந்து கொள்ளவும்.

மில்லீ பிளவா

எக்ஸ்ராட் ஆரென்ஞ் பிளவர்	1	பைன்ட்
மஸ்க் எக்ஸ்டிராட்	1	அவுன்ஸ்
சாம்ராணி சத்து	1	,,

எல்லாம் ஒன்றாய் கலக்கிக் கொள்ளவும்.

மேற்படி நெம். 2

ஓடோ ரோஸ்	1	டிராம்
ஓடோ சிகப்பு	1	,,
ஓடோ ஆரஞ்சு	1	,,

ஓடோ பிமன்டோ	20	துளி
எக்ஸ்டிராட் ஓட்ஸ்	6	அவுன்ஸ்
எக்ஸ்டிராட் சிடி ரக்ஸ்	1	,,
எக்ஸ்டிராட் ஜாஸ்மென்	2	,,
எக்ஸ்டிராட் டோன்கா	4	,,

எல்லாம் 4 பைன்ட் எடைக்கு வருமாறு சுத்தமான ஸ்பிரிட் கலந்து கொள்ளவும், அதாவது இவற்றின் மிக்ஸ்சர் கலந்து கொள்ளவும்.

ஹூஸாரா அத்தர்

ஸ்பிரிட் ஆப் ரோஸ்	3	அவுன்ஸ்
எஸென்ஸ் ஆப் ரோஸ்	1	,,
எஸென்ஸ் ஆப் ஜாஸ்மென்	4	,,
எஸென்ஸ்ஆப் ஆரென்ஞ் பிளவர்	2	,,
எஸென்ஸ் ஆப் கேஸி	2	,,
டின்சர் ஆப் ஆர்ஸ்	2	,,
டின்சர் ஆப் டோன்கா	4	டிராம்
டின்சர் ஆப் அம்பர்கிரீஸ்	4	,,
டின்சர் ஆப் மஸ்க்	4	,,
கசப்பு பாதாம் ஆயில்	3	துளி
நரோலி ஆயில்	3	,,
கிராம்பு தைலம்	3	,,
பர்கோமட் ஆயில்	120	,,

எல்லா சரக்குகளையும் கலந்து மிக்ஸ்சர் ஆக்கிக் கொள்ளவும்.

கஸ்தூரிப்பை

இது ஒரு வகை மான் வயிற்றிலிருந்து எடுக்கப்படுகிறது; வாசனையில் காரமும் சாரமும் கொண்டுள்ளது. இந்த மான் டாடர் தேசத்தில் அதிகம் உண்டு. பல்வேறு இடங்களில் தென்படுகிறதாயினும், டாடார் மான் தானே சிலாக்கிய மானது. அதன் வயிற்றினுள் பக்தைப் போல் உருண்டையான தோர்பை உண்டு. அதனுள் கஸ்தூரியாகிறது; நிறம் கருப்பானது வெடி மருந்து துணுக்களைப் போல் இருந்து வரும் கஸ்தூரியே யாவற்றிலும் உயரியதென மதிக்கப்படுகின்றது.

டின்க்ஷர் ஆப் மஸ்க்

கஸ்தூரி	2 டிராம்
வெக்கீர்	1 அவுன்ஸ்
டி. ஆல்கோஹல்	15 ,,

கஸ்தூரியை வெக்கீரில் கலக்கிக் கொள்ளவும். அப்பால் அதில் ஆல்கோஹல் சேர்த்து பாட்டிலில் அடைத்துக் கொள்ளவும்.

மேற்படி மற்றொரு விதம்

டின்க்சர் ஆப்மஸ்க்	11 அவுன்ஸ்
ஸ்பிரிட் ஆப் ரோஸ்	4 ,,
டின்க்சர் ஆப் கஸ்தூரி	1 ,,

எல்லாம் பாட்டலில் போட்டு கலக்கி வாயை அடைத்து வெய்யிலிலோ அல்லது சூடானதோர் விடத்திலோ வைத்து விடவும். எல்லாம் ஒன்றாய் கலந்து கொண்டதும் எடுத்துக் கொள்ளவும்.

கஸ்தூரி கலப்பு அத்தர்

எக்ஸ்டிராட் ஆப் மஸ்க்	1 பைன்ட்
எக்ஸ்டிராட் ஓட்ஸ்	6 அவுன்ஸ்
எக்ஸ்டிராட் வெனிலா	2 ,,
எக்டிராட் சிடிராக்ஸ்	2 டிராம்
ஓடோ சாண்டல்	1 ,,
ஓடோ பர்கோமட்	2 ,,
ஓடோ நேரோலி	10 துளி
ஓடோ பசோலினி	12 ,,
ஓடோ சீமை லவன்டர்	15 ,,
ஓடோ சினமன்	6 ,,

எல்லா சரக்குகளின் எடையும் 4 பைன்டுக்கு வரும் அளவிற்கு ஏற்படும் குறைவை சுத்தமான ஸ்பிரிடைக் கொண்டு பூர்த்தித்துக் கொள்ளவும்.

மற்றொரு விதம்

கஸ்தூரிபை	1 டிராம்
வெக்கீர்	4 ,,
ஆல்கோஹல்	1 அவுன்ஸ்

கஸ்தூரியை முதலில் வெந்நீரில் கரைத்துக் கொள்ளவும். அப்பால் ஆல்கோஹால் கொஞ்சங் கொஞ்சமாய் ஊற்றிக் கொண்டு போய் மிக்ஸர் தயாரித்துக் கொள்ளவும்.

கஸ்தூரி எக்ஸ்டிராக்ட்

சிவட் டின்சர்	2 அவுன்ஸ்
ரோஸ் ஒடோ	10 துளி
ஆல்கோஹால்	1 அவுன்ஸ்

இக்கலப்பு மிகவும் உயரியதாயும் மனோரம்மியமாயும் இருக்கத் தக்கதாகும்.

மஸ்க் அதாவது கஸ்தூரி எக்ஸ்டிராட் மற்றொருவிதம்

கஸ்தூரியை	2 டிராம்
லிக்கர் பொடஸி	½ அவுன்ஸ்
புரூப்ஸ்பிரிட்	4 அவுன்ஸ்

கஸ்தூரியை முதல் 2 சரக்குகளில் கலக்கிக் கொள்ளவும். ரப்பர் போலாய்விடும். பிறகு அதில் புரூப்ஸ்பிரிட்டை சரக்குகளின் நிறை 1 பைன்ட் வருமளவில் சேர்த்துக் கொள்ளவும்.

பிறகு கொஞ்ச நேரம் வைத்து விட்டால் அதிலுள்ள வண்டல் கீழே போய்த்தங்கிவிடும். அவ்வமயம் மேலிலுள்ள தெளிவான மிக்ஸரை இறுத்திக் கொள்ளவும்.

அடியிலுள்ள வண்டலை மீண்டும் அரைக்கவும். அரைக்கும் போது இறுத்திக் கொண்ட மிக்ஸரை கொஞ்சங் கொஞ்சமாய் விட்டு அரைத்துக் கொண்டே போகவும். மிக்ஸர் முழுவதும் முடிந்து விட்டதும் முன்போல் அதை மீண்டும் அரைத்து, பிறகும் அரைத்துக் கொள்ளுங்கள். இவ்வாறு மென்மேலும் சில தடவை செய்யவும்.

அடுத்தபடியாக அந்த மிக்ஸரை 2 வாரம் கிடக்கவிடவும். இடை இடையே கிளறிக் கொண்டும் போகவும். 2 வாரத்திற்குப் பின் உபயோகிக்கலாம்.

மற்றொருவிதம்

கஸ்தூரி	¼ அவுன்ஸ்
ரெக்டிபைட் ஸ்பிரிட்	1 குவார்ட்

எஸென்ஸ் ஆப்அம்பர்கிரேஸ்	2 அவுன்ஸ்

மேலே கூறப்பட்ட முறைப்படி தயாரித்துக் கொள்ளவும் ஆனால் இது அதை விடமட்டமானது

போலிஹினு அத்தர்

எக்ஸ்டிராட் ஆப் வெனிலா	½ பாயின்ட்
எக்ஸ்டிராட் ஆப் ரோஸ்	1 ,,
எக்ஸ்டிராட் ஆப் பிளவர்ஆப் ஆரேன்ஞ்	½ ,,
எக்ஸ்டிராட் ஆப் டோபேரோஸ்	½ ,,
எக்ஸ்டிராட் காகப்பழம்	2 அவுன்ஸ்

எல்லாவற்றையும் கலக்கிக் கொள்ளவும்.

நரோலி ஸ்பிரிட்

நரோலி தைலம்	4 டிராம்
டி. ஆல்கோஹல்	16 அவுன்ஸ்

இரண்டையும் சேர்த்து குலுக்கி பாட்டிலில் அடைத்துக் கொள்ளவும்.

புதிய வெட்டிவேர் அத்தர்

டோன்கா டின்சர்	4 அவுன்ஸ்
மஸ்க் டின்சர்	1 ,,
சாம்ராணி டின்சர்	1 ,,
ரோஸ் ஸ்பிரிட்	1 ,,
ரோஸ் ஜிரோனியம் ஆயில்	40 துளி
பர்கமட் ஆயில்	40 துளி
ஆல் கோஹல் ரெக்டிபைட்	1 அவுன்ஸ்

எல்லாம் சேர்த்து கலப்பு செய்து கொள்ளவும்.

மற்றொருவிதம்

டின்சர் ஆப் டோன்கா	6 அவுன்ஸ்
ஸ்பிரிட் ஆப் ரோஸ்	3 ,,
எஸென்ஸ் ஆப் ரோஸ்	3 ,,
எஸென்ஸ் ஆப் சம்பங்கி	3 ,,
நரோலி ஆயில்	10 துளி

ரோஸ் ஜிரேனியம் ஆயில்	60 துளி
டி ஆல் கோஹல்	4 அவுன்ஸ்

எல்லாம் சேர்த்து மிக்ஸ்சர் தயாரித்துக் கொள்ளவும்.

மற்றொருவிதம்

எக்ஸ்டிராட் டோன்கா	25 அவுன்ஸ்
எக்ஸ்டிராட் மஸ்க்	6 ,,
எக்ஸ்டிராட் ஓட்ஸ்	8 ,,
எக்ஸ்டிராட் வெனிலா	1 ,,
எக்ஸ் டிராட் சிடிராக்ஸ்	1 டிராம்
ஓடோபர்கா மோட்	1 டிராம்
ஓடோ நரோலிபசோலி	10 துளி
ஓடோ சாண்டல்	1 டிராம்
சாம்ராணி ஆசிட்	1½ டிராம்

எல்லாவற்றையும் எடை 4 பைன்டுக்கு வருமளவில் சுத்த ஸ்பிரிட் சேர்த்துக்கொள்ளவும்.

மற்றொருவிதம்

ஜீரேனியம் தழைத்தைலம்	2 டிராம்
டர்கிஷ் ஜிரேனியம்	2 டிராம்
வெள்ளை ரோஸ் எக்ஸ்டிராட்	1 குவார்ட்
எக்ஸ்டிராட் ஆரென்ஞ் பிளவர்	1 பைன்ட்
டோன்கா எக்ஸ்டிராட்	8 அவுன்ஸ்
ஆல் கோஹல்	2 குவார்ட்
எக்ஸ்டிராட் வெனிலா	4 அவுன்ஸ்
ஜலம்	4 ,,
மஸ்க் எக்ஸ்டிராட்	4 ,,

முறைப்படி யாவற்றையும் கலந்து கொள்ளவும்.

மற்றொருவிதம்

ரோஸ் எக்ஸ்டிராட்	1 அவுன்ஸ்
சாம்ராணி டின்சர்	1 ,,
டோன்காடின்சர்	4 ,,
மஸ்க்டின்சர்	1 ,,

ரோஸ் ஜிரேனியம் ஓடோ	40 துளி
பர்கமட் ஓடோ	40 துளி
ஆல்கோஹல்	1 அவுன்ஸ்

இவையாவும் சாராயத்தில் போட்டு நல்ல விதமாக கலக்கிக் கொள்ளவும்.

இரவு மலர்புஷ்பச் செண்டு

ஸ்பிரிட் ஆப்ரோஸ்	4 அவுன்ஸ்
எஸென்ஸ் ஆப் ஜாஸ்மன்	4 ,,
டின்சர் ஆப் டோன்கா	2 ,,
டின்சர் ஆப் சீவெட்	2 ,,
டின்சர் ஆப் பென்ஸாயின்	4 ,,

இவைகளை ஒன்றாய்க் கலந்து கொள்ளவும்.

மற்றொருவிதம்

எக்ஸ்டிராட் வெனிலா	8 அவுன்ஸ்
எக்ஸ்டிராட் சீவட்	2 ,,
சாம்ராணி சத்து	2 ,,
பர்கமோட் ஆயில்	2 ,,
ஆல்கோஹல்	2 காலன்
ஜலம்	3 பைன்ட்

எல்லா சரக்குகளையும் இளகலான சாராயத்தில் கலந்து கொள்ளவும். அப்பால் ஜலம் சேர்த்து மிக்ஸ்சர் தயாரித்துக் கொள்க.

ஆரஞ்சு

இது ஆசியா ஐரோப்பா கண்டங்களில் ஏராளமாய் பயிராகிறது. இதிலிருந்து 4 விதமாக வாசனை அடையப் பெறுகிறது.

(1) புளிப்பு, இனிப்பு பழபுஷ்பங்களை ஒன்றாய்கலந்து எண்ணெயில் எரித்துக் கொள்ளல்.

(2) தழைகளையும், பச்சைக்காய்களையும் உலர்த்தி எண்ணெ எடுத்தல். அதற்குப் பெயர் நரோலி.

(3) பழங்களை காயவைத்து இயந்திரத்தின் சகாயத்தால் எண்ணெ எடுக்கிறார்கள். இதற்குப் பெயர் ஆயில் ஆப் ஆரஞ்.

(4) இதன் மேல் தோல்களை இயந்திரத்தின் சகாயத்தால் அமுக்கியும் எண்ணெ எடுக்கிறார்கள். அது தனியே ஆரஞ்சு தோல் தைலமென வழங்கப் படுகிறது. சுருங்கக் கூறுமிடத்து இந்த 4 விதங்களுக்கும் கற்மண மூண்டு.

எஸென்ஸ் ஆப் ஆரஞ் பிளவர்

கடைந்த ஆரஞ் புஷ்பங்கள்	16	அவுன்ஸ்
டி ஆல் கோஹல்	16	,,

இரண்டையும் சேர்த்து மிக்ஸ்சர் தயாரித்துக் கொள்ளவும்.

எஸென்ஸ் ஆப் நரோலி

ஆரஞ் தழை எண்ணெ	½	அவுன்ஸ்
ரெக்டிபைட் ஸ்பிரிட்	1	பைன்ட்

இரண்டு சாமான்களையும் ஒன்றாய்ச் சேர்த்துக் கொள்ளவும்.

மற்றொரு விதம்

ஆரஞ் தோல் எண்ணெ	1	டிராம்
நரோலி தைலம்	½	,,
அம்பர் கிரேஸ்	6	கிரைன்
தம்மூல் அக்வைன்	¼	அவுன்ஸ்
ரெக்டிபைட் ஸ்பிரிட்	½	பைன்ட்

எல்லாம் ஒன்றாகக் கலந்து கொள்ளுங்கள்.

ஆரஞ் புஷ்பச் சத்து

ஆரஞ் புஷ்ப எஸென்ஸ்	12	அவுன்ஸ்
எஸென்ஸ் ஆப் கைஸி	2	,,
டின்சர் ஆப் மஸ்க்	2	,,

மிக்ஸ்சர் தயாரித்துக் கொள்ளவும்.

ஆரஞ் பிளவர் ஸ்பிரிட்

ஆரஞ் பிளவர் ஓடோ	40	துளி
ஆல்கோஹல்	8	அவுன்ஸ்

இவ்விரண்டையும் ஒன்றாய்க் கலந்து கொள்ளவும்.

ஆர்ஸ் டின்க்சர்

ஆர்ஸ்	2	அவுன்ஸ்
ஆல்கோஹல்	4	,,

இரண்டின் மிக்ஸ்சர் தயாரித்துக் கொள்ளவும்.

எக்ஸ்டிராட் ஆப் ஆர்ஸ்

தம்மூல் அக்வைன் பொடியாய் அறைத்து ஜலத்தில் கலந்து ஏழு நாள் வரையில் அப்படியே இருக்க விட்டு விடுங்கள். அப்பால் அதை இறுத்திக் கொண்டு அதன் நிறை 4 F அவுன்ஸுக்கு வரும் அளவில் அதில் ஆல்கோஹல் கலந்து கொள்ளுங்கள். இது சாராயத்தில் கலந்துகொண்ட பின்னர் உபயோகத்திற்குக் கொண்டு வரவும்.

மற்றொரு முறை

ஓடோபச்சோலி	2	டிராம்
ஓடோசாண்டல்	40	துளி
ரோஜா எண்ணை	40	,,
எக்ஸ்டிராட் மஸ்க்	8	அவுன்ஸ்
எக்ஸ்டிராட் ஓர்ஸ்	8	,,
எக்ஸ்டிராட் வெனிலா	4	,,
எக்ஸ்டிராட் சிடிரக்ஸ்	2	டிராம்

சுத்த ஸ்பிரிட் மேற்கண்ட சரக்குகளின் எடை 4 பைண்டுக்கு வரும் அளவில் கலந்துக் கொள்ளவும்.

கேத்கி அத்தர் நம்பர் 1

பச்சோலி அத்தர்	3	அவுன்ஸ்
சாம்ராணி சத்து	2	,,
கஸ்தூரி	2	,,
ஆரஞ் புஷ்பசத்து	4	,,
ஆல்கோஹல்	1	காலன்
சுத்த ஜலம்	2	அவுன்ஸ்

இவைகளை ஒன்றாய்க் கலந்துகொள்ளவும்.

மேற்படி நம்பர் 2

பச்சோலி எண்ணெ	1	அவுன்ஸ்
கஸ்தூரி சத்து	1	,,
ஆல்கோஹல்	1	காலன்
ஜலம்	3	பைன்ட்

இவைகளை மிக்ஸ்சர் செய்துக் கொள்ளவும்.

எஸென்ஸ் ஆப் பேச் பிளவர்

லிமன் ஆயில்	1	F. டிராம்
பாதாம் எண்ணெ	8	கிரைன்
ஸ்பிரிட் ஆப் ஆரஞ் பிளவர்	2½	F. அவுன்ஸ்
ஸ்பிரிட் ஆப் ஜாஸ்மென்	5	F. அவுன்ஸ்
ரெக்டிபைட் ஸ்பிரிட்	7	F. ,,

இவையாவற்றையும் ஒன்ருய்க் கலந்துக் கொள்ளவும். 5 நாள் விட்டு வைத்தப்பின் இறுத்திக் கொள்ளவும்.

பிமெண்டோ

இது வால் மிளகின் 2-வது பெயர். இதன் செடி மெக்ஸி கோவிலும் தென் அமெரிக்காவிலும் பயிராகிறது. இதிலிருந்து எண்ணெ எடுக்கிருர்கள்.

கிராம்பின் இலேசான வர்ணம்

எக்ஸ்டிராட் ஜாஸ்மென்	12	அவுன்ஸ்
எக்ஸ்டிராட் ஆர்ஸ்	12	,,
எக்ஸ்டிராட் மஸ்க்	8	,,
ஓடோ ரோஸ்	1	டிராம்
ஓடோ குளோ	2	,,
ஓடோ நரோலி	1	,,
ஓடோ பிமன்டோ	10	துளி
ஓடோ பச்சோலி	20	,,
ஓடோ சாண்டல்	2	டிராம்
நப்ஸோ ஆசிட்	1	,,

சரக்குகளின் நிறை 4 பைண்டுக்கு எட்டும் வரையில் சுத்த மான ஸ்பிரிட் கலந்து கொள்ளவும்.

மற்ருெரு விதம்

எஸென்ஸ் ஆப் ரோஸ்	6	அவுன்ஸ்
எஸென்ஸ் ஆப் கேசி	4	,,
ஸ்பிரிட் ஆரஞ் பிளவர்	4	,,
டின்க்சர் வெனிலா	2	,,
கிராம்புத் தைலம்	10	துளி

இவை யாவற்றையும் மிக்ஸ்சர் செய்து கொள்ளவும்.

மற்ருெரு விதம்

கிராம்பு ஸ்பிரிட்	2	டிராம்
வெனிலா டின்க்சர்	½	அவுன்ஸ்
பனப்ஷா எஸென்ஸ்	½	,,
ஆரஞ் பிளவர் ஸ்பிரிட்	1	,,
ரோஸ் ஸ்பிரிட்	1	,,

எல்லாவற்றையும் கலந்துக் கொள்ளவும்.

மற்ருெரு விதம்

எல்லிங் வாயில்	1	டிராம்
பர்கமட் ஆயில்	2	,,
சாம்ராணி சத்து	2	,,
கஸ்தூரி	2	,,
ரோஜா சத்து	8	அவுன்ஸ்
ஆல்கோஹல்	1½	குவார்ட்.

எல்லாவற்றையும் கலந்து மிக்ஸ்சர் செய்துக் கொள்ளவும்.

மிக்ஸ்சர் பித்ஞ அத்தர்

உயரிய பித்ஞ அத்தர்	½	அவுன்ஸ்
எஸென்ஸ் ஆப் டேலே ரோஸ்	5	,,
எஸென்ஸ் ஆப் ஆரஞ்	5	,,
எஸென்ஸ் ஆப் ரோஸ்	5	அவுன்ஸ்
டின்க்சர் ஆப் டோன்கா	1	,,

எல்லாவற்றையும் கலந்துகொள்ளவும்.

ரன்டோலேடியா

இதோர் விசேஷ பரிமள மிக்ஸ்சராகும்

டின்சர் ஆப் மஸ்க்	4	டிராம்
டின்சர் ஆப் அம்பர் கிரீஸ்	4	,,
டின்சர் ஆப் வெனிலா	4	,,
பர்கோமட் ஆயில்	1	,,
ஆலிவ் ஆயில்	2	,,
கிராம்பு தைலம்	1	,,
ரோஜா எண்ணை	30	,,
டி-ஆல்கோஹால்	4	அவுன்ஸ்

இவற்றின் மிக்ஸ்சர் தயாரித்துக் கொள்ளவும்.

மற்றொரு விதம்

ஓடோலவெண்டர்	1	அவுன்ஸ்
ஓடோகிளவ்ஸ்	½	,,
ஓடோபர்கோமட்	½	,,
ஓடோரோஸ்ஜிரேனியம்	2	டிராம்.
ஓடோசாண்டல்	1	,,
ஓடோசினமன்	20	துளி
கஸ்தூரி சத்து	2	அவுன்ஸ்
ஆர்ஸ் சத்து	4	,,
வெனிலா சத்து	2	,,
பென்ஸாயின் ஆசிட்	1	டிராம்
சுத்த ஸ்பிரிட்	4	பைன்ட்

யாவற்றையும் சேர்த்து கலந்துகொள்ளவும்.

மற்றொரு விதம்

லாவெண்டர் ஓடோ	1	டிராம்
கிளோஸ் ஓடோ	15	துளி
பர்கோமட் ஓடோ	30	,,
மஸ்க்டின்க்சர்	2	டிராம்
வெனிலா டின்க்சர்	2	,,
அம்பர் கிரீஸ் டின்சர்	2	,,

ரோஸ் ஸ்பிரிட்	1½	அவுன்ஸ்
ஆல்கோஹல்	8	,,

இவற்றின் மிக்ஸ்சர் தயாரித்துக்கொள்ளவும்.

ரோஸ் அத்தர்

ரோஜாவை அரச புஷ்பமெனச் சொல்லுகிறார்கள். ஏனெனில் இதன் வாசனை மனோரம்மியமாயும், உற்சாகத்தையும் உண்டு பண்ணக்கூடியதாயுமாகிறது. இது உலகம் முழுவதிலும் உண்டாகிறதாயினும் ரோம், பிரான்சு, இந்தியா ஆகிய நாடுகளில் பரிமளத்திற்கென தனியே பயிரேற்றப்பட்டு வருகிறது. இந்நாடுகளிலுள்ள புஷ்பமே யாவற்றிலும் சிறந்ததெனக் கருதப்படுகிறது. இதை ஜலத்தில் கலந்துவாலையின் மூலம் முறைப்படி எடுக்கப்படும் அத்தர் மிகவும் உயரியதாகிறது. இதை தர்மா மீட்டர் சகாயத்தால் 80 டிக்ரி சூட்டில் சூடேற்றப்பட்டபின் அது மிகவும் இளகலாய் விடுகிறது. இதன் வாசனையைக் கொண்டு அநேக வித அத்தர்கள் சென்ட்டுகள் தயாரிக்கப்படுகின்றன.

எஸென்ஸ் ஆப் ரோஸ்

ரோஸ் போமேட்	16	அவுன்ஸ்
டி-ஆல்கோஹல்	8	,, முதல்,
	16	,, வரை

கலந்துக் கொள்ளவும்.

ஸ்பிரிட் ஆப் ரோஸ்

ரோஜா எண்ணெ	2	டிராம்
ஜிரேனியம், ரோஜா எண்ணெ	1	,,
டி-ஆல்கோஹல்	16	அவுன்ஸ்

எல்லாவற்றையும் மிக்ஸ்சர் செய்துக் கொள்ளவும்.

மற்றொரு விதம்

ரோஸ் ஓட்டோ	50	துளி
ரோஸ் ஜிரேனியம் ஓடோ	40	,,
அல்கோஹல்	8	அவுன்ஸ்

மிக்ஸ்சர் தயாரித்துக்கொள்ளவும்.

மாஸ் ரோஸ்

எக்ஸ்டிராட் ரோஸ்	4	பைன்ட்
டர்கிஷ் ரோஸ்	½	அவுன்ஸ்
ஓடோ ரோஸ்	½	டிராம்
கஸ்தூரி சத்து	1	அவுன்ஸ்
சாம்ராணி சத்து	½	,,
ஆல்கோஹல்	½	காலன்
ஜலம்	4	அவுன்ஸ்

முதலில் சரக்குகளை ஆல்கோஹலில் கலந்து கொண்டபின், ஜலம் சேர்க்கவும்.

மற்றொரு விதம்

ரோஸ் ஸ்பிரிட்	3	அவுன்ஸ்
ஆரஞ் பிளவர் எஸென்ஸ்	3	,,
எஸென்ஸ் ஆப் ரோஸ்	2	,,
டின்க்சர் ஆப் சிவெட்	1	,,
டின்க்சர் ஆப் மஸ்க்	1	,,

யாவற்றையும் சேர்த்து மிக்ஸ்சர் தயாரித்துக் கொள்ளவும்,

மற்றொரு விதம்

ஸ்பிரிட் ஆப் ரோஸ்	9	அவுன்ஸ்
எஸென்ஸ் ஆப் ஆரஞ் பிளவர்	3	,,
எஸென்ஸ் ஆப் ரோஸ்	2	,,
டின்க்சர் ஆப் சிவெட்	1	,,
டின்க்சர் ஆப் மஸ்க்	1	,,

இவையாவற்றையும் ஒன்றாய்க் கலந்துக்கொள்ளவும்.

மற்றொரு விதம்

ஓடோ ரோஸ்	2	டிராம்
ஓடோ சாண்டல்	2	,,
சாம்பிராணி ஆசிட்	1	,,
எக்ஸ்டிராட் ஆப் மக்ஸ்	2	அவுன்ஸ்
எக்ஸ்டிராட் ஆப் வெனிலா	4	,,
எக்ஸ்டிராட் ஆப் ஓட்ஸ்	2	,,
எக்ஸ்டிராட் ஆப் ஜாஸ்மென்	4	,,

இந்த சாமான்களின் நிறை 4 பைன்டுக்கு வருமளவில் சுத்தமான ஸ்பிரிட் கலந்துகொள்ளவும்.

டீரோஸ்

எஸென்ஸ் ஆப் ரோஸ்	4	அவுன்ஸ்
ஸ்பிரிட் ஆப் ரோஸ்	8	,,
ஸ்பிரிட் ஆப் சாண்டல்	2	,,
எஸென்ஸ் ஆப் ஆரஞ் பிளவர்	1	,,
டின்க்சர் ஆப் ஓட்ஸ்	1	,,
ஜிரேனியம் ரோஸ் ஆயில்	20	துளி

மிக்ஸ்சர் தயாரித்துக் கொள்ளவும்.

எஸென்ஸ் ஆப் டீரோஸ்

ஸ்பிரிட் டி ரோஸ்	1	பைன்ட்
ஸ்பிரிட் டி டிர்ப்லி	1	,,
எக்ஸ்டிராட் ஆப் ரோஸ் ஜிரேனியம்	1	,,
எக்ஸ்டிராட் ஆப் சாண்டல்	½	,,
எக்ஸ்டிராட் ஆப் கரோஸி	¼	,,
எக்ஸ்டிராட் ஆப் ஓட்ஸ்	¼	,,

இவற்றை ஒன்ருய்க் கலந்துக்கொள்ளவும்.

வைட்ரோஸ்

டர்கிஷ் ஜிரேனியம் ஆயில்	2	அவுன்ஸ்
பர்கோமட்	2	,,
சாம்ராணி சத்து	2	,,
வெனிலா சத்து	2	,,
ஆல்கோஹல்	2	காலன்
தண்ணீர்	2	பைன்ட்

இவையாவும் சாராயத்தில் கலந்து கொள்ளவும்.

மற்ருெரு விதம்

ஸ்பிரிட்ரோஸ்	8	அவுன்ஸ்
எனென்ஸ் ஆப் ரோஸ்	3	,,
எஸென்ஸ் ஆப் ஜாஸ்மென்	4	,,
எக்ஸ்டிராட் ஆப் பசோலி	1	,,

எல்லாம் கலந்து கொள்ளவும்.

மற்றொரு விதம்

ஓடோ ரோஸ்	2	டிராம்
எக்ஸ்டிராட் ஆரெஞ் பிளவர்	2	அவுன்ஸ்
எக்ஸ்டிராட் கஸ்தூரி	1	,,
சாம்ராணி சத்து	1	,,
வெனிலா சத்து	½	,,
உயரிய பன்னீர்	1	டிராம்
ஆல்கோஹல்	2½	குவார்ட்
ஜலம்	3	அவுன்ஸ்

எல்லாவற்றையும் கலந்து கொள்ளவும்.

மற்றொரு விதம்

ரோஜா எண்ணெ	2	டிராம்
ஜிரேனியம் ஆயல்	30	துளி
ரோஜா எஸென்ஸ்	4	அவுன்ஸ்
டி. ஆல்கோஹல்	16	,,
எஸென்ஸ் ஆப் ஜாஸ்மென்	2	,,
டின்க்சர் ஆப் மஸ்க்	1	,,
டின்க்சர் ஆப் அம்பர்கிரீஸ்	1	,,

இவைகளை ஒன்றாய் கலந்து கொள்ளவும்.

மற்றொரு விதம்

ரோஸ் ஸ்பிரிட்	4	அவுன்ஸ்
பனப்ஷா எஸ்ஸென்ஸ்	2	,,
எஸென்ஸ்	2	,,
எஸென்ஸ் ஆப் ஜாஸ்மைன்	2	,,
பச்சோலி எக்ஸ்டிராட்	½	,,

இவைகளை ஒன்றாய் கலந்து கொள்ளவும்.

மற்றொரு விதம்

ஓடோ ரோஸ்	2	டிராம்
,, சேதார்வெட்	6	துளி
,, பச்சோலி	4	,,
,, ஆரெஞ்	½	டிராம்

எக்ஸ்டிராட் போடோ ரோஸ்	2	அவுன்ஸ்
கப்ஸோஎக் ஆசிட்	1	டிராம்
எக்ஸ்டிராட் ஓட்ஸ்	2	அவுன்ஸ்
,, ஜாஸ்மென்	2	,,
,, மஸ்க்	2	,,

இவைகளை மிக்ஸ்சர் தயாரித்துக் கொள்ளவும்

ரோஸ் சாண்டல்

சந்தன எண்ணெ	2	அவுன்ஸ்
ஆல்கோஹல்	1½	காலன்
வெள்ளை ரோஜா சத்து	1	,,

இம்மூன்றையும் ஒன்ருய்க் கலந்து கொள்ளவும்.

பசோலி

இச்செடி வங்காளத்தில் அதிகம் பயிராகிறது. ஜாவா, இலங்கை, சீன தேசத்திலும் உண்டாகிறது. புதிய தழைகளினின்றும் தைலம் எடுக்கப்படுகிறது இதன் வாசனை மனோரம்மியமானது. இதை இதர வாசனை சரக்குகளுடன் சேர்க்கப்படுமாயின் அவற்றின் வாசனையை அதிகம் எடுத்துக் காட்டும்.

பச்சோலி அத்தர்

பச்சோலி எண்ணெ	75	துளி
ரோஜா எண்ணெ	15	,,
டி ஆல்கோஹல்	16	அவுன்ஸ்

இவைகளின் மிக்ஸ்சர் தயாரித்துக் கொள்ளவும்.

சாண்டல் எக்ஸ்டிராட்

சாண்டல் ஓடோ	3	டிராம்
ரோஸ் ஓடோ	10	துளி
ஆல்கோஹல்	8	அவுன்ஸ்

எல்லாம் சேர்த்து மிக்ஸ்சர் தயாரித்துக் கொள்ளவும்.

ஸ்பிரிட் ஆப் சாண்டல்

சாண்டல் ஆயில்	2	டிராம்
டி ஆல்கோஹல்	16	அவுன்ஸ்

இவ்விரண்டு சரக்குகளின் மிக்ஸ்சர் தயாரித்துக் கொள்ளவும்

டோன்கா

இப்பெயர் கொண்ட விருக்ஷம் தென் அமெரிக்காவில் உண்டாகிறது. அதன் விதை டோன்கா எனப்படுகிறது. இப்பழம் பழுக்கையில் அதிலிருந்து நல்ல வாசனை வெளியாகிறது. இதன் டின்க்சர் பெரும்பாலும் உபயோகப்படுகிறது.

ஸ்பிங் பிளவர்

எக்ஸ்டிராட் ஓட்ஸ்	4 அவுன்ஸ்
,, ஜாஸ்மைன்	4 ,,
,, மஸ்க்	4 ,,
ஓடோ பர்கமட்	2 ,,
ஓடோ நரோலி	½ டிராம்
,, தர்பேனு	10 துளி
,, ரெட்செட் அர்வுட்	1 டிராம்
நப்சோ எக் ஆசிட்	1 ,,

இச்சரக்குகளின் எடை 4 பைன்ட்டுக்கு வருமளவில் ஸ்பிரிட் கலந்து கொள்ளவும்.

மற்றொரு விதம்

எஸென்ஸ் ஆப்ரோஸ்	7 அவுன்ஸ்
எஸென்ஸ் ஆப்பனப்ஷா	1 டிராம்
பர்கமோட் ஆயில்	1 ,,
ஸ்பிரிட் ஆப் ரோஸ்	1 அவுன்ஸ்
டின்சர் ஆப் அம்பர்கிரீஸ்	1 ,,
எஸென்ஸ் ஆப் கேசி	1 ,,

யாவற்றையும் சேர்த்து மிக்ஸ்சர் தயாரித்துக் கொள்ளவும்.

மற்றொரு விதம்

எக்ஸ்டிராட் ஆப் ரோஸ்	1 பைன்ட்
,, ,, வாய்வலட்	1 ,,
,, ,, ரோஸ்திர் போலி	2½ ,,
எக்ஸ்டிராக்ட் காசி	2½ அவுன்ஸ்

ஓடோ பர்கமிட்	2	டிராம்
எக்ஸ்டிராட் அம்பர்கிரீஸ்	1	அவுன்ஸ்

யாவற்றையும் ஒன்றாக கலந்து கொள்ளவும்.

மற்றொரு விதம்

ரோஸ் எஸென்ஸ்	2	அவுன்ஸ்
டோபே ரோஸ் எஸென்ஸ்	2	அவுன்ஸ்
ரோஸ் ஸ்பிரிட்	2	,,
மஸ்க் டின்க்சர்	½	,,
அம்பர் கிரீஸ் டின்க்சர்	1½	,,
கிளவ்ஸ் ஓடோ	10	துளி
பர்கோமோட் ஓடோ	½	டிராம்

எல்லாவற்றையும் சேர்த்து மிக்ஸ்சர் தயாரித்துக் கொள்ளவும்.

ஸ்டிபா நோட்ஸ்

எக்ஸ்டிராட் கேசி	113	கிராம்
,, ஆப் டோபேரோஸ்	113	,,
,, ,, ஜாஸ்மைன்	56	,,
,, ,, மஸ்க்	326	,,
,, ,, இர்ஸ்	226	,,
,, ,, டோன்கா	85	,,
எஸென்ஸ் ,, ரோஸ்	1	,,
,, ,, நரோலி	1	,,
பப்லோயிக் ஆசிட்	1	கிராம்
ஆல்கோஹல்	2	லாடேர்

எல்லாவற்றையும் சேர்த்து மிக்ஸ்சர் தயாரித்துக்கொள்ளவும்.

மற்றொருவிதம்

எக்ஸ்டிராட் ஆப் கேசி	4	அவுன்ஸ்
,, ,, டோபேரோஸ்	4	,,
,, ,, ஜாஸ்மைன்	2	,,
,, ,, மஸ்க்	8	,,
,, ,, ஓட்ஸ்	8	,,
,, ,, டோன்கா	3	,,

ஓடோ ரோஸ்	1	டிராம்
,, கரோலி	½	,,
கப்சோயி ஆசிட்	1	,,

இந்த சாமான்களின் மிக்ஸ்சரிடை 4 பைண்டுக்கு வருமளவில் சுத்தஸ்பிரிட் கலந்து கொள்ளவும். அதாவது சரக்குகளை யாவும் பாட்டலில் அதன்மேல் ஸ்பிரிட் ஊற்றினால் எல்லாம் ஒன்றாய் கலந்து கொள்ளவும்.

ஸ்டோலன் இஸ்டர்

எக்ஸ்டிராட் ஜான்கவால்	1	குவார்ட்
,, ஓர்ஸ்	1	,,
,, டோன்க்வான்	1	பாயின்ட்
,, ரோஸ்டிர்போலி	1	,,
,, அகாஷியா	1	,,
,, ஸீவட்	¼	,,
,, அம்பர்கிரீஸ்	¼	,,
ஓடோ ஆப்ஸ்டானீலா	1	டிராம்
,, ஆப்வர்பீனு	½	,,

இவைகளை எல்லாம் ஒன்றாய் கலந்து கொள்ளவும். இதன் வாசனை ஆங்கிலேயர்களுக்கு மிகவும் பிடித்தமானது.

எக்ஸ்டிராட் டோன்கா

டோன்கா காய்கள் 1 பவுண்டுவாங்கி அவற்றை செவ்வனே பொடி செய்து கொள்ளுங்கள். அப்பால் பாட்டலில்போட்டு ஆல்கோஹல் ஊற்றுங்கள். எல்லா எடையும் 1 காலனுக்குவந்து விட வேண்டும். டோன்கா சாராயத்தில் கலந்து கொண்டவுடன் அதை தெளிவு படுத்திக்கொள்ளுங்கள்.

நர்கிஸ் மிக்ஸ்சர்

எக்ஸ்டிராட்டோபே ரோஸ்	1	பைன்ட்
பனப்ஷாசத்து	1	,,
எக்ஸ்டிராட்ரோஸ்	½	,,
,, ஓர்ஸ்	3	அவுன்ஸ்
ஓடோ ஆல்மென்	3	பைன்ட்

எல்லாவற்றையும் கலந்துகொள்ளவும்.

எக்ஸ்டிராக்ட் சிடிராக்ஸ்

சிடிராக்ஸ் பால்சம்	8	டிராம்
ஆல்கோஹல்	1	பைண்ட்

இந்த இரண்டையும் கலக்கிக்கொள்ளவும்.

சுவாயுவ்

எக்ஸ்டிராக்ட்டோபேரோஸ்	1	பாயின்
எக்ஸ்டிராக்ட் ஜாஸ்மென்	1	,,
,, நேசி	1	,,
வெனிலா (எக்ஸ்டிராட்)	5	அவுன்ஸ்
எக்ஸ்டிராட் மஸ்க்	2	,,
,, அம்பர்கிரீஸ்	2	,,
ஒடோ ஆப் பர்கோமோட்	$\frac{1}{4}$	,,
,, ,, கிளவ்ஸ்	1	டிராம்

இவைகளை ஒன்ருய்கலக்கிக் கொள்ளவும்.

எக்ஸ்டிராட் ஆப்டோகோயன்பீன்

டோகோவைன்பீன்	1	பவுண்டு
ஆல்கோஹல்	1	காலன்

வெனிற்காலத்தில் இரண்டையும் கலந்து ஒரு மாதம்வைக்க ஒன்றுபட்டுவிடும்.

டோபேரோஸ்

இதோர் மரம்; தென்இந்தியாவில் உண்டாகிறது. ஆனல் பிரான்ஸ் தென்பகுதியில் வாசனை எடுப்பதற்கு பயிரேற்றப்படுகிறது. இதன் வாசனை மனதிற்கு உற்சாகத்தை உண்டு பண்ணுவதாகும்.

எஸென்ஸ் ஆப்டோபேரோஸ்

டோபேரோஸ் போமேட்	16	அவுன்ஸ்
டி. ஆல்கோஹல்	16	,,

இரண்டையும் ஒன்ருய் கலக்கிக் கொள்ளவும்.

மற்ருெரு விதம்

எக்ஸ்டிராக்ட்டோபேரோஸ்	24	அவுன்ஸ்
எக்ஸ்டிராக்ட்மஸ்க்	4	,,

எக்ஸ்டிராக்ட் ஜாஸ்மைன்	1	அவுன்ஸ்
ஓடோ ரோஸ்	1	டிராம்
,, நரோலி	10	துளி
கப்ஸோ எக்ஆசிட்	2	டிராம்

சுத்தமான ஸ்பிரிட் (இச்சரக்குகளின் எடை 4 பைன்ட்டுக்கு வரும்வரை) கலந்து கொள்ளவும்.

மற்றொரு விதம்

டோரபேரோஸ் எஸென்ஸ்	4	அவுன்ஸ்
ஓட்ஸ் டின்ச்சர்	½	,,
அம்பர்கிரீஸ் டின்ச்சர்	15	,,

இவற்றின் கலப்பு ஏற்படுத்திக்கொள்ளவும்.

மற்றொரு விதம்

எஸென்ஸ் ஆப் டோரபேரோஸ்	15	அவுன்ஸ்
டின்ச்சர் ஆப் அம்பர்கிரீஸ்	1	,,

இவைகளை மிக்ஸ்சர் செய்துகொள்ளவும்.

மற்றொரு விதம்

எக்ஸ்டிராக்ட்டோரபேரோஸ் பிராம்		
போமேட்	8	பாயின்ட்
சினமன்	8	துளி
பர்கமோட் ஆயில்	½	அவுன்ஸ்

கலந்துகொள்ளவும்.

அபர்டன்

டின்ச்சர் ஆப் வெனிலா	4	அவுன்ஸ்
,, ,, அம்பர்கிரீஸ்	3	,,
,, ,, ஓட்ஸ்	3	,,
ஸ்பிரிட் ஆப்ரோஸ்	3	,,
எஸென்ஸ் ஆப் ஆரெஞ்பிளவர்	3	,,
பர்கமோட் ஆயில்	95	துளி
லிமன் ஆயில்	5	,,

இவைகளை மிக்ஸ்சர் செய்து கொள்ளவும்.

வெனிலா

இது மெக்ஸிகோ நாட்டிலிருந்து வருகிறது; இதன் வாசனை மிகவும் சிறந்தது. வாசனை நீடித்திருப்பதால் பரிமளங்களில் இதை சேர்க்கிறார்கள்.

டின்க்சர் வெனிலா

வெனிலா காய்	1	அவுன்ஸ்
வெள்ளைகற்கண்டு	1	,,
டி. ஆல்கோஹல்	16	,,

இம்மூன்றையும் கலந்துகொண்டு 30 நாளைக்கு பிறகு வடிக் கட்டிக்கொள்ளவும். ஆல்கோஹல் போடுவதற்கு முன்னர் வெனிலா கற்கண்டு இவ்விரண்டையும் செவ்வனே பொடிசெய்து கொள்ள வேண்டும்.

எஸென்ஸ் டி வெனிலா டபின்

வெனிலா	12	அவுன்ஸ்
கிராம்பு	30	கிரைன்
அம்பர் கிரீஸ்	7	,,
கஸ்தூரி	7	,,
ஸ்பிரிட்டம்பர்ட்	1	பைன்ட்

ரெக்டிபைட் ஸ்பிரிட் இவை எல்லாவற்றையும் கலந்து கொள்ளவும்.

வெனிலா டின்க்சர்

வெனிலா கனி	6	T. டிராம்
ஆல்கோஹல்	1	பைன்ட்

வெனிலாவை தடிப்பாக அறைத்து ஆல்கோஹலில் போட்டு விடவும். பிறகு அதை 4 மணி நேரம் வரையில் இளநெருப்பில் எரிக்கவும். அப்பால் வடிகட்டி பாட்டலில் போட்டு ஈரமான வஸ்த்திரத்தை சுற்றி விடவும்.

வர்பீனு

லிமன் கிராஸ் ஆயில்	50	துளி
லிமன் ஆயில்	120	,,
நேரோலி ஆயில்	20	,,

ஆரெஞ் ஆயில்	160	,,
எஸென்ஸ் ஆப் ஆரெஞ் பிளவர்	3	அவுன்ஸ்
எஸென்ஸ் ஆப்டோரபேரோஸ்	3	,,
ஸ்பிரிட் ஆப்ரோஸ்	3	,,
டி ஆல்கோஹல்	6	,,

இவற்றின் மிக்ஸ்சர் தயாரித்துக் கொள்ளவும்.

மற்றொரு விதம்

லிமன் கிராஸ் ஆயில்	3	டிராம்
லிமன் ஆயில்	4	,,
ஆரெஞ் ஆயில்	30	துளி
ஆல்கோஹல்	15	அவுன்ஸ்

இவைகளை கலக்து கொள்ளவும்.

மற்றொரு விதம்

லிமன் கிராஸ் ஆயில்	3	அவுன்ஸ்
பர்கோமோட் ஆயில்	2	,,
கஸ்தூரி சத்து	1	,,
சாம்ராணி சத்து	2	,,
ஆல்கோஹல்	3	காலன்
ஜலம்	3	பைன்ட்

முதலில் சரக்குகளை யாவும், ஆல்கோஹலில் கலக்து கொண்ட பின்னர் ஜலம் சேர்த்து மிக்ஸ்சர் தயாரித்துக் கொள்ளவும்.

மற்றொரு விதம்

வர்பைன் ஓடோ	1	டிராம்
லிமன் ஓடோ	1	,,
ஆல்கோஹல்	8	அவுன்ஸ்

மிக்ஸ்சர் தயாரித்துக் கொள்ளவும்.

மற்றொரு விதம்

ஆல்கோஹல்	1	பைன்ட்
ஓடோ ஆப் லிமென் கிராஸ்	3	டிராம்
,, ,, ஆரெஞ்	2	அவுன்ஸ்

ஓடோ ஆப் ஆரெஞ்பீல்	½ அவுன்ஸ்

இவைகளை ஒன்ருய்க் கலந்து கொள்ளவும்.

எஸென்ஸ் ஆப் வாயுலெட்

வாயுலெட் போமேட்	16 அவுன்ஸ்
ஆல்கோஹல்	16 ,,

இரண்டையும் கலந்து கொள்ளவும்.

மற்ருெரு விதம்

எக்ஸ்டிராட் வாயிலெட்	4 பைன்ட்
,, ஓட்ஸ்	4 ,,
,, ஆரெஞ் பிளவர்	2 அவுன்ஸ்
,, கேஸி	2 ,,
,, எலாங்	1 டிராம்
ஓடோ ரோஸ்	½ ,,
சிவெட்	1 அவுன்ஸ்
பர்கோமோட்	1 டிராம்
ஜலம்	4 அவுன்ஸ்

இவற்றின் மிக்ஸ்சர் தயாரித்துக் கொள்ளவும்.

மற்ருெரு விதம்

எலென் கெம். 10	1 பைன்ட்
எக்ஸ்டிராக்ட் S. கெட்	12 அவுன்ஸ்
,, வெனிலா	4 ,,
,, ஓர்ஸ்	1 பைன்ட்
ஆல்கோஹல்	2 காலன்
ஜலம்	3 பைன்ட்

இவைகளை ஒன்ருய்க் கலக்கிக் கொள்ளவும்.

மற்ருெரு விதம்

எஸென்ஸ் ஆப் வாய்லெட்	11 அவுன்ஸ்
,, ,, கேசி	2 ,,
டின்க்சர் ஆப் மஸ்க்	1 ,,
,, ,, ஓர்ஸ்	2 ,,

எல்லாவற்றையும் கலந்து கொள்ளவும்.

எஸென்ஸ் ஆப் கேசி

எஸென்ஸ் ஆப் கேசி	6	அவுன்ஸ்
,, ,, ரோஸ்	3	,,
,, ,, டோபே ரோஸ்	3	,,
டின்க்சர் ஆப் ஓர்ஸ்	3	,,
ஸ்பிரிட் ஆப் கசப்பு ஆல்மெண்ட்	1	,,

இவைகளை ஒன்ருய்க் கலந்து கொள்ளவும்.

விக்டோரியா

ஒடோ ரோஸ்	2	டிராம்
,, கரோலி	2	,,
,, பர்கோமோட்	4	,,
,, கோரியான்டர்	16	துளி
,, பீமன்டோ	24	,,
,, லாவெண்டர்	16	,,
எக்ஸ்டிராக்ட் ஜாஸ்மென்	2	அவுன்ஸ்
,, ஓர்ஸ்	16	,,
,, மஸ்க்	2	,,
கப்சோயி ஆசிட்	2	அவுன்ஸ்

இவற்றின் மிக்ஸ்சரிடை 4 பைன்ட்டுக்கு வருமளவில் சுத்தமான ஸ்பிரிட் கலந்து கொள்ளவும்.

வாயுலெட் எக்ஸ்டிராட்

வாயுலெட் எஸென்ஸ்	4	அவுன்ஸ்
கேசி எஸென்ஸ்	1	,,
ரோஸ் எஸென்ஸ்	3	டிராம்
ஓர்ஸ் டின்க்சர்	1	அவுன்ஸ்
அம்பர் கிரீஸ்	2	டிராம்
சிவெட் டின்க்சர்	2	,,
ஆல் மெண்டு ஸ்பிரிட்	20	துளி

மிக்ஸ்ச்சர் தயாரித்துக் கொள்ளவும்.

மற்ருெரு விதம்

எக்ஸ்டிராக்ட் ஓர்ஸ்	2	பைன்ட்
,, டோபே	4	அவுன்ஸ்

,, வெனிலா	3 அவுன்ஸ்
எக்ஸ்டிராக்ட் மஸ்க்	3 ,,
,, டோன்கா	2 ,,
ஓடோ ரோஸ்	1 டிராம்
,, நரோலி	40 துளி
,, பீமெண்ட்டோ	12 ,,
,, பர்கோமென்ட்	1 டிராம்
கப்ஸோயிக் ஆசிட்	1 ,,

சுத்தமான சாராயம் 4 பைன்ட் அளவிற்கு சேர்த்துக் கொள்ளவும்.

உட்வாயுலெட்

உட்வாயுலெட் (கெம். 2)	16 அவுன்ஸ்
கசப்பு பாதாம் எண்ணெ	15 துளி

இந்த இரண்டையும் கலக்கிக் கொள்ளவும்.

மற்றொரு விதம்

எக்ஸ்டிராக்ட் ஓர்ஸ்	12 அவுன்ஸ்
,, டோபே ரோஸ்	2 ,,
,, ஜாஸ்மைன்	1 ,,
எக்ஸ்டிராட் ஆப் மஸ்க்	4 அவுன்ஸ்

இவற்றின் மிக்ஸ்சரை செய்துக் கொள்ளவும்.

குஸ்குஸ் (வடிவர்ட்)

இந்தியாவில் இது வெட்டிவேர் எனப்படுகிறது. இதனல் தட்டிகளும் தயாரிக்கப்படுகின்றன. இதிலிருந்து மிக்க வாசனை யுடைய அத்தரும் எடுக்கப்படுகிறது.

வெட்டிவேர் ஸ்பிரிட்

வெட்டிவேர் தைலம்	30 துளி
ஆல்கோஹல்	4 அவுன்ஸ்

இரண்டையும் கலக்துகொள்ளவும்.

ரைபுள் வாலெண்டியர் கார்லெண்ட்

ஆல்கோஹல்	1 பைன்ட்
ஓடோநரோலி	$\frac{1}{4}$ அவுன்ஸ்

,, ரோஸ்	$\frac{1}{4}$	அவுன்ஸ்
,, லாவெண்டர்	$\frac{1}{4}$	,,
,, பர்கோமோட்	$\frac{1}{4}$	,,
கிராம்பு வேரடோ	8	துளி
எக்ஸ்டிராக்ட் ஆப் ஓர்ஸ்	1	பைன்ட்
,, ,, ஜாஸ்மைன்	$\frac{1}{4}$	,,
,, ,, கிஸி	$\frac{1}{4}$	,,
,, ,, மஸ்க்	$2\frac{1}{2}$	அவுன்ஸ்
,, ,, அம்பர் கிரீஸ்	$2\frac{1}{2}$	,,

இவையாவற்றையும் மிக்ஸ்சர் செய்துகொள்ளவும்.

எஸென்ஸ் ஆப் வால் பிளவர் ஆரெஞ்

எக்ஸ்டிராக்ட் ஆப் பிளவர் ஆரஞ்	1	பைன்ட்
,, ,, ரோஸ்	$\frac{1}{2}$	,,
,, ,, கேஸி	$\frac{1}{2}$	,,
,, வெனிலா	$\frac{1}{2}$	,,
ஸ்பிரிட் ஆப் ரோஸ்	1	,,
பாதாம் எண்ணை	5	துளி

எல்லாவற்றையும் கலந்து மூன்று வாரம் வைத்திருந்த பின்னர் உபயோகிக்கவும்.

வெஸ்டெண்ட்

எக்ஸ்டிராட் ஓர்ஸ்	2	அவுன்ஸ்
,, ஜாஸ்மைன்	4	,,
,, மஸ்க்	8	,,
,, காசி	4	,,
,, சிடிராக்ஸ்	1	,,
ஓடோ பர்கோமோட்	3	டிராம்
,, வர்பீனு	15	துளி
,, நரோலி	$\frac{1}{2}$	,,
,, ரோஸ்	1	,,
,, ரெட்செட்அர்	1	டிராம்
கப்சோ எக் ஆட்	1	,,

சுத்த பிராண்டி இந்த மிக்ஸ்சரின் 4 பைன்ட் அளவிற்கு சேர்த்து கொள்ளவும்.

மற்றொரு விதம்

ரோஸ் ஸ்பிரிட்	3	அவுன்ஸ்
சாம்பிராணி டின்க்சர்	1	,,
மஸ்க் டின்க்சர்	1	,,
வர்பீனு எக்ஸ்டிராக்ட்	½	,,
சிவெட் டின்க்சர்	½	,,
சாண்டல் ஓடோ	10	துளி

எல்லாம் ஒன்றாய்க்கலந்துகொள்ளவும்.

மற்றொரு விதம்

ரோஸ் ஸ்பிரிட்	6	அவுன்ஸ்
வர்பீனு எக்ஸ்டிராக்ட்	1	,,
சீமாவெட் டின்க்சர்	1	,,
மஸ்க் டின்க்சர்	2	,,
சாண்டல் ஆயில்	20	துளி

இவைகளின் மிக்ஸ்சர் தயாரித்துக்கொள்ளவும்.

எலாங்

இதற்கு அப்ளாங் என்று சொல்லுகிறார்கள். இச்செடி பிலிபயின் அயிலாண்டில் பயிராகிறது. இந்தியன் ஆர்ச்சி பிலாகோவிலும் அமிதமாக தென்படுகிறது. இதன் புஷ்பங்களி னின்றும் வாசனை எடுக்கப்படுகிறது. இது நல்ல வாசனை உடை யது; வாசனை நீடித்திருக்கும்

ஸ்பிரிட் ஆப் எலாங்

எலாங் ஆயில்	3	டிராம்
ஆல்கோஹல்	14	அவுன்ஸ்

இரண்டையும் கலந்துகொள்ளவும்.

எலாங் எலாங்

எக்ஸ்டிராக்ட் டோன்கா	3	அவுன்ஸ்
,, மஸ்க்	4	,,

,,	டோபே ரோஸ்	4	அவுன்ஸ்
,,	காசி	4	,,
,,	ஓர்ஸ்	8	,,
ஒடோ ஆரஞ்		2	டிராம்
,,	நரோலி	½	,,

மிக்ஸ்சரின் எடை 4 பாயின்டுக்கு வருமளவும் சுத்தமான ஸ்பிரிட் கலந்துகொள்ளவும்.

மற்றொரு விதம்

ஸ்பிரிட் ஆப் எலாங்		8	அவுன்ஸ்
,, ,,	ரோஸ்	4	,,
எஸென்ஸ் ,,	ஜாஸ்மென்	2	,,
டின்க்சர் ,,	ஸீமாவட்	2	,,

எல்லாம் ஒன்றுபடுத்திக் கொள்ளவும்.

மற்றொரு விதம்

எலாங் ஆயில்	2	டிராம்
எக்ஸ்டிராட் ஆரஞ் பிளவர்	2	,,
,, ஆப் மஸ்க்	1	அவுன்ஸ்
சாம்ராணி சத்து	1	,,
வெனிலா ,,	½	,,
டர்கன் ரோஸ் ஆயில்	1	,,
ஆல்கோஹல்	2	காலன்
ஜலம்	4	அவுன்ஸ்

சரக்குகளை யாவும் முதலில் ஆல்கோஹாலில் கலந்து கொண்டு ஜலம் விட்டுக் குலுக்கவும்.

மற்றொரு விதம்

எலாங் எலாங் ஒடோ	80	துளி
ஆல்கோஹல்	8	அவுன்ஸ்

இவ்விரண்டையும் கலந்து கொள்ளவும்.

மற்றொரு விதம்

எலாங் போங் ஆசிட்	40	அவுன்ஸ்
எஸென்ஸ் ஆப் ஜாஸ்மென்	8	,,

இரண்டையும் கலந்து கொண்டு முதல் நாள் விட்டு இரண்டாவது நாள் உபயோகிக்கவும்.

லிமென்ஜூஸ் கிளைசரீன்

லிமென் ஆயில்	2	அவுன்ஸ்
கிளைசரின்	1	,,

கிளைசரினை முதலில் ஆல்கோஹலில் கலந்துகொண்டு பிறகு லிமன் ஆயிலில் சேர்க்கவும்.

கோல்டன் ஆயில்

லாவெண்டர் ஆயில்	1	அவுன்ஸ்
ஆல்மெண்டு ஆயில்	1	,,
ஆல்கோஹல்	1	,,
ஓர்ஸ் டின்க்சர்	1	,,

எல்லாவற்றையும் கலந்துகொள்ளவும்.

பரிமளத் தொழிலாளருக்கு அவசியமான எஸென்ஸ்கள்

எஸன்ஸ் ஆப் வால்மிளகு	1	அவுன்ஸ்
ரெக்டிபைட் ஸ்பிரிட்	1	பைன்ட்

இரண்டையும் கலந்து கொள்ளவும். வால்மிளகு எஸென்ஸ் சரிவர கலந்து கொண்டதும், 2-வது நாள் இறுத்திக் கொள்ளவும்.

எஸென்ஸ் ஆப் ஆல்மண்ட்

பாதம் ஆயில்	1	அவுன்ஸ்
ரெக்டிபைட்	19	அவுன்ஸ்

இவைகளை மிக்ஸ்சர் செய்து கொண்டு அடுத்தநாள் வடி கட்டிக் கொள்ளவும்.

அம்பர்கிரீஸ் எஸென்ஸ்

அம்பர் கிரீஸ்	5	டிராம்
ரெக்டிபைட்ஸ்பிரிட்	1	பைன்ட்

இரண்டையும் கலந்து பாட்டிலில் போட்டு சரியான வெய்யிலில் வைத்து வரவும்.

இதேமாதிரி 1 மாதம் வைக்கவேண்டும். அனுதினமும் குலுக்கி வரவேண்டும். ஒருமாதத்திற்குப் பிறகு அதை வடிகட்டி உபயோகத்தில் கொண்டுவரவும்.

அரோமாடிக் எஸன்ஸ்

குங்குமப்பு	1 டிராம்
ரெக்டிபைட் ஸ்பிரிட்	6 அவுன்ஸ்

இரண்டையும் கலந்து கொள்ளவும். பிறகு அதில் லவங்கப் பட்டைத்தைலம் 1 டிராம், அறைத்த லவங்கப்பட்டை 2 டிராம், ரெக்டிபைட் ஈதர் ½ டிராம், ஜாதிக்காய் தைலம் ½ டிராம், இஞ்சி எஸன்ஸ் ½ டிராம், சேர்த்து குலுக்கிக் கொள்ளவும். இந்த மிக்ஸ்சரை சில நாள் வெய்யிலில் வைக்க வேண்டும். ஒவ்வொருநாளும் அந்த பாட்டலை குலுக்கிக் கொண்டுவந்து 1 வாரத்திற்குப் பின் வடிகட்டிக்கொள்ளவும்.

எஸென்ஸ் ஆப் காம்பர் (கற்பூரம்)

கற்பூரம்	4½ அவுன்ஸ்
ரெக்டிபைட் ஸ்பிரிட்	1 காலன்

இரண்டையும் கலக்கிக் கொள்ளவும்.

மற்றொருவிதம்

கற்பூரம்	1 அவுன்ஸ்
ரெக்டிபைட் ஸ்பிரிட்	10 அவுன்ஸ்

இவ்விரண்டையும் ஒன்றாய்க்கலந்து கொள்ளவும்.

ஏலக்காய் எஸென்ஸ்

ஏலரிசி	600 கிரைன்
ஆல்கோஹல்	1200 கிரைன்

ஏலரிசியை நன்றாய் அறைத்து ஆல்கோஹலில் கலக்கிக்கொள்வும். சில நாட்களுக்குப்பின்னர் அதை இறுத்திக் கொள்ளவும்.

எஸென்ஸ் ஆப்சின்ன மைமன், லவங்கப்பட்டை எஸென்ஸ்

லவங்கப்பட்டை தூள்	300 கிரைன்
ஆல் கோஹல்	5 அவுன்ஸ்

இரண்டையும் ஒன்றாய்க் கலக்கிக்கொண்டு சில நாட்களுக்குப் பின்னர் இறுத்திக் கொள்ளவும்.

காச்சினீல் எஸென்ஸ் கிரீம்தாறு

காச்சினீல்	2	அவுன்ஸ்
சப்கார்போனேட் ஆப்பொடாஷ்	2	,,
படிகாரம்	2	,,
கிரீம் ஆப்டார்டர்	2	,,
ஜலம்	20	,,

காய்ச்சினீல் பொடாஷ் 2 டையும் முதலில் ஜலத்தில் காய்ச்சவும். பின்னர் படிகாரம் கிரீம் ஆப்டார்டார் இவ்விரண்டையும், கொஞ்சம் கொஞ்சமாக அதில் சேர்த்துக் கொண்டு போகவும். எல்லாம் ஒன்றாய்க் கலந்து கொண்ட பிறகு மெல்லியதோர் மல் வஸ்திரத்தைக் கொண்டு அதை வடிகட்டிக் கொள்ளவும். பிறகு அது தெளிந்தவுடன் இறுத்திக் கொண்டு அதில் அரை பவுண்டு அளவிற்கு லம்ப்ஷுகர், சேர்த்துகலக்கிக் கொள்ளவும்.

கோரியாண்டர் அதாவது மல்லி எஸென்ஸ்

மல்லி	500	கிரைன்
ஆல்கோஹல்	1	அவுன்ஸ்
ஜலம்	½	தோலா

எல்லாம் ஒன்றாய் சேர்த்து சில நாள் வைத்திருக்கவும். ஆனால் மல்லியை செவ்வனே தூள்செய்து அதில் கலக்கவேண்டும். சில நாட்கள் சென்றபின் அதை இறுத்திக் கொள்ளவும்.

ஜின்ஜர் (இஞ்சி) எஸென்ஸ்

தோல் சீவி நசுக்கப்பட்ட இஞ்சி	5	அவுன்ஸ்
ரெக்டிபைட் ஸ்பிரிட்	1	பைன்ட்

இரண்டையும் சேர்த்து 2-வாரம் வெய்யிலில் வைத்தப் பின்னர் இயந்திர சகாயத்தால் ரசத்தை எடுத்து இறுத்திக் கொள்ளவும்.

மற்றொருவிதம்

தோல் சீவி நசுக்கப்பட்ட இஞ்சி	3	அவுன்ஸ்
புதிய எலுமிச்சம் பழத்தோல் (நறுக்கப்பட்டது)	2	அவுன்ஸ்

பிராண்டி	1½ பைன்ட்

எல்லாம் சேர்த்து 10 நாள் வைத்திருந்த பிறகு இறுத்திக் கொள்ளுங்கள்.

எஸென்ஸ் ஆப் லிமன் (எலுமிச்சை)

ஆயில் ஆப்லிமன்	10 பங்கு
ஆசிட் ஏத்தர்	10 ,,
டார்டரிக் ஆசிட்	10 ,,
கிளிஸரீன்	5 ,,
ஆல்கோஹல்	2 ,,
குலோரோபாரம்	1 ,,
நேட்ரஸ் ஏத்தர்	1 ,,
ஸக்ஸன்க் ஆசிட்	1 ,,

எல்லாம் ஒரு மிக்க கலந்து கொண்டு பிறகு இறுத்திக் கொள்ளவும்.

லிமன்பீல் எஸென்ஸ்

புதிய எலுமிச்சம் தோல்	½ பவுண்ட்
கொதிக்கும் ஜலம்	½ காலன்

தோலை ஜலத்தில் 1 மணி நேரம் ஊரவைத்து விட்டு பிறகு ½ பைன்ட் சாறு மீதியாக இருக்கும் வரையில் அதை காய்ச்சவும். பிறகு அதை ஆறவிட்டு அதில் ¼ அவுன்ஸ லிமன் ஆயில் சேர்த்து விடவும். மீண்டும் அதில் ஸ்பிரிட் ஆப்வைன் கலந்து சில நாட்களுக்குப்பின் இறுத்திக்கொள்ளவேண்டும்.

ஆரெஞ் எஸென்ஸ்

புதிய ஆரஞ்தோல்	10 பங்கு
காரமுள்ள ஆல் கோஹல்	2 ,,
குளரோபாரம்	2 ,,
ஆசிடிட் ஏத்தர்	5 ,,
நப்ஸோயிக் ஏத்தர்	1 பங்கு
பேவேடரிக் ஏத்தர்	1 ,,
எல் ஸெஸிடிக் ஏத்தர்	1 ,,
மெதலிசாலிசில்க் ஏத்தர்	1 ,,
டார்டரிக் ஆசிட்	1 ,,

எல்லாம் ஒன்றாய்க் கலக்கி சிலநாட்களுக்குப் பிறகு இறுத்திக் கொள்ளவும்.

ஆரெஞ் ஏல் எஸென்ஸ்

இடித்த புதிய ஆரெஞ் தோல்	4	அவுன்ஸ்
ரெக்டிபைட் ஸ்பிரிட்	½	பைன்ட்
ஜலம்	½	,,

எல்லாம் கலக்கிக் கொள்ளவும். ஒருவாரத்திற்குப் பிறகு அதை கடைந்து வடிகட்டிக் கொண்டு இறுத்திக் கொள்ளவும். அதற்குப் பின்னர் 1 குவார்ட் சாராயம் அதில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பெப்பர்மென்ட் எஸென்ஸ்

ஆயில் ஆப் பெப்பர்மென்ட்	1	அவுன்ஸ்
ரெக்டிபைட் ஸ்பிரிட்	4	,,

இரண்டையும் கலக்கிக் கொள்ளவும்.

மற்றொரு விதம்

பெப்பர் மென்ட் ஆயில்	1	அவுன்ஸ்
ரெக்டிபைட் ஸ்பிரிட்	1	,,

இரண்டையும் கலக்கிக் கொள்ளவும்.

கேசி எஸென்ஸ்

பொடி செய்யப்பட் கேசி	1½	அவுன்ஸ்
புரூப் ஸ்பிரிட்	1	பைன்ட்

இரண்டையும் கலக்கி 2 வாரம் வெய்யிலில் வைக்க வேண்டும். இரண்டின் கலப்பு ஏற்பட்டதும் இறுத்திக் கொள்ளவும்.

வெனிலா எஸென்ஸ்

வெனிலா	2	அவுன்ஸ்
ரெக்டிபைட் ஸ்பிரிட்	1	பைன்ட்

இரண்டையும் சேர்த்து 14 நாள் வைத்திருந்ததற்குப் பிறகு இறுத்திக் கொள்ளவும்.

குறிப்பு :— எல்லா சரக்குகளுடைய எஸென்ஸ் தயாரிக்கும் விதம் இதே போலவே.

எக்ஸ்டிராக்ட் தயாரிக்கும் முறை

எத்தர், ஆல்கோஹல், பிராண்டி, ஆஸ்டிக் ஆசிட்வகையரு சகாயத்தால் எக்ஸ்டிராக்ட் தயாரிக்கப் படுகிறது. எச்சரக்கின் எக்ஸ்டிராட் எடுக்க வேண்டுமோ, அதை முதலில் இடித்துக் கொண்டு யாதொரு பாத்திரத்தில் போடவும். அதற்குமேல் ஆல்கோஹல் அல்லது பிராண்டி. அதாவது:— எக்ஸ்டிராக்ட் எடுப்பதற்குரிய சரக்கை ஒத்திருக்கக்கூடியதை அப்பாத்திரத்தில் சரக்குகள் மூழ்கிப் போகத் தக்க அளவிற்கு ஊற்ற வேண்டும். அதில் கொதிப்பு வரஆரம்பித்ததும் பாத்திரத்தை நல்ல விதமாக மூடி 48 நாள்வரையில் வைத்துவிட வேண்டும். இதற்குள் வைக்கப்பட்ட சரக்கு சாராயத்தில் ஒன்று கூடிவிடும்.

48 நாளைக்குப் பிறகு பாத்திர வாயைத் திறந்து இள நெருப்பின்மேல் வைத்தெரிக்க வேண்டும். எரிக்கப்படும் சரக்குகள் பசை ரூபத்தை அடைந்து விட்டதும், அதில் ரோஸ் சாராயத்தை கலந்து கொள்ள வேண்டும். அப்போது அதை ஜல ரூபத்தில் வைத்தாலும் வைக்கலாம், அல்லது தேன் பதத்திற்கு கொண்டு வந்தாலும் கொண்டு வரலாம்.

இதோர் சாதாரணமுறை. இனி வாசனை தயாரிப்போர்க்கு பயன் தரத்தக்க சில விசேஷ முறைகள் இதனடியில் வரையப் படுகின்றன.

ஜின்ஜர் எக்ஸ்டிராக்ட்

மேல்தோல் நீக்கப்பட்டபின் துண்டு துண்டாய் சீவப்பட்ட இஞ்சி 2 அவுன்ஸ், ஆல் கோஹல் அல்லது ரெக்டிபாயிட் ஸ்பிரிட் 4 அவுன்ஸ். இஞ்சை கல்பாத்திரமொன்றில் வைத்து அதன்மேல் அரைவாசிக்கு சாராயம் ஊற்றவும்.

பாத்திரத்தின் வாயைமூடி ஒருமாதம் வரையில் விட்டு விடவும். பிறகு சாராயம் சுண்டிப்போகும் வரையில் நெருப்பில் காய்ச்சவும். பிறகு அலரவாசி சாராயத்தை அதில்போட்டு பாகுபடுத்திக் கொள்ளவும். எக்ஸ்டிராக்ட் தேனைப்போல் தடிப்பாய் இருத்தல் வேண்டும்.

ஆரெஞ் தோல் எக்ஸ்டிராக்ட்

அறைக்கப்பட்ட ஆரெஞ் தோல் 16 அவுன்ஸ், கிளைசரின் F 3 அவுன்ஸ், ஆல்கோஹால் அவசியத்திற் கேற்றவாறு, அதாவது முறையே 12 அவுன்ஸ் கிளைசரினுடன் கலந்து கொள்ளவும். பிறகு ஆரஞ் தோல் அதில்போட்டு மரக்கட்டையால் செவ்வனே இடிக்கவும். ஆனால் இடிக்கும் பொழுது மிக்ஸ்சரிலிருந்து 12 அவுன்ஸ் மட்டும் போட்டு இடிக்கவும். மீதியை வைத்து விடவும்.

ஆரெஞ் தோல் சத்து இறங்கினதும் அதில் 2 பங்கு ஆல்கோஹால், 1 பங்கு ஜலம் சேர்த்து, அதை மீண்டும் நெருப்பின்மேல் வைத்து எரிக்கவும். $2\frac{1}{2}$F. அவுன்ஸுக்கு எடைவந்தவுடன், மீதியான மிக்சரையும் அத்துடன் கலந்து கொள்ள வேண்டும்.

வெனிலா எக்ஸ்டிராக்ட்

வேனிலா கனியொன்றை நல்லதாகத் தேர்ந்தெடுத்து அதை சீவி சிறு துண்டாக்கிக் கொள்ளவும். அப்பால் லோப்சுகர் 2 அவுன்ஸ் உடன் சேர்த்து செவ்வனே அரைத்துக் கொண்டு அதில் ரோஜா பன்னீர் 8 அவுன்ஸ், அல்கோஹால் 24 அவுன்ஸ் கலந்து சில நாட்கள் வரையில் வைத்திருந்து வடித்துக் கொள்ளவும்.

பரிமளத் தொழிலாளர்க்கு உபயோகிக்கப்படும் தைலங்கள்

அம்பர்கிரீஸ் ஆயில்

அம்பர் கிரீஸ்	2 டிராம்
எண்ணெ	1 பைன்ட்

இரண்டையும் சேர்த்து சூடேற்றவும்- எண்ணெயில் சத்து இறங்கியதும், வடித்துக் கொள்ளவும்.

நப்சோ ஆன் ஆயில்

சாம்பிராணி	7 டிராம்
எண்ணெ	1 பைன்ட்

இரண்டையும் சேர்த்து நெருப்பின்மீது சூடேற்றிக் கொள்ளவும். இரண்டும் கலந்து கொண்டவுடன் வடித்துக் கொள்ளவும்.

காம்பர் ஆயில்
(கற்பூர எண்ணெ)

ஒரு அவுன்ஸ் எடையுள்ள கற்பூரத்தை ½ பாட்டில் ஜலத்தில் போட்டு கலந்து 24 மணி நேரத்திற்குப்பின் வடித்துக்கொள்ளவும்: அப்பால் வடித்துக்கொள்ளப்பட்ட ஜலத்தை சமஎடையிலுள்ள எண்ணெயுடன் கலந்து காய்ச்சவேண்டும் தண்ணீர் முற்றிலும் சுண்டிப்போகவேண்டும். இனி எண்ணெயானது நிறைந்த வாசனை யுடன் கூடிவிடும்

லிமன் ஆயில் (எலுமிச்ச எண்ணெ)

எலுமிச்சவிதைகளையும் தோல்களையும் இடித்து ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ள பத்தால் ஜுந்தர் சகாயத்தைக்கொண்டு திராவகம் எடுத்துக் கொள்ளுங்கள். அல்லது எலிமிச்சம் சாற்றை எடுத்து சரியான எண்ணெயில் கலந்து சாறு சுண்டிப்போகும்வரையில் காய்ச்சிக் கொள்ளுங்கள்.

எலுமிச்சம் தைலத்தை கெடாது வைத்தல்

எலுமிச்சம் எண்ணெ1 பவுண்டு எடுத்து அதில் ஆல்கோஹல் 1 அவுன்ஸ் கலந்துக்கொள்ளுங்கள். எண்ணெ கெடாதிருக்கும்.

லிமன் ஆயில் கெட்டுப்போனுல்

கெட்டுப்போன எண்ணெயில் வெந்நீரைக் கலந்து செவ்வனே குலுக்கிக்கொள்ளவும். தண்ணீர் அடியிற்தங்கிப் போனதும், ஆயிலை மேலாக வடித்துக்கொள்ளவும் எண்ணெ சீர்பட்டுவிடும்.

கஸ்தூரி ஆயில்

கஸ்தூரியை	1 டிராம்
அம்பர் கிரீஸ்	½ ,,
ஆலிவ் ஆயில்	20 துளி
நல்லெண்ணெ	1 பைன்ட்

எல்லாம் சூடேற்றி ஒன்ருக கலந்து கொள்ளவும்.

கஸ்தூரி அம்பர்கிரீஸ் மிக்ஸ்சர் எண்ணெ

அம்பர் கிரீஸ்	2 டிராம்
அரைத்த கஸ்தூரி	½ ,,

கேசி	10	துளி
ஆலிவ் ஆயில்	10	,,
நரோலி	10	,,
ஜாதிக்காய் தைலம்	10	துளி
எண்ணெ	1	பைன்ட்

இவைகளை யாவும் இளஞ்சூட்டின் சகாயத்தால் ஒன்றாய்க் கலக்கிக் கொள்ளவும்.

ஆலிவ் ஆயில்

சல்லாத் ஆயில், நல்லெண்ணெ, ஜைதூன் எண்ணெ இவை யாவும் சம எடையில் வாங்கி ஒன்றாய்க் கலந்து கொள்ளவும்.

கஜூர் எண்ணெ

கஜூர் விதைகளை இடித்து இயந்திரசகாயத்தாலோ அல்லது பத்தால் ஜன்தர் மூலமாகவோ எண்ணெ எடுத்துக்கொள்ளவும்.

பாதாம் எண்ணெ

பாதாம் பருப்பை இடித்து அத்துடன் கொஞ்சம் கற்கண்டு தூளைப் பிசைந்து, அதன் மீது வெந்நீரைத்தெளித்து தாலாஒன்றில் வைத்து பலமாய் அழுக்கவும். இவ்வாறு கையால் பிசைந்து தரைக்க எண்ணெ கசிய ஆரம்பிக்கும்.

ரெட் ஆயில் (சிவப்பு எண்ணெ)

அல்சி எண்ணெ	1	பைன்ட்
மஞ்சிட்டி	$\frac{1}{4}$	,,

இரண்டையும் சேர்த்து இளநெருப்பின்மீது காய்ச்சவும். எண்ணெ சிவந்துபோனதும் அதை வடித்துக் கொள்ளவும்.

சிடிரக்ஸ் ஆயில்

சிடிராக்ஸ் ஆயில்	5	டிராம்
ஜாதிக்காய் ,,	10	துளி
அம்பர் கிரீஸ்	6	கிரைன்
நல்லெண்ணெ	1	பைன்ட்

இவைகளை இளநெருப்பின்மேல் ஏற்றி ஒன்றாய்க் கலக்கிக் கொள்ளவும்.

ஜாதிக்காய் எண்ணெ

சில ஜாதிக்காய்களை எடுத்துக் கொள்ளவும். அப்பால் அவ்வைகளை பத்தால் ஜன்தர் சகாயத்தைக் கொண்டு தைலம் இறக்கிக் கொள்ளவும்.

ஏலக்காய் தைலம்

மேற்சொன்ன முறைப்படி இதையும் பத்தால் ஜன்தர் மூலம் தைலம் இறக்கிக்கொள்ளவும்.

ஜாதிபத்திரி தைலம்

இந்த தைலத்தை பத்தால் ஜன்தர் மூலமாக எடுக்கிறார்கள். இன்னும் எண்ணெயில் அழுக வைத்தும் எடுக்கிறார்கள். அதன் விதம் எப்படி என்றால்:—எண்ணெயை நெருப்பில் காய்ச்சி சூடேற்றிக் கொள்ளவும். பிறகு அறைத்த ஜாதிப்பத்திரித் தாளை அதில்போட்டு விடவும். அது அழுகி கருநிறத்திற்கு வந்ததும் அதை ஆறவிட்டு வடித்துக்கொள்ளவும். கால்சேர் எண்ணெக்கு 5 தோலா ஜாதிப்பத்திரித்தாள் அவசியமாகும்.

குங்கமப்பூ தைலம்

ஆர்ஸ்	5	தோலா
நல்லெண்ணெ	$\frac{1}{4}$	சேர்

ஆர்ஸை இடித்து நல்லெண்ணெயில்போட்டு அதன் நிறம் சிவந்துபோகும்வரையில் நெருப்பிலேற்றி காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.

பனப்ஷா ஆயில்
(வாயுலெட்)

வாயுலெட்வேர் உள்பட 5 தோலா எள்ளெண்ணெ $\frac{1}{4}$ சேர் இரண்டையும் சேர்த்து பாட்டிலில் போட்டு வெய்யிலில் வைக்கவும். சில நாட்களில் அதன் வாசனை எண்ணெயில் கலந்துகொள்ளும். அப்போது அதை எடுத்துவிட்டு மறுமுறை புதிதாய் போடவும். 2, 3 தடவை இப்படிச்செய்து விட்டதற்குப் பின்னர் எண்ணெயை வடித்துக்கொள்ள வேண்டும். எவ்வளக்கெவ்வளவு அதிகப் புஷ்பங்களை அதிகத்தடவைகளில் அதில் போடப்படுமோ அவ்வளவுக்கவ்வளவு அதன் வாசனை கூடிக்கொண்டே போகும்.

போமேட்செய்யும் முறை

'போமேட்' தாத்பரியம் பிரான்ஸ் தேசத்தவர்கள் பரிமளத் துறையில் தலை சிறந்து விளங்குபவர்களாவர். ஆங்கிலேயர்கள் அவர்களின் பரிமளங்களைப்பற்றி சிலாகித்துப் பேசியுள்ளார்கள். இங்கிலாந்திலுள்ளோர் தங்கள் கெட்டுப் போன பரிமள பாட்டில்களின் பேரில், பிரான்ஸ், பரிமளவியாபாரிகளின் லேபில்களை யொட்டி அதிக விலைக்கு விற்பனை செய்து விடுகிறார்கள் என்பதிலிருந்தே பிரான்ஸ் பரிமளங்களைப்பற்றி மக்களுக்கு எவ்வளவு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது என்பது இதனால் நன்கு விளங்கக் கிடக்கிறது.

போமேட் என்பது தேனைப்போ லொத்த குழம்பானதோர் பரிமளமாகும். அது தலைரோமங்களின் பேரில்பூச உபயோகமாகிறது. இது கொழுப்பிலிருந்து தயாரிக்கப்படுகிறது. அதன் விவரமாவது:—

கொழுப்பை முதலாவதாக அதைச் சேர்ந்த அசடுகளை விட்டும் சுத்தப்படுத்திக் கொள்ளுகிறார்கள். பின்னர் அதை உறுக்கிக் கொள்ளுகிறார்கள். அது செவ்வனே உறுகிக் கொண்டவுடன் அதை வடித்துக் கொண்டு மற்றொரு பாத்திரத்தில் கொழுப்பை ஊற்றி விடுகிறார்கள். இதன் மூலமாயும் கொழுப்பு சுத்தமாய் விடுகிறது. ஆறிப்போனதும் கொழுப்பு கெட்டிப் பட்டுவிடுகிறது. அப்போது அதை தூசி அடையா வண்ணம் மூடி வைத்து விடுகிறார்கள். அடுத்தநாள் அக்கொழுப்புள்ள பாத்திரத்தை எடுத்து கொதிக்கும் ஜலப்பாத்திர மொன்றில் வைத்து விடுகிறார்கள். அப்பொழுது கொழுப்பு உறுகிவிடுகிறது.

உறுகினதும் அதை எடுத்து மற்றொரு வாயகன்ற பாத்திரத்தில் ஊற்றுகிறார்கள். அப் பாத்திரத்தின் அடியில் பிளாடிங் பேபர் அதாவது. மைஉருஞ்சும் கடுதாசி விரிக்கப் பட்டிருக்கும். அதன் பேரில் ஊற்றி ஆறவைக்கிறார்கள். இவ்விதமாக சிலதடவை கொழுப்பை ஊற்றி எடுக்கிறார்களாயின் கொழுப்பு முற்றிலும் சுத்தமாய் விடுகிறது. அப்பால் அதற்கு நிறங்கொடுத்து வாசனை ஏற்றப்படுகிறது. வாசனை கொடுத்தானதும் போமேட் உபயோகிக்க தகுதியாய் விடுகிறது.

நிறம் கொடுத்தல்

பச்சை நிறம் கொடுப்பதற்கு பூவரசு இலை அல்லது துளிர் ஜைதூன் இலை, அல்லது பிஸ்தா இலை இவற்றின் சாறு உபயோகமாகிறது. இவைகளைத் தவிர எண்ணை மஞ்சள் கலப்பைக் கொண்டு நிறங்கொடுக்கப்படுகிறது.

இதர மரங்களின் பச்சை இலைகளின் நிறம் அதாவது திராக்ஷை இலை, மொசுக்கட்டான் இலை, வேப்பஇலை, இவை பச்சை நிரத்துக்கு உபயோகப் படுவதற்கேற்பவே, சிகப்பு நிறத்திற்காக, ரோஜாபூ, மாதுளம்பூ, முதலியனவும், ஆரெஞ் நிறத்திற்காக கஜுர் எண்ணை, சம்மங்கிபூ, நீலம் முதலியனயாவும் முறையே உபயோகப்படுத்தப் படுகின்றன.

போமேடுக்கு வாசனை கொடுத்தல்

போமேடுக்கு வாசனை கொடுப்பதற்கும் அநேக முறைகள் உண்டு. அவைகள் வருமாறு:-

1.'போமேட்'-ஐ நெருப்பிலேற்றி மிருதுவாக்கி அதில் வாசனை எண்ணை கலந்து கொள்ளுகிறார்கள். சந்தனத்தைலம், குங்குமப்பூத் தைலம் ஆரெஞ்தைலம் முதலியவற்றை சேர்த்தல்.

(2) வாசனை மரப் பட்டை அல்லது புஷ்பங்களை தண்ணீரில் கொதிக்க வைத்து அவைகளின் சத்தையும் வாசனையும் எடுத்துக் கொண்டபின்னர் அந்த ஜலத்தை போமேடுடன் சேர்த்து தண்ணீர் வற்றி தனியே போமேட் தங்கிவிடும்படியான அளவிற்கு எரிக்கிறார்கள்.

(3) காரமான புஷ்பங்களின் இதழ்களைப் பறித்து அவைகளை புஷ்பங்களின் மேல் விரிக்கிறார்கள். அதாவது:—முதலில் புஷ்பங்களை விரித்து அவற்றின் மேல் போமேட் பரப்புகிறார்கள். அதற்கு மேல் புஷ்பங்களை பரப்புகிறார்கள். இதைப் போலவே அடுக்கடுக்காக பரப்பிவிட்டதற்குப்பின் அப்பாத்திரத்தை இள நெருப்பின் மேல் வைத்து மூடிவிடுகிறார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு அப்பூ விதழ்கள் வாடிவதங்கிப் போனதும் அவைகளை எடுத்து விட்டு சில தடவைகள் இப்படியே செய்கிறார்கள். பிறகு போமேடை எடுத்துக் கொள்ளுகிறார்கள்.

(4) வாசனை புஷ்பங்களையும் விதைகளையும் அதாவது கிராம்பு, ஏலக்காய் முதலியவைகளை இடித்துப் போட்டு போமேடுடன் நெருப்பின் மேல் எரிக்கிறார்கள். விதைமுதலியன மடிந்து போமேடில் கலந்து கொள்ளுகின்றன. அவ்வமயம் அவற்றின் வாசனையும் அதில் புகுந்து விடுகிறது.

சுருங்கச் சொல்லில் மேற்கண்ட 4 விதங்களினின்றும் ஏதேனும் ஒரு விதத்தில் போமேடுக்கு வாசனை கொடுக்கப்படுகிறது.

இனி போமேட் தயாரிக்கும் முறைகள் இதனடியில் விவரிக்கப் படுகின்றன.

பேர்கிரீஸ்

ஆட்டுக் கொழுப்பு	1¼ பவுண்ட்

ஒரு பாத்திரத்தில் போட்டு கொதிக்கும் ஜலத்தில் வைக்கவும். அப்போது அடியிற்கண்ட வாசனையை அதில் சேர்த்துக் கொள்க.

பால்சம் ஆப் பேரோ	2 டிராம்
சாம்பிராணிபவுடர்	1 டிராம்
கஜுர் எண்ணெ	1 டிராம்

இவைகளை எல்லாம் கலந்து கொள்ளவும். சிறிது நேரம் கழித்து வடித்துக் கொள்ளவும். அடியில் தங்கிப் போனவண்டலில் மீண்டும் வடித்துள்ள எண்ணெயை கொஞ்சங் கொஞ்சமாக போட்டு நெருப்பிலேற்றி கலந்து கொள்ளவும். இதே விதமாக சில தடவைகள் செய்து வர வண்டல் முழுவதும் அற்றுவிடும். கடைசி தடவையிலுள்ள வண்டல் தைலத்தையும் வடிகட்டி பாட்டிலில் போட்டுக் கொள்ளவும். இன்மேலும் தங்கி இருக்கும்படியான வண்டல் பிரயோஜனமற்றதென நினைத்து அதை அப்புறப் படுத்தி விடவும்.

மற்றொருவிதம்

சமுத்திர முதலையின் கொழுப்பு	1 பவுண்ட்
கஜுர் எண்ணெ	½ டிராம்

இவ்விரண்டையும் ஒன்ருய்க் கலந்து கொள்ளவும். ஆறின வுடன் அதில் ஸைட்ரிக் எத்தர் 2 F டிராம், அம்பர் கிரீஸ் எஸென்ஸ் 8 துளி, எல்லாம் சேர்த்து போத்தலில் போட்டு கலக்கிக்கொள்ள வும்.

மற்ருெருவிதம்

ஆட்டுக் கொழுப்பு	1 பவுண்ட்
முதலைக் கொழுப்பு	1 ,,
ஆலிவ் ஆயில்	3 அவுன்ஸ்

இளநெருப்பின் மேல் வைத்து எல்லாம் ஒன்ருய்க்கலக்கிக் கொள்ளவும். ஆறிப்போனவுடன் அதில் பென்சாயின் (சாம்ராணி) மிக்ஸ்சர் கலந்துகொள்ளவும்.

அரியகுணமுள்ள மிக்ஸ்சர்

ப—கொழுப்பு	4 பவுண்ட்
ஆட்டுக் கொழுப்பு	1 ,,
வெள்ளரி (கிரூ) சாறு	3 ,,

கொழுப்புகளையாவும் சாற்றுடன் கலந்து கொண்டு வடித்துக் கொள்ளவும். இதே விதமாக வெள்ளரிக்காய் சாற்றையும் நெருப் பின்மேல் ஏற்றி அது சுண்டிப்போகும் வரையில் காய்ச்சவும். எண்ணை, அதாவது கொழுப்பு மீதியாக இருந்து விட்டதும், மீண்டும் அச்சாற்றை போட்டு முன்போலவே சில தடவை செய்து வர கொழுப்பானது மெழுகைப்போல் கெட்டிப்பட்டு மணமடைந்து போகும். அப்போது அதை ஆற்றிக்கொள்ளவும்.

கிரீஸ்டல்லாயஸ் போமேட்

பாதாம் எண்ணை	1 பைண்ட்
ஸ்பர்மேஸிடி	¼ பவுண்ட்

இரண்டையும் சேர்த்து இளநெருப்பின் மேல் கலக்கிக்கொள் ளவும். அப்பால் அதில் இஷ்டப்படியான வாசனையைச் சேர்த்து சற்று சூடேற்றிக் கொள்ளவும். சிலர் இதில் கற்பூரத்தையும் சேர்க்கி ரூர்கள். எனினும் இந்த போமேட் சாதாரணமாகவே இருந்தால் போதுமெனத் தெரிகிறது. எனினும் நிறம் ஏற்றப்பட்டால் பார் வைக்கு சோபியா யிருக்கும்.

வெள்ளரிக்காய் போமேட்

சாம்ராணி வாசனைக் கொழுப்பு	6	பவுண்ட்
ஸிபர்மேசிடி	2	,,
ஸ்பிரிட் ஆப் கூகம்பர்	1	,,

இரண்டு கொழுப்புகளையும் நெருப்பிலேற்றி உருக்கினபின் அதில்கொஞ்சம் ஸ்பிரிட் கலந்துகொள்ளவும். அது வற்றிப்போன தும் மீண்டும் ஸ்பிரிட் போடவும். 3, 4 தடவை ஸ்பிரிட்டை கலந்த பின்னர் நிறுத்திக்கொள்ளவும். ஆறினவுடன் உபயோகத்திற்குக் கொண்டு வரலாம்.

யாதொரு காரணத்தால் சருமம் வெடித்துப் போமாயினும், அல்லது சொரசொரப்பாக போய்விட்ட போதிலும், அல்லது வேறெத்தகைய சீர்க்கேடு அடைந்த போதிலும் அதற்கு இந்த போமேடை மேலில்தேய்க்க விசேஷ குணமளிக்கும்.

போமேட்–டி–வாயின்

மாட்டுக் கொழுப்பு	1	பவுண்ட்
பதங்கட்டை (வத்தேக்கு)	1	அவுன்ஸ்
ஆர்ஸ்	1	,,
ரிகொயர்ட் சிடி ராக்ஸ்	1	,,
லவங்கப்பட்டை	½	,,
கிராம்புத்தூள்	¼	,,
ஜாதிக்காய்	¼	,,

எல்லாம் சேர்த்து பாத்திரத்தில் போட்டு அதன் மேல் மூடியிட்டு கீழே இளநெருப்பு எரிக்கவும். எல்லாசரக்குகளும் ஒன்றுய்க் கலந்துகொண்ட பின்னர் வடிகட்டி பாட்டிலில் அடைத்துக் கொள்ளவும். 5, 6 மணி நேரத்திற்குள் எல்லாம் சரிவர கலந்து கொள்ளும்.

சாதாரண போமேட்

வாயுலெட் எஸென்ஸ்	2	டிராம்
சம்மங்கி எண்ணை	1½	,,
பர்கோமோட் ஆயில்	1	,,
லிமன் ஆயில்	1	,,
லாவெண்டர் ஆயில்	½	,,

கரோலி	6	துளி
கேசி ஆயில்	8	,,
கிராம்பு ஆயில்	8	,,
வர்பீனு ஆயில்	6	,,

எல்லாவற்றையும் கலந்து கொள்ளவும்.

போமேட் மற்றொருவிதம்

சாதா போமேட்	1	பவுண்ட்
பர்கமோட் ஆயில்	1	டிராம்
லிமன் ஆயில்	$\frac{3}{4}$	,,
கேசி ஆயில்	$\frac{1}{2}$	,,
கிராம்பு, ஜாதிக்காய்த் தைலம்	20	துளி

எல்லாம் சேர்த்து மேற்சொல்லியவாறு தயாரித்துச் கொள்ளவும்.

போமேட் மற்றொரு விதம்

சாதா போமோட்	1	டிராம்
பர்கமோட் ஆயில்	1	,,
சம்புங்கி எண்ணை	$\frac{1}{2}$	,,
கரோலி	$\frac{1}{2}$	,,
வர்பீனு ஆயில்	20	துளி
கேசி ஆயில்	10	,,

இவைகளைச் சேர்க்க இன்றியமையாத வாசனைத் தரும்.

போமேட் மற்றொருவிதம்

ஒரு பவுண்ட் நிறையுள்ள சாதா போமேட்டை நெருப்பில் உருக்கிக் கொள்ளவும். அது எண்ணை ரூபத்தை அடைந்ததும் அதில் பால்சம் ஆப் பைரோ, அல்லது லிக்வீட், ஸ்டைராக்ஸ் 2 டிராம் சேர்த்துக் குலுக்கிக்கொள்ளவும். பிறகு அதில்:

கேசி எண்ணை	20	துளி
கிராம்பு ஆயில்	15	துளி
அம்பர் கிரீஸ் எஸென்ஸ்	12	துளி

சேர்த்துக் கொள்ளவும். எல்லாம் ஒன்ருய்க்கலந்து கொண்டதும், பாட்டிலில் அடைத்துக் கொள்ளவும்.

போமேட் மற்றொரு விதம்

சாதாபோமேட்	1 பவுண்ட்
கேசி ஆயில்	1 டிராம்
கிராம்பு தைலம்	½ ,,
அம்பர் கிரீஸ் எஸென்ஸ்	12 துளி
ரஹோடியம் ஆயில்	15 ,,
கஸ்தூரி எஸென்ஸ்	15 ,,

எல்லாம் ஒன்ருய்க் கலந்து கொள்ளவும்.

மற்றொரு விதம்

சாதாபோமேட்	1 பவுண்ட்
ஓடோ ஆப்ரோஸ்	½ டிராம்
ரஹோடியம் ஆயில்	15 துளி
நரோலி	15 ,,
ராயல் எஸென்ஸ்	15 ,,

எல்லாம் சேர்த்து முறைப்படி தயாரித்துக் கொள்ளவும்.

மற்றொரு விதம்

புளோகார் பாயன்	2 பங்கு
கோதேன்-ஹைட்ரோகுளோரெட்	4 ,,
சல்பர் பரிஸிபிடெண்ட்	10 ,,
பால்சம் ஆப் பைரோ	20 ,,

எல்லா சரக்குகளும் சேர்ந்து 100 பங்கிற்கு எவ்வளவு எடை குறைகிறதோ அந்த எடைக்கு மாட்டுக் கொழுப்பை சேர்த்துக் கொள்ளவும்.

கெட்டிப் போமேட்

மாட்டுக் கொழுப்பு	1 பவுண்டு
சுத்தமான மெழுகு	2½ அவுன்ஸ்
சாம்பிராணித்தூள்	1 டிராம்

இவைகளை நெருப்பின் சூட்டினுல் ஒன்ருகக் கலக்கிக் கொள்ளவும். அப்பால் அதில்

ஆலிவ் ஆயில்	1	டிராம்
கேசி ,,	15	துளி
அம்பர் கிரீஸ் எஸென்ஸ்	15	,,

இந்த கலப்பை அச்சுகளில் போட்டு வார்த்துக் கொள்ளவும். குளிர்ந்த பிறகு அக்கட்டிகளை எடுத்து நேர்த்தியான கடுதாசிகளில் சுருட்டிக் கொள்ளவும்.

ஸ்ட்ராபரி போமேட்

புதிய ஸ்ட்ராபரி	4	அவுன்ஸ்
தேங்கா எண்ணை	8	,,
பாதாம் எண்ணை	9	,,
வெள்ளை மெழுகு	3	,,

எண்ணை, கொழுப்பு, நெருப்பின் மேலேற்றி உருக்கிக் கொள்ளவும். ஸ்ட்ராபரீயை எடுத்து அதில் கலந்து 1 மணி நேரம் வரையில் நெருப்பின் மேல் வைத்து இளக வைக்கவும். ஸ்ட்ராபரியின் ஈரம் முழுவதும் உலர்ந்து போன பிறகு அதை வடிகட்டி ஆல்கனெட்ரூட் சகாயத்தால் சிகப்பு வர்ணங் கொடுக்கவும். வாசனைக்காக 10 துளி ரோஸ் அத்தர் கலக்கவும்.

டோபால்கா போமேட்

சுத்தமான மாட்டுக் கொழுப்பு	½	பவுண்ட்
ப-கொழுப்பு	½	,,
ஆட்டுக் கொழுப்பு	1	,,
கரடி கொழுப்பு	2	,,

எல்லாவற்றையும் சேர்த்து நெருப்பு சூட்டின் சகாயத்தால் உருக்கிக் கொள்ளவும். அப்பால் அதில் 16 அவுன்ஸ் உப்பை அரைத்துக் கலக்கவும். எல்லாம் செவ்வனே கலந்து கொண்டதும் கொழுப்பை இறுத்திக் கொள்ளவும்.

இந்த முறையினால் கொழுப்பிலுள்ள துர்நாற்றம் யாவும் நீங்கிப்போய் கொழுப்பு சுத்தமாகி விடும். பிறகு அதில் வாசனைக்காக

பூவரசு விதை	1	அவுன்ஸ்
சீரகம்	1	,,
சோம்பு	1	,,
ஏலரிசி	1	,,

எல்லாவற்றையும் கலக்கி இளநெருப்பின் மேல் வைத்துக் கிளறி சிறிது நேரத்திற் கப்பால் வடித்துக் கொள்ளவும்.

உயரிய போமேட்

இந்த பாகம் அசல் பிரான்ஸ் தேசத்து பாகமெனச் சொல்லப் பட்டிருக்கிறது.

சிபர்மேசிடி	12	அவுன்ஸ்
ஆமணக்கெண்ணை	5	,,
ஆல்கோஹால்	5	,,
பர்கோமோட் ஆயில்	½	டிராம்
ஆயில் ஆப் போர்ச்சுகல்	½	,,

சிபர்மேசிடி ஆமணக்கெண்ணை இந்த இரண்டையும் நெருப் பின் மேல் கலக்கிக் கொள்ளவும். கலக்கிக் கொண்டதும் நெருப் பின் சூட்டை குறைவு படுத்தி அதில் ஆல்கோஹாலை கொஞ்சங் கொஞ்சமாக சேர்க்கவும். பிறகு இதர சரக்குகளையும் சேர்த்துக் குலுக்கி பாட்டில்களில் நிறப்பிக் கொள்ளவும்.

வெனிலா போமேட்

சாதாபோமேட்	1½	பவுண்ட்
பொடி செய்த வெனிலா 1 முதல்	1¼	அவுன்ஸ் வரையில்
இடித்த சேசி	1½	டிராம்
இடித்த கிராம்பு	1½	,,

போமேட்டை உருக்கி இதர சரக்குகளை அதில் சேர்க்கவும். பிறகு 1 மணி நேரம் நெருப்பின் மேல் வைத்து விட்டு அடியிற் கண்ட பரிமளத்தை கலந்து கொள்ளவும்.

பர்கோமோட் ஆயில்	1	டிராம்
ரோஸ் அத்தர்	12	துளி

வாசனை போமேட்

பர்கோமேட் ஆயில்	2	அவுன்ஸ்
லிமன் ஆயில்	1	,,
ஆயில் ஆப் ஜாஸ்மைன்	¼	,,
கஸ்தூரிபை	½	,,

ஜிரேனியம் ரோஸ் ஆயில்	1½	டிராம்
சாம்ராணித் தைலம்	1	,,
ரஹோடியம் ஆயில்	½	,,

இவைகளை யாவும் நெருப்புச் சூட்டின் சகாயத்தால் கலந்து கொள்ளவும்.

மற்ெருரு விதம்

பர்கோமோட் ஆயில்	2	அவுன்ஸ்
லிமன் ஆயில்	2	,,
ஆரென்ஞ் தோல் தைலம்	5	டிராம்
கிராம்பு தைலம்	3	,,
சஸாபிரான்ஸ் தைலம்	2	,,
லிகோயர்ட் ஸ்டோராக்ஸ்	1	,,

இவை எல்லாம் பாட்டிலில் அடைத்து சில நாள் வெய்யிலில் வைக்க சரக்குகள்யாவும் ஒன்ருய்க் கலந்து கொள்ளும்.

மற்ெருருவிதம்

பர்கோ மோட் ஆயில்	1	அவுன்ஸ்
ஆலிவ் ,,	1	,,
அம்பர் கிரேஸ் எஸென்ஸ்	1½	டிராம்
எஸென்ஸ் ஆப்மஸ்க்	1½	,,
ஓர்ஸ்ரூட் ஆயில்	1	,,
ஓரிகானம் ,,	½	,,
சஸாபிரான்ஸ் எண்ணை	½	,,

இவைகளை ஒன்ருய்க் கலந்து கொள்ளவும்.

வாயுலெட் போமேட்

சுத்தமான கொழுப்பு	1	பவுண்ட்
வாயுலெட் எண்ணை	1	,,
ரோஜா எண்ணை	1	,,

இம்மூன்றையும் நெருப்பின் சகாயத்தால் ஒன்ருய்க்கலந்து கொள்ளவும்.

வெள்ளைகெட்டிமெழுகு

சாம்பிராணி வாசனைகொழுப்பு	1	பவுண்ட்
வெ, மெழுகு	1	,,
சம்பங்கி எண்ணை	½	,,
டோபேரோஸ்போமேட்	½	,,
ரோஸ் அத்தர்	1	டிராம்

இவை எல்லாவற்றையும் கலந்துகொள்ளவும்.

பரிமள டின்க்சர்களை தயாரித்தல் சீர்ப்படுத்தல்

அல்கோஹல் அல்லது ரெக்டிபாயிட் ஸ்பிரிட் மூலம் எந்த மருந்து கலக்கிக் கொள்ளப்படுகிறதோ அதுவே டின்க்சர் எனப் படுவது. பரிமளவியாபாரிகள் தங்கள் பல்வேறுவிதமான வாசனை சாமான்களை இதன் உதவியைக்கொண்டும் தயாரித்துக்கொள்கிறார் கள். முக்கியமான சில டின்க்சர்களின் விபரம் இதனடியிற் கூறப்பட்டுள்ளது.

அல்கோஹல் வகைகள்

இது இரண்டுவகைப்படும். சுத்தமான அல்கோஹல்; இதுவே காரமான அல்கோஹல் எனவும் சொல்லப்படுவது.

இரண்டாவது கலப்பு அல்கோஹல்; இதற்கு மற்றொருபெயர் பர்ப்ஸ்பிரிட். இதில்தண்ணீரும் சாராயமும் சமஎடையில் இருந்து வரும்.

டின்க்சர் செய்யும் முறை

எந்த சரக்கிலிருந்து டின்க்சர் எடுக்கவேண்டுமோ அதை யை இடித்து அல்கோஹலில் போட்டு, பாட்டிலின் வாயை யடைத்து வெய்யிலில் வைக்கவேண்டும். அனுதினமும் அந்த பாட்டிலை எடுத்து பன்முறை குலுக்கிவைக்கவும். நீங்கள் பாட்டிலில் போட்ட சரக்குகளின் சத்து சாராயத்தில் செவ்வனே இறங்கிக் கொள்ளும். இல்லையேல், சரக்குகளை இடித்து ஜலத்தில் 48 மணி நேரம் ஊறவைத்த பின்னர் நெருப்பின்மீது எரிக்கவும். ஜலம் அரைவாசி சுண்டிப்போனவுடன் அதை ஆறவிட்டு வடிகட்டிக் கொள்ளவும். அடுத்தபடியாக அந்த ஜலத்தை சாராயத்தில் கலந்து இளநெருப்பின்மேல் வைத்து எரிக்கவும். தனி அல்கோஹலே தங்கிவிட்டதும் எடுத்துக்கொள்ளவும்.

டின்க்ச்சரை சுத்தி செய்தல்

இதற்குரிய சாதாரணமுறை யாதெனில் டின்க்சர் பாட்டிலை சில நாட்கள் வைத்துவிட்டால் அதன் வண்டல் யாவும் அடியிற் போய் தங்கிவிடும். அப்போது அதை மேலாகவே வடித்துக் கொள்ளலாம். அதை அதிகமாக தெளிவுபடுத்த வேண்டுமாயின் பில்டர் மூலமோ அல்லது பில்டர் பேப்பர்சகாயத்தைக் கொண்டோ தெளிவுபடுத்தப்படுகிறது.

டின்க்ச்சரை பத்திரப்படுத்தி வைத்தல்

டின்க்சர் பாட்டிலுக்கு கார்க் பலமாய் போட்டு அதை தொங்க வைத்துவிடவும். பாஷாணசம்பந்தமான டின்க்ச்சராக யிருந்தால் பாட்டிலுக்குமேல் தங்க உறையும் போட்டுவிடவேண்டும்.

டின்க்சர் வேகத்தை குறைப்பதெப்படி?

ஒருபங்கு சுத்தமான டின்க்சரில் 100 பங்கு ஜலத்தை கலந்து விடவும். இதற்குமாறாக அதன் சத்தை அதிகரிப்பதாக இருந்தால் ஒரு பங்கிற்கு 10 பங்கு அல்கோஹல் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

'உப்டன்' (பரிமள ஸ்நானப்பொடி)

திரேக சருமத்தின் நிறம் மங்கிப்போயிருந்தபோதிலும் அத்தகைய மங்கலை அகற்றியும் முகத்திலேற்படும் விகாரப் பொடுக்களை நீக்கியும் முகவஜீகரத்தை தரத்தக்க பரிகாரப்பொருளே 'உப்டன்' எனப்படுவதாகும்.

கலியாண சந்தர்ப்பங்களில் தம்பதிகளுக்காக இதனை பெரும்பாலும் உபயோகப்படுத்தி வரும் பழக்க வழக்கம் பண்டைகால முதல் இருந்து வருகிறது. இதில் சேர்க்கப்படும் சரக்குகள், சருமத்திற்கு மேனியும் அதன் அழுத்தத்தை அகற்றி அதை மிருதுவாக்கவும் கூடும். இதில்உள்ள பெரிய விசேஷமோ வெனில் திரேகத்திலிருந்து ஒருவித சுகந்தவாடை வெளிவந்துகொண்டே இருக்கும். அதன் பொருட்டே முன்காலத்திய பெரியோர்கள் உப்டன் உபயோகித் துள்ள தம்பதிகளை இரவில் தன்னந்தனியே போகவிடமாட்டார்கள். பேய்ப் பிசாசு அத்தகையோரை பிடித்துக் கொள்ளுமென்பது அவர்களின் மூடபக்தி. வாசனை பூசிக்கொண்டவர்கள், அவ்வாறு

போக நேரிட்டபோதிலும் அவர்கள் கையில் கத்தி அல்லது யாதொரு இரும்பு சாமானை கொடுத்து விடுவார்கள்.

உப்டனுக்கு வேறு சில பெயர்களும் உண்டு. அதாவது காஸா, பட்னுமுதலியன. 'காஸாயூசுபி' இவற்றுக்கிடை உயரியதாகும். முகங்கழுவியதற்குப் பின்னர் காஸாவை முகத்தில் தடவிக்கொள்ள வேண்டும்.

உப்டன் முறை

வாற்கோதுமை மாவு	½	சேர்
மஞ்சள் தூள்	5	தோலா
பூலாங்கிழங்கு	5	,,
கிளியூரம்பட்டை	3	,,
சீமைகிச்சிலிகிழங்கு	3	,,

மேற்கூறிய ஒவ்வொன்றையும் தனித்தனியே நன்ருய் அரைத்துக்கொள்ளவேண்டும். அரைத்தானதும் அவற்றை ஒன்ருய்க் கலந்து கொள்க.

உபயோகிக்கும் சமயம் அப்பொடியை வேண்டிய அளவி லெடுத்து வெந்நீர் விட்டுக் குழப்பி, அதில் கொஞ்சம் போல் நல்லெண்ணெயையும் கலக்கி தேகத்திலோ அல்லது முகத்தின் மீதோ தடவிவிடவும்.

பூசப்பட்டது சற்று உலர்ந்து போகும் வரையில் காத்திருந்து பிறகு அதை கையால் உருட்டித் தேய்க்கவும். உப்டனுடனேயே அழுக் கெல்லாம் வெளியாகி விடும் அவ்வமயம் வெந்நீரினல் அழுத்தித் தேய்த்து ஸ்நானஞ் செய்யலாம் முகத்தில் மட்டும் பூச வேண்டியிருந்தால் ஸ்நானஞ்செய்ய வேண்டுமென்ற அவசியமில்லை

'உப்டன்' மற்ருெருவிதம்

வாற்கோதுமாவு	¼	சேர்
மஞ்சள்	2	தோலா
கோரைக்கிழங்கு	1	,,
கிளியூரம் பட்டை	5	,,
சீமைகிச்சிலிக்கிழங்கு	1	,,
வெள்ளிரிவிதை	5	,,
சுரை பருப்பு	5	,,

இவைகளை யெல்லாம் தனித்தனியே இடித்து முதற்பாகத்தில் சொல்லப்பட்டபிரகாரமே உபயோகிக்கவும்.

'உப்டன்' மற்றொருவிதம்

அத்தர் எடுக்கும் போது அதனடியில் தங்கிவிடும் வண்டல்	$\frac{1}{4}$ சேர்
குங்குமப்பூ	6 தோலா
சுரைபருப்பு	5 ,,
வெள்ளரிவிதையின் பருப்பு	5 ,,
மொச்சை மாவு	5 ,,

இவைகளை தனித்தனியே அறைத்தபிறகு ஒன்ருய் கலக்கி கொள்ளவும். அப்பால் அக்கலப்பை அதன் வாசனை நீங்கா வண்ணம் யாதொருபாத்திரத்தில் இறுக்க மூடிவைக்க வேண்டும்.

உபயோகிக்கும் சமயம் வேண்டிய அளவில் தூளை எடுத்து அதில் கொஞ்சம் வெந்நீர் விட்டு கலக்கிக் கொண்டபிறகு பாதாம் எண்ணெய் அல்லது சுரைக்காய்த்தைலம் சேர்த்துக் கொள்ளவும். இந்த இரண்டு தைலங்களையும் அந்த கலப்பு பிசுபிசுப்பை அடைந்து போகக் கூடிய அளவுக்கு சேர்க்கவேண்டும்.

முகத்திலோ அல்லது திரேகத்திலோ தேய்த்த பிறகு அது உலர்ந்து போகும் வரையில் காத்திருந்து முன் கூறப்பட்டபடி அழுக்கை உள்ளங்கையால் உருட்டித் தேய்த்து விட்டு ஜலத்தைக் கொண்டு கழுவி விடவேண்டும்.

காஜா யூசுபீ

மொச்சை அறைத்த மாவு	5 தோலா
வாற் கோதுமை மாவு	5 ,,
பாதாம் பருப்பு	5 ,,
சுரை பருப்பு	5 ,,
வெள்ளரிவிதை	5 ,,
குங்கமப்பூ	$\frac{1}{2}$,,
ஜடாமாசி	1 ,,
கோரைக்கிழங்கு	1 ,,
கிளியூரம் பட்டை	5 ,,

சீமைகிச்சிலி	1	தோலா
பாதாம் எண்ணெய்	2	,,
கஸகஸாதைலம்	1	,,
அத்தர்வண்டல்	2	,,
சம்பங்கி எண்ணெய்	1	,,

இவைகளை யெல்லாம் ஒன்ருக கலக்கிக் கொள்ளவும். காய்ந்த சரக்குகளை அரைத்து பொடிசெய்து கொள்ள வேண்டும். உபயோகிக்கும் முறை முன் சொல்லப்பட்டபடி.

மேற்படி இங்கிலீஷ் முறை

கிளேஸரைன்	5	தோலா
ரோஜாபன்னீர்	3	,,
எலுமிச்சை எண்ணெய் அல்லது அதன் சாறு	3	,,
வெள்ளரி சாறு	3	,,

இவையாவும் ஒன்ருய் கலந்து பாட்டிலில் அடைத்துக் கொள்ளவும். இதில் கொஞ்சம் போல் எடுத்து அனுதினமும் முகத்துக்கு பூசிவர முகம் தெளியும்; சருமம் மிருது வடைந்து முகவசீகரமுண்டாகும்.

போடுவதற்கான புகையிலை

இதை தயாரிக்கும் முறையில் சற்று தேர்ச்சி யடைந்து போனல் அதன் மூலம் பல்லாயிரம் ரூபாய் சம்பாதிக்கக் கூடும். ஆரம்ப நிலைமையில் அதைத் தயாரிப்பவர் குறைந்த அளவிலிருந்து தயாரிக்க ஆரம்பிப்பதே நல்லது. அதாவது முதன் முதலாக 5 தோலாவிலிருந்து ¼ சேர் ½ சேர் வரையில் தயாரித்துக் கொள்வதே சிறந்த வழியாகும்.

ஒரு சேர் 2 ரூபாய் விலையுள்ள புகையிலை

பஜாரில் கிடைக்கும் புகையிலையை வாங்கி வெய்யிலில் காய வையுங்கள். பிறகு அதை பிசைந்து கொண்டு தடித்த கண்ணுள்ள சல்லடையில் அதை சலித்துக் கொள்ள வேண்டும்.

ஒரு சேர் நிறையுள்ள புகையிலை சலிக்கப்பட்டிருந்தால் அத்துடன் அடியிற் கண்ட அளவிற்கு துணைப் பொருள்களை சேர்த்துக் கொள்ளுங்கள்.

இராம்பு	1/12 தோலா
வெள்ளை ஏலக்காய்	1/12 ,,
ஜாதி பத்திரி	1/12 ,,
ஜாதிக்காய்	1/12 ,,
லவங்கப்பட்டை	½ ,,
மிளகு	¼ ,,

மேற்கண்ட சரக்குகளை யாவும் தண்ணீர் விட்டரைத்துக் கொள்ளுங்கள். அப்புறம் காசுக்கட்டி ஐக்து தோலாவை ¼ ஜலத்தில் ஊறவைத்துக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளுங்கள். ஏற்கெனவே அரைத்துள்ள மொத்தையையும் அதில் கலந்து கொள்ளுங்கள். அதேவிதமாக கருவேலக் கோந்து 2 தோலா ஊறவைத்த ஜலத்தையும் வடிகட்டி அந்த கலப்பில் சேர்த்துக் கொள்ளுங்கள். அப்பால் அந்த கலப்பை சலித்துள்ள புகையிலையில் சேர்த்துப் பிசைந்து உலர்த்திக் கொள்ளுங்கள். உலர்ந்தவுடன்

ஹினு (மருந்தோன்றி) அத்தர்	1/12 தோலா
உயரிய தாழம்பூ எண்ணெ	5 ,,

இந்த இரண்டையும் ஒன்ருய்ச் சேர்த்து குலுக்கிக் கொண்டு புகையிலையின் மீது தெளியுங்கள். தெளிக்கும் போது புகையிலையை புரட்டிப் புரட்டித் தெளிக்க வேண்டும். அதற்குப் பிறகு அதை அவ்வளவும் எடுத்து பெரியதோர் தகரப் பெட்டியில் போட்டு அதை அடைத்து வையுங்கள். காற்று போகா வண்ணம் அப் பெட்டியி லிருத்தல் வேண்டும் 3, 4, நாட்களுக்குப் பிறகு அதை எடுத்து உபயோகத்தில் கொண்டு வரலாம். புகையிலைக்கு காற்று படலாகாது. புகையிலை டின்னை ஈரமான இடத்திலும் வைக்கக் கூடாது.

ஒரு சேர் 4 ரூபாய்விலையுள்ள புகையிலை

உயரிய சுத்தமான புகையிலையை கையப் பிசைந்து மெல்லிய துவாரமுள்ள சல்லடையில் சலித்துக் கொள்ளவும். அப்பால் அதில்

மிளகு	¼ தோலா
லவங்கப்பட்டை	1/12 ,,
வெள்ளை ஏலக்காய்	1/12 ,,
ஜாதிக்காய்	1/12 ,,

ஜாதிப்பத்திரி	1/12	,,
கிராம்பு	1/12	,,

இவைகளை தண்ணீரில் ஊறவைத்து முன் போல் அறைத்து காசுக்கட்டி கோந்து முன்போல் சேர்த்துக் கொள்ளவும். நிற்க வாசனை சாச்சிளுப் பொடி 1 தோலா அக்கலப்பிற் சேர்த்து கையால் செவ்வனே பிசைய வேண்டும். நீங்கள் பிசைந்துள்ள கலப்பை காய வைத்தறைத்து அதை மறுபடியும் சல்லடையில் சலித்துக் கொள்ளுங்கள். சலிக்கப் படாததை மீண்டும் இடித்தறைத்து சலித்துக் கொள்ள வேண்டும். இது துப்பாக்கி கந்தகத்தைப் போல் தடிப்பா யிருக்கும்.

இனி இதில் சேர்க்க வேண்டிய வாசனைச் சாமான்களின் விவரம் அடியில் வருமாறு :—

ஹினு (மருக்தோன்றி) அத்தர்	1/12	தோலா
உயர்ந்த தாழம்பூ அத்தர்	1/12	,,
பச்சிலை அத்தர்	1/12	,,
ரோஜா சத்து	2½	,,
தாழம்பூ சத்து	2½	,,

இவைகளை ஒன்ருய் கலந்து கொள்ளவும்.

உயரிய குங்குமப்பு	½	தோலா
கஸ்தூரி 2 குன்று மணி எடை		

இந்த 2யும் தனியே கலந்து கொள்ளவும்.

வாசனைகளை யாவும் ஏற்கனவே சொல்லியவாறு புகையிலை தூளின் மேல் தெளித்துக் கொள்ள வேண்டும். ஓர் தகரப் பெட்டியில் ஒரு வாரம் மூடி வைத்ததற்குப் பிறகு உபயோகத்தில் கொண்டு வரவும்.

குறிப்பு:—ரோஜா, தாழம்பூ, குங்கமப்பு, கஸ்தூரி இவை நான்கும் உயரிய சரக்குகளாக இருத்தல் வேண்டும். இல்லாவிடில் புகையிலையின் வாசனை மணக்காது.

ஒரு சேர் 8 ரூபாய் விலையுள்ள புகையிலை

ஒரு சேர் 4 ரூபாய் விலையுள்ள புகையிலைக்குரிய பாகமே இதற்கும் உரியது. ஆனல் பொடி நைஸ் ஆக இருத்தல் வேண்டுமென்பதே இவ்விரண்டிற்குரிய வித்தியாசம்.

குங்கமப்பூ, கஸ்தூரி இவ்விரண்டின் அளவை இருமடங்காக்கிக் கொள்ளுங்கள்.

புகையிலை நிறத்தில் குறைந்த கருமையும், மினுமினுப்புக் குறைச்சலும் இருந்து வந்தால், தாச்னுப் பொடி கோந்து இவ்விரண்டின் அளவை அவசியத்திற்கேற்றவாறு அதிகரித்துக் கொள்ளவும். சரக்கு உயரியதாக இருப்பதற்கு உயர்ந்த புகையிலையைப் பார்த்து வாங்க வேண்டும்.

புகையிலை மட்டமாக இருந்தால் பிரயாசை வீணாய் விடும். மசாலாவைக் கலக்கும் ஜலம் புகையிலையின் மீது தெளிக்கும் ஜலத்தின் அளவு நிதானமாய் இருத்தல் வேண்டும்.

பாகுப் புகையிலை

இதை தயாரிப்பதற்கான அரிய முறை யொன்று இங்கு விவரிக்கப்படுகிறது. இது தற்கால நவீனமுறையில் உள்ளது.

குறைந்த செலவில் உயர்ந்த தயாரிப்பைக் கொண்டது. ஒரு சேர் புகையிலையை அதன் காம்புகளுடன் மூன்று சேர் ஜலத்தில் பச்சிலை 5 தோலா புலாங்கிழங்கு 1 தோலாவுடன் 3 நாள் ஊறவைக்கவும். அப்பால் அதை நன்றாய்ப் பிழிந்து, பிழிந்த ஜலத்தை ஈயம் பூசிய செப்பு சட்டியில் போட்டு அதில் பாதியான் கதாயீ தோலா ஒன்று போடவும். அப்பாத்திரத்தை அடுப்பின் மீதேற்றி பாகுபதம் வருமளவும் எரிக்கவும்.

பதம் வந்தவுடன் அதை பிழிந்து பாதியான் க்தாயீ எறிந்து விடவும். அதற்கப்பால் அப்பாத்திரத்தை மீண்டும் அடுப்பிலேற்றி எரிக்கவும். பாகு தடிப்பிற்கு வந்தவுடன் அதில் அடியில் கண்ட சரக்குகளை அரைத்து கலந்து கொள்ளவும்.

குங்குமப்பு	½ தோலா
ஜாதிபத்திரி	4 குன்றுமணி
கிராம்பு	4 ,,
மிளகு	1/12 தோலா
வெள்ளை ஏலக்காய்	4 குன்றுமணி
லவங்கப்பட்டை	4 ,,

இந்த சரக்குகளை யாவும் தாழம்பூ சத்தில் செவ்வனே அறைத்துக் கொள்ளுங்கள்.

இப்போது பாகு தயாராய் விட்டது. அதை கண்ணாடிப்பாத்திரத்தில் போட்டு மூடி வையுங்கள். உலர்ந்தப்பின் அதில் தாழம்பூ எண்ணையைக் கலந்து விடுங்கள்.

இந்தபாகை ஒரு தோலா 2 அணாவுக்கு விற்பனை செய்யலாம். இதில் 4 குன்றுமணி எடைக்கு கஸ்தூரியை கலந்து கொண்டால் ஒரு தோலா நான்கு அணாவுக்கும், குங்கமப்பூ சஸ்தூரி எடையை இருமடங்காக்கிக் கொண்டால் தோலா 8 அணாவுக்கும், கஸ்தூரியின் அளவை 4 மடங்காக்கி குங்குமப்பின் அளவை இருமடங்கு ஆக்கிக் கொண்டால் தோலா 1 ரூபாய்க்கும் தங்கரேக் ஒட்டினால் தோலா $1\frac{1}{4}$ ரூபாய்க்கும் விற்பனை செய்யலாம்.

புகையிலையைத் தயாரித்த பின்னர் தாமே அதை பரிசீலனை செய்து அதில் ஏதேனும் குறைவு இருந்தால் அதை சீர்ப்படுத்திக் கொண்ட பின்னர். கிராக்கிகளுக்கு விற்கலாம்.

தோல் பாடஞ் செய்தல்

பச்சைத்தோலை ஒழுங்கு முறைப்படி கெட்டிப்படுத்தலுக்குப் பெயரே தோல் பாடம் என்பதாகும்.

இசைனல் தோல் அழுகவும், மடியவும் மாட்டாது. பதத் தோலினால் தயாரிக்கப்படும் சாமான்களும் உருகியாக யிருக்கும்.

தோல் பதத்தின் அளவு

தோலின் ஈரம் அதில் மிருதுவானதன்மை ஏற்படும் வரையில் உலர்த்தப்படவேண்டும். இந்நோக்கத்தைக் கொண்டே அதனை சுருங்கவைக்கத்தக்க வஸ்துக்களை உபயோகித்துக் கொள்ளுகிறார்கள்.

பிலோத் (தோல்பதஞ் செய்யும் பட்டை) கத்தகாம்பு ஆகியவை அதற்காக உபயோகப்படுகின்றன. பசு, எருமை, காளை ஆகியவற்றின் தோல்களை பதனிடும் முறையும் தனிப்பட்டது.

மான் முதலிய மிருகங்களின் தோல்களை தனிப்பட்ட முறையில் பதப்படுத்துகிறார்கள். ஆடுமுதலிய சிறு பிராணிகளின் தோல்கள் முறையும் வேறு,

பெரிய மிருகங்களின் தோல்கள்

சுண்ணும்புத் தண்ணீர், பாலைப்போல் கரைத்துள்ள ஜலத்தில் புதிய தோலை நனைத்து தோலை அடிக்கடி புரட்டிக்கொள்ளுகிறார்கள். அப்பால் அதை எடுத்து ஜலம் விட்டுக்கழுவி தோலின் மீதுள்ள ஜவ்வு உரோமம் முதலானவைகளை அப்புறப்படுத்தி விடவேண்டும்.

தோல் முற்றிலும் சுத்தமாய்விட்டதும் அதை மிக்க பலஹீனமுள்ள கந்தகசலூஷனில்போட தோலிலுள்ள உரோமதுவாரங்கள் விரிந்து நரம்புகள் பூரித்துவிடும். அதற்குப்பின்னர் அதற்குரிய பட்டையின் கஷாயத்தில் சில நாள் போட்டுகிளறவும். அப்பால் அதை இன்னமும் அதிக காரமுள்ள அதே பட்டையின் கஷாயத்தில் போட்டு தோலை கிளறவேண்டும். சுமார் ஆறுவாரம் தோல் அதே நிலையிலேயே இருத்தல் வேண்டும். குறைந்த சத்துள்ளசலூஷனில் தோல் அதிககாலம் இருந்து வருவதன் பொருட்டு மிருது வடைந்து விடுகிறது.

பின்னர் அத்தோலை விரித்து விட்டு அதற்கு மேல் 2 அங்குல அளவிற்கு பட்டைக்கஷாயத்தை ஊற்றி அதன் மேல் தோலை விரித்து பின்னும் அதன் மேல் பட்டையைப் போட்டு தோலை மறைத்து விடவும்.

அதன்மேல் மற்றொரு தோலை விரித்து அதன்மீதும் புதிய பட்டையைப் போடவும். இதே விதமாக கீழே தோலும் மேலே பட்டையும் போட்டு ஏறக்குறைய பள்ளம் நிறைந்து போகும்வரையில் தோல் போடவும். எல்லாவற்றிற்கும் மேலே பட்டையை தடிப்பாக பரப்பி அதன்மேல் கனம் வைத்துவிடவும். 2-2½ மாதங்கள் வரையில் அப்படியே கிடக்கவிடவும். அப்பால அவைகளை எடுத்து மற்றொரு பள்ளத்தில் அடுக்கிவிடவும். இத்தடவை கீழிருந்த தோலை மேலும், மேலுள்ள தோலை கீழுமாக அடுக்கவும்.

இரண்டாவது பள்ளத்தில் தோலானது, 2, 3, மாதம்வரையில் இருத்தல் வேண்டும்.

மூன்றாவது முறை மூன்றாவது பள்ளத்தில் போட்டு 4-5 மாதம் கிடக்க விடவும். தோல் தடிப்பாக இருந்தால் 4-வது 5-வது முறையும் அவ்வாறு செய்யலாம்.

ஆனால் இம்முறையை கையாளுவதனால் ஒருவருடம் முதல் இரண்டரை வருடம் வரையில் அவகாசம் வேண்டி யிருக்கிறது. தற்காலே தோலே சீக்கிரம் தயார்படுத்துவான் வேண்டி பெரும் பாலும் பட்டையின் அதிக சத்துள்ள கஷாயத்தை உபயோகிக் கிறார்கள். ஆனால் அதிலிருந்து தோல் சீக்கிரம் தயாராய் விட்டு போதிலும் அது போதிய உறுதியடைவதில்லே. குறிப்பு:—தோல் புதிதாக இல்லாதிருந்து அது உப்பைத்தடவி உலரவைக்கப்பட்ட தாக இருப்பின், அதை முதலில் ஜலத்தில் ஊறவைத்து மிருது வாக்கிக்கொள்ளவும். அப்பால் அதை சுண்ணும்பு நீரில்போட்டு மேலே சொல்லப்பட்ட முறைகளுக் கிணங்க செய்யவும்.

நடுத்தர தோல்கள் பதமிடுதல்

கன்றுகளினதும் இதைப் போன்ற பிராணிகளுடையதுமான தோல்கள் மெல்லியனவா யிருப்பதால் அவைகளை சுண்ணும்பு நீரில் சுமார் 2 வாரம் வைத்து பலமுறை கிளறி விட்டதற்குப் பின் மயிர் முதலியவைகளில் நின்றும் தோலே சுத்தப்படுத்திக் கொள்ளவும். அப்பால் அது சுருங்கவைக்கும் மருந்தை இலகுவில் கிரகித்துக் கொள்ளும். அதை பிலோத் பட்டையின் அடியில் அமுக்கிவைப்ப தற்குப் பதிலாக பல்வேறு மருந்துகளின் பட்டைக் கஷாயங்களில் அமுக்கி வைக்கவும். தோலின் உரோமமும் நரம்பும் சுருங்கவைக்கும் மருந்தை கிரகித்துக் கொள்வதனுல் தோலின் மத்தியில் அப் பொருள்கள் நல்லவிதமாக பிரயோகமாக மாட்டா. எனவே தோலின் ஒவ்வொரு விடத்திலும் மருந்தின்குணம் வேகமாய் இருப்பதற்காக வேண்டி தோலினின்றும் ரோமம் வகைராக்களே அப்புற படுத்திய பின்னர், அவற்றுள் எங்கேனும் சோரம் அல்லது துளேஉண்டா என்று கவனித்துக் கொள்ள வேண்டும்.

யாதொரு துளே இருந்தால் அதிலிருந்து தண்ணீர் வெளிவரா வண்ணம் அதை நன்றாய் உறுதியுடன் தைத்துவிட வேண்டும். மரத்தினுல் மூன்று தட்டங்கள் தயாரிக்கவும். அவற்றின் நீளமும், அகலமும் ஒரேவிதமாய் இருத்தல் வேண்டும்.

அப்பால் ஒரு தோலே ஒரு சட்டத்தின்மேல் பரப்பி அதன் மீது மற்ருெரு சட்டத்தை வைத்து தோலின் ஓரங்களே நெருக்க வும். பிறகு அதன்மேல் மூன்ருவது சட்டத்தை வைத்து ஓரங்களே போல்ட் (அச்சாணி) யைக் கொண்டு இணைத்துவிடவும்.

தோலின் ஓரங்களினின்றும் தண்ணீர் வெளிபடாதிருக்க வேண்டும். சட்டத்தின் மேல்பாகத்தில் தண்ணீரின் சிறியதோர் குழாய் இருத்தல் வேண்டும். சட்டத்தின்மேல் சிறியதோர் துவாரம் செய்து அக்குழாய் உடன் பொருத்த வேண்டும். சட்டத்தின் கீழ் திதலையின் கார்க்கிட்டு சட்டத்தை நிறுத்தி தயாரித்த ஜலத்தை ஊற்றவும். அவ்வமயம் அடியில்உள்ள கார்க்கை அடைத்துவிடவும். அதனால் ஜலம் உள்ளே அடைபட்டு எல்லா தோல்களின்மீதும் ஒரே அளவில் இருந்துவிடும். இதனால் தோல்களின் மற்றொரு புறம் உரோமக் கால்களின் மூலம் வியர்வை வெளிப்பட்டு போகும். இவ்விதவாக தோல் கெட்டிப்பட்டதும் மேல்துவாரத்தை அடைத்து கீழ்துவாரத்தை திறந்து விட ஜலம் முழுவதும் வெளியாகிவிடும். அப்பால் அந்த தோல்களை எல்லாம் தனிப்படுத்தி அவற்றின் ஓரங்களை வெட்டிக் கொள்ளவும்.

சிறு தோல்களை பதமிடுதல்

தோலைக் கழுவி தடித்த சுண்ணாம்பு ஜலத்தை அவைகளின் மேலும் கீழுமாக தடவி விடுங்கள். தோலின் சதையுள்ள புறமாக இரண்டிரண்டு தோல்களைச் சேர்த்து அடுக்கிவிடுங்கள்.

சிலநாட்களுக்குப் பிறகு உரோமங்களை நீக்கி சாணைக் கல்லினால் தேய்த்து சுத்தப்படுத்திய பின்னர், சுண்ணாம்புத் தண்ணீரில் போட்டுவிடவும். சுண்ணாம்புக்காரம் இல்லையென்று தெரிந்தால் மறுமுறை புதிய தண்ணீர் இதேவிதமாய் 2, 3, வாரங்கள் வரையில் செய்து விட்ட பிறகு சாணைக்கல்லைக் கொண்டு உரோமங்களை தேய்த்து சுத்தப்படுத்தி விடவும். அதற்குப் பிறகு தோல்களை கோதுமை உமி ஊறவைத்த ஜலத்தில் சில வாரங்கள் வரையில் ஊற வைக்கவும். ஜலம் அழுகி நுரை ஏற்படும்படியான சமயத்தில் தோல்களை மேலுங் கீழுமாக புரட்டி தண்ணீர் ஒரே அளவில் அவற்றுள் சுவர்ந்து போகும்படியாகச் செய்யவும். இதிலிருந்து உரோமத் துவாரங்களும் திறந்து போகின்றன. உமி ஜலத்திநின்றும் வெளிப்படுத்திய தோல்களை படிகாரம் வெடியுப்பு ஜலத்தில் சில நிமிஷ நேரம் வரையில் தோய்த்து விட்டு பிழிந்த பின்னர் அவைகளை படிகார ஜலத்தில் கோதுமைமா முட்டையின் வெள்ளைக்கருவுடன் சேர்த்து காய்ச்சவும். ஒரு ஈன்

பூராவும் அதிலேயே விட்டு வைக்கவும். மேற்கண்ட ஜலத்தையும் மூன்று தடவைகளில் மாற்றிவரவும்.

அப்பால் தோல்களை இரண்டொரு வாரங்கள் வரையில் தொங்கவிடவும். இதிலிருந்து அவை வெண்மையும், மிருதுவும் அடைந்து விடுகின்றன. காற்றுப்பட்டபோதிலுங்கூட கெட்டி படுவதில்லை. பிறகு அவைகளை சுத்தமான ஜலத்தில் நனைத்து மட்டமானதோர் பலகையின்மேல் பரப்பி வழவழப்பான யாதொரு இரும்பு கருவியினால் தேய்க்க அவைகள் விரிந்து போகும். அப்பால் அவைகளை சூடான இரும்பைக் கொண்டு தேய்க்க அவைகளின்மேல் ஒருவித மினுமினுப்பும், வழவழப்பும் ஏற்பட்டு விடும்.

சிறு தோல்களை உரோமங்கள் உள்பட பதனிடுதல்

முதல் முதல் தோல்களை தண்ணீரில் ஊறவைத்து சுத்தம் செய்யவும். உட்புறத்தில் யாதொரு இரும்பு கருவியைக் கொண்டு செவ்வனே தேய்த்து விடவும். அப்பால் கோதுமையின் பழைய உம்மியை ஊரவைத்த ஜலத்தில் பலநாள் ஊறவைத்துக் கழுவி சுத்தம் செய்து கொள்ளவும்.

படிகார ஜலம் உள்ளே தெளித்து உரோமங்களின் புறமாய் சுருட்டி வைத்து விடவும். கொஞ்சம் நேரங்களித்து தொங்க விட்டு உலர்த்தவும். மறுபடியும் தண்ணீர் தெளித்து சுருட்டி, ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி அதன் மேல் பளுவானதோர் கல் வைத்து விடவும். இரண்டு நாள் சென்று அவைகளை எடுத்து இரும்புக் கருவியினால் அழுத்தித் தேய்த்து தோலை விசாலமாக்கிக் கொள்ளவும். கன்றுகள், ஆட்டுக்குட்டிகள் இதர பிராணிகளின் நாசுக்கான தோல்களை இவ்வாறே பதனிடுகிறார்கள்.

ஆட்டுத் தோல் பதனிடுதல்

கர்ட்டாடு, அல்லது காட்டாடு இவ்விரண்டின் தோலையும் கழுவி சுண்ணும்பு ஜலத்தில் நனைத்த பின்னர், உரோமங்களை அப்புறப் படுத்துகிறார்கள். கோதுமை உமியின் ஜலத்தில் நனைக்கிறார்கள். வளைந்ததோர் மரக்கட்டையின்மீது தோலை விரித்து குதிரை லாடத்தை போன்றதோர் கருவியினால் தோலை இருபுறமும்

தேய்க்கிறார்கள். அதனால் தோலின் இரண்டு பக்கங்களும் ஒரே மாதிரியான விதத்தில் மிருதுவடைந்து விடுகின்றன.

அதற்கு பிறகு உமியை ஊறவைத்த ஜலத்தில் பலநாள் நனைக் கிருக்கச் செய்கிறார்கள். பிறகு அதை உலர்த்தி அதன் மேல் எண்ணைத் தடவி அடுக்கடுக்காக அடுக்கி அவைகளை யெல்லாம் உருட்டி உருண்டையாக்கிக் கொள்கிறார்கள். இம்மாதிரியான பன்னிரண்டு கட்டுருண்டைகளை ஒரு சாக்கில் போட்டு சில நாட்கள்வரை பில்லிங்மில் என்னும் இயந்திரத்தில் கொடுத்து இடிக்கிறார்கள். பிறகு அவைகளைப் பிரித்து காம்ரேட்டத்தில் வைக்கிறார்கள். பிறகு எண்ணை தேய்த்து அதே விதமாய் உருட்டி அதே இயந்திரத்தில் வைக்கிறார்கள். இம்மாதிரி பல தடவை செய்யப்படுகிறது. பிறகு அவைகளின் உரோமத்துவாரங்கள் விரிந்து எண்ணையை அதிகம் உருஞ்சுவதற்கான முறையில் என்ன செய்கிறார்களெனில் அறையொன்றில், கழிகளை நேரே அமைத்து அவைகளிலுள்ள கொக்கிகளில் தோல்களை மாட்டி விடுகிறார்கள். அந்த அறைக்கு எதிரில் நெருப்புச்சட்டி வைக்கப்படுகிறது. அதன் சூடு இதற்குப் பலனளிக்கிறது. பிறகு அந்த தோல்களை எடுத்து குதிரை வடிவத்தைப் போன்ற மரக் கட்டையின் மேல் பறப்பி மழுங்கினதும், வளைந்ததுமான கத்தியைக் கொண்டு சுருண்டிவிட்டதற்குப் பின் குறைந்த சத்துள்ள பொடாஷ் (மர உப்பு) ஜலத்தை தெளித்து எண்ணையை எடுத்து விட்டு, பிழிந்து உலர்த்திக் கொள்ளுகிறார்கள்.

தோலுக்கு சிகப்பு நிறம் கொடுத்தல்

ஆட்டுத்தோலை முதன் முதல் கோதுமை உம்மி ஊறவைத்த ஜலத்தில் நனைக்கிறார்கள். மேற்சொன்ன மரக்கட்டையின் மேல் பரப்பி அதற்குரிய ஒழுங்கு முறைப்படி தேய்க்கிறார்கள்.

பிறகு அதை ஜலத்தில் நனைத்துப் பிழிந்து, சுண்ணாம்பு ஜலத்தில் நனைக்கிறார்கள். அதிலிருந்து அதன் உரோமங்கள் இலகுவாய் நீங்கி விடுவதற்கு ஏதுகரமாய் விடுகிறது. அதற்குப் பின்பு அதாவது:—உரோமங்கள் நீங்கியதும் தோலை ஜலத்தில் அலசி அதன் மீதுள்ள சகல விதமான ஜவ்வு பசபசப்பு முதலிய அசடுகளை கத்தியினால் சொரண்டி விட்டு ஓரங்களை அதற்கேற்ற

வாறு வெட்டி விடுகிறார்கள். பிறகு அதை கல்லினால் தேய்த்து மட்டப்படுத்தி பிறகும் கட்டையின் மேல் விரித்து கத்தியால் அதை சுத்தப் படுத்துகிறார்கள். பின்னர் பொடாஷ் ஜலத்தில் வைத்து, கோதுமை உமி ஊறவைத்த ஜலத்தில் ஏறக்குறைய இரண்டு நாள் வைத்தெடுத்து கட்டைமேல் பரப்பி காயவைக்கிறார்கள். இனி அது வர்ணத்தை ஏற்கும் சக்தி அடைகிறது.

நிறம் ஏற்றுதல்

தோலின் உரோமங்கொண்ட பாகத்தை இரட்டிப்பாக மடித்து இரண்டு ஓரங்களையும் தைத்து விடுகிறார்கள். அதன் பேரில் 'மோர்டான்ட் ஆலம்' ஒருவித படிகாரம், அல்லது சலூஷன் ஆப் டின் தேய்க்கிறார்கள்.

கோச்நேல் கஷாயத்தில் சற்று படிகாரம், அல்லது டார்டார் கலந்து அதில் தோலை ½ மணி நேரம் அமுக்கி வைக்கிறார்கள். அடிக்கடி அதை புரட்டியும் வருகிறார்கள்; பிறகு அதை எடுத்து இடிக்கிறார்கள்.

2-வது முறை கோச்நெல் நிறத்தில் சற்று நேரம் வைக்கிறார்கள். வேண்டிய அளவிற்கு நிறம் ஏறினவுடன் அதை ஜலத்தில் அலசி சோமியாக் ஜலத்தில் போடுகிறார்கள். இத்தோல் இந்நிலைமையில் ஜலத்தில் மூழ்காமல் போவதன் நிமித்தம் இதை புரட்டிவிடவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. நிறம் வேண்டிய அளவிற்கு ஏற்படாத வரையில் அதை சோமியாக் ஜலத்தில் போட்டு வருகிறார்கள். இதற்குப் பிறகு அதன் தையலைப் பிரித்து சுத்த ஜலத்தில் கழுவி இரும்பு கொட்டப்புளியால் தட்டித்தட்டி தோலை விசாலப்படுத்தி காற்றில் தொங்கவிட்டு வைக்கிறார்கள். நிறத்தில்நேர்த்தி உண்டாவதற்குமார்டன் சலூஷனில் அமோனியா சேர்த்து தேய்க்கிறார்கள்.

ரஷியன் லெதர் செய்தல்

இதை பூச்சி அரிப்பதில்லை; காரணம் இதற்கு சந்தன வர்ணங் கொடுக்கப்படுகிறது. இதில் வாசனையும் உண்டு. தோலினின்றும் அதன் உரோமங்களையும், பிசுபிசுப்பையும் குறைக்த சத்துள்ள ஜலத்தில் ஊறவைத்து அப்புறப் படுத்துகிறார்கள். பிறகு அதை சுத்த ஜலத்திலும், பிறகு வெக்கீரிலும், பிறகு உமி

ஜலத்திலும் (ஒன்றின் பின் ஒன்றாய்) நனைத்து மரக்கட்டையின் மேல் விரித்து இரண்டு புறங்களிலும் தேய்த்து சுத்தப்படுத்துகிறார்கள்.

ரேபுரோர் ஒரு தானியத்தின் பெயர். அதை ஜலத்தில் போட்டு அழுக வைக்கிறார்கள். 2 நாளைக்குப் புறகு அதை எடுத்து கழுவி அதிலுள்ள உரோமத்துவாரங்கள் நன்றாய் விரிந்திருக்குமாயின் வைலுமரத்தின் பட்டையின் கொதிப்புள்ள கஷாயத்தில் ½ மணிநேரம் அமுக்கி வைக்கிறார்கள். இதே விதமாக சில தடவைகள் செய்துவிட்டதற்குப் பின்னர் முன் சொல்லிய படியே இவைகளுக்கும் வர்ணங் கொடுக்கிறார்கள்.

உரோமத் தோல்களை பதனிடுதல்

தோல்களை அசடுகளை விட்டும் சுத்தப்படுத்தி 1 மணி நேரம் வரையில் வெந்நீரில் ஊற வைக்கிறார்கள். பிறகு படிகாரம், வெங்காரம், சல்பேட் ஆப் சோடா இந்த மூன்று பொருள்களும் கலக்கிக் கொள்ளவும். தோல் ஒன்றுக்கு மேற் சொன்ன மூன்று சாமான்களின் சலூஷன் 1¼ தோலா வீதம் பிரஷினல் எடுத்து தோலின் உட்புறத்தில் பூசவும். தோல் தடிப்பாக இருக்கிற இடத்தில் சலூஷனை அதிகம் பூசவேண்டும். பிறகு தோலின் உட்புறத்தைப் புரட்டிவிட்டு குளிர்ந்ததோர் இடத்தில் வைக்க வேண்டும். 24 மணி நேரத்திற்குப் பிறகு தோலை கழுவி விடவும். பிறகு,

சால்சோடா	1	அவுன்ஸ்
வெங்காரம்	½	,,
கெட்டியான சோப்	2	,,

இவைகளை ஒன்றாய்க் கலந்து அனல் காட்டியபின் முன் செய்தவாறு பிரஷினல் தோலின் உட்புறத்தில் தடவி அதை மடித்து 24 மணி நேரம் வரையில் சூடான விடத்தில் வைக்கவேண்டும். அதன் பிறகு,

படிகாரம்	4	அவுன்ஸ்
உப்பு	8	,,

2 அவுன்ஸ் பைகார்பனேட் ஆப்பொடாஷை மழைத் தண்ணீரில் கரைத்து விடவும். தண்ணீர் கைகளைக்கக்கூடிய அளவிற்கு சூடாய்

இருத்தல் வேண்டும். தோலை அதில் 12 மணி நேரம் வரையில் போட்டு பிழிந்து கொள்ளவும். இவ்வாறு தோல் மிருது வடையும் வரையில் செய்து வரவும். கடைசியாக தேய்ப்புக்கருவியி னால் அதன் உட்புறத்தை தேய்த்து வழவழப்பாக்கிக் கொள்ளவும்.

செம்மறியாட்டுத் தோல்உரோமங்கள் உள்படபதனிடுதல்

வெந்நீரினால் தோலைக்கழுவி அதன் உட்புறத்திலுள்ள அசடு களை நீக்கி விடவும். உரோமங்களை சோப்பைக் கொண்டு நன்ருய்க் கழுவி விடவேண்டும். அடியில் கண்டபாகத்தை அதன் உள்பாகத் தில் தேய்க்கவேண்டும். தோல் ஒன்றுக்கு உப்பு அரைபவுண்டு, படிகாரம் அரை பவுண்டு, வெங்காரம் $1\frac{1}{4}$ தோலா இந்த மூன்று பொருள்களையும் ஒன்ருய் அறைத்து ஒரு பாட்டிலில் போட்டு வெந்நீர் ஊற்றி கலக்கவும். தண்ணீர் ஊற்ற வேண்டிய அளவு ஒரு பாட்டில் வெந்நீர் என்பதாகும். அந்த கலப்பை தோலின் உட்புறத்தில் அதை மடக்கித் தேய்க்க வேண்டும். இரண்டு வாரம் வரையில் அதை காற்றுள்ள விடத்தில் வைக்கவேண்டும்.

பிறகு அந்த மருந்தை வழித்தெரிந்து தோலைக்கழுவி உலர்த் திக் கொள்ளவும். ஆனல் தோல் மூற்றிலும் காய்ந்து போகு முன் அதை அதன் உட்புறத்தில் மழுங்கிப் போனதோர்கத்தியால் சுருண்டி சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். சுத்தப்படுத்துதில் எடுக்கப்படும் அதிக பிரயாசை தோலின் அதிக மிருதுவுக்கு காரண மாகும்.

வெந்நீரில் அதிக அளவிற்கு சோப்பைக்கரைத்து மிக்க கார மாக்கிக் கொள்ளவும். பிறகு அதை குளிரவைத்து அதைக் கொண்டு தோலைக்கழுவி உரோமங்களின் பிசிபிசிப்பையும். அப் புறப்படுத்தியபின் சுத்த ஜலத்தைக் கொண்டு சோப்பின் காரத்தை போக்கி விடவும். அப்பால் படிகாரம் ஒரு பவுண்டு, உப்பு ஒரு பவுண்டு, இந்த இரண்டையும் 8 பாட்டில் கொண்ட வெந்நீரில் கரைத்து தோலை ஒரு தொட்டியில் போட்டு அதுமூழ்கி விடும்படி யான அளவிற்கு அந்த ஜலத்தை விடவும்.

தோல் பன்னிரண்டு மணிநேரம் வரையில் அதில் கிடக் கட்டும். பிறகு அதை எடுத்து மரத்தில் தொங்கவிடவே அதி லுள்ள ஜலம் வடிந்து விடும். தண்ணீர் வடிந்து போனதும்,

அதை பலகையின் மேல் விரித்து அதன் ஓரங்களுக்கு சுற்றிலும் மூளை அடித்து விடவேண்டும். தோல் காயகாய மூளைகளை பலமாய் அடிக்க வேண்டும்.

தோலையும் இழுத்திழுத்து அதை விஸ்தாரப்படும் படியாக விரித்து மூளை அடிக்க வேண்டும். அதுமுற்றிலும் உலர்ந்து போவதற்கு முன்னர் அறைத்தபடிகாரம் ஒரு அவுன்ஸ் வெடி உப்பு 1 அவுன்ஸ் இந்த இரண்டையும் கலந்து அதன் மேல் தூவவேண்டும்.

அதன் பிறகு உரோமங்கள் பெயர்கின்றனவா? அல்லது கெட்டிப்பட்டு விடுகின்றனவா? என்று சோதிக்க வேண்டும். அவை பெயரும் பக்ஷத்தில் இரண்டொருநாள் அதை அவ்வாறே கிடக்க விட்டு பின்னர் படிகாரத்தைத் தடவ வேண்டும்.

உட்புறத்திலிருந்து அதை மடித்து 2, 3 நாள் வரையில் நிழலில் தொங்க விட்டு வைக்கவும்.

உலர்ந்ததும் மழுங்கிப் போன தோர் கத்தியைக் கொண்டு அதன் உட்புறத்தை சுரண்டிவிட்டு தேய்ப்புக்கல்லினல் தேய்த்துக் கொள்ளவும்.

முயல் தோல் பாடம்

ஓர் பலகையின் மீது முயல் தோலை விரித்து விட்டு அதன் உரோமமுள்ள பக்கத்தில் ஓரங்களின் மீது மூளை அடித்து விடவும். உப்பு ஜலத்தால் கழுவி விட்டு 1½ அவுன்ஸ் படிகாரத்தை அரைபாட்டில் வெந்நீரில் கலக்கி பஞ்சைக்கொண்டு தோலின் மேல் பூசவும்.

இதேவிதமாக மூன்று நாள் செய்து வரவேண்டும். தோல் செவ்வனே காய்ந்துபோனதும் அதை மூளைகளை விட்டும் எடுத்து மேல் புறமாக சுருட்டி விடவும். அச்சுருள் நீளமாயிருத்தல் வேண்டும். அப்பால் அதை துவாரமுள்ள தோர் பலகையில் அதன் துவாரத்தின் வழியே நுழைய வைத்து இருதலைப்புகளையும் பிடித்து நன்ருய் தேய்க்க வேண்டும்.

இதிலிருந்து அது நன்ருய் மிருதுவடைந்து போகும் வரையில் தேய்க்க வேண்டும். இவ்வாறு பதனிடப்பட்ட தோல் அநேக வீட்டுக்காரியங்களில் பயன் படுகிறது.

தோலுக்கு பளங்கான் வர்ணங்கொடுத்தல்.

தோலை பசுமூத்திரத்திலும் அவுரி ஊறவைத்த ஜலத்திலும் ஒரு நாள் ஊறவைக்க வேண்டும். அதற்குப் பிறகு படிகாரம் கலந்த வெந்நீரில் தோய்த் தெடுக்கவே பளங்கான நிறத்திற்கு வந்து விடும்.

மற்றொரு விதம்

ஆல்டர் பர்ஸ் (ஓர்மரத்தின் காய்) தண்ணீரில் நன்றாய் வேகவைத்து தோலின்மேல் தேய்த்து உலர்த்திக்கொள்ளவும். பின்னர் அதைக் காய்ச்சின ஜலத்தை குழம்பாக சுண்டவைத்து தோலின்மேல் தேய்த்து உலர்த்திக் கொள்ளவேண்டும். பளங் கான் நிறத்திற்கு வரும்வரையில் அதை பல தடவைகளில் இவ்வாறு செய்து கொள்ளவேண்டும்.

சிவப்புவர்ணங் கொடுத்தல்

தோலை இரண்டுமணிநேரம் வரையில் கடுக்காய் ஜலத்தில் ஊறவைத்தபின்னர் அதை பிழிந்து மருதோன்றிவிதை படிகாரம், சங்கால்பச்சை இம்மூன்றும் கொதிக்கவைத்த கஷாயத்தில் தோய்க் கவும். கடைசியில் வத்தேக்கு நிறத்தை சோப்பு ஜலத்தில் காய்ச்சி தோலின்மேல் தேய்க்கவும்.

பச்சைவர்ணங் கொடுத்தல்

சியாப்கிரைன் படிகார ஜலத்தில் காய்ச்சி தோலின்மேல் தடவி விட்டு இஷ்டப்பட்ட நிறத்தை ஏற்றிக்கொள்ளவும்.

அடர்ந்த பச்சை

எகுத்தூன்சால் அமோனியா இந்த இரண்டையும் பசு மூத்தி ரத்தில் கலக்கவும். அதிலிருந்து வெளிப்படும் நிறத்தை தோலின் மேல் தடவி நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

மஞ்சள் நிறம்

சாம்பிராணியை எண்ணெயில் எரித்து தோலின்மேல் தடவிக் கொள்ளவும்.

ஆரெஞ்சுக்கலர்

படிகார ஜலத்தில் காய்ந்த பிரேஸ் (ஓர் அமெரிக்கன் மூலிகையின் பெயர்)ஐ காய்ச்சி தோலுக்கு வர்ணங்கொடுக்கவும். நிறத்தில் அடர்த்திவேண்டுமாயின் பிரேசுக்கு பதிலாக மஞ்சளை சேர்த்துக் கொள்ளவும்.

நீல நிறம்

நீலத்தை கொதிக்கும் ஜலத்தில் கலந்து இரவு முழுதும் அப்படியே விட்டு விட்டு காலையில் தோலின்மேல் தேய்க்கவும்.

கருப்பு நிறம்

சாயக்காரர்களின் அயர்ன் கிக்கவரில் இரண்டொருமுறை தோலை நனைத்தெடுக்கவும். அல்லது துருசு ஜலத்தில் தோலை நனைக்கவும் கருப்பாகி விடும்.

குறிப்பு:-தோலின்மேல் எவ்வித பிசுபிசுப்பு ஏற்பட்டிருந்து அதன் பொருட்டு நிறம் ஏறாமலிருந்தால் பழைய பசு மூத்திரம் அல்லது காளைமாட்டின் பித்தத்தை பிரஷ்மூலமாய் தொட்டெடுத்து அத்தோலின் மேல் தேய்க்க பிசுபிசுப்பு போய்விடும். பிறகு அதைக் கழுவி உலர்த்தி நிறங்கொடுக்கலாம்.

தோல்நிறத்தை தெளிவு படுத்தல்

பிரெஞ்சுபுளோகர் அதாவது மஞ்சள் மண் 1 பவுண்டு கல்லெண்ணை பெரியதோர் கரண்டியளவு இவ்விரண்டையும் தோல் மாத்திரம் தெரியும்படியான அளவிற்கு கலக்கிக் கொள்ளவும்.

அப்பால் 1 பவுண்டு பைப்மண், அரை பவுண்டு ஸ்டார்ச் அல்லது அறப்பு இரண்டையும் கொதிக்கும் ஜலத்திலிட்டு கலக்கிக் கொண்டு குளிர்ந்தவுடன் தோலின்மேல் தடவவும். உலர்ந்தவுடன் பிரஷ் அடித்து சுத்தம் செய்து கொள்ளவும்.

தோலுக்கு முலாம் பூசுதல்

தோலின்மீது முட்டையின் வெள்ளைக்கருவை பிரஷைக் கொண்டு தடவி விட்டு அதன்மீது வெள்ளி அல்லது தங்கரேக்குகளை ஒட்டிவிடவும். பின்னர் யானைத் தந்தத்தை அதன்மீது தேய்த்து இழைப்புப்போட ஒட்டிவிடும்.

தோல் வார்னிஷ்

கோந்தை ஜலத்தில் இளகலாக கரைத்து அதற்கு சமஎடையாக முட்டையின் வெள்ளைக் கருவைச் சேர்த்து தோலின்மேல் தடவவும். இதிலிருந்து தோலுக்கு தக்க மினுமினுப்பு ஏற்பட்டு விடும். ஆனால் இந்த வார்னிஷ் கையில் ஒட்டுமாகையால் இதை தோலுக்காகவே உபயோகப்படுத்தல் மேலாகும். முட்டையின் வெள்ளைக்கருவு, சுத்த ஜலம் இது இரண்டும் சமஎடையாகக் கலந்து தேய்த்தப்பின்னர் வ்ார்னிஷ் அடிக்கலாம்.

வாடர்புரூப்தோல்

அடியிற்கண்ட பாகம் தோலை வாடர்புரூப் நிலைமைக்கு கொண்டு வருகிறது.

குங்கிலியம்	$2\frac{1}{2}$	தோலா
கொழுப்பு	$\frac{1}{4}$	சேர்
சுந்தரஸ்	5	தோலா
தேன்மெழுகு	$2\frac{1}{2}$	தோலா
அலசி எண்ணை	$\frac{1}{2}$	சேர்

முதலில் கொழுப்பை யாதொரு பாத்திரத்தில் போட்டு உருக்கிக்கொள்ளவும். பின்னர் அதில் சுந்தரஸ் போடவும். அதுவும் உருகிப்போனவுடன் குங்கிலியம், மெழுகு இவ்விரண்டையும் சேர்த்து, அலசி எண்ணையுடன் காய்ச்சி உலர்த்திக் கொள்ளவும்.

தோல் ஒட்டும் பிளாஸ்டர்

சாதாரண வஜ்ஜிரத்தையும் மீன் வஜ்ஜிரத்தையும் சமஎடையான ஜலத்தில் காய்ச்சி அவை உருகிப்போனவுடன் நெருப்பை இள நெருப்பாக்கிக்கொண்டு அத்துடன் டான்ஸைன் மரப் பட்டையை தூள்செய்து கலக்கிக்கொள்ளவும். இக்கலப்பு மூட்டையின் வெள்ளைக் கருவைப்போலாகிவிடும்.

ஒன்றோடொன்றை சேர்க்கவேண்டிய தோலின் ஓரங்களை ஒருவாறு கருடுமுரடாக தேய்த்துவிட்டப் பின்னர் இப்பசையை அந்த இடங்களில் பூசிதோலை இணைத்துவிடவும்.

சிகப்புகலந்த ஆரெஞ்சு நிறம்

ராக்ஆலம் படிகாரத்தை வெந்நீரில் கலந்துள்ள சலுஷனில் தோய்த்துவிட்டப்பின்னர் உலர்த்திக்கொள்ளவும். அடுத்தபடியாக தேக்கு மரச்சக்கையின் கஷாயத்தை கையாலெடுத்து அதன் மேல் தேய்த்து வரவும். கஷாயம் குளிர்ந்திருக்கவேண்டும் இவ்வாறு பலதடவைகளில் செய்துவர நிறத்தில் போதிய மினு மினுப்பு ஏற்பட்டு விடும்.

கைத் தொழில் சம்பாதனை வழிகள்

முற்றுப் பெற்றது.

PRINTED

AT

SHAHUL HAMEEDIA PRESS,

MADRAS.

26—8—52.